Namma Kalvi

# தோஸ்த் 12

# தமிழ்

## எளிய வழி கற்றல் கையேடு

(இது ஓர் ஆடியோ - வீடியோ - ஆன்லைன் - டிஜிட்டல் வழிகாட்டி நூல்)

**ஆன்லைனில் இந்தப் புத்தகத்தை இலவசமாகப் படிக்க ஸ்கேன் செய்யவும் !**

**எண்ணமும் எழுத்தும்**

**தமிழகத் தொழில்நுட்பப் புலவர்க் குழு**

TAMILNADU TECHNICAL & DIGITAL SCHOLORS ASSOCIATION

## தமிழ்ப்பாடம்

| பார்க்கலாம் | படிக்கலாம் | கேட்கலாம் | எழுதலாம் |
|---|---|---|---|
| dhosth.org | ONLINE DIGITAL BOOK | DHOSTH TV YOU-TUBE CHANNEL | examport.in |
|  |  | | EXAM PORT FREE ONLINE MOCK TEST |

# பொருளடக்கம்


| வ. எண் | பாடத்தலைப்பு | பக்க எண் |
|---|---|---|
| 1 | **மின்னூல்** (Digital Copy) | i |
| 2 | **காணொளி, கேட்பொலி** | i |
| 3 | **பலவுள் தெரிக** | 1 |
| 4 | **ஒருவரிச் செய்திகள்** | 11 |
| 5 | **செய்யுள் குறுவினா** | 18 |
| 6 | **உரைநடை குறுவினா** | 23 |
| 7 | **இலக்கணக் குறிப்பு** | 24 |
| 8 | **பகுபத உறுப்பிலக்கணம்** | 24 |
| 9 | **புணர்ச்சி விதி** | 25 |
| 10 | **மொழிப்பயிற்சி** | 26 |
| 11 | **கலைச்சொற்கள்** | 32 |
| 12 | **மொழிப்பெயர்ப்பு** | 33 |
| 13 | **இலக்கணக் குறுவினா** | 36 |
| 14 | **செய்யுள் சிறுவினா** | 38 |
| 15 | **உரைநடை சிறுவினா** | 51 |
| 16 | **அணிகள்** | 56 |
| 17 | **திணை - துறை** | 58 |
| 18 | **பா நயம் பாராட்டுக** | 64 |
| 19 | **பழமொழிக்கேற்ற வாழ்க்கை நிகழ்வு** | 70 |
| 20 | **நெடுவினா** | 77 |
| 21 | **மனப்பாடப் பகுதி** | 96 |
| 22 | **மாதிரி வினாத்தாள்** | 98 |
| 23 | **பொதுத்தேர்வு வினாத்தாள் (2020)** | 110 |




**தோஸ்த் தமிழ் உரையை**
**மின்நூல் வடிவில்**
**இலவசமாகப் படித்திட குறியீட்டை**
**விரவவும்....**

**தோஸ்த் தமிழ் உரையை**
**ஒலி *(Audio)* வடிவில்**
**கேட்டு மகிழுங்கள்...**



## நம்மை அளப்போம்

### பலவுள் தெரிக.

1. **இலக்கியத்தையும் மொழியையும் ஒருசேரப் பேசுகின்ற இலக்கண நூல்**

   அ) யாப்பருங்கலக்காரிகை ஆ) தண்டியலங்காரம் இ) தொல்காப்பியம் ஈ) நன்னூல்

   விடை - **இ) தொல்காப்பியம்**

2. **"மீண்டுமந்தப் பழமைநலம் புதுக்கு தற்கு" கவிஞர் குறிப்பிடும் பழமைநலம்,**

   i) பாண்டியரின் சங்கத்தில் கொலுவிருந்தது ii) பொதிகையில் தோன்றியது

   iii) வள்ளல்களைத் தந்தது

   அ) i மட்டும் சரி ஆ) i, ii இரண்டும் சரி இ) iii மட்டும் சரி ஈ) i, iii இரண்டும் சரி

   விடை- **ஈ) i, iii இரண்டும் சரி**

3. **"மின்னேர் தனியாழி வெங்கதிரொன்று ஏனையது
   தன்னேர் இலாத தமிழ்!" - இவ்வடிகளில் பயின்று வந்துள்ள தொடைநயம்**

   அ) அடிமோனை, அடிஎதுகை ஆ) சீர்மோனை, சீர்எதுகை இ) அடிஎதுகை, சீர்மோனை

   ஈ) சீர்எதுகை, அடிமோனை விடை - **இ) அடி எதுகை - சீர் மோனை**

4. **கருத்து 1: இயல்பு வழக்கில், தொடரமைப்பு என்பது எழுவாய், பயனிலை என்று வருவதே மரபு.
   கருத்து 2: தொடரமைப்பு, சங்கப் பாடல்கள் பலவற்றில் பிறழ்ந்து வருகிறது.**

   அ) கருத்து 1 சரி ஆ) கருத்து 2 சரி இ) இரண்டு கருத்தும் சரி ஈ) கருத்து 1 சரி, 2 தவறு

   விடை - **இ) இரண்டு கருத்தும் சரி**

5. **பொருத்துக.**

   அ) தமிழ் அழகியல் - 1) பரலி சு. நெல்லையப்பர் ஆ) நிலவுப்பூ - 2) தி.சு. நடராசன்

   இ) கிடை - 3) சிற்பி பாலசுப்பிரமணியம் ஈ) உய்யும் வழி - 4) கி. ராஜநாராயணன்

   அ) 4,3,2,1 ஆ) 1,4,2,3 இ) 2,4,1,3 ஈ) 2,3,4,1 விடை - **ஈ) 2, 3, 4, 1**

6. **பொருத்துக.**

   அ) குரங்குகள் - 1) கன்றுகளைத் தவிர்த்தன ஆ) பசுக்கள் - 2) மரங்களிலிருந்து வீழ்ந்தன

   இ) பறவைகள் - 3) குளிரால் நடுங்கின ஈ) விலங்குகள் - 4) மேய்ச்சலை மறந்தன

   அ) 1,3,4,2 ஆ) 3,1,2,4 இ) 3,2,1,4 ஈ) 2,1,3,4 விடை - **ஆ) 3, 1, 2, 4**

7. **நரம்புகளுக்குள் வீணை மீட்டிக்கொண்டிருக்கிறது என்று அய்யப்ப மாதவன் குறிப்பிடுவது**

   அ) சூரிய ஒளிக்கதிர் ஆ) மழை மேகங்கள் இ) மழைத் துளிகள் ஈ) நீர் நிலைகள்

   விடை - **இ) மழைத்துளிகள்**

8. **வெள்ளச் சமவெளிகள் அழியக் காரணம்**

   அ) பருவநிலை மாற்றம் ஆ) மணல் அள்ளுதல் இ) பாறைகள் இல்லாமை ஈ) நிலத்தடிநீர் உறிஞ்சப்படுதல்

   விடை - **ஆ) மணல் அள்ளுதல்**

9. **"பொய்யா வானம் புதுப்பெயர் பொழிந்தென" - தடித்த சொல்லின் இலக்கணக் குறிப்பு**

   அ) வினைத்தொகை ஆ) உரிச்சொல் தொடர் இ) இடைச்சொல் தொடர் ஈ) ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்

   விடை - **ஈ) ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்**

**10. உலக நாடுகள் மாற்று ஆற்றலை நோக்கிச் சென்றால் மட்டுமே புவி வெப்பமயமாதல் கட்டுப்படுத்த முடியும் - இத்தொடர் உணர்த்துவது**

அ) கார்பன் அற்ற ஆற்றல் பயன்பாடே தேவையாகிறது ஆ) பசுமைக்குடில் வாயுக்கள் அதிகமாகிறது

இ) காலநிலை மாறுபடுகிறது ஈ) புவியின் இயக்கம் வேறுபடுகிறது

விடை - **அ) கார்பன் அற்ற ஆற்றல் பயன்பாடே தேவையாகிறது**

**11. சங்க இலக்கியத்தில் இல்லாத சொற்கள், சங்ககாலச் சமூகத்தில் நடைமுறையில் இருந்துள்ளன. அவை ---**

அ) அறவோர், துறவோர் ஆ) திருமணமும் குடும்பமும்

இ) மன்றங்களும் அவைகளும் ஈ) நிதியமும் சுங்கமும் விடை - **ஆ) திருமணமும் குடும்பமும்**

**12. பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுக்க.**

அ) உரிமைத்தாகம் - 1. பாரசீகக் கவிஞர் ஆ) அஞ்ஞாடி - 2. பூமணி

இ) ஜலாலுத்தீன் ரூமி - 3. பக்தவச்சல பாரதி ஈ) தமிழர் குடும்ப முறை - 4. சாகித்திய அகாதெமி

அ) 2,4,3,1 ஆ) 3,4,1,2 இ) 2,4,1,3 ஈ) 2,3,4,1 விடை - **இ) 2,4,1,3**

**13. இவற்றை வாயிலுக்கே சென்று இன்முகத்துடன் வரவேற்பாயாக என்று ஜலாலுத்தீன் ரூமி குறிப்பிடுவது**

அ) வக்கிரம் ஆ) அவமானம் இ) வஞ்சனை ஈ) இவைஅனைத்தும்

விடை - **ஈ) இவை அனைத்தும்**

**14. "உவா உற வந்து கூடும்**

**உடுபதி, இரவி ஒத்தார்" - யார் யார்?**

அ) சடாயு, இராமன் ஆ) இராமன், குகன் இ) இராமன், சுக்ரீவன் ஈ) இராமன், சவரி

விடை - **இ) இராமன், சுக்ரீவன்**

**15. "எங்கள் தந்தையர் நாடென்ற பேச்சினிலே - ஒரு**

**சக்தி பிறக்குது மூச்சினிலே" - என்னும் பாரதியின் பாடல் வெளிப்படுத்துவது**

அ) தனிக்குடும்ப முறை ஆ) விரிந்த குடும்ப முறை இ) தாய்வழிச் சமூகமுறை ஈ) தந்தைவழிச் சமூகமுறை

விடை - **ஈ) தந்தைவழிச் சமூகமுறை**

**16. "காவினெம் கலனே; சுருக்கினெம் கலப்பை" - இத்தொடரில் 'கலன்' உணர்த்தும் பொருள்**

அ) போர்க்கருவி ஆ) தச்சுக்கருவி இ) இசைக்கருவி ஈ) வேளாண் கருவி விடை - **இ) இசைக்கருவி**

**17. சுரதா நடத்திய கவிதை இதழ்**

அ) இலக்கியம் ஆ) காவியம் இ) ஊர்வலம் ஈ) விண்மீன் விடை - **ஆ) காவியம்**

**18. "விண்வேறு; விண்வெளியில் இயங்கு கின்ற**

**வெண்மதியும் செங்கதிரும் முகிலும் வேறு" - இத்தொடர் தரும் முழுமையான பொருள்.**

அ) விண்ணும் வெண்மதியும் வேறு வேறு ஆ) விண்வெளியும் செங்கதிரும் வேறு வேறு

இ) வெண்மதியும் முகிலும் வேறு வேறு

ஈ) விண், விண்வெளியில் உள்ள வெண்மதி, செங்கதிர், முகில் அனைத்தும் வேறு வேறு

விடை - **ஈ) விண், விண்வெளியில் உள்ள வெண்மதி, செங்கதிர், முகில் அனைத்தும் வேறு வேறு**

**19. சுவடியோடு பொருந்தாத ஒன்றைத் தேர்வு செய்க.**

அ) வசம்பு ஆ) மணத்தக்காளியிலைச் சாறு இ) கடுக்காய் ஈ) மாவிலைக்கரி

விடை - **இ) கடுக்காய்**

**20. "குழிமாற்று" எந்தத் துறையோடு தொடர்புடைய சொல்?**

அ) இலக்கியம் ஆ) கணிதம் இ) புவியியல் ஈ) வேளாண்மை விடை - **ஆ) கணிதம்**

**21. சென்னை வெறும் நகரம் மட்டுமல்ல, அது நம்பிக்கை மையம் - காரணம் -**

அ) நேரடி, மறைமுக வேலைவாய்ப்புகளின் களம்

ஆ) மென்பொருள், வன்பொருள், வாகன உற்பத்தியில் பங்கு

இ) மென்பொருள் ஏற்றுமதியில் முன்னிலை ஈ) அ, ஆ, இ - அனைத்தும்

விடை - **ஈ) அ, ஆ, இ - அனைத்தும்**

**22. கூற்று: இந்தியாவின் பல பகுதிகளில் இருந்தும் நெசவாளர்கள் சென்னை நோக்கி வந்தனர்.**

**காரணம்: கிழக்கிந்திய நிறுவனத்தின் வணிகம், துணி சார்ந்ததாகவே இருந்தது.**

அ) கூற்று சரி, காரணம் தவறு ஆ) கூற்று தவறு, காரணம் சரி

இ) கூற்று தவறு, காரணம் தவறு ஈ) கூற்று சரி, காரணம் சரி விடை - **ஈ) கூற்று சரி, காரணம் சரி**

**23. பொருத்துக.**

அ) திருவல்லிக்கேணி ஆறு - 1) மாவலிபுரச் செலவு ஆ) பக்கிங்காம் கால்வாய் - 2) கல் கோடரி

இ) பல்லாவரம் - 3) அருங்காட்சியகம் ஈ) எழும்பூர் - 4) கூவம்

அ) 1,2,4,3 ஆ) 4,2,1,3 இ) 4,1,2,3 ஈ) 2,4,3,1 விடை - **இ) 4, 1, 2, 3**

**24. "உள்ளொன்று வைத்துப் புறம்பொன்று பேசுவார்" - இத்தொடர் உணர்த்தும் பண்பு**

அ) நேர்மறைப் பண்பு ஆ) எதிர்மறைப் பண்பு இ) முரண் பண்பு ஈ) இவை அனைத்தும்

விடை - **இ) முரண் பண்பு**

**25. "விளியறி ஞமலி" - இதில் குறிப்பிடப்படும் விலங்கு எது?**

அ) எருது ஆ) குதிரை இ) நாய் ஈ) யாழி விடை - **இ) நாய்**

**26. ஆர்ப்பரிக்கும் கடல்**

**அதன் அடித்தளம்**

**மௌனம்; மகா மௌனம் - அடிகள் புலப்படுத்துவது**

அ) இரைச்சல் ஆ) குறைகுடம் கூத்தாடும்

இ) நிறைகுடம் நீர்த்தழும்பல் இல் ஈ) புற அசைவுகள் அகத்திணை அசைக்க இயலாது.

விடை - **ஈ) புற அசைவுகள் அகத்திணை அசைக்க இயலாது.**

**27. ஏழ் ஆண்டு இயற்றி ஓர் ஈராறு ஆண்டில் சூழ்கழல் மன்னற்குக் காட்டல் '..**

1. மாதவி ஏழு ஆண்டுகள் வரை நாட்டியம் பயின்றாள். 2. ஈராறு வயதில் அரங்கேற்றம் செய்ய விரும்பினாள்.

அ) 1 சரி 2 தவறு ஆ) 1 தவறு 2 சரி இ) 1 தவறு 2 தவறு ஈ) 1 சரி 2 சரி

விடை - **ஈ) 1 சரி 2 சரி**

**28. பொருத்துக.**

அ) ஆமந்திரிகை - 1) பட்டத்து யானை ஆ) அரசு உவா - 2) மூங்கில்

இ) கழஞ்சு - 3) இடக்கை வாத்தியம் ஈ) கழை - 4) எடை அளவு

அ) 3,1,4,2 ஆ) 4,2,1,3 இ) 1,2,3,4 ஈ) 4,3,2,1 விடை - **அ) 3,1,4,2**

www.nammakalvi.in



**29. வேறுபட்டதைக் குறிப்பிடுக.**

அ) அண்மைக் காட்சித் துணிப்பு ஆ) சேய்மைக் காட்சித் துணிப்பு இ) நடுக் காட்சித் துணிப்பு ஈ) காட்சி மறைவு

விடை - **ஈ) காட்சி மறைவு**

**30. "பலர் துஞ்சவும் தாம் துஞ்சான்" - விழித்திருந்தவரும் அவரைப் பாடியவரும்**

அ) சோழன் நெடுங்கிள்ளியை, பாணர் ஆ) சோழன் நலங்கிள்ளியை, கோவூர்கிழார்

இ) கணைக்கால் இரும்பொறையை, கபிலர் ஈ) கரிகாலனை, உருத்திரங்கண்ணனார்

விடை - **ஆ) சோழன் நலங்கிள்ளியை, கோவூர்கிழார்**

**31. அதிசய மலரின் புன்னகையைப் பிடித்தவாறு தமிழ்நதி கடக்கச் சொல்வது**

அ) கடந்தகாலத் துயரங்களை ஆ) ஆட்களற்ற பொழுதை

இ) பச்சையம் இழந்த நிலத்தை ஈ) அனைத்தையும் விடை - **ஈ) அனைத்தையும்**

**32. முச்சந்தி இலக்கியம் என்பது**

**கூற்று 1: கதை வடிவிலான வடிவம் உடையது.**

**கூற்று 2: பெரிய எழுத்துப் புத்தகம் என்று அழைக்கப்படுவது**

அ) கூற்று 1 சரி, கூற்று 2 தவறு ஆ) கூற்று 1,2 சரி

இ) கூற்று 1,2 தவறு ஈ) கூற்று 1 தவறு, கூற்று 2 சரி

விடை - **அ) கூற்று 1 சரி, கூற்று 2 தவறு**

**33. உண்டு பிறந்து வளர்ந்த இடந்தனில் - இத்தொடரில் பெயரெச்சம்**

அ) உண்டு ஆ) பிறந்து இ) வளர்ந்த ஈ) இடந்தனில் விடை - **இ) வளர்ந்த**

**34. யானை புக்க புலம்போல - இவ்வுவமைக்குப் பொருத்தமான தொடர்**

அ) தனக்குப் பயன்படும், பிறருக்குப் பயன்படாது ஆ) தனக்கும் பயன்படாது, பிறருக்கும் பயன்படாது

இ) பிறருக்குப் பயன்படும், தனக்குப் பயன்படாது ஈ) தனக்கும் பயன்படும், பிறருக்கும் பயன்படும்

விடை - **ஆ) தனக்கும் பயன்படாது, பிறருக்கும் பயன்படாது**

**35. சிறுபாணாற்றுப்படை காட்டும் பாட்டுடைத்தலைவனின் இன்றைய நிலப்பகுதி**

அ) உதகமண்டலம் ஆ) விழுப்புரம் இ) திண்டிவனம் ஈ) தருமபுரி விடை - **இ) திண்டிவனம்**

**36. பொருந்தாத ஒன்றைக் கண்டறிக.**

அ) தனித்தமிழ்த் தந்தை - 1. மு. வரதராசனார் ஆ) ஆராய்ச்சிப் பேரறிஞர் - 2. மயிலை சீனி. வேங்கடசாமி

இ) தமிழ்த் தென்றல் - 3. திரு.வி.க ஈ) மொழி ஞாயிறு - 4. தேவநேயப் பாவாணர்

விடை - **அ) தனித்தமிழ்த் தந்தை - 1. மு. வரதராசனார்**

**37. ச.த. சற்குணரின் உரையைக் கேட்டுத் தூண்டப்பெற்ற மயிலை சீனி. வேங்கடசாமி எழுதிய நூல்**

அ) பௌத்தமும் தமிழும் ஆ) இசுலாமும் தமிழும் இ) சமணமும் தமிழும் ஈ) கிறித்தவமும் தமிழும்

விடை - **ஈ) கிறித்தவமும் தமிழும்**

**38. நான் வெற்றுவெளியில் அலைந்துகொண்டிருக்கிறேன் எனது முகத்தைத் தேடியபடி என்று சுகந்தி சுப்பிரமணியன் தேடுவதாகக் குறிப்பிடுவது**

அ) தமது வீட்டு முகவரியை ஆ) தமது குடும்பத்தை இ) தமது அடையாளத்தை ஈ) தமது படைப்புகளை

விடை - **இ) தமது அடையாளத்தை**

www.nammakalvi.in




**39. கடையெழு வள்ளல்களின் வரிசையைச் சாராத மன்னர்கள்**

அ) ஆய் அண்டிரனும் அதிகனும் ஆ) நல்லியக்கோடனும் குமணனும்

இ) நள்ளியும் ஓரியும் ஈ) பாரியும் காரியும்

விடை - **ஆ) நல்லியக்கோடனும் குமணனும்**

**40. படத்துக்குப் பொருத்தமான திருக்குறளைக் கண்டுபிடிக்க.**



அ) அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது

ஆ) வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்.

இ) சினம்என்னும் சேர்ந்தாரைக் கொல்லி இனம்என்னும்
ஏமப் புணையைச் சுடும்.

விடை - **இ) சினம்என்னும் சேர்ந்தாரைக் கொல்லி இனம்என்னும்
ஏமப் புணையைச் சுடும்.**

**41. கடலின் பெரிது**

அ) உற்ற காலத்தில் செய்த உதவி ஆ) பயன் ஆராயாமல் ஒருவர் செய்த உதவி

இ) தினையளவு செய்த உதவி

விடை - **ஆ) பயன் ஆராயாமல் ஒருவர் செய்த உதவி**

**42. பின்வரும் நாலடியார் பாடலின் பொருளுக்குப் பொருத்தமான திருக்குறளைக் கண்டறிக.**

"நல்லார் நயவர் இருப்ப நயம் இலாக்
கல்லார்க் கொன்றாகிய காரணம் - தொல்லை
வினைப்பயன் அல்லது வேல்நெடுங் கண்ணாய்
நினைப்ப வருவதொன் றில்"

அ) இருவேறு உலகத்து இயற்கை; திருவேறு
தெள்ளியர் ஆதலும் வேறு.

ஆ) நல்லவை எல்லாம் தீயவாம் தீயவும்
நல்லவாம் செல்வம் செயற்கு

இ) ஊழில் பெருவலி யாஉள மற்று ஒன்று
சூழினும் தான்முந்து உறும்

விடை - **அ) இருவேறு உலகத்து இயற்கை; திருவேறு
தெள்ளியர் ஆதலும் வேறு.**

**43. வையகமும் வானகமும் ஆற்றலரிது - எதற்கு?**

அ) செய்யாமல் செய்த உதவி ஆ) பயன் தூக்கார் செய்த உதவி

இ) தினைத்துணை நன்றி ஈ) செய்ந்நன்றி

விடை - **செய்யாமல் செய்த உதவி**

**44. பொருத்துக.**

அ) வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் - 1) சேர்ந்தாரைக் கொல்லி

ஆ) பயன்தூக்கார் செய்த உதவி - 2) ஞானத்தின் மாணப் பெரிது


இ) சினம் - 3) தெய்வத்துள் வைக்கப்படும்

ஈ) காலத்தினாற் செய்த நன்றி - 4) நன்மை கடலின் பெரிது

அ) 4,3,2,1 ஆ) 3,4,1,2 இ) 1,2,3,4 ஈ) 2,3,4,1

விடை - **ஆ) 3,4,1,2**

**45. படத்திற்குப் பொருத்தமான திருக்குறளைக் கண்டுபிடிக்க.**



அ) எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார்
திண்ணியர் ஆகப் பெறின்

ஆ) உருவுகண்டு எள்ளாமை வேண்டும் உருள்பெருந்தேர்க்கு
அச்சாணி அன்னார் உடைத்து.

இ) வினைத்திட்பம் என்பது ஒருவன் மனத்திட்பம்
மற்றைய எல்லாம் பிற.

விடை **- ஆ) உருவுகண்டு எள்ளாமை வேண்டும் உருள்பெருந்தேர்க்கு அச்சாணி அன்னார் உடைத்து.**

**46. கவிதைக்குப் பொருந்தும் திருக்குறளைக் கண்டறிக.**

"மனமோ மாட்டுவண்டி
பாதையொழுங்கில் போக
நினைக்கும் மாடு
இப்படி இருந்தால் எப்படி நகரும்
வாழ்க்கைச் சக்கரம்
ஊர் போகும் பாதையில்
சக்கரம் உருண்டால்
அதுவே அறிவு; அதுவே தெளிவு"

அ) எவ்வது உறைவது உலகம் உலகத்தோடு
அவ்வது உறைவது அறிவு

ஆ) சென்ற இடத்தால் செலவிடா தீதுஒரீஇ
நன்றின்பால் உய்ப்பது அறிவு

இ) அறிவற்றம் காக்கும் கருவி செறுவார்க்கும்
உள்ளழிக்கல் ஆகா அரண்.

விடை - **ஆ) சென்ற இடத்தால் செலவிடா தீதுஒரீஇ நன்றின்பால் உய்ப்பது அறிவு**

**47. பின்வரும் நாலடியார் பாடலின் பொருளுக்குப் பொருத்தமான திருக்குறளைக் கண்டறிக.**

"சீரியார் கேண்மை சிறந்த சிறப்பிற்றாய்
மாரிபோல் மாண்ட பயத்ததாம் - மாரி
வறந்தக்கால் போலுமே வாலருவி நாட!
சிறந்தக்கால் சீரியார் நட்பு"

அ) பழையம் எனக்கருதிப் பண்பு அல்ல செய்யும்
கெழுதகைமை கேடு தரும்

ஆ) எதிரதாக் காக்கும் அறிவினார்க்கு இல்லை
அதிர வருவதோர் நோய்

இ) நல்லினத்தின் ஊங்கும் துணையில்லை; தீயினத்தின்
அல்லல் படுப்பதூஉம் இல்

விடை **- இ) நல்லினத்தின் ஊங்கும் துணையில்லை; தீயினத்தின் அல்லல் படுப்பதூஉம் இல்**

**48. அல்லல் படுப்பதூம் இல் - எவரோடு பழகினால்?**

அ) வாள்போல் பகைவர் ஆ) மெய்ப்பொருள் காண்பவர் இ) எண்ணியாங்கு எய்துபவர் ஈ) தீயினத்தார்

விடை **- ஈ) தீயினத்தார்**

**49. திண்ணியர் என்பதன் பொருள்**

அ) அறிவுடையவர் ஆ) மன உறுதியுடையவர் இ) தீக்காய்வார் ஈ) அறிவினார்

விடை **- ஆ) மன உறுதியுடையவர்**

**50. ஆராய்ந்து சொல்கிறவர்**

அ) அரசர் ஆ) சொல்லியபடி செய்பவர் இ) தூதுவர் ஈ) உறவினர் விடை - **இ) தூதுவர்**

**51. பொருத்துக.**

அ) பாம்போடு உடன் உறைந்தற்று - 1) தீக்காய்வார்

ஆ) செத்தார் - 2) சீர் அழிக்கும் சூது

இ) வறுமை தருவது - 3) கள் உண்பவர்

ஈ) இகல்வேந்தர் சேர்ந்து ஒழுகுவார் - 4) உடம்பாடு இலாதவர்

அ) 1,2,3,4 ஆ) 2,3,4,1 இ) 4,1,3,2 ஈ) 4,3,2,1

விடை - **ஈ) 4,3,2,1**

**52. நடுங்கும்படியான துன்பம் இல்லாதவர்**

அ) வரப்போவதை முன்னரே அறிந்து காத்துக் கொள்ளக் கூடியவர் ஆ) மனத்திட்பம் உடையவர்

இ) அரசரைச் சார்ந்து வாழ்கின்றவர் ஈ) சூதாடுமிடத்தில் காலம் கழிப்பவர்

விடை **- அ) வரப்போவதை முன்னரே அறிந்து காத்துக்கொள்ளக் கூடியவர்**

**53. எளியது, அரியது என்பன**

அ) தீயினத்தின் துணை - நல்லினத்தின் துணை ஆ) சொல்வது - சொல்லியபடி செய்வது

இ) சிறுமை பல செய்வது - பகைவர் தொடர்பு ஈ) மெய்ப்பொருள் காண்பது - உருவுகண்டு எள்ளாதது

விடை **- ஆ) சொல்வது - சொல்லியபடி செய்வது**

## இலக்கணத் தேர்ச்சிக் கொள்

**1. பிழையான தொடரைக் கண்டறிக.**

அ) காளைகளைப் பூட்டி வயலை உழுதனர். ஆ) மலைமீது ஏறிக் கல்வெட்டுகளைக் கண்டறிந்தனர்.

இ) காளையில் பூத்த மல்லிகை மனம் வீசியது. ஈ) நெற்பயிர்கள் மழைநீரில் மூழ்கின.

விடை- **இ) காளையில் பூத்த மல்லிகை மனம் வீசியது.**

**2. பேச்சுத்தமிழில் அமைந்த தொடரைத் தேர்க.**

அ) அவருக்கு நல்லது கெட்டது நல்லாத் தெரியும். ஆ) புத்தகக் கண்காட்சி நடைபெறுகிறது.

இ) வறட்சி எல்லா இடங்களையும் பாதித்துள்ளது. ஈ) மயில்கள் விறலியரைப் போல் ஆடுகின்றன.

விடை- **அ) அவருக்கு நல்லது கெட்டது நல்லாத் தெரியும்.**

**3. தமிழில் திணைப்பாகுபாடு -------- அடிப்படையில் பகுக்கப்பட்டுள்ளது.**

அ) பொருட்குறிப்பு ஆ) சொற்குறிப்பு இ) தொடர்க்குறிப்பு ஈ) எழுத்துக்குறிப்பு

விடை **- அ) பொருட்குறிப்பு**

**4. "உயர்திணை என்மனார் மக்கட் சுட்டே**

**அஃறிணை என்மனார் அவரல பிறவே" - இந்நூற்பா இடம்பெற்ற இலக்கண நூல் ---------**

அ) நன்னூல் ஆ) அகத்தியம் இ) தொல்காப்பியம் ஈ) இலக்கண விளக்கம்

விடை **- இ) தொல்காப்பியம்**

**5. யார்? எது? ஆகிய வினாச்சொற்கள் பயனிலையாய் அமைந்து, உணர்த்தும் திணைகள் முறையே -------**

அ) அஃறிணை, உயர்திணை ஆ) உயர்திணை, அஃறிணை

இ) விரவுத்திணை, அஃறிணை ஈ) விரவுத்திணை, உயர்திணை

விடை **ஆ) உயர்திணை, அஃறிணை**

**6. பொருத்தி விடை தேர்க.**

அ) அவன் அவள் அவர் - 1) உளப்படுத்தாத் தன்மைப் பன்மை

ஆ) நாங்கள் முயற்சி செய்வோம் - 2) உளப்பாட்டுத் தன்மைப் பன்மை

இ) நாம் முயற்சி செய்வோம் - 3) தன்மைப் பன்மைப் பெயர்கள்

ஈ) நாங்கள், நாம் - 4) பதிலிடு பெயர்கள்

அ) 4,1,2,3 ஆ) 2,3,4,1 இ) 3,4,1,2 ஈ) 4,3,1,2 விடை - **அ) 4,1,2,3**

**7. பொருள் குழப்பமின்றி எழுதுவதற்குரிய காரணங்களுள் பொருந்துவதைத் தேர்க.**

அ) தேவையான இடங்களில் இடைவெளி விடாமல் எழுதுதல்

ஆ) தேவையற்ற இடங்களில் இடைவெளி விட்டு எழுதுதல்

இ) நிறுத்தக்குறிகளை உரிய இடங்களில் இட்டு எழுதுதல்

ஈ) வல்லின மெய்களைத் தேவையான இடங்களில் இடாமல் எழுதுதல்

விடை - **இ) நிறுத்தற்குறிகளை உரிய இடங்களில் இட்டு எழுதுதல்**

**8. வல்லினம் மிகும், மிகாத் தொடர்களின் பொருளறிந்து பொருத்துக.**

அ) பாலை பாடினான் - 1) தேரை என்னும் உயிரினத்தைப் பார்த்தான்.

ஆ) பாலைப் பாடினான் - 2) தேரினைப் பார்த்தான்

இ) தேரை பார்த்தான் - 3) பாலினைப் பாடினான்

ஈ) தேரைப் பார்த்தான் - 4) பாலைத் திணை பாடினான்

அ) 4,1,3,2 ஆ) 2,3,1,4 இ) 4,3,1,2 ஈ) 2,4,1,3 விடை - **இ) 4,3,1,2**

**9. வெண்பாவிற்கு ஏற்ப அடுத்த சீர் என்னவாக அமைக்கலாம்? பொருத்தமான சீரினைக் கொண்டு கோடிட்ட இடங்களை நிரப்புங்கள்.**

அ) அன்பே ---------------------------------------------- (ஆர்வமாய் / தகளியாய்)

ஆ) வான்மழை ---------------------------------------- (தூறலில் / பொழிந்திடின்)

இ) கண்ணிரண்டும் ---------------------------------- (இலாதார் / இல்லார்)

ஈ) வெண்ணிலவு -------------------------------------- (காய்கிறது / ஒளிர்கிறது)

உ) வெய்யோன் -------------------------------------- (காய்ந்திட / ஒளிர்ந்திட)

விடை - **அ) தகளியாய் ஆ) தூறலில் இ) இல்லார் ஈ) காய்கிறது உ) ஒளிர்ந்திட**

**10.மூன்றாவது சீர் அமைத்து எழுதுக.**

அ) கல்வி கரையில -------------------------------- ஆ) கல்லாரே ஆயினும் --------------------------------

இ) நல்லவை செய்யின் -------------------------------- ஈ) அவமதிப்பும் ஆன்ற --------------------------------

உ) உண்ணாது நோற்பார் --------------------------------

விடை -

**11. பொருத்துக.**

அ) மாச்சீர் - 1) கருவிளம், கூவிளம் ஆ) காய்ச்சீர் - 2) நாள், மலர்

இ) விளச்சீர் - 3) தேமாங்காய், புளிமாங்காய் ஈ) ஓரசைச்சீர்- 4) தேமா, புளிமா

அ) 1,2,3,4 ஆ) 4,3,1,2 இ) 2,3,1,4 ஈ) 3,4,2,1 விடை - **ஆ) 4,3,1,2**

**12. படிமம் என்பதன் பொருள்**

அ) சொல் ஆ) செயல் இ) காட்சி ஈ) ஒலி விடை - **இ) காட்சி**

**13. "காலை இளம் வெயில் நன்றாக மேய, தும்பறுத்துத் துள்ளிவரும் புதுவெயில்" இக்கவிதையில் ------- பயின்று வந்துள்ளது.**

அ) பயன் படிமம் ஆ) வினைப்படிமம் இ) மெய்ப்படிமம் ஈ) உருப்படிமம்

விடை - **ஆ) வினைப்படிமம்**

**14. கூற்று: உவமை உருவகம் போலப் படிமமும் வினை, பயன், மெய், உரு ஆகியவற்றின் அடிப்படையில் தோன்றும்.**

**காரணம்: எவ்வகையான படிமமாக இருந்தாலும் அது காட்சி வழியே கருத்தினை விளக்குவதில்லை.**

அ) கூற்று சரி, காரணம் தவறு ஆ) கூற்று தவறு, காரணம் சரி

இ) கூற்றும் சரி, காரணமும் சரி ஈ) கூற்றும் தவறு, காரணமும் தவறு

விடை - **அ) கூற்று சரி, காரணம் தவறு**

**15. மெய்ப் படிமத்துக்குரிய பாடலைத் தேர்வு செய்க.**

அ) நெருஞ்சிக் கட்கின் புதுமலர் முட்பயந் தாங்கு ..... ஆ) கட்டில் நிணக்கும் இழிசினன் கையது ....

இ) பாசிமணிக் கண்ணும் சிவப்புக் கோட்டுக் கழுத்தும் ..... ஈ) வெந்தாறு பொன்னின் அந்தி பூப்ப ....

விடை - **இ) பாசிமணிக் கண்ணும் சிவப்புக் கோட்டுக் கழுத்தும் ....**

**16. ஐம்பெருங்காப்பியம் என்னும் சொற்றொடரைத் தம் உரையில் குறிப்பிட்டவர்**

அ) சிவஞான முனிவர் ஆ) மயிலைநாதர் இ) ஆறுமுகநாவலர் ஈ) இளம்பூரணர்

விடை - **ஆ) மயிலைநாதர்**

**17. கூற்று 1: காப்பியம் என்னும் சொல் காப்பு + இயம் எனப் பிரிந்து மரபைக் காப்பது, இயம்புவது, வெளிப்படுத்துவது, மொழியைச் சிதையாமல் காப்பது என்றெல்லாம் பொருள் தருகிறது.**

**கூற்று 2: ஐம்பெருங்காப்பியங்களுள் ஒன்று நீலகேசி**

அ) கூற்று 1 சரி, கூற்று 2 தவறு ஆ) கூற்று 2 சரி, கூற்று 1 தவறு

இ) இரண்டும் சரி ஈ) இரண்டும் தவறு விடை - **அ) கூற்று 1 சரி, கூற்று 2 தவறு**

**18. சரியானவற்றைப் பொருத்தித் தேர்க.**

அ) காதை - 1) கந்தபுராணம் ஆ) சருக்கம் - 2) சீவகசிந்தாமணி

இ) இலம்பகம் - 3) சூளாமணி ஈ) படலம் - 4) சிலப்பதிகாரம்

அ) 4,3,2,1 ஆ) 3,4,1,2 இ) 3,4,2,1 ஈ) 4,3,1,2 விடை - **அ) 4,3,2,1**

**19. தவறான இணையைத் தேர்க**

அ) விருத்தப்பா - நாலடியார் ஆ) ஆசிரியப்பா - அகநானூறு

இ) கலிவெண்பா - தூது ஈ) குறள்வெண்பா - திருக்குறள்

விடை - **அ) விருத்தப்பா - நாலடியார்**

**20. பின்வருவனவற்றுள் தொன்மத்திற்குப் பொருந்தா ஒன்றைத் தேர்க.**

அ) கர்ணன் தோற்றான் போ. ஆ) வயதில் சிறியவள், ஆனாலும் தலைவி!

இ) இந்த நாரதரிடம் எச்சரிக்கையாக இரு. ஈ) இந்தா போறான் தருமன்.

விடை - **ஆ) வயதில் சிறியவள், ஆனாலும் தலைவி**

www.nammakalvi.in



**21. தொன்மம் பற்றிய கூற்றுகளுள் தவறான ஒன்றைத் தேர்க.**

அ) உருவாக்கப்பட்டு இறுகி விட்ட வடிவங்கள்.

ஆ) பழங்கதையைக் கொண்டு கருத்தை விளக்குவது.

இ) நம்ப முடியாது போல் தோன்றும் நிகழ்ச்சிகள் செய்திகள்.

ஈ) விளங்காத கருத்துகளைப் பழமொழியின் மூலம் விளக்குவது.

விடை - **ஈ) விளங்காத கருத்துகளைப் பழமொழியின் மூலம் விளக்குவது**

**22. "சாபவிமோசனம்", "அகலிகை" கதைகளில் தொன்மங்களைப் பயன்படுத்தியவர்**

அ) கு. அழகிரிசாமி ஆ) புதுமைப்பித்தன் இ) ஜெயமோகன் ஈ) எஸ். இராமகிருஷ்ணன்

விடை - **ஆ) புதுமைப்பித்தன்**

**23. பண்புக்குறியீடுகளைக் கதைமாந்தர்களோடு பொருத்துக.**

அ) அறம் - 1) கர்ணன் ஆ) வலிமை - 2) மனுநீதிச்சோழன்

இ) நீதி - 3) பீமன் ஈ) வள்ளல் - 4) தருமன்

அ) 3,2,1,4 ஆ) 4,3,2,1 இ) 2,4,3,1 ஈ) 4,3,1,2 **விடை - ஆ) 4,3,2,1**

**24. குறியீடுகளைப் பொருத்துக.**

அ) பெண் - 1) சமாதானம் ஆ) புறா - 2) வீரம்

இ) தராசு - 3) விளக்கு ஈ) சிங்கம் - 4) நீதி

அ) 2,4,1,3 ஆ) 2,4,3,1 இ) 3,1,4,2 ஈ) 3,1,2,4 விடை - **ஈ) 3,1,2,4**

**25. கூற்று: 19ஆம் நூற்றாண்டில் குறியீட்டியம் ஓர் இலக்கியக் கோட்பாடாக உருப்பெற்றது.**

**காரணம்: பொதலேர், ரைம்போ, வெர்லேன், மல்லார்மே முதலானவர்கள் குறியீட்டியத்தை வளர்த்தார்கள்.**

அ) கூற்று சரி, காரணம் தவறு ஆ) கூற்று சரி, காரணம் சரி

இ) கூற்று தவறு, காரணம் தவறு ஈ) கூற்று தவறு, காரணம் சரி

விடை - **ஆ) கூற்று சரி, காரணம் சரி**

**26. சங்க இலக்கியத்தில், அகத்திணை மாந்தர்களின் உள்ளத்து உணர்வுகளைக் குறிப்பாக உணர்த்தும் குறியீடுகள்**

அ) உவமை ஆ) உவமேயம் இ) உத்தி ஈ) உள்ளுறை உவமை விடை - **ஈ) உள்ளுறை உவமை**

**27. "திட்டம்" என்னும் தலைப்பில் "வரங்கள் சாபங்கள் ஆகுமென்றால் இங்கே தவங்கள் எதற்காக?" என்று எழுதப்பட்டுள்ள கவிதையில் "வரம்" எதற்குக் குறியீடாகிறது?**

அ) அமுதசுரபி ஆ) ஆதிரைப் பருக்கை இ) திட்டம் ஈ) பயனற்ற விளைவு விடை - **இ) திட்டம்**

**28. மறைத்துச் சொல்லவும் மிகுத்துச் சொல்லவும் அழுத்திச் சொல்லவும் பயன்படும் இலக்கிய உத்தி எது?**

அ) குறியீடு ஆ) படிமம் இ) அங்கதம் ஈ) தொன்மம் விடை - **அ) குறியீடு**

## நூல்வெளி

### இளந்தமிழே

★ சிற்பி பாலசுப்பிரமணியின் கவிதைத் தொகுப்பு **நிலவுப்பூ.**

★ நிலவுப்பூ என்னும் கவிதைத் தொகுப்பில் இடப்பெற்றுள்ள கவிதை**இளந்தமிழே.**

★ சாகித்திய அகாதமி விருது பெற்ற கவிதை **ஒரு கிராமத்து நதி.**

★ இருமுறை சாகித்திய அகாதமிப் பரிசு பெற்றவர் **சிற்பி பாலசுப்பிரமணியம்.**

★ பாலசுப்பிரமணியத்தின் கவிதை நூல்கள் **ஒளிப்பறவை, சர்ப்பயாகம், சூரிய நிழல், பூஜ்யங்களின் சங்கிலி**

### தண்டியலங்காரம்

★ அணி இலக்கணத்தைக் கூறும் நூல்களில் ஒன்று **தண்டியலங்காரம்.**

★ வடமொழி இலக்கணநூல் **காவியதர்சம்.**

★ காவியதர்சம் நூலைத் தழுவி எழுதப்பட்ட நூல் **தண்டியலங்காரம்.**

★ தண்டியலங்காரத்தின் ஆசிரியர் **தண்டி.**

### பிறகொரு நாள் கோடை

★ அய்யப்ப மாதவன் கவிதைகள் என்னும் தொகுப்பிலிருந்து எடுக்கப்பட்ட கவிதை **பிறகொரு நாள் கோடை.**

★ அய்யப்ப மாதவனின் கவிதை நூல்கள் **மழைக்குப் பிறகும் மழை, நானென்பது வேறொருவன், நீர்வெளி**

### நெடுநல்வாடை

★ பாண்டியன் நெடுஞ்செழியனை பாட்டுடைத்தலைவனாக கொண்டு பாடப்பட்டது **நெடுநல்வாடை.**

★ மதுரைக் கணக்காயனாரின் மகனார்**நக்கீரர்.**

★ நக்கீரர் இயற்றிய நூல் **நெடுநல்வாடை.**

★ பத்துப்பாட்டு நூல்களில் ஒன்று **நெடுநல்வாடை.**

★ நெடுநல்வடையின் அடிகள் **188.**

★ வாடைக்காலம் துன்பம் மிக்கதாக அமைந்திருந்தது **தலைவிக்கு.**

★ வெற்றிக்கு ஏதுவாக நல்ல வாடையாக அமைந்திருந்தது **தலைவனுக்கு.**

### விருந்தினர் இல்லம்

★ ஜலாலுத்தீன் ரூமியின் கவிதைகளை ஆங்கிலத்தில் மொழியாக்கம் செய்தவர் **கோல்மன் பார்க்ஸ்.**

★ ஜலாலுத்தீன் ரூமியின் கவிதைகளை தமிழில் மொழிப்பெயர்த்தவர் **என்.சத்தியமூர்த்தி.**

★ ஜலாலுத்தீன் கவிதைகளுக்கு தமிழில் வைத்த தலைப்பின் பெயர் **தாகங்கொண்ட மீனொன்று.**

★ தாகங்கொண்ட மீனொன்று என்ற கவிதைத் தொகுப்பில் இடம்பெற்ற கவிதை **விருந்தினர் இல்லம்.**

★ பாரசீகத்தின் மிகச் சிறந்த கவிஞர்களுள் ஒருவர் **ஜலாலுத்தீன் ரூமி.**

### கம்பராமாயணம்

★ கம்பராமாயணத்தை இயற்றியவர் **கம்பர்.**

★ இராமாயணத்திற்கு கம்பர் இட்டப் பெயர் **இராமவதாரம்.**

★ கம்பர் காலம் **பன்னிரண்டாம் நூற்றாண்டு.**

★ கவிச்சக்கரவர்த்தி **கம்பன்.**

www.nammakalvi.in



## திருக்குறள்

- ★ திரு + குறள் = **திருக்குறள்**
- ★ குறள் வெண்பாக்களால் ஆனது **திருக்குறள்.**
- ★ பதினெண்கீழ்க் கணக்கு நூல்களில் ஒன்று**திருக்குறள்.**
- ★ இரண்டடி வெண்பா **குறள்.**
- ★ திருக்குறள் என்பது **அடையடுத்த கருவியாகுபெயர்.**
- ★ உலகப்பொதுமறை, அறவிலக்கியம், தமிழர் திருமறை என பல்வேறு பெயர்களைக் கொண்டது **திருக்குறள்**
- ★ "வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாடு" என்றவர் **பாரதியார்**
- ★ "வள்ளுவனைப் பெற்றதால் பெற்றதே புகழ் வையகமே" என்றவர்**பாரதிதாசன்.**
- ★ 133 அடி உயரமுள்ள திருவள்ளுவர் சிலையினை நிறுவியுள்ள இடம் **கன்னியாகுமரி.**

## இதில் வெற்றிபெற

- ★ உவமைக் கவிஞர் என்று சிறப்பிக்கப்படுபவர்**சுரதா**
- ★ சுரதாவின் இயற்பெயர் **இராசகோபாலன்**
- ★ காவியம் என்னும் இதழை நடத்தியவர் **சுரதா**
- ★ கவிஞர் சுரதா நடத்திய இலக்கிய ஏடுகள் **இலக்கியம், விண்மீன் ஊர்வலம்**
- ★ தமிழக அரசின் கலைமாமணி விருது **பாரதிதாசன் விருது**
- ★ தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் **இராசராசன் விருது**

## இடையீடு

- ★ 'இதுவரை' என்ற தொகுப்பில் இடம்பெற்றுள்ள கவிதை**இடையீடு.**

## புறநானூறு

- ★ ஔவைக்குப் பரிசு தராமல் காக்க வைத்த சிற்றரசன்**நெடுமான் அஞ்சி**
- ★ எட்டுத்தொகை நூல்களுள் ஒன்று **புறநானூறு**
- ★ புறப்பொருள் பற்றியது **புறநானூறு**
- ★ புறநானூறு நூலுக்கு வழங்கப்படும் வேறு பெயர்கள் **புறம், புறப்பாட்டு**
- ★ தமிழரின் போர், வீரம், நாகரிகம், பண்பாடு நெறிப்பட்ட வாழ்க்கைமுறை எடுத்துரைப்பது**புறநானூறு**
- ★ அதியமானிடம் நட்பு பாராட்டியவர் **ஔவையார்**

## தெய்வமணிமாலை

- ★ இராமலிங்கர் இயற்றியது **திருவருட்பா**
- ★ திருவருட்பாவில் இடம்பெற்றுள்ள பாமாலை **தெய்வமணிமாலை**
- ★ திருவருட்பாவில் ஐந்தாம் திருமுறையில் இடம்பெற்றுள்ள பாடல் **தெய்வமணிமாலை**
- ★ சென்னைக் கந்தக்கோட்டத்து முருகப்பெருமானின் அருளை வேண்டி பாடப்பட்டது **தெய்வமணிமாலை**

## தேவாரம்

- ★ திருமுறைகள் **பன்னிரண்டு**
- ★ முதல் மூன்று திருமுறைகளைப் பாடியவர்**திருஞானசம்பந்தர்**
- ★ திருமுறையைத் தொகுத்தவர் **நம்பியாண்டார் நம்பி**

## அகநானூறு

★ பாடல் எண்ணிற்கு ஏற்பத் திணைகள் வரிசையாக வைத்துத் தொகுக்கப்பட்ட நூல் **அகநானூறு**

★ எட்டுத்தொகை நூல்களுள் ஒன்று **அகநானூறு**

★ அகநானூற்றில் உள்ள பிரிவுகள் **மூன்று**

➔ **களிற்றியானைநிரை மணிமிடைபவளம் நித்திலக்கோவை**

★ களிற்றியானைநிரையில் உள்ள பாடலின் எண்ணிக்கை **120**

★ மணிமிடைபவளத்தில் உள்ள பாடலின் எண்ணிக்கை **180**

★ நித்திலக்கோவையில் உள்ள பாடலின் எண்ணிக்கை **100**

★ நெய்தல் திணை பாடுவதில் வல்லவர் **அம்மூவனார்**

**உப்பங்கழி**

★ உப்பு விளையும் களத்தின் பெயர் **அளம்.**

★ கடலுக்கு அருகில் மணல் திட்டுகளில் கடல்நீர் தேங்கியிருக்கும் பகுதியின் பெயர் **உப்பங்கழி**

★ கடல்நீரைப் பாத்திகளில் தேக்கி வெயிலில் ஆவியாக்கி உப்புப் படிவத்திற்கு ஏற்றவகையில் அமைக்கப்பட்ட இடம் **உப்பளம்**

## கவிதைகள்

★ பாரதியின் கவிதைகளை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தவர் **நகுலன்**

## சிலப்பதிகாரம்

★ சிலப்பதிகாரமும், மணிமேகலையும் **இரட்டைக்காப்பியம்**

★ சிலப்பதிகாரத்தை இயற்றியவர் **இளங்கோவடிகள்**

★ *21* நரம்புகளைக் கொண்டது **பேரியாழ்**

★ *17* நரம்புகளைக் கொண்டது **மகரயாழ்**

★ *16* நரம்புகளைக் கொண்டது **சகோடயாழ்**

★ *7* நரம்புகளைக் கொண்டது **செங்கோட்டுயாழ்**

## மெய்ப்பாட்டியல்

★ தொல்காப்பியரைத் தமிழ்ச்சான்றோர், '**ஒல்காப் பெரும்புகழ் தொல்காப்பியன்**' என்று போற்றுகின்றனர்

★ தொல்காப்பியம் முழுமைக்கும் உரை எழுதியவர் **இளம்பூரணர்**

## அதிசயமலர்

★ 'அதன் பிறகும் எஞ்சும்' என்னும் கவிதைத் தொகுப்பில் இடம்பெற்ற கவிதை **அதிசய மலர்**

★ தமிழ்நதியின் குறுநாவல் **கானல் வரி**

## புறநானூறு

★ காய்நெல் அறுத்துக் கவளம் கொளினே என்ற பாடலின் ஆசிரியர் **பிசிராந்தையார்**

★ பாண்டிய நாட்டில் இருந்த ஊர் **பிசிர்**

## முகம்

★ தமிழின் நவீன பெண் கவிஞர்களில் குறிப்பிடத்தக்கவர் **சுகந்தி சுப்பிரமணியன்**

## இரட்சணிய யாத்திரிகம்

★ பில்கிரிம் புரோகிராஸ் என்னும் நூலை எழுதியவர் **ஜான் பன்யன்**

★ ஜான் பன்யன் எழுதிய மொழி **ஆங்கில மொழி**

★ பில்கிரிம் புரோகிராஸ் என்னும் ஆங்கில நூலின் தழுவல் **இரட்சணிய யாத்திரிகம்**

★ இரட்சணிய யாத்திரிகத்தின் ஆசிரியர் **எச்.ஏ. கிருட்டிணனார்**

★ கிறித்துவ சமய இலக்கியம் **இரட்சணிய யாத்ரிகம்**

★ கிறித்துவக் கம்பர் என்று அழைக்கப்பட்டவர் **எச். ஏ. கிருட்டிணனார்**

## சிறுபாணாற்றுப்படை

★ சிறுபாணாற்றுப்படையை இயற்றியவர் **நல்லூர் நத்தத்தனார்**

★ பத்துப்பாட்டு நூல்களில் ஒன்று **சிறுபாணாற்றுப்படை**

★ நல்லியக்கோடனை பாட்டுடைத்தலைவனாக கொண்டு பாடப் பெற்ற நூல்**சிறுபாணாற்றுப்படை**

★ சிறுபாணாற்றுப்படையின் அடிகள் **269**

★ பரிசுப் பெற்ற பாணன் பரிசில் பெறப் போகும் பாணனை அரசனிடம் ஆற்றுப்படுத்துவது **சிறுபாணாற்றுப்படை**

★ நல்லியக்கோடனது நிலப்பகுதி **திண்டிவனம்**

## உரைநடை

## ஒருவரிச் செய்திகள்

★ ஐந்திணைகளைப் பேசுபது **தொல்காப்பியம்**

★ கவிதையின் இயங்காற்றல் **நடை**

★ சங்கப்பாடல்களில் முக்கியமான ஒரு பண்பு**ஒலிக்கோலம்**

★ 'தமிழ் அழகியல்' என்னும் நூலை எழுதியவர்**தி.சு.நடராசன்**

★ திறனாய்வுக் கலையைத் தமிழுக்கு அறிமுகப்படுத்தியவர்களில் குறிப்பிடத்தக்கவர் **தி.சு.நடராசன்**

★ தி.சு.நடராசன் இயற்றிய நூல்கள்

➔ **கவிதையெனும் மொழி, திறனாய்வுக்கலை , தமிழ் அழகியல், தமிழின் பண்பாட்டு வெளிகள்**

★ 'நடைபெற்றியலும்' என்று குறிப்பிடப்படும் தொல்காப்பியத்தின் இயல் **கிளவியாக்கம்**

★ 'நடைநவின்றொழுகும்' என்று செய்யுளியல் குறிப்பிடும் இலக்கணம் **தொல்காப்பியம்**

★ "ஆசிரிய நடைத்தே வஞ்சி; ஏனை

வெண்பா நடைத்தே கலி" - என்று குறிப்பிடும் நூல் **தொல்காப்பியம்**

★ உலகப் புவி நாள் **ஏப்ரல் 22**

★ ஆர்டிக் பகுதி உருகியதற்கு காரணம் **புவி வெப்பமாதல்**

★ பசுமைகுடில் வாயுக்களின் அதிகரிப்பின் விளைவு **புவி வெப்பமடைதல்**

★ ஐக்கிய நாட்டு அவையின் உறுப்பு நாடுகள் **193**

★ இந்திய வானிலை ஆய்வுத்துறை கடந்த *110* ஆண்டுகளில் மிகவும் வெப்பமான ஆண்டாக அறிவித்த ஆண்டு **2009**

★ வெள்ளபெருக்கு ஏற்படுவதற்கான காரணங்களில் ஒன்று **மணல் அள்ளுவது**

★ நிலத்தடி நீர் மட்டத்தை தக்கவைத்துக் கொள்வதில் இன்றியமையாதது**மணல்**

★ நடுவணரசு தேசிய பேரிடர் மேலாண்மையை அமைத்த நாள், ஆண்டு **டிசம்பர் 23-2005**

www.nammakalvi.in



★ பேரிடர்களிலிருந்து தற்காத்துக்கொள்ள வேண்டிய முன்னெச்சரிக்கைகளில் ஒன்று **கடற்கரை ஓரங்களில் சதுப்பு நிலக் காடுகளை வளர்த்தல்**

★ இயற்கை சுழற்சியே **இயற்கைச் சமநிலை**

★ ஆனந்த் வேளாண்மைப் பல்கலைக்கழகம் அமைந்துள்ள மாநிலம் **குஜராத்**

★ உலகச் சுற்றுசூழல் நாள் **ஜூன் -5**

★ மனித சமூகத்தின் அடிப்படை அலகு **குடும்பம்**

★ நாணயத்தின் இரு பக்கங்கள் போல ஒன்றை ஒன்று சார்ந்து இருப்பவை **குடும்பம், திருமணம்**

★ தொல்காப்பியத்திலும், சங்க இலக்கியத்திலும் இடம்பெறாத சொல் **திருமணம், குடும்பம்**

★ குடும்பம் என்னும் சொல் முதன் முதலில் பயின்றுவந்த நூல் **திருக்குறள் (1029 குறள்)**

★ 'குடும்பு' என்ற சொல்லின் பொருள் **கூடி வாழ்தல்**

★ 'இல்', 'மனை' ஆகிய இரண்டு வாழிடங்களைக் குறிப்பது **தொல்காப்பியம்**

★ சங்க இலக்கியத்தில் தற்காலிகமாகத் தங்குமிடம் **புக்கில்**

★ தற்காலிகமாகத் தங்குமிடம் 'புக்கில்' என்பதைக் குறிக்கும் இலக்கியம் **புறநானூறு**

★ திருமணத்திற்குப்பின் கணவனும் மனைவியும் பெற்றோரிடமிருந்து பிரிந்து தனியாக வாழுமிடம் **தன்மனை**

★ சேரநாட்டு மருமக்கள் தாய முறை குறிப்பிடும் நூல் **பதிற்றுப்பத்து**

★ சிலம்புகழி நோன்பு குறித்துக் குறிப்பிடும் இலக்கியம் **ஐங்குறுநூறு**

★ விரிந்த குடும்ப முறையைப் பற்றி பாடியவர் **ஒக்கூர் மாசாத்தியார்**

★ விரிந்த குடும்ப முறையைப் பற்றி பேசுவது **தொல்காப்பியம்**

★ இன்றைய சமூக அமைப்பின் அலகுகள் **கூட்டுக்குடும்பம், தனிக்குடும்பம்**

★ தமிழர் குடும்ப முறையின் ஆசிரியர் **பக்தவச்சல பாரதி**

★ தமிழ்ச்சமூகம், பண்பாடு சார்ந்த மானிடவியல் ஆய்வுகளை முன்னெடுத்துச் சென்றவர் **பக்தவச்சல பாரதி**

★ பழங்குடி, நாடோடிகள் உள்ளிட்ட விளிம்புநிலைச் சமூகங்கள் பற்றிய ஆய்வில் முக்கியப்பங்கு வகித்தவர் **பக்தவச்சல பாரதி**

★ வாழிடத்தை குறிக்கும் முதன்மைச்சொல் **மனை**

★ ஊர்தோறும் பொதுவான இடத்தில் பெரிய மரத்தினடியே அமைக்கப்பட்டிருப்பது **மன்றம்**

★ மன்றம் என்பது **அம்பலம்**

★ மன்றமென்பது மரத்தடியில் உள்ள **திண்ணை**

★ 'ஐயாண் டெய்தி மையாடி அறிந்தார் கலைகள்' என்பது **சிந்தாமணி**

★ குழிமாற்று என்பது **பெருக்கல் வாய்ப்பாடு**

★ மாணவர்கள் எழுத பயன்படுத்திய பொருட்கள் **பனையேடு, சீதாளப் பத்திரம் (தாழை மடல்)**

★ தூக்கின் மற்றொரு பெயர் **அசை**

★ மிகச் சிறந்த நூற்பயிற்சியுடையவர்கள் அரசவையில் வாதம் புரிந்த செய்தியைக் குறிக்கும் நூல் **மதுரைக்காஞ்சி**

★ 'என் ஒருவன் சாந்துணையும் கல்லாத வாறு' என்றவர் **திருவள்ளுவர்**

★ ஒருவன் இறக்குமளவு படிக்கவேண்டும் என்று கூறியவர் **திருவள்ளுவர்**

www.nammakalvi.in


★ கல்விக்கற்கப் பிரியும் காலம் **ஓதற்பிரிவு**

★ ஓதற்பிரிவுக்கு ஆகும் கால எல்லை **மூன்று வருடங்கள்**

★ உ.வே.சாவின் இலக்கியக் கட்டுரை **உயிர்மீட்சி**

★ உயிர்மீட்சி என்னும் இலக்கியக் கட்டுரை தொகுப்பிலிருந்து எடுக்கப்பட்டது **பண்டையக் காலத்துப் பள்ளிக்கூடங்கள்**

★ 'தமிழ் தாத்தா' என அழைக்கப்பெற்றவர் **உ.வே.சா.**

★ பழந்தமிழ் இலக்கியங்களைத் தேடி அச்சில் பதிப்பித்தவர் **உ.வே.சா.**

★ உ.வே.சா. நூலகம் அமைந்துள்ள இடம் **சென்னை திருவான்மியூர்**

★ மில்டனின் நூல் **சுவர்க்க நீக்கம்**

★ மா. இராசமாணிக்கனாரின் ஆசிரியர் **மௌனகுரு**

★ நற்றிணை நூலின் உரையாசிரியர் **பின்னத்தூர் நாராயணசாமி**

★ "மஞ்சல் குளிப்பாட்டி மையிட்டு முப்பாலும்
மிஞ்சப் புகட்ட மிகவளர்ந்தாய்"- என்ற பாடல் அடிகள் இடம்பெற்ற நூல் **தமிழ்விடு தூது**

★ மனப்பாடம் செய்ய இருந்த சுவடி **பிரபவாதி சுவடி**

★ வித்தியாரம்பம் -- **கல்வித் தொடக்கம்**

★ உபாத்தியாயர் -- **ஆசிரியர்**

★ முதலில் வரும் மாணவனின் பெயர் **வேத்தான்**

★ இந்தியாவில் மூன்று நூற்றாண்டுகளாக ஆங்கிலேயர்களின் ஆட்சிக்கு அடித்தளமாகவும் அதிகார மையமாக விளங்கிய கடற்கரை நகரம் **மதராசப்பட்டினம்**

★ தென்னிந்தியாவின் நுழைவாயில் **சென்னை**

★ தமிழகமெங்கும் பரவி வாழும் தமிழர்களின் பண்பாட்டு அடையாளம் **சென்னை**

★ பல்லாவரத்தில் கண்டுபிடிக்கப்பட்டது **கல்கோடாரி**

★ பல்லாவர குடைவரைக் கோயில் வடிவமைத்தவர் **முதலாம் மகேந்திரவர்மன்**

★ கிழக்கிந்திய வணிக நிறுவனத்தின் தலைவராக இருந்தவர் **பிரான்சிஸ் டே**

★ பெண்களுக்கென 1914ஆம் நூற்றாண்டில் தொடங்கப்பட்ட கல்லூரி **இராணிமேரி கல்லூரி**

★ சென்னையின் பழமையைப் பறைசாற்றுபவை **சாரசனிக் கட்டடக்கலை**

★ இந்தியாவின் முதல் பொது நூலகம் **கன்னிமாரா நூலகம்**

★ தென்னிந்தியாவின் முதல் தொடர்வண்டிநிலையம் அமைக்கப்பட்ட இடம் **இராயபுரம்**

★ ஆசியாவின் இரண்டாவது பெரிய நூலகம் **அண்ணா நூற்றாண்டு நூலகம்**

★ 'கிரான் கபே' விடுதியில் லூமியர் சகோதரர்கள் திரையிட்ட சில துண்டுப்படங்களில் ஒன்று **ரயிலின் வருகை**

★ அசையும் உருவங்களைப் படம்பிடிக்கும் கருவியைக் கண்டுபிடித்தவர் **தாமஸ் ஆல்வா எடிசன்**

★ படப்பிடிக்கும் கருவியோடு திரையிடும் கருவியைச் சேர்த்துத் திரைப்படம் என்னும் விந்தையைக் கண்டுபிடித்தவர் **லூமியர் சகோதரர்கள்**

★ காட்சிகள் மாறுவதை உணர்த்த ஒரு காட்சியைச் சிறிது சிறிதாக மங்கலாகக் காட்டிக் இருள் ஆக்கிக் காட்டுவது **காட்சி மறைவு**

www.nammakalvi.in



- ★ ஒற்றைக் கோணக்கலை என்பது **நாடகம் (**single dimension art**)**
- ★ புதிய திரையரங்குகள் வரக் காரணமானவர் **சாமிக்கண்ணு**
- ★ ஓர் அரசன் ஒரு நாளை எவ்வாறு ஒதுக்கி பணியாற்ற வேண்டும் என்று திருவள்ளுவர் குறிப்பிட்ட அதிகாரம் **மடியின்மை**
- ★ பலர் துஞ்சவும் தான் துஞ்சான் என்று பாடியவர் **கோவூர்க்கிழார்**
- ★ மனமே ஒரு வேளாண்மைக்குட்பட்ட மேலாண்மையுடையது என்று கூறுவது**அறநெறிச்சாரம் - 16வது பாடல்**
- ★ இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு பன்னாட்டு வணிகம் நிகழும் இடமாகத் திகழ்ந்தது **தமிழ்நாடு**
- ★ குதிரைகள் இறக்குமதி செய்யப்பட்ட செய்தியைக் குறிப்பிடும் நூல்**பட்டினப்பாலை**
- ★ பல நாடுகளில் இருந்து பொருட்கள் வந்த செய்தியைக் குறிப்பது **பட்டினப்பாலை**
- ★ சங்க இலக்கியம் குறிப்பிடும் மிகப் பெரிய துறைமுகம் **முசிறி**
- ★ பதிற்றுப்பத்து இரண்டாம் பத்தில் குறிப்பிடப்படும் மன்னன் **இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன்**
- ★ நிருவாக மேலாண்மைப் பற்றிக் குறிப்பிடும் நூல் **நாலடியார்**
- ★ வாழ்வுக்கும், வர்த்தகத்திற்கும் பொருந்தும் கோட்பாட்டைச் சொன்னவர் **ஹிராக்ளிடஸ்**
- ★ வெ.இறையன்பு எழுதிய நூல் **இலக்கியத்தில் மேலாண்மை**
- ★ வெ.இறையன்பு எழுதி தமிழ் வளர்ச்சித்துறையின் சிறந்த நூலுக்கான பரிசினைப் பெற்ற கவிதை நூல் **வாய்க்கால் மீன்**
- ★ மயிலை சீனி. ஒரு **தமிழ்த் தேனீ**
- ★ ச.த.சற்குணத்தின் உரையைக்கேட்ட ஆர்வத்தில் மயிலை வேங்கடசாமி எழுதிய நூல் **கிறித்துவமும் தமிழும்**
- ★ மயிலை சீனி.வேங்கடசாமியின் முதல் நூல் **கிறித்தவமும் தமிழும்**
- ★ கவின் கலைகள் குறித்துத் தமிழில் வெளிவந்த முழுமையான முதல்நூல்**தமிழர் வளர்த்த அழகுக்கலைகள்**
- ★ மயிலை வேங்கடசாமியின் மீட்டுருவாக்க முயற்சிக்குச் சரியான நூல் **தமிழ்நாட்டு வரலாறு**
- ★ மயிலை வேங்கடசாமி 'செந்தமிழ்ச் செல்வி' என்னும் இதழில் எழுதிய ஆய்வுக்கட்டுரை **அஞ்சிறைத் தும்பி**
- ★ மகேந்திர வர்மன் எழுதிய நூல் **மத்தவிலாசம்**
- ★ சங்ககாலப் பசும்பூண் பாண்டியன் கொடியின் சின்னம் **யானை**
- ★ நெஞ்சம் இளகி விரிவெய்த விரிவெய்த அறிவிலே சுடர் ஏறுகிறது என்றவர் **பாரதியார்**
- ★ தமிழ்நாட்டில் வீதிகள் தோறும் தமிழ்ப் பள்ளிக்கூடங்கள் மலிக என்றெழுது என்று நெல்லையப்பருக்கு கடிதம் எழுதியவர் **பாரதியார்**
- ★ ஆணும் பெண்ணும் ஒருயிரின் இரண்டு தலைகள், அவை ஒன்றிலொன்று தாழ்வில்லை என்றவர் **பாரதியார்**
- ★ பெண்ணை தாழ்மை செய்தோன் கண்ணைக் குத்திக் கொண்டான், பெண்ணை அடைத்தவன் கண்ணை அடைத்தான் இக்கூற்றுக்கு உரியவர் **பாரதியார்**
- ★ உத்தம சோழன் எழுதியது **முதல்கல்**
- ★ தஞ்சைச் சிறுகதைகள் என்னும் தொகுப்பில் இடம் பெற்றுள்ள கதை **முதல்கல்**

## குறுவினா

### செய்யுள்

**1. கவிஞர் சிற்பி எவற்றை வியந்து பாட, தமிழின் துணை வேண்டும் என்கிறார்?**

**உழைப்பாளிகளின் உடலில் வியர்வை வெள்ளம் முத்துமுத்தாகப் பூத்திருக்கும்.**

★ அந்த வெள்ளை முத்துகள் ஒவ்வொன்றும் தமிழின் புகழைப் பாட,

★ தமிழே நீ துணை வேண்டும் என்கிறார் கவிஞர் சிற்பி

**2. நகரம் பட்டைத் தீட்டிய வெள்ளை வைரமாகிறது - விளக்கம் தருக.**

**நகரம் பட்டைத் தீட்டிய வெள்ளை வைரமாகிறது.**

★ வாகனப் புகையால் படிந்த அழுக்குகள் மழைச்சாரலால் தூய வெண்மையாக மாறின.

★ ஒருநாள் தோன்றியது சூரியன். கட்டிடங்கள் மழையால் பட்டைத் தீட்டப் பட்டு சூரியனின் பொன்கதிர்களால் வெள்ளை வைரமாகக் காட்சியளிக்கின்றது.

**3. நிலையாமை குறித்து, சவரி உரைக்கும் கருத்து யாது?**

**நிலையாமை குறித்து சவரி உரைக்கும் கருத்து**

★ இராமனிடம் மிகுதியான அன்பும் பக்தியும் கொண்டவள் சவரி.

★ இராமனைக் கண்டதால், பொய்யான உலகப்பற்று அழிந்தது.

★ தான் நீண்ட காலம் மேற்கொண்டிருந்த தவம் பலித்தது, பிறவி ஒழிந்தது என்று சவரி உணர்கின்றாள்.

**4. எதிர்பாராத நிகழ்வுகளை ஜலாலுத்தீன் ரூமி எவ்வாறு உருவகப்படுத்துகிறார்?**

**எதிர்பாராத நிகழ்வுகளை ஜலாலுத்தீன் ரூமி உருவகப்படுத்தும் முறை**

★ எதிர்பாராத நிகழ்வுகளை ஜலாலுத்தீன் ரூமி 'விருந்தாளிகள்' என்று உருவகப்படுத்துகிறார்.

**5. துன்பு உளது எனின் அன்றோ சுகம் உளது என்ற இராமனின் கூற்று பின்வரும் இரு பழமொழிகளில் எதற்குப் பொருந்தும்?**

அ. நிழலின் அருமை வெயிலில் தெரியும் ஆ. சிறு துரும்பும் பல்குத்த உதவும்

**பொருந்தும் பழமொழி**

★ அ. நிழலின் அருமை வெயிலில் தெரியும்

**6. முயல்வாருள் எல்லாம் தலை என வள்ளுவர் யாரைச் சுட்டுகிறார்?**

**முயல்வாருள் தலை**

★ அறத்தின் இயல்போடு இல்வாழ்க்கை வாழ்பவர் முயற்சி செய்வோரைவிட மேம்பட்டவர்.

**7. ஞாலத்தின் பெரியது எது?**

**ஞாலத்தின் பெரிது**

★ உரிய காலத்தில் ஒருவர் செய்த உதவி உலகத்தைவிட பெரியதாகும்.

**8. மறக்கக் கூடாதது, மறக்கக் கூடியது எவற்றை?**

**மறக்கக் கூடாதது**

★ ஒருவர் நமக்குச் செய்த நன்றியை மறக்கக் கூடாது.

**மறக்கக் கூடியது**

★ ஒருவர் நமக்குச் செய்த தீமைகளை உடனே மறந்துவிட வேண்டும்.

www.nammakalvi.in



**9. செல்வம் இருப்பதற்கான வழியாக வள்ளுவம் உரைப்பன யாவை?**

**செல்வம் இருப்பதற்கான வழி**

★ ஒருவருடைய செல்வம் குறையாமல் இருப்பதற்கு வழி பிறர் கைப்பொருளை விரும்பாமல் இருப்பது.

**10. சினத்தை ஏன் காக்க வேண்டும்?**

**சினத்தைக் காக்க வேண்டும்**

★ ஒருவர் சினம் வராமல் காத்துக்கொள்ள வேண்டும்.

★ சினத்தைக் காக்காவிட்டால், சினம் நம்மையே அழித்துவிடும்.

**11. இடையீடு - எவற்றைக் குறியீடாகக் குறிப்பிடுகிறது?**

**இடையீடு கவிதையில் உள்ள குறியீடு**

★ எண்ணம் வெளியீடு கேட்டல்

**12. வசனம், கவிதை வேறுபாடு தருக.**

| வசனம் | கவிதை |
|---|---|
| மக்கள் பேசும் எளிய சொற்களால் அமையும். | யாப்பிலக்கண நெறிகளுக்கு உட்பட்டு அமையும் |
| தொடை நயங்கள் (எதுகை, மோனை) இடம்பெறாது. | தொடை நயங்கள் (எதுகை, மோனை) இடம்பெறும் |
| அடி வரையறை இல்லாமல் இருக்கும். | இலக்கணத்திற்கு உட்பட்ட அடி வரையறை இருக்கும் |

**13. எத்திசையிலும் சோறு தட்டாது கிட்டும் - யார்க்கு?**

**எத்திசையிலும் சோறு தட்டாது கிட்டும்**

★ கலைத்தொழில் மிகுந்த கவிஞர்களுக்கு எத்திசையிலும் சோறு தட்டாது கிட்டும்.

**14. கலிவிழா, ஒலிவிழா - விளக்கம் தருக.**

**கலிவிழா**

★ திருமயிலையில் நடைபெறும் விழாக்கள் மக்களுக்கு எழுச்சிமிக்கதாக அமைந்துள்ளது.

**ஒலிவிழா**

★ மயிலையில் கோவில்கொண்டிருக்கும் இறைவனுக்குப் பங்குனி உத்திரத்தில் திருவிழா நடைபெறுகிறது.

★ பங்குனி உத்திரவிழா ஆரவார விழாவாக (ஒலிவிழா) உள்ளது.

**15. "தருமமிகு சென்னையில் கந்த கோட்டத்துள்வளர் தலமோங்கு கந்தவேளே" - தொடருக்குப் பதவுரை எழுதுக.**

**பதவுரை**

★ தருமமிகு சென்னையில் - அறம் செய்வோர் நிறைந்துள்ள சென்னையில்

★ கந்த கோட்டத்துள் - கந்தகோட்டத்துக் கோவிலில்

★ வளர் தலமோங்கு - எழுந்தருளியிருக்கும்

★ கந்தவேளே - முருகனே

**16. பெருங்கடல் வேட்டத்துச் சிறுகுடிப் பரதவர் - தொடரில் உள்ள முரண் நயத்தைக் குறிப்பிடுக.**

**முரண் நயம்**

★ பெருங்கடல் - சிறுகுடி

★ இவ்வடிகளில் பெரிய - சிறிய என்றும் முரண்பட்ட சொற்கள் அமைந்துள்ளன.

**17. எண்வகை மெய்ப்பாடுகள் யாவை?**

**எண்வகை மெய்ப்பாடுகள்**

★ தொல்காப்பியம் எட்டு வகையான மெய்ப்பாடுகளைக் கூறுகிறது. அவை

★ நகை (சிரிப்பு)

★ அழுகை

★ இளிவரல் (சிறுமை)

★ மருட்கை (வியப்பு)

★ அச்சம் (பயம்)

★ பெருமிதம் (பெருமை)

★ வெகுளி (கோபம்)

★ உவகை (மகிழ்ச்சி)

**18. ஒருமுக எழினி, பொருமுக எழினி - குறிப்பு எழுதுக.**

**ஒருமுக எழினி**

★ மேடையின் ஒரு பக்கத்தின் இறுதியிலிருந்து, மற்றொரு பக்கத்தின் இறுதிக்குச் செல்லுமாறு அமைக்கப்படும் திரை, ஒருமுக எழினி

**பொருமுக எழினி**

★ மேடையின் நடுவில் ஒன்றோடு ஒன்று பொருந்தும்படி, இரு பக்கத்திலிருந்தும் வருமாறு அமைக்கப்படும் திரை, பொருமுக எழினி

**19. "மூச்சு நின்று விட்டால் பேச்சும் அடங்கும்" - கவிதைக்குப் பொருத்தமான பழமொழி ஒன்றை எழுதுக.**

★ எரிவதைப் பிடுங்கினால், கொதிப்பது அடங்கும்.

**20. மனத்தை அதன்போக்கில் செல்லவிடக் கூடாது என்று வள்ளுவம் கூறுவது ஏன்?**

**மனத்தை அதன்போக்கில் செல்லவிடக் கூடாது**

★ மனத்தை அதன்போக்கில் செல்லவிட்டால், தவறான பாதையில் செல்ல நேரிடும்.

★ எனவே, மனத்தை அதன்போக்கில் செல்லவிடாமல், நல்ல வழியில் செல்ல வேண்டும்.

**21. "உருவுகண்டு எள்ளாமை வேண்டும் உருள்பெருந்தேர்க்கு அச்சாணி அன்னார் உடைத்து" - இக்குறட்பாவின் உவமையைப் பொருளோடு பொருத்துக.**

**உவமை**

★ தேர் மிகப்பெரியதாக இருந்தாலும் அதன் அச்சாணி சிறிதாகவே இருக்கும்.

**பொருள்**

★ ஒருவர் உருவத்தில் சிறியதாக இருந்தாலும், அவரால் மிகப்பெரிய செயல்களைச் செய்ய இயலும்.

★ எனவே, ஒருவரின் தோற்றத்தைக் கண்டு எள்ளி நகையாடக் கூடாது.

**22. மன உறுதியின் தேவை பற்றித் திருக்குறள் யாது கூறுகிறது?**

**மன உறுதியின் தேவை**

★ ஒருவரின் மனம் உறுதியாக இருந்தால் மட்டுமே, ஒரு செயலை நல்ல முறையில் செய்து முடிக்க இயலும் என்று திருக்குறள் கூறுகிறது.

**23. நஞ்சுண்பவர் என வள்ளுவர் யாரை இடித்துரைக்கிறார்?**

**நஞ்சுண்பவர்**

★ கள் உண்பவரை வள்ளுவர் நஞ்சுண்பவர் என இடித்துரைக்கிறார்.

www.nammakalvi.in



**24. அரசரோடு நட்புப் பாராட்டினாலும் செய்யத்தகாதன யாவை?**

**செய்யத்தகாதன**

★ அரசரோடு நட்புப் பாராட்டுபவராக இருந்தாலும் தகுதி அல்லாதவற்றைச் செய்யக் கூடாது.

**25. பகைவராலும் அழிக்க முடியாத அரண் எது?**

**பகைவராலும் அழிக்க முடியாத அரண்**

★ ஒருவருக்கு அழிவு வராமல் காக்கும் கருவி அறிவே ஆகும்.

★ பகைவராலும் அழிக்க முடியாத பாதுகாப்பு அரணாக அமைவது அறிவு ஆகும்.

**26. அஞ்சத் தகுந்தன, அஞ்சத் தகாதன என வள்ளுவம் குறிப்பிடுவது யாது?**

**அஞ்சத் தகாதன**

★ வாளைப்போல் வெளிப்படையாகத் துன்பம் செய்யும் பகைவருக்கு அஞ்ச தேவையில்லை.

**அஞ்சத் தகுந்தன**

★ உறவுடையோர் போல் நடித்து உட்பகை கொண்டவரின் தொடர்புக்கு அஞ்ச வேண்டும்.

**27. வறுமையும் சிறுமையும் தருவது எது?**

**வறுமையும் சிறுமையும் தருவது**

★ ஒருவருக்கு வறுமையும் சிறுமையும் தருவது சூதாட்டம் ஆகும்.

**28. நீங்கள் படித்ததில் பிடித்த குறளை எழுதி, காரணத்தைக் குறிப்பிடவும்.**

**எனக்குப் பிடித்த குறள்**

★ "சொல்லுதல் யார்க்கும் எளிய அறியவாம்
சொல்லிய வண்ணம் செயல்"

**குறள் பிடித்ததற்கான காரணம்**

★ சிலர் வெறும் வாய்ச்சொல் வீரர்களாக மட்டுமே இருப்பார்கள்.

★ அவ்வாறு இருப்பவர்களை இடித்துரைக்கும் வகையில் இக்குறள் அமைந்துள்ளதால் எனக்கு இக்குறளைப் பிடிக்கும்.

**29. உலகத்தில் சிறந்த துணையாகவும் பகையாகவும் வள்ளுவர் எவற்றைக் குறிப்பிடுகிறார்?**

**சிறந்த துணை**

★ நல்ல இனமே (நற்குணம் உடையவர்கள்) ஒருவருக்குச் சிறந்த துணை ஆகும்.

**பகை**

★ தீய இனமே (தீயகுணம் உடையவர்கள்) ஒருவருக்குத் துன்பத்தைத் தரும் பகை ஆகும்.

**30. கீழ்நீர்க் குளித்தானைத் தீத்துரீஇ யற்று - பொருள் கூறுக.**

**பொருள்**

★ நீரில் மூழ்கிய ஒருவரைத் தீப்பந்தம் கொண்டு தேடுவது

**31. எந்தவொரு பொருளைப் பயன்படுத்தும்போதும் அதற்குப் பின்னால் உள்ள மனிதர்களின் உழைப்பை நாம் சிந்திப்பதில்லை. ஒரு தேநீரைப் பருகும்போது அதற்குப் பின்னால் உள்ள மனித உழைப்பைச் சிந்தித்து உங்கள் கருத்தை எழுதுக.**

**தேநீருக்குப் பின்னால் உள்ள மனித உழைப்பு**

★ தேயிலைத் தோட்டத்தில் மலைவாழ் மக்கள் தினக்கூலிகளாக வேலை செய்கிறார்கள்.

★ மலைவாழ் மக்கள் இயற்கைப் பேரிடர்களாலும், காட்டு விலங்குகளின் தாக்குதல்களாலும் பாதிக்கப்படுகின்றனர்.

★ இத்தகைய மனிதர்களின் ஆபத்தான உழைப்பிலிருந்தே நமக்குத் தேநீர் கிடைக்கின்றது.

**32. அறிவுடை வேந்தனின் நெறி குறித்து, பிசிராந்தையார் கூறுவன யாவை?**

**அறிவுடை வேந்தனின் நெறி**

★ குறைந்த நிலத்தில் விளைந்த நெல்லாக இருந்தாலும், அதை அறுத்து யானைக்கு வழங்கினால், ஒரு மாதம் வரை வழங்க இயலும்.

★ அதுபோல, அறிவுடை வேந்தன் தன் நாட்டு மக்களிடம் முறைப்படி வரி வசூலித்தால், நாட்டின் செல்வம் நீண்ட காலத்திற்குக் கிடைக்கும்.

**33. செவியறிவுறூஉ துறையை விளக்குக.**

**செவியறிவுறூஉ துறை**

★ அரசன் செய்ய வேண்டிய கடமைகளை முறைதவறாமல் செய்யுமாறு அவன் கேட்க அறிவுறுத்துவது, செவியறிவுறூஉ துறை ஆகும்.

**34. முகம் முகவரியற்றுப் போனதற்கு சுகந்தி சுப்பிரமணியன் கூறும் காரணத்தை எழுதுக.**

**முகம் முகவரியற்றுப் போனதற்குக் காரணம்**

★ தனக்குள்ளே தன்னைத் தொலைத்ததால் முகம் முகவரியற்றுப் போனதாக சுகந்தி சுப்பிரமணியன் கூறுகிறார்.

**35. இறைமகனாரின் இன்னலைக் கண்டு மக்கள் எவ்விதம் புலம்பினர்?**

**இறைமகனாரின் இன்னலைக் கண்டு மக்கள் புலம்பிய விதம்**

★ "இத்தனை கொடுமைகளுக்குப் பிறகும் இவ்வுலகம் பிளந்து வெடிக்கவில்லையே!

★ வானம் இடிந்து விழவில்லையே!

★ கடல்நீர் வற்றிப் போகவில்லையே!

★ இந்த உலகம் இன்னும் அழியாமல் தாமதிப்பதும் ஏனோ?" என்று மக்கள் புலம்பினர்

## குறுவினா

### உரைநடை

**1. நடை அழகியல் பற்றித் தொல்காப்பியம் கூறும் கருத்தைக் குறிப்பிடுக.**

**நடை பற்றி தொல்காப்பியம் கூறும் தொடர்கள்** ★ நடைபெற்றியலும் 'நடை நவின்றொழுகும்'

**பொருள்** ★ நடை அழகியல் யென்பது பாக்களின் ஓசைத்திறம் ஆகும்.

**2. 'ஆளுக்கொரு மரம் வளர்ப்போம்' என்னும் முழக்கத்தொடர் வாயிலாக எவற்றை வலியுறுத்துவாய்?**

**முழக்கத்தொடர் வாயிலாக நான் வலியுறுத்துவது.**

★ ஒவ்வொருவரும் மரம் வளர்க்க வேண்டும். ★ எதிர்காலத்தில் மரம் நமக்கு வரமாகும்

★ ஒவ்வொருவரும் மரத்தின் பயனை உணரவேண்டும்.

**3. மனிதன் தன் பேராசை காரணமாக இயற்கை வளங்களைக் கடுமையாகச் சேதப்படுத்தியன் விளைவை இன்று சந்தித்துக்கொண்டிருக்கிறான் - இரு தொடர்களாக்குக.**

★ மனிதன் தன் பேராசையால் இயற்கை வளங்களைச் சேதப்படுத்தினான்.

★ இயற்கையைச் சேதப்படுத்தியதன் விளைவை மனிதன் இன்று சந்தித்துக்கொண்டிருக்கின்றான்.

**4. புக்கில், தன்மனை - சிறு குறிப்பு வரைக.**

**புக்கில்** ★ தற்காலிகமாகத் தங்குமிடம் 'புக்கில்' எனப்படும்.

**தன்மனை** ★ திருமணத்திற்குப் பிறகு கணவனும் மனைவியும் தனியாக வாழுமிடம் 'தன்மனை' ஆகும்.

**5. அக்காலத்துக் கல்விமுறையில் மனனப் பயிற்சிக்கு உதவிய நூல்கள் யாவை?**

**அக்காலத்துக் கல்விமுறையில் மனனப் பயிற்சிக்கு உதவிய நூல்கள்**

★ நிகண்டுகள் ★ நன்னூல் ★ காரிகை ★ தண்டியலங்காரம் ★ நீதிநூல்கள்

**6. கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம் குறித்து எழுதுக.**

**கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம்**

★ கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம் 1869ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது.

★ காலின் மெக்கன்சி என்பவர் நூல்கள், ஓலைச்சுவடிகள், நாணயங்கள் ஆகியவற்றைத் தொகுத்தார்.

**7. பின்னணி இசை படத்தின் காட்சியமைப்புக்கு எவ்வாறு உயிரூட்டும்? சான்று தருக.**

**பின்னணி இசை**

★ திரைப்படத்தில் கதைக்கு உயிரூட்டுவது பின்னணி இசை ஆகும்.

★ பின்னணி இசைச் சேர்ப்பும், மௌனமும் திரையில் உணர்வுகளை வெளிப்படுத்த உதவுகின்றன.

**8. பருவத்தே பயிர் செய் - நேர மேலாண்மையோடு பொருத்தி எழுதுக.**

**பருவத்தே பயிர் செய்**

★ உழவுத்தொழிலில், விதை விதைத்தல், நாற்று நடுதல், அறுவடை செய்தல் என பலநிலைகள் உள்ளன.

★ உழவுத்தொழிலில், ஒவ்வொரு நிலையையும் ஏற்ற பருவத்தில் செய்ய வேண்டும்.

★ நம் வாழ்வில் எந்த நேரத்தில் எதைச் செய்ய வேண்டும் என்று முடிவெடுத்துச் செய்தால், வாழ்வில் வெற்றியடைய இயலும்.

**9. 'தமிழர் வளர்த்த அழகுக் கலைகள்' நூல் பற்றிக் குறிப்பு வரைக.**

**தமிழர் வளர்த்த அழகுக் கலைகள் - நூல் குறிப்பு**

★ தமிழர் வளர்த்த அழகுக் கலைகள் நூலை இயற்றியவர் மயிலை சீனி. வேங்கடசாமி

★ கவின்கலைகள் குறித்து தமிழில் வெளிவந்த முதல் நூல். ★ தமிழக அரசின் பரிசு பெற்ற நூல்.

**10. "விரிபெரு தமிழர் மேன்மை**
**ஓங்கிடச் செய்வ தொன்றே**
**உயிர்ப்பணியாகக் கொண்டோன்" - யார், யாரைப் பற்றி, எதற்காகக் கூறுகிறார்?**

★ மயிலை சீனி. வேங்கடசாமியின் தமிழ்த்தொண்டினைப் பாராட்டி பாவேந்தர் பாரதிதாசன் கூறியுள்ளார்.

www.nammakalvi.in



## இலக்கணக்குறிப்புகள்

**அடுக்குத்தொடர்**
- ஊன்ற ஊன்ற
- முத்து முத்தாய்

**ஆகுபெயர்**
- நீலம்

**இடைக்குறை**
- உளது
- இலாத

**இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை**
- அரவக்கடல்

**ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்**
- அடையா
- அறியா
- மறவா
- பொய்யா

**உரிச்சொற்றொடர்**
- தடக்கை
- மாமயிலை
- மாதவம்

**உருவகம்**
- வியர்வை வெள்ளம்

**உவமைத்தொகை**
- மலரடி
- கடல்தானை

**எண்ணும்மை**
- அறிவும் புகழும்
- ஆடலும் பாடலும்

**ஏவல் பன்மை வினைமுற்று**
- ஓர்மின்

### அளபெடை

**சொல்லிசை அளபெடை**
- கவாஅன்
- உழாஅது
- வெரீஇய
- வளைஇ

**இசைநிறை அளபெடை**
- சிறாஅர்

**தொழிற்பெயர்**
- மலைதல்
- நகை
- அழுகை
- இளிவரல்
- மருட்கை
- அச்சம்
- பெருமிதம்
- வெகுளி
- உவகை

**பண்புத்தொகை**
- அருந்திறல்
- நெடுவழி
- வெள்ளருவி
- நன்னாடு
- செம்பரிதி
- செந்தமிழ்
- பெருங்கடல்
- வெங்கதிர்
- கருந்தடம்
- நெடுவேல்
- நன்மொழி
- வெங்குருதி
- செந்நிறம்
- கொடுங்கோல்
- தொல்நெறி
- புதுப்பெயல்

**பெயரெச்சம்**
- சொற்ற
- திருந்திய
- வாய்த்த
- உவப்ப
- கொடுத்த
- ஈந்த
- புக்க

**மரூஉ**
- நுந்தை (நும் தந்தை)

**முன்னிலைப் பன்மை வினைமுற்று**
- உன்னலிர்

**வினைத்தொகை**
- தாழ்கடல்
- காய்நெல்
- வயங்குமொழி
- வளர்தலம்
- விரிகடல்

**வினையாலணையும்பெயர்**
- செற்றவர்
- பாதகர்
- உயர்ந்தோர்

**வினையெச்சம்**
- வெந்து
- சினந்து
- போந்து
- சிவந்து

## பகுபத உறுப்பிலக்கணம்

| சொல் | பகுதி | விகாரம் | சந்தி | இடைநிலை | சாரியை | விகுதி |
|---|---|---|---|---|---|---|
| **சாய்ப்பான்** | சாய் | - | ப் | ப் எதிர்கால இடைநிலை | - | ஆன் படர்க்கை ஆண்பால் வினைமுற்று விகுதி |
| **தந்தனன்** | தா | தா ‘த’ எனக் குறுகியது பகுதி விகாரம் | த் | த் இறந்தகால இடைநிலை | அன் | அன் படர்க்கை ஆண்பால் வினைமுற்று விகுதி |
| **விம்முகின்ற** | விம்மு | - | - | கின்று நிகழ்கால இடைநிலை | - | அ பெயரெச்ச விகுதி |
| **நினைக்கின்ற** | நினை | - | க் | கின்று நிகழ்கால இடைநிலை | - | அ பெயரெச்ச விகுதி |

www.nammakalvi.in



| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **வியந்து** | விய | த் ந் ஆனது விகாரம் | த் | த் இறந்தகால இடைநிலை | - | உ வினையெச்ச விகுதி |
| **விளங்கு** | விளங்கு | - | - | - | - | இ வினையெச்ச விகுதி |
| **இருந்தாய்** | இரு | த் ந் ஆனது விகாரம் | த் | த் இறந்தகால இடைநிலை | - | ஆய் முன்னிலை ஒருமை வினைமுற்று விகுதி |
| **நகை** | நகு | - | - | - | - | ஐ தொழிற்பெயர் விகுதி |
| **மருள்** | மருள் | ள் ட் ஆனது பகுதி விகாரம் | - | - | - | கை தொழிற்பெயர் விகுதி |
| **வெகுளி** | வெகுள் | - | - | - | - | இ தொழிற்பெயர் விகுதி |
| **உயர்ந்தோர்** | உயர் | த் ந் ஆனது விகாரம் | த் | த் இறந்தகால இடைநிலை | - | ஓர் பலர்பால் வினைமுற்று விகுதி |
| **பேசுவார்** | பேசு | - | - | வ் எதிர்கால இடைநிலை | - | ஆர் பலர்பால் வினைமுற்று விகுதி |
| **பழித்தனர்** | பழி | த் | - | த் இறந்தகால இடைநிலை | அன் | அர் பலர்பால் வினைமுற்று விகுதி |
| **தொழுதனர்** | தொழு | - | - | த் இறந்தகால இடைநிலை | அன் | அர் பலர்பால் வினைமுற்று விகுதி |
| **வந்தனன்** | வா | வா 'வ' எனக் குறுகியது விகாரம் த் (ந்) ஆனது சந்தி விகாரம் | - | த் இறந்தகால இடைநிலை | அன் | அன் ஆண்பால் வினைமுற்று விகுதி |

## புணர்ச்சி விதி

**உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே**

★ வானமெல்லாம் = வானம் + எல்லாம்
வானமெல்லாம்

★ உரனுடை = உரன் + உடை உரனுடை

## பண்புப்பெயர் புணர்ச்சி

**ஈறுபோதல்**

★ செம்பரிதி - செம்மை+பரிதி
செம் + பரிதி = செம்பரிதி

★ நன்மொழி = நன்மை + மொழி
நன் + மொழி = நன்மொழி

**ஈறுபோதல் முன்னின்றமெய்திரிதல்**

➔ வெங்கதிர் = வெம்மை + கதிர்

★ விதி 1 - ஈறுபோதல் வெம் + கதிர்

★ விதி 2 - முன்னின்ற மெய்திரிதல் வெங்கதிர்

➔ பெருங்கடல் = பெருமை + கடல்

★ விதி 1 - ஈறுபோதல் பெரு + கடல்

★ விதி 2 - இனமிகல் பெருங்கடல்

➔ செந்தமிழே = செம்மை+தமிழே

★ விதி 1 - ஈறுபோதல் செம்+தமிழே

★ விதி 2 - முன்னின்றமெய்திரிதல் செந்தமிழே

**இயல்பினும் விதியினும் நின்றஉயிர்முன் கசதப மிகும்**

★ புதுப்பெயல் = புதுமை+பெயல் புதுப்பெயல்

★ எத்திசை = எ + திசை எத்திசை

★ தலைக்கோல் = தலை + கோல் தலைக்கோல்

**இஈஐவழியவ்வும்**

➔ உன்னையல்லால் = உன்னை+அல்லால்

★ விதி 1 - இஈஐவழியவ்வும் உன்னை + ய் + அல்லால்

★ விதி 2 - உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே உன்னையல்லால்

➔ தனியாழி = தனி+ஆழி

★ விதி 1 - இஈஐவழியவ்வும் தனி + ய் + ஆழி

★ விதி 2 - உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே தனியாழி

➔ ஒருமையுடன் = ஒருமை + உடன்

★ விதி 1 - இஈஐ வழி யவ்வும் ஒருமை + ய் + உடன்

★ விதி 2 - உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே ஒருமையுடன்

➔ ஏழையென = ஏழை + என

★ விதி 1 - இஈஐ வழி யவ்வும் ஏழை + ய் + என

★ விதி 2 - உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே ஏழையென

**உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும்**

➔ ஆங்கவற்றுள் = ஆங்கு+அவற்றுள்

★ விதி 1 - உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும் ஆங்க்+அவற்றுள்

★ விதி 2 - உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே ஆங்கவற்றுள்

**மவ்வீறு ஒற்றழிந்து உயிரீறு ஒப்பவும்**

➔ இனநிரை = இனம்+நிரை

★ விதி -1 மவ்வீறு ஒற்றழிந்து உயிரீறு ஒப்பவும் இன + நிரை = இனநிரை

**தனிக்குறில்முன் ஒற்று உயிர்வரின் இரட்டும்**

➔ உள்ளொன்று = உள் + ஒன்று

★ விதி 1 - தனிக்குறில்முன் ஒற்று உயிர்வரின் இரட்டும் உள் + ள் + ஒன்று

★ விதி 2 - உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே உள்ளொன்று

➔ முன்னுடை = முன் + உடை

★ விதி 1 - தனிக்குறில்முன் ஒற்று உயிர்வரின் இரட்டும் முன் + ன் + உடை

★ விதி 2 - உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே முன்னுடை

## பூப்பெயர் புணர்ச்சி

**பூப்பெயர்முன் இனமென்மையும் தோன்றும்**

★ பூம்பாவாய் = பூ + பாவாய் பூம்பாவாய்

## மரபுச் சொற்களைத் தொடரில் அமைத்து எழுதுக.

**ஆற அமர**

★ வாழ்க்கையில் எந்தவொரு செயலையும் ஆற அமர யோசித்துச் செய்ய வேண்டும்.

**ஆணி அடித்தாற் போல**

★ ஆசிரியர் கூறும் அறிவுரைகள் மனத்தில் ஆணி அடித்தாற் போல பதிந்தது.

**அகலக்கால்**

★ தன்னுடைய திறமையை அறியாமல் சிலர் அகலக்கால் வைத்துத் துன்பப்படுகின்றனர்.

**வழிவழியாக**

★ என் குடும்பத்தினர் வழிவழியாக விவசாயத் தொழில் செய்பவர்கள்

**கண்துடைப்பு**

★ முறையான திட்டமிடல் இல்லாததால் அரசு திட்டங்கள் பல கண்துடைப்பாக உள்ளன.

## உவமைத் தொடரை சொற்றொடரில் அமைத்து எழுது

**தாமரைஇலை நீர்ப் போல (பட்டும் படாமல் வாழ்தல் - பற்றின்றி வாழ்தல்)**

★ உண்மையான துறவிகள் வாழ்க்கையில் தாமரை இலை நீர்ப்போல பற்றின்றி வாழ்கின்றனர்.

**கிணற்றுத் தவளைபோல (தான் கொண்ட கருத்தே சரியானது, உலக அறிவின்மை)**

★ என் நண்பன் முருகன் கிணற்றுத் தவளை போல உலக அறிவில்லாமல் பேசுவான்.

**எலியும் பூனையும் போல (பகை)**

★ மதத்தால் நாடுகள் எலியும் பூனையும் போல் எப்போதும் சண்டையிடுகின்றன.

**அச்சாணி இல்லாத தேர்போல (வலிமையான வழிகாட்டி இல்லாதது போல)**

★ தந்தையில்லாத குழந்தைகள் அச்சாணி இல்லாத தேர்போல வாழ வழியில்லாமல் துன்பப்படுகின்றனர்.

**உள்ளங்கை நெல்லிக்கனி போல (எல்லோரும் அறிந்த உண்மை)**

★ காந்தியடிகளின் புகழ் உள்ளங்கை நெல்லிக்கனி போல உலகமே அறிந்தது.

## மயங்கொலிச் சொற்களைத் தொடரில் அமைத்து எழுதுக

**தலை - தளை - தழை (முதன்மை, அடிமைவிலங்கு, வளர்ச்சி)**

★ சென்ற தலைமுறையில் ஆங்கிலேயர்களின் அடிமைத் தளைகளை உடைதெறிந்து நாட்டுப்பற்றை தழைக்கச் செய்தவர் காந்தியடிகள்

**கலை - களை - கழை ( சிறப்புச்செயல், நீக்குதல், மூங்கில்)**

★ கழைக்கூத்தாடி கயிற்றில் நடப்பதைக் கலையாகக் காட்டி தன் குடும்பத்தின் வறுமையைக் களைந்தார்.

**அலை, அளை, அழை (அலைதல், புற்று, கூப்பிடு)**

★ அலைந்து திரிந்து, புற்றிலிருந்த பாம்பைக் கண்டுபிடித்த பாம்பாட்டி மகுடியால் பாம்பு வெளிவர அழைத்தான்.

**விலை, விளை, விழை ( கட்டணம், விளைச்சல், விருப்பம்)**

★ விவசாயத்தில் விளைந்த நெல்லை நல்ல விலைக்கு விற்க விழைந்தார் விவசாயி.

## பொருள் வேறுபாடு அறிந்து தொடர் அமைக்க.

**களம், கலம்** ➔ களம் - போர்க்களம்; கலம் - பாத்திரம்

★ போர்க்களத்தில் புண்பட்ட வீரர்களுக்கு கலத்தில் நீர் தரப்பட்டது.

**வலம், வளம்** ➔ வலம் - வலப்பக்கம்; வளம் - செழிப்பு

★ ஆற்றின் வலப்புறம் உள்ள வயல்கள் நீர்வளத்தால் செழித்திருந்தன.

**புல் - புள்** ➔ புல் - புற்கள்; புள் - பறவை

★ புல் தரையில் புட்கள் இருந்தன.

**கான் - காண்** ➔ கான் - காடு; காண் - பார்

★ கானகத்தில் உள்ள விலங்குகளைக் காண்பது மகிழ்ச்சி அளிக்கும்.

**ஊண் - ஊன்** ➔ ஊண் - உணவு; ஊன் - இறைச்சி

★ சிங்கம், மானின் ஊனை ஊணாகக் கொள்ளும்.

**தின்மை - திண்மை** ➔ தின்மை - தீமை; திண்மை - வலிமை

★ திண்மை உடையவர்கள், பிறருக்குத் தின்மை செய்யக் கூடாது.

## தொடரில் இடம்பெற்றுள்ள மரபுப் பிழையை நீக்கி எழுதுக.

**1. வாழைக்காட்டில் குயில்கள் அலறிக்கொண்டும் காகங்கள் கூவிக்கொண்டும் இருந்தன.**

★ வாழைத்தோப்பில் குயில்கள் கூவிக்கொண்டும் காகங்கள் கரைந்துக்கொண்டும் இருந்தன.

**2. முருகன் சோறு சாப்பிட்டுப் பால் குடித்தான்.**

★ முருகன் சோறு உண்டு, பால் பருகினான்.

**3. கோவிந்தன் குடியிருக்க சுவர் கட்டி கூரை அமைத்தார்.**

★ கோவிந்தன் குடியிருக்க சுவர் எழுப்பிக் கூரை வேய்ந்தார்.

**4. வனவிலங்குக் காப்பகத்தில் சிங்கக் குட்டியும் யானைக்குட்டியும் கண்டேன்.**

★ வனவிலங்குக் காப்பகத்தில் சிங்கக்குருளையும் யானைக்கன்றும் கண்டேன்.

**5. ஆட்டுத் தொழுவத்தைச் சுற்றிலும் எலிகள் பொந்துகள் அமைத்திருந்தன.**

★ ஆட்டுப்பட்டியைச் சுற்றிலும் எலிகள் வளைகள் அமைத்திருந்தன.

**6. பனை மட்டையால் கூரை வைத்திருந்தனர்.**

★ பனை ஓலையால் கூரை வேய்ந்திருந்தனர்.

## பத்தியைப் படித்து தேவையான இடங்களில் நிறுத்தற்குறிகளை இட்டு எழுதுக

இளங்கோ அடிகள் சாத்தனாரிடம் முன்செய்த வினை நிறைவேறும் காலம் என்றீர்களே அவர்களுடைய முந்தைய வினை யாது அதன் விளைவு என்ன நிகழ்ந்த காலம் யாது அதை நீங்கள் அறிந்திருந்தால் கூறுக எனக் கேட்டார்.

இளங்கோ அடிகள் சாத்தனாரிடம், "முன்செய்த வினை நிறைவேறும் காலம் என்றீர்களே! அவர்களுடைய முந்தைய வினை யாது? அதன் விளைவு என்ன? நிகழ்ந்த காலம் யாது? அதை நீங்கள் அறிந்திருந்தால் கூறுக" எனக் கேட்டார்.

## சொல்லைப் பிரித்தும் சேர்த்தும் தொடரமைக்க

**(எ.கா.) பலகை**

➔ பலகை - மரப்பலகை — அ) பலகையால் ஆன மேசையில் உணவு உண்டனர்.

➔ பலகை - பலகைகள் — ஆ) பல கைகள் ஒன்றிணைந்து வெற்றியைத் தமதாக்கின.

**தாமரை**

➔ தாமரை - ஒரு வகை மலர் — அ) குளத்தில் தாமரை மலர்ந்திருந்தது.

➔ தா மரை - தாவுகின்ற மான் — ஆ) காட்டில் தா மரை (தாவுகின்ற மான்) வாழும்.

**கோவில்**

➔ கோவில் - ஆலயம் — அ) இந்தியாவில் பல கோவில்கள் உள்ளன.

➔ கோ வில் - அரசனின் வில் — ஆ) பகைவரை வீழ்த்த கோ வில்லை எடுத்தான்.

**வெங்காயம்**

➔ வெங்காயம் - ஒருவகை காய் — அ) குழம்பில், வெங்காயம் சேர்ப்பதால் சுவை அதிகரிக்கும்.

➔ வெம் காயம் - பெரிய காயம் — ஆ) போர்களத்தில் வீரர்களுக்கு வெம் காயம் ஏற்பட்டது.

**தலைமை**

➔ தலைமை - முதன்மை — அ) மாணவர்கள் தலைமைப் பண்புடன் திகழ வேண்டும்.

➔ தலை மை - தலையில் தடவும் மை — ஆ) வெள்ளை முடியை மறைப்பதற்கு சிலர், தலை மை தடவுகின்றனர்.

## விடைக்கேற்ற வினா அமைத்தல்

1. குடும்பம் என்ற சொல் முதன்முதலில் திருக்குறளில்தான் இடம் பெற்றுள்ளது.

★ **குடும்பம் என்ற சொல் முதன்முதலில் எந்த நூலில் இடம்பெற்றுள்ளது?**

2. நடுவண்அரசு 2005ஆம் ஆண்டு டிசம்பர் 23 அன்று தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையம் அமைத்தது.

★ **நடுவண்அரசு எப்போது தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையம் அமைத்தது?**

3. சாலைகளில் இடம்பெற்றிருக்கும் குறியீடுகள் போக்குவரத்தினைச் சீர் செய்யவும் பாதுகாப்பாக பயணிக்கவும் உதவுகின்றன.

★ **சாலைகளில் இடம்பெற்றிருக்கும் குறியீடுகளின் பயன்கள் யாவை?**

4. 1856இல் தென்னிந்தியாவின் முதல் தொடர்வண்டி நிலையம் இராயபுரத்தில் அமைக்கப்பட்டது.

★ **தென்னிந்தியாவின் முதல் தொடர்வண்டி நிலையம் எங்கு எப்போது அமைக்கப்பட்டது?**

5. "யதார்த்த நிகழ்வைப் படைப்பாளுமையுடன் வெளிப்படுத்துவதே ஆவணப்படம்" என்கிறார் கிரியோர்சன்.

★ **ஆவணப்படம் குறித்து கிரியோர்சனின் கூறுவது யாது?**

## வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக

1. என்னுடைய நம்பிக்கை முழுவதுமே புதியத் தலைமுறை மீதுதான் அவர்கள் எல்லா பிரச்சினைகளையும் ஒரு சிங்கத்தை போல எதிர்கொண்டுத் தீர்ப்பார்கள்.

★ என்னுடைய நம்பிக்கை முழுவதுமே புதிய தலைமுறை மீதுதான்ளூ அவர்கள் எல்லா**ப்** பிரச்சினைகளையும் ஒரு சிங்கத்தை**ப்** போல எதிர்கொண்டு தீர்ப்பார்கள்.

2. எத்தனை முறை நீ மற்றவர்கள் முன்னேறி செல்வதனை கண்டு ஒன்றும் செய்வதறியாது நம்பிக்கையின்றி துன்புறுவாய். நிறைய தன்னம்பிக்கை கொள்.

★ எத்தனை முறை நீ மற்றவர்கள் முன்னேறி**ச்** செல்வதனை**க்** கண்டு ஒன்றும் செய்வதறியாது நம்பிக்கையின்றி**த்** துன்புறுவாய். நிறைய தன்னம்பிக்கை கொள்.

3. நம் வாழ்க்கையின் தரம் நமது கவனத்தின் தரத்தை பொறுத்திருக்கிறது. புத்தகம் படிக்கும்பொழுது கூர்ந்தக் கவனம் அறிவை பெறுவதற்கும் வளர்ப்பதற்குமான அடிப்படை தேவையாகும்.

★ நம் வாழ்க்கையின் தரம் நமது கவனத்தின் தரத்தை**ப்** பொறுத்திருக்கிறது. புத்தகம் படிக்கும்பொழுது கூர்ந்தக் கவனம் அறிவை**ப்** பெறுவதற்கும் வளர்ப்பதற்குமான அடிப்படை**த்** தேவையாகும்.

4. மாணவர்கள் பெற்றோர்களை தமது நண்பர்களாக பாவித்து நட்புக் கொள்ள வேண்டும். தமது இன்ப துன்பங்களை பெற்றோர்களுடன் பகிர்ந்துக் கொள்ள வேண்டும்.

★ மாணவர்கள் பெற்றோர்களை**த்** தமது நண்பர்களாக**ப்** பாவித்து நட்பு கொள்ள வேண்டும். தமது இன்ப துன்பங்களைப் பெற்றோர்களுடன் பகிர்ந்து கொள்ள வேண்டும்.

5. ஆசிரியருக்கு கீழ்படிதல் என்னும் குணம், உண்மையானவற்றை தெரிந்துக் கொண்டு அறியாமையினை அகற்றி பல நல்லனவற்றை கற்று கொடுக்கும்.

★ ஆசிரியருக்கு**க்** கீழ்ப்படிதல் என்னும் குணம், உண்மையானவற்றை**த்** தெரிந்து கொண்டு அறியாமையினை அகற்றி பல நல்லனவற்றை**க்** கற்று**க்** கொடுக்கும்.

## தொடரில் உள்ள பிழைகளை நீக்கி எழுதுக

1. நம் மானிலம் இந்த ஆண்டு வரட்சியால் பாதிக்கப்பட்டது.

★ நம் **மாநிலம்** இந்த ஆண்டு **வறட்சியால்** பாதிக்கப்பட்டது.

2. எங்கள் ஊரில் நூலகக் கட்டிடம் கட்ட அறசு நிதி ஒதுக்கியது.

★ எங்கள் ஊரில் நூலகக் **கட்டடம்** கட்ட **அரசு** நிதி ஒதுக்கியது.

3. ரங்கன் வெங்கலப் பாத்திரக்கடை வைத்திருக்கிறார்.

★ ரங்கன் **வெண்கலப்** பாத்திரக்கடை வைத்திருக்கிறார்.

4. மானம் பார்த்த பூமியில் பயிறு வகைகள் பயிரிடப்படுகின்றன.

★ **வானம்** பார்த்த பூமியில் **பயிறு** வகைகள் பயிரிடப்படுகின்றன.

5. ஐப்பசி அடைமழையில் ஊருனி நிறைந்தது.

★ ஐப்பசி அடைமழையில் **ஊருணி** நிறைந்தது.

6. இன்னிக்கு சாயங்காலம் கபடி போட்டி நடைபெறும்.

★ **இன்றைக்குச் சாயுங்காலம்** கபடி போட்டி நடைபெறும்.

### பொருத்தமான வேற்றுமை உருபுகளைச் சேர்த்து முறையான தொடர்களாக ஆக்குக

1. குமரன் வீடு பார்த்தேன்

★ குமர**னை** **வீட்டில்** பார்த்தேன்.

2. மாறன் பேச்சுத்திறன் யார் வெல்ல முடியும்

★ மாற**னின்** பேச்சுத்திற**னை** **யாரால்** வெல்ல முடியும்

3. போட்டி வெற்றி பெற்றது கலைச்செல்வி பாராட்டுகள் குவிந்தன.

★ போட்டி**யில்** வெற்றி பெற்றதால், கலைச்செல்வி**க்குப்** பாராட்டுகள் குவிந்தன.

4. காலை எழுந்து படித்து நமக்கு நன்மை ஏற்படும்.

★ காலை**யில்** எழுந்து படித்**தால்** நமக்கு நன்மை ஏற்படும்.

5. அனைவர் அன்பு அழைத்தவன் துன்பம் தர யார் மனம் வரும்.

★ அனைவ**ரையும்** அன்**புடன்** அழைத்தவ**னுக்குத்** துன்ப**த்தை** தர யாரு**க்கு** மனம் வரும்.

6. சான்றோர் மதிப்பு கொடுத்து வாழ்வு உயரலாம்.

★ சான்றோர்க்கு மதிப்**பைக்** கொடுத்**தால்** வாழ்**வில்** உயரலாம்.

### பேச்சு வழக்கை எழுத்து வழக்காக மாற்றுக

1. இப்ப எனக்குப் புரிஞ்சு போச்சு. நீயும் புரிஞ்சிக்கோ.

★ இப்பொழுது எனக்குப் புரிந்துவிட்டது. நீயும் புரிந்துகொள்.

2. நிலத்தக் கௌறணும்டா அப்பதான் வகுறு நிறையும்.

★ நிலத்தைக் கிளற வேண்டும். அப்போதுதான் வயிறு நிறையும்.

3. அண்ணைக்கு அவனுக்குப் பணம் குடுத்து ஒதவியிருக்க வேண்டியதான.

★ அன்றைக்கு அவனுக்குப் பணம் கொடுத்து உதவியிருக்க வேண்டியது தானே?

4. வூட்டாண்ட வெளையாண்ட கொயந்தையை அப்பா எங்க இஸ்துகினு போனாரு.

★ வீட்டின் அருகில் விளையாடிக் கொண்டிருந்த குழந்தையை அப்பா எங்கே இழுத்துக் கொண்டு போனார்.

5. புள்ளைக்கு உடம்பு சரியில்லை மூணு நாளா சிரமப்படுது.

★ பிள்ளைக்கு உடம்பு சரியில்லை. மூன்று நாட்களாகச் சிரமப்படுகிறது.

6. ரவைக்கு சித்தப்பன காவலுக்குப் போவ சொல்.

★ இரவிற்குச் சிற்றப்பாவைக் காவலுக்குப் போகச் சொல்.

## கீழ்க்காணும் தொடர்களில் அடைப்புக்குள் உள்ள பெயர்ச்சொல்லைத் தொடர்களுக்கு ஏற்றவாறு மாற்றி எழுதுக

1. கபிலன் திறமையானவர் என்று -------------------- (குமரன்) தெரியும்.

★ கபிலன் திறமையானவர் என்று **குமரனுக்குத்** தெரியும்.

2. நேற்று முதல் ----------------------- (அணை) நீர்மட்டம் உயர்ந்து வருகிறது.

★ நேற்று முதல் **அணையின்** நீர்மட்டம் உயர்ந்து வருகிறது.

3. உங்களுக்கு ----------------------- (யார்) நன்மை என நினைக்கிறீர்கள்.

★ உங்களுக்கு **யாரால்** நன்மை என நினைக்கிறீர்கள்.

4. முருகன் ----------------------- (வேகம்) சென்றும் பேருந்தைப் பிடிக்க இயலவில்லை.

★ முருகன் **வேகமாகச்** சென்றும் பேருந்தைப் பிடிக்க இயலவில்லை.

5. நம்முடைய ----------------------- (தேவை) அளவு குறைந்தால் மகிழ்ச்சி பெருகும்.

★ நம்முடைய **தேவையின்** அளவு குறைந்தால் மகிழ்ச்சி பெருகும்.

## கீழ்க்காணும் நான்கு சொற்களைக் கொண்டு தொடர் எழுதுக.

1. வானம், பற, நிலவு, தொடு ➔ வானத்தில் பறப்போம், பறந்து நிலவைத் தொடுவோம்
2. சருகு, விழு, மண், அலை ➔ சருகு மண்ணில் விழுந்து, அலையில் அடித்துச் செல்லப்பட்டது.
3. விண்மீன், ஒளிர், எரி, விழு ➔ விண்ணில் ஒளிர்கின்ற விண்மீன் எரிந்து பூமியில் விழுந்தது.
4. குதிரை, வேகம், ஓடு, தாவு ➔ ஓட்டப்பந்தயத்தில் குதிரை வேகமாக தாவி ஓடும்.
5. குழந்தை, நட, தளிர்நடை, விழு ➔ பச்சிளங்குழந்தை தளிர்நடை நடந்து தரையில் விழுந்தது.
6. திரை, காண், கைதட்டல், மக்கள் ➔ திரையில் நடிகனைக் காண்பதற்குக் காத்திருந்த மக்கள், அவனைக் கண்டதும் கைதட்டினர்.

## தொடரில் இடம்பெற்றுள்ள மரபுப் பிழையை நீக்கி எழுதுக.

**1. வாழைக்காட்டில் குயில்கள் அலறிக்கொண்டும் காகங்கள் கூவிக்கொண்டும் இருந்தன.**

★ வாழைத்தோப்பில் குயில்கள் கூவிக்கொண்டும் காகங்கள் கரைந்துக்கொண்டும் இருந்தன.

**2. முருகன் சோறு சாப்பிட்டுப் பால் குடித்தான்.** ★ முருகன் சோறு உண்டு, பால் பருகினான்.

**3. கோவிந்தன் குடியிருக்க சுவர் கட்டி கூரை அமைத்தார்.**

★ கோவிந்தன் குடியிருக்க சுவர் எழுப்பிக் கூரை வேய்ந்தார்.

**4. வனவிலங்குக் காப்பகத்தில் சிங்கக் குட்டியும் யானைக்குட்டியும் கண்டேன்.**

★ வனவிலங்குக் காப்பகத்தில் சிங்கக் குருளையும் யானைக் கன்றும் கண்டேன்.

**5. ஆட்டுத் தொழுவத்தைச் சுற்றிலும் எலிகள் பொந்துகள் அமைத்திருந்தன.**

★ ஆட்டுப்பட்டியைச் சுற்றிலும் எலிகள் வளைகள் அமைத்திருந்தன.

**6. பனை மட்டையால் கூரை வைத்திருந்தனர்.** ★ பனை ஓலையால் கூரை வேய்ந்திருந்தனர்.

## பிறமொழிச் சொற்களைக் கண்டறிந்து தமிழ்ப்படுத்துக

★ சர்க்கார் - அரசு ★ சம்பளம் - வருவாய் ★ ஜீவனம் - வாழ்க்கை
★ மாயை - பொய்த்தோற்றம் ★ ஆத்மா - உயிர்/மனம் ★ பிரபஞ்சம் - உலகம்
★ ஆத்ம விசாரம் - மன எண்ணம் ★ மனுஷன் - மாந்தன்/மனிதன் ★ ஸ்புடம் - சோதனை

www.nammakalvi.in



## கலைச்சொற்கள்

### நூலகம்

Subscription - உறுப்பினர் கட்டணம்
Fiction - புனைவு
Biography - வாழ்க்கை வரலாறு
Archive - ஆவணம்
Manuscript - கையெழுத்துப் பிரதி
Bibliography - நூல் நிரல்

### தொடர்வண்டி நிலையம்

Platform - நடைமேடை
Train Track - இருப்புப்பாதை
Railway Signal - தொடர்வண்டி வழிக்குறி
Ticket Inspector - பயணச்சீட்டு ஆய்வர்
Level Crossing - இருப்புப்பாதையைக் கடக்குமிடம்
Metro Train - மாநகரத் தொடர்வண்டி

### உணவகம்

Lobby - ஓய்வறை
Checkout - வெளியேறுதல்
Tips - சிற்றீகை
Mini meals - சிற்றுணவு

### வானூர்தி நிலையம்

Arrival - வருகை
Departure - புறப்பாடு
Conveyor Belt - ஊர்திப்பட்டை
Take Off - வானூர்தி கிளம்புதல்
Passport - கடவுச்சீட்டு
Visa - நுழைவு இசைவு
Domestic Flight - உள்நாட்டு வானூர்தி

### நீதி மன்றம்

Affidavit - ஆணை உறுதி ஆவணம்
Allegation - சாட்டுரை
Conviction - தண்டனை
Jurisdiction - அதிகார எல்லை
Plaintiff - வாதி

### திரைத்துறை

Artist - கவின்கலைஞர்
Animation - இயங்குபடம்
Newsreel - செய்திப்படம்
Cinematography - ஒளிப்பதிவு
Sound Effect - ஒலிவிளைவு
Multiplex Complex - ஒருங்கிணைந்த திரையரங்க வளாகம்

### வங்கி

Debit Card - பற்று அட்டை
Demand Draft - கேட்பு வரைவோலை
Withdrawal Slip - திரும்பப் பெறல் படிவம்
Teller - விரைவுக் காசாளர்
Mobile Banking - அலைபேசி வழி வங்கி முறை
Internet Banking - இணையவங்கி முறை

### அலுவலகப் பொருள்கள்

Stamp pad - மை பொதி
Stapler - கம்பி தைப்புக் கருவி
Folder - மடிப்புத்தாள்
File - கோப்பு
Rubber Stamp - இழுவை முத்திரை
Eraser - அழிப்பான்

## தமிழாக்கம் தருக

1. Learning is a treasure that will follow its owner everywhere. கற்றோரைப் பின்பற்றும் புதையல் கல்வி
2. A new language is a new life. ஒரு புதுமொழி புது வாழ்வாகும்.
3. If you want people to understand you. Speak their language.
மக்கள் உங்களைப் புரிந்துகொள்ள, அவர்களின் மொழியில் பேசுங்கள்.
4. Knowledge of languages is the doorway to wisdom. மொழிகளின் அறிவு ஞானத்தின் நுழைவாயில்
5. The limits of my language are the limits of my world. என் மொழியின் எல்லையே என் உலகத்தின் எல்லை.

**மொழிபெயர்ப்புப் பகுதியைப் படித்து, இருபது ஆங்கிலச் சொற்களையும் அதன் தமிழாக்கத்தையும் எடுத்து எழுதுக.**

| | |
|---|---|
| In 1977 shocked at the environmental devastation caused by deforestation in her beloved Kenya Wangari Mathai founded the Green Belt Movement. For thirty years the movement has enabled many women to plant trees in their regions providing them with food fuel and halting soil erosion and desertification. She used the movement to enlighten the people on the fruits of representative democracy. This led Kenya to Kenyas first fully democratic elections in a generation. In the election Mathai was elected to the Parliament and made a Minister of environment. She was conferred a Nobel Prize in 2004 because of her outstanding success in guiding Kenyan women to plant more than thirty million trees. She has transformend the lives of tens of thousands of women through sustainable social forestry schemes. | 1977ஆம் ஆண்டில் தனது உயிரினும் இனிய கென்யா நாட்டில் காடுகள் அழிக்கப்பட்டதால் ஏற்பட்ட பேரழிவு கண்டு மனம் வெதும்பி வங்காரி மத்தாய் பசுமை வளாக இயக்கத்தைத் தோற்றுவித்தார். இந்த இயக்கத்தால் பல ஆப்பிரிக்கப் பெண்கள் தமது பகுதிகளில் மரங்களை நட்டு, அதன் வழியாகத் தங்களுக்குத் தேவையான உணவையும் எரிபொருளையும் தாமே ஈட்டியதோடு நில்லாமல் ஆப்பிரிக்காவில் நிலவிய மண் அரிப்பால் நிலம் பாலைவனமாவதையும் தடுத்து நிறுத்தினர். அவர் இந்த இயக்கத்தின் வழியாக மக்களாட்சியின் பயன்களை அறியச் செய்தார். இது அத்தலைமுறையினர் அனைவருக்கும் முதல் முறையாகத் தேர்தலில் பங்கேற்கும் வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்தது. இத்தேர்தலில் வங்காரி மத்தாய் நாடாளுமன்ற உறுப்பினராகத் தேர்வு செய்யப்பட்டுப் பிறகு சுற்றுச்சூழல் அமைச்சரானார். கென்யப் பெண்களுக்கு வழிகாட்டி, மூன்றுகோடி மரங்களை நட்டு வளர்த்ததால் அவரது தன்னலமற்ற பணியைப் பாராட்டி, 2004ஆம் ஆண்டு வங்காரி மத்தாய்க்கு நோபல் பரிசு வழங்கப்பட்டது. நிலையான வளர்ச்சியை உறுதி செய்யும் சமூகக் காடுகள் வளர்ப்புத் திட்டத்தின்மூலம் பல்லாயிரக்கணக்கான பெண்களின் வாழ்வில் மறுமலர்ச்சியை ஏற்படுத்தினார். |

**(எ.கா.)** Green Belt Movement **- பசுமை வளாக இயக்கம்**

★ Environmental Devastation - சுற்றுச்சூழல் பேரழிவு
★ Founded - தோற்றுவித்தல்
★ Thirty Years - முப்பது ஆண்டுகள்
★ Food - உணவு
★ Soil erosion - மண் அரிப்பு ஏற்படுதல்
★ Democracy - மக்களாட்சி
★ Representative - பிரதிநிதி
★ Parliament - நாடாளுமன்றம்
★ Environment - சுற்றுச்சூழல்
★ Social forestry scheme - சமூகக் காடுகள் வளர்ப்புத் திட்டம்

Deforestation - காடுகள் அழிக்கப்படுதல்
Green Belt Movement - பசுமை வளாக இயக்கம்
Women - பெண்கள்
Fuel - எரிபொருள்
Desertification - பாலைவனமாதல்
Election - தேர்தல்
Generation - தலைமுறை
Minister - அமைச்சர்
Movement - இயக்கம்
Success - வெற்றி

**தமிழாக்கம் தருக**

In terms of human development objectives education is an end in itself not just a means of an end. Education is a basic human right. It is also the key which opens many economic social and political doors for people. It increases access to income and employment opportunities. While economists generally analyse the importance of education largely as a means for better opportunities in life-and that is the main theme of tis chapter-let it be clearly stated that educating people is a worthy goal in itself irrespective of the economic rates of return.

மனித வளர்ச்சி நோக்கத்தின் அடிப்படையில் கல்வி என்பது நிறைவான ஒன்றாகும். வேறு முடிவிற்கான வழி அல்ல. கல்வி என்பது மனிதனின் அடிப்படை உரிமை மட்டுமன்றி, மக்களின் பொருளாதார, சமூக மற்றும் அரசியல் பாதைக்கான திறவுக்கோலாகவும் உள்ளது. கல்வியே வேலைவாய்ப்பை அதிகரித்து, வருமானத்தை உயர்த்துகின்றது. வாழ்வில் சிறந்த வாய்ப்புகளை உருவாக்குவதே கல்வியின் பொதுவான நோக்கமாக இருக்கிறது என்று பொருளியல் வல்லுநர்கள் கருதுகின்றனர். என்றாலும், எந்தப் பொருளாதாரப் பிரதிபலனும் எதிர்பாராமல் கல்வியைப் பொதுவாக எல்லோருக்கும் புகட்டுவதன்மூலம் ஒருநாட்டின் வசதி வாய்ப்புகளையும் வருவாயையும் அதிகரிக்க முடியும் என்பதே கல்வியை ஆராய்ந்த பொருளாதார வல்லுநர்களின் கருத்தாகும்.

**தமிழாக்கம் தருக.**

The Serious dearth of library facilities in this country is scarcely keeping with India|s status in the international community of nations or with her educational and social needs. In this matter. India compares unfavourably not only with other independent Dominions of the commonwealth but even with certain British colonies. She possesses only one public ibrary on any considerable size and even this institution is inadequate to serve the need of the capital city. Only a few towns can boast of possessing any library at all. The rural population is completely neglected. There are no travelling libraries to reach them of kind that are to be found even is some backward countries.

The growth of libraries has lagged. Far behind the increase in the number of schools and the rise in the rate of literacy. The great mass of the people in India do not have the means to buy books or even magazines and newspapers in the absence of sufficient public libraries and reading room> most of them cannot attain regular reading habits.

நாட்டில் நூலக வசதிகளின் கடுமையான பற்றாக்குறை, கல்வி மற்றும் சமுதாய தேவைகளுக்கு ஏற்ப, நூலக வசதிகள் இந்தியாவில் இல்லை. இந்த வி'யத்தில் இந்தியாவின் நூலக வசதிகள், காமன்வெல்த் அமைப்பிலுள்ள சில சுதந்திர நாடுகளையும், பிரிட்டனின் காலனி அமைப்பில் உள்ள சில குடியிருப்புகளை விடவும் சாதகமற்ற நிலையில் உள்ளன. ஒரு பொது நூலகத்தை கணிசமான அளவில் நாடு பெற்றிருந்தாலும், அது தலைநகருக்கான தேவையைப் பூர்த்தி செய்ய போதுமானதாக இல்லை. ஒரு சில நகரங்கள் மட்டுமே நூலகங்களைப் பெற்றிருப்பதாகப் பெருமைபட்டுக் கொள்ளலாம். கிராமப்புற மக்கள் முற்றிலும் புறக்கணிக்கப்பட்டுள்ளனர். அங்கு அவர்களை நாடிச் செல்லும் நடமாடும் நூலகங்களும் இல்லை. ஆனால், இந்த வசதிகள் மிகவும் பிற்படுத்தப்பட்ட நாடுகளில்கூட உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

நூலகங்களின் வளர்ச்சி மிகவும் பின்தங்கியுள்ளது. அதிகரிக்கும் பள்ளிகளுக்கும், கல்வி கற்போர் எண்ணிக்கைக்கும் ஏற்ப நூலகங்களின் வளர்ச்சி இந்தியாவில் இல்லை. புத்தகங்களையும், பத்திரிகைகளையும், செய்தித்தாள்களையும் வாங்கிப் படிக்க வசதியில்லாதோர்க்கும் பொது நூலகங்கள் தகுந்த அளவில் இருந்தால்தான் படிக்கும் பழக்கம் வளரும். அது இல்லாத பட்சத்தில் படிக்கும் பழக்கம் நிறைய பேருக்கு இல்லாது போய்விடும்.

**தமிழாக்கம் தருக.**

Periyar was not only a great social revolutionary@ he was something more than that. He is known as a great champion of the underprivileged even in this sphere he was much more than that. His sphere of activity was very wide and when he took up any issue he went deep into it understood all the aspects of it and did not rest until he had found a permanent solution to it. Communal differences in our society were deep-tooted and appeared to be permanent features of our society until Periyar came on the scene.

பெரியார் சிறந்த சமூக சீர்திருத்தவாதி மட்டுமல்ல. அதற்குமேல் சிறப்பான இயல்புடையவர். அவர் ஒடுக்கப்பட்டோரின் சிறந்த தலைவர் எனக் கருதப்படுகிறார். அவர் சீர்திருத்தப்பணிகளில் அதிக கவனம் செலுத்தினார். அவருடைய சிந்தனைகளும் செயல்களும் மிகவும் ஆழமானதாகவும் பரந்த மனப்பான்மை உடையதாகவும் காணப்பட்டது. எந்த ஒரு செயல்பாட்டையும் ஆழ்ந்து சிந்தித்து அதனைப் புரிந்து அதன்படி அனைத்து பிரச்சனைகளுக்கும் நிரந்தர தீர்வு காணும்வரை உழைப்பார். பெரியார் இந்த சமூக காட்சியின் திரையில் வரும்வரை சமூகம் ஏற்றத்தாழ்வு நிறைந்த ஒரு சமுதாயமாகவே இருந்தது.

**தமிழாக்கம் தருக.**

Popular as the Cultural Capital of India Tamil Nadu is extremely well-known for its marvellous temples and other architectural gems. The state rose to prominenece primarily because of its well-known and outstanding Tanjore paintings that flourished at the time of Chola dynasty in ancient Tanjavoor. In this traditional art form the paintings showcase the embellished form of the sacred deities of the region. The deities in the paintings are festooned with glass pieces pearls semi-precious stones and gold and other vibrant colours. In the modern times Tanjore paintings look up to human figures animals floral motifs and irds as muses.

இந்தியாவின் கலாச்சார தலைநகரம் என்றழைக்கப்படும் தமிழ்நாட்டில் சிறந்த கோயில்களும், கட்டடக்கலை சின்னங்களும் உள்ளன. தஞ்சாவூரில் சோழர் காலத்தில் தழைத்து வளர்ந்த தஞ்சாவூர் ஓவியங்கள் மாநிலத்திற்கு பெரும் புகழைத் தேடித் தந்தன. இவை பாரம்பரிய கலை முறையில், அலங்காரக்கற்கள் பதிக்கப்பட்ட கடவுளர்களின் புனித ஓவியங்களில் கண்ணாடி துண்டுகள், முத்துகள், வண்ண கற்கள், தங்கம் மற்றும் பல வண்ணங்களை ஒட்ட வைத்து தயாரிக்கப்படுகின்றன. தற்காலத்தில் இந்த ஓவியங்கள் மனித உருவங்களிலும், விலங்குகள், பூக்கள், பறவைகள் போன்றவற்றிலும் செய்யப்படுகின்றன.

**தமிழாக்கம் தருக.**

A White woman about 50 years old was seated next to a black man. Obviously disturbed by this> she called the airhostess.

“Madam what is the matter?" the hostess asked.

“you placed me next to a black man. Give me an alternative seat"

The hostess replied. “Almost all the places on this flight are taken. I will go to see if another place is available." The hostess went away and came back a few minutes later. “Madam just as I thought there are no other available seats in the economy class. We still have one place in the first class."

Before the woman could say anything the hostess continued. “It would be scandalous to make someone sit next to someone so disgusting"

She turned to the black guy and said “Sir a seat awaits you in the first class."

At the moment the other passengers who were shocked by what they had just witnessed stood up and applauded.

Take a lesson from the sun who shines his light on everyone.

Or the rain tha falls on every single shore.

No distinction of our race or the colour of our face.

Nautres gifts are there for all men rich or poor.

(Courtesy: S.S.S. Bal Vikas)

ஐம்பது வயதுடைய ஒரு வெள்ளைக்கார பெண்மணி விமானத்தில் தன் அருகில் ஒரு கறுப்பர் இன ஆண் அமர்ந்திருந்ததைக் கண்டு பொறுக்காமல் தனக்கு ஒரு மாற்று இருக்கை ஏற்பாடு செய்யும்படி விமானப் பணிப்பெண்ணிடம் கேட்டாள்.

விமானப் பணிப்பெண், தேடிப் பார்த்து திரும்பி வந்து "சாதாரண வகுப்பில் எந்த இருக்கையும் காலியில்லை" எனக்கூறி, "முதல் வகுப்பில் ஒன்று உள்ளது" என்றாள்.

அந்த வெள்ளைக்கார பெண்மணி அவளுக்கு பதிலளிக்குமுன், விமான பணிப்பெண் முந்திக்கொண்டு "பிடிக்காத ஒருவரின் அருகில் மற்றவரை அமர வைப்பது வெறுக்கத்தக்கதாகும்" எனக் கூறிக்கொண்டே கறுப்பின மனிதரிடம் "ஐயா, முதல் வகுப்பில் உங்கள் இருக்கை, தங்களை எதிர்பார்க்கிறது" எனக் கூறினாள்.

அந்த நிமிடத்தில், மற்ற பயணிகள் அனைவரும் அங்கு இதற்கு முன்னர் நடந்ததை அறிந்திருந்ததால், எழுந்து நின்று கை தட்டினர்.

ஒவ்வொருவரின் மீதும் தன் ஒளியை பிரகாசிக்கச் செய்யும் சூரியனிடமிருந்தும், அல்லது ஒவ்வொரு கடற்கரையிலும் பொழிகிற மழையிடமிருந்தும் ஒரு பாடம் கற்றுக்கொள்ள வேண்டும்.

நமது இனத்திலோ, நமது முகத்தின் நிறத்திலோ எந்த வித்தியாசத்தையும் பார்க்கக்கூடாது. பணக்காரரோ, ஏழையோ, எல்லா மனிதருக்குமே இயற்கையின் பரிசுகள் கிடைக்கின்றன.

**தமிழாக்கம் தருக.**

I make sure I have the basic good habits which include respecting my elders greeting people when I meet them wishing them well when departing etc. Other than this observing the law serving the poor and downtrodden> helping the sick and needy giving shelter to the homeless assisting someone with a physically challenged etc. are also other good habits of mine. To lead on a peaceful life I develop other good habits writing listening to music dancing singing etc. are other such habits which fulfil the needs of my soul.

நான் நல்ல பழக்கங்களான பெரியவர்களை மதித்தல், பிறரைச் சந்திக்கும்போது வணக்கம் செலுத்துதல், பிரியும்போது வாழ்த்துதல் போன்றவற்றை வளர்த்து கொள்வதில் உறுதியாக இருக்கின்றேன். மேலும், சட்டத்தைப் பின்பற்றுதல், ஏழை பாமரர்களுக்கும் நோயாளிகளுக்கும் உதவுதல், ஆதரவற்றோருக்குத் தங்குமிட வசதி ஏற்படுத்துதல், உடல் மாற்றுத்திறனாளிகளுக்கு உதவுதல் போன்ற நல்ல பழக்கங்கள் என்னுடையதாகும். அமைதியான வாழ்க்கை நடத்துவதற்குப் பிற நல்ல பழக்கங்களான இசை, எழுத்து, பாடல், நடனம் போன்றவற்றைக் கற்று என் ஆன்ம தேவையைப் பூர்த்திச் செய்து கொள்கிறேன்.

www.nammakalvi.in



## இலக்கணத்தேர்ச்சி கொள்

### இரண்டு மதிப்பெண் வினாக்கள்

**1. தமிழில் பிழையின்றி எழுதுவதற்கு மேற்கொள்ள வேண்டிய முயற்சிகள் யாவை?**

**தமிழில் பிழையின்றி எழுதுவதற்கு மேற்கொள்ள வேண்டிய முயற்சிகள்**

★ எழுத்தினைத் தெளிவாக உச்சரிக்கப் பழக வேண்டும்.

★ இலக்கணவிதிகளை அறிந்து கவனத்துடன் எழுத வேண்டும்.

**2. மொழியின் சொற்றொடர் அமைப்பை விளக்கிக் கொள்வதற்கும் பயன்படுத்துவதற்கும் உதவுவன யாவை?**

**மொழியின் சொற்றொடர் அமைப்பை விளக்கிக் கொள்வதற்கும் பயன்படுத்துவதற்கும் உதவுவன**

★ நால்வகைப் பொருத்தங்கள் சிறப்பாக அமைய வேண்டும். ★ திணை பால் எண் இடம் ஆகியன

**3. உயர்திணைப் பன்மைப் பெயர்கள், பன்மை விகுதி பெற்றுவருமாறு இரண்டு தொடர்களை எழுதுக.**

★ ஆசிரியர்கள் பாடம் கற்பித்தனர். ★ பெண்கள் விளையாடினர்

**4. வேறொரு பொருள் அமையுமாறு சொற்களைச் சேர்த்துத் தொடரமைக்க**

மாணவர்கள் வரிசையில் நின்று அறிவியல் கண்காட்சியைக் கண்டனர்.

★ அறிவியல் மாணவர்கள் வரிசையில் நின்று கண்காட்சியைக் கண்டனர்.

**5. கீழ்க்காணும் சொல்லுருபுகளைப் பிரித்தும் சேர்த்தும் இருவேறு தொடர்களை அமைக்க.**

★ முன் - அவன் முன்வந்து கூறினான் ★ அவன்முன் வந்து கூறினான்

★ தானே - அவள் தானே சென்றாள் ★ அவள்தானே சென்றாள்

★ கொண்டு - புத்தகத்தைக் கொண்டு சென்று எழுதினான். ★ அவன் புத்தகத்தைக்கொண்டு எழுதினான்.

★ விட்டான் - அவள் பாலைக் குடித்துவிட்டாள்.(குடித்து முடித்தாள்)

அவள் பாலைக் குடித்து விட்டாள்(குடித்ததும் கீழே விட்டாள்)

**6. காற்புள்ளி இடாமல் எழுதுவதனால் ஏற்படும் பொருள்மயக்கத்திற்குச் சான்று தருக.**

**காற்புள்ளி இடாமல் எழுதுவதனால் ஏற்படும் பொருள்மயக்கம்**

★ தொடர்களில் காற்புள்ளி இடாமல் எழுதினாலோ இடம் மாற்றி இட்டாலோ பொருள் மாறிவிடும்.

★ (எ.கா.) அவள், அக்காள் வீட்டிற்குச் சென்றாள். ★ (எ.கா.) அவள் அக்கா, வீட்டிற்குச் சென்றாள்.

**7. சலசல, வந்து வந்து, கலகல, விம்மி விம்மி, இவற்றில் இரட்டைக் கிளவித் தொடர்களை எழுதி, அவற்றை எழுதும் முறையைக் கூறுக.**

**இரட்டைக் கிளவித் தொடர்களை எழுதும் முறை**

★ இரட்டைக்கிளவித் தொடர்களைச் சேர்த்து எழுத வேண்டும்.

★ இரட்டைக்கிளவி சொல் பிரிந்தால் பொருள் தராது. ★ (எ.கா.) சலசல, கலகல

**8. திருவளர்ச்செல்வன், திருவளர் செல்வன் - இவற்றில் சரியான தொடர் எது? அதற்கான இலக்கணவிதி யாது?**

★ சரியான தொடர் - திருவளர்செல்வன்

★ இலக்கண விதி - வினைத்தொகைச் சொல்லுக்கிடையில் வல்லினம் மிகக்கூடாது

**9. வெண்பாவிற்குரிய தளைகள் யாவை?**

**வெண்பாவிற்குரிய தளைகள்**

★ இயற்சீர் வெண்டளை (மா முன் நிரை, விளம் முன் நேர்) ★ வெண்சீர் வெண்டளை (காய் முன் நேர்)

www.nammakalvi.in



**10. ஒரு விகற்பம், பல விகற்பம் என்றால் என்ன?**

**ஒரு விகற்பம், பல விகற்பம்**

★ செய்யுளின் அனைத்து அடிகளிலும் ஒரே தொடை (எதுகை, மோனை) வருவது ஒரு விகற்பம் எனப்படும்.

★ செய்யுளின் அடிகளில் ஒன்றுக்கு மேற்பட்ட தொடைகள் வருவது பல விகற்பம் எனப்படும்.

**11. மாந்தோப்பு வசந்தத்தின் பட்டாடை உடுத்தியிருக்கிறது - இதில் எவ்வகைப் படிமம் வெளிப்படுகிறது?**

**படிமம் வெளிப்படும் விதம்**

★ கவிஞர் மாந்தோப்பைப் பெண்ணாகவும், வசந்தகாலத்தைப் பட்டாடையாகவும் காட்சிப்படுத்துகிறார்.

★ பட்டாடையை உடுத்திய பெண்ணின் தோற்றத்தையும், மாந்தோப்பில் வசந்தகாலத்தில் ஏற்பட்ட மாற்றத்தையும் ஒப்பிடுகிறார்.

★ இக்கவிதையில் உள்ளார்ந்த ஒப்பீடு, படிமமாக வெளிப்படுகிறது.

**12. தொன்மம் - விளக்கம் தருக.**

**தொன்மம்**

★ **பழங்கதை, புராணம்** என்று பொருள்.

★ தொல்காப்பியர் குறிப்பிடும் வனப்புகளுள் ஒன்று.

★ பழங்கதையைத் துணையாகக் கொண்டு ஒரு கருத்தை விளக்குவது.

**13. பேச்சு வழக்கில் தொன்மம் வெளிப்படும் இரு தொடர்களை எழுதுக.**

**தொன்மம் வெளிப்படும் தொடர்கள்**

★ இவன் பெரிய அரிச்சந்திரன்

★ கர்ணன் தோற்றான்போ

**14. உள்மனம் ஒரு பாற்கடல்**

**அதைக் கடைந்தால்**

**அமுதம் மட்டுமல்ல**

**ஆலகாலமும் வெளிப்படும் என்பதை**

**நீ அறிவாய் அல்லவா? - இக்கவிதையில் வெளிப்படும் தொன்மம் யாது?**

**கவிதையில் வெளிப்படும் தொன்மம்**

★ இக்கவிதையில் வெளிப்படும் தொன்மங்கள்

★ பாற்கடல் - அமுதம் - ஆலகாலம்

**15. குறியீட்டு உத்தியில் ஒரு புதுக்கவிதை எழுதுக.**

★ இரவில் வாங்கினோம்
இன்னும்
விடியவேயில்லை
குறியீட்டு உத்தி - சுதந்திரம்

**16. வியர்வை கவிதையில் வெளிப்படும் குறியீடுகளைக் குறிப்பிடுக.**

**வியர்வை கவிதையில் வெளிப்படும் குறியீடுகள்**

★ ஆதிரைப்பருக்கை - வியர்வைத்துளி

★ அமுதசுரபி - உலகச் செழிப்பு

**17. குறியீட்டு உத்தியின் அடிப்படை இலக்கணங்களை எழுதுக.**

**குறியீட்டு உத்தியின் அடிப்படை இலக்கணம்**

★ சுட்டிய பொருளுக்கும் குறியீட்டுப் பொருளுக்கும் தொடர்பு இருக்க வேண்டும்.

★ சுட்டும் பொருள் அனைவரும் அறிந்த ஒன்றாக இருக்க வேண்டும்.

★ தொடர்பின் வாயிலாக குறியீட்டுப்பொருள் நுண்ணிய முறையில் வெளிப்படுத்தப்பட வேண்டும்.

## சிறுவினா

### செய்யுள்

**1. "செம்பரிதி மலைமேட்டில் தலையைச் சாய்ப்பான் செந்நிறத்துப் பூக்காடாம் வான மெல்லாம்" தொடர் வெளிப்படுத்தும் காட்சி நயத்தை விளக்குக.**

**தமிழின் சிறப்பை உணர்த்தும் இயற்கை அழகியல் வெளிப்பாடு**

**உவமை**

➔ செம்பரிதி (சிவந்த சூரியன்) மலைமேட்டில் தலையைச் சாய்ப்பான்.

★ சிவந்த சூரியன் மாலை நேரத்தில் மலையுச்சியில் சென்று மெல்ல மெல்ல மறைவான்.

★ இதனைக் கவிஞர் அழகியல் தன்மையோடு "மலைமேட்டில் தலைசாய்ப்பான் சூரியன்" என்கிறார்

★ "செந்நிறத்துப் பூக்காடாம் வனமெல்லாம்"

★ அவ்வாறு செக்கச் சிவந்த சூரியனின் மாலை நேரக் கதிர்கள் (கைகள்) பட்டதால் காடெல்லாம் சிவந்து சிவப்பு நிறத்துப் பூங்கா போல் மாறிவிட்டது.

**சூரியனின் சிவந்த கதிர்கள்போல் தொழிலாளர்களின் கைகள்**

★ சூரியனின் கைகள் சிவந்ததுபோல் காலைமுதல் மாலைவரை உழைத்த தொழிலாளர்களின் கைகளும் சிவந்து உள்ளது என்று உவமைப்படுத்துகின்றார்

**தொழிலாளர்களின் வியர்வை முத்துகள் தமிழை வியந்து பாடும்**

★ மாலை நேரத் தொழிலார்களின் கைகள் சிவந்தும் வியர்வை முத்துகள் வெள்ளிமணிபோல் உடலெங்கும் முத்துமுத்தாய்ப் பூத்திருக்கும்.

★ பூத்திருக்கும் வெள்ளை முத்துக்கள் தமிழின் புகழை வியந்துபாடும்.

★ "இத்தகைய சிறப்பு வாய்ந்த அருமையான செந்தமிழே உன்னைவிட எனக்கு உற்ற துணை வேறு உண்டா?"

★ என அழகியல் தன்மையோடு தமிழின் பெருமையைப் கூறுகின்றார் கவிஞர் சிற்பி

**காட்சி நயம்**

★ செம்பரிதியின் கதிர்கள் - தொழிலாளர்களின் கைகளாகவும், தொழிலாளர்களின் வியர்வை - வெள்ளி முத்துகளாகவும், வெள்ளி முத்துகள் - தமிழ்ப்பாடும் கவிஞர்களாகவும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

**2. ஏங்கொலிநீர் ஞாலத்து இருளகற்றும் - இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.**

**பாடலின் இடம் சுட்டுதல்**

★ பாடல் வரிகள் இடம் பெற்ற இலக்கியம் - தண்டியலங்காரம் (உரை மேற்கோள் பாடல்)

★ பாடலின் ஆசிரியர் - தண்டி

★ பாடல் எழுதியதன் காரணம் - அணி இலக்கணத்தைச் சிறப்பைக் கூறும் இந்த இலக்கியத்தில் பொருள் வேற்றுமை அணியை விளக்க உரை மேற்கோள் பாடலாக இயற்றப்பட்டது.

**பாடல் வரியின் பொருள்**

★ ஏங்கொலிநீர் ஞாலத்து இருளகற்றும் - கடலால் சூழப்பட்ட உலகத்தின் இருளை அகற்றும்

www.nammakalvi.in



**பாடல் விளக்கம்**

| கதிரவன் | தமிழ் |
|---|---|
| ➔ உயர்ந்த மலைகளுக்கு இடையே தோன்றுபவன் | ➔ உயர்ந்த பொதிகைமலையிருந்து தோன்றியவள் |
| ➔ கடலால் சூழப்பட்ட உலகத்தின் புற இருளை அகற்றுபவன் | ➔ உலகத்தில் வாழும் மக்களின் அறியாமை என்னும் அக இருளை அகற்றுபவள் |
| ➔ மக்களால் போற்றப்படுபவன் | ➔ சான்றோரால் தொழப்படுபவள் |
| ➔ ஒளிர்கின்ற கதிரவனாக இருக்கின்றான் | ➔ தனக்கு நிகரில்லாத தமிழாக இருக்கின்றாள். |

**3. பின்வரும் இரு பாக்களின் கருத்துகளிலுள்ள வேற்றுமையை எடுத்துக்காட்டுக.**

**பாடல் வரிகள்**

| பவணந்திப் புலவரின் பாடல் | கவிஞர். சிற்பி பாலசுப்பிரமணியம் பாடல் |
|---|---|
| பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல<br>கால வகையி னானே - நன்னூல் | மீண்டுமந்த பழமைநலம் புதுக்கு தற்கு<br>மெய்சிலிக்கத் தமிழ்க்குயிலே! கூவி வா, வா!<br>- நிலவுப்பூ |

## இரு பாக்களின் கருத்துகளில் உள்ள வேற்றுமையை எடுத்துக்காட்டுதல்

| இலக்கணப்பாடல் | இலக்கியப் பாடல் |
|---|---|
| **பழையன கழிதல்**<br>➔ தமிழ் மொழிக்கு இலக்கணக் கருத்துகள் ஆயிரம் இருந்தாலும் காலத்திற்கு ஏற்ப பயன்பாட்டில் இல்லையென்றால் அதை விட்டுவிட வேண்டும்.<br>➔ சொற்களும் மரபுகளும் பயன்படவில்லை எனில் காலத்திற்குத் தகுந்தாற்போல் கழித்துவிட வேண்டும்.<br>**புதிய புகுதலும்**<br>➔ நாள்தோறும் தமிழ்மொழியில் ஏற்படும் மொழி வளர்ச்சிக்கு ஏற்ப இலக்கணம் புதிது புதிதாக இயற்றப்பட வேண்டும் என்கின்றார். | **மீண்டும் அந்தப் பழமை நலம்**<br>➔ முற்காலத்தில் முச்சங்கம் வைத்து தமிழ் வளர்த்தனர் பாண்டிய மன்னர்<br>➔ அந்தச் தமிழ்ச் சங்கத்தின் அரசி நீதான்.<br>➔ தமிழ் ஆல் போல் தழைத்து அருகுபோல் வேரோடி வளர்ந்தது. பாரிமுதல் வள்ளல்களை ஈன்று தந்தாய்<br>➔ கடையேழு வள்ளல்களான பாரி, ஆய், எழினி, நள்ளி, மலயன், பேகன், ஓரி ஆகியோர் தமிழ் வளர்த்தனர். |
| **வழுவல கால வகையி னானே**<br>➔ புதிய இலக்கணம் வருவது குற்றமில்லை<br>➔ காலத்தின் வேற்றுமையே இதற்குக் காரணம் என்கிறார் நன்னூலார். | **மெய்ச் சிலிர்க்கத் தமிழ்க்குயிலே! கூவி வா!**<br>➔ இத்தகைய சிறப்புடைய தமிழே மீண்டும் அந்தப் பழமையான மரபு இலக்கியங்களுடன் வா! வா! என்று கூக்குரல் இடுகின்றார் கவிஞர் |
| ➔ புதுக்கவிதைக்கு வழிவிட்டது. | ➔ மரபுக்கவிதையை வரவேற்கின்றது |
| ➔ புது இலக்கண நூல் தோன்ற காரணமானது | ➔ மரபுக்கவிஞர்கள் தோன்ற காரணமாகிறது. |

**4. "நீர்நிலைகளிலிருந்து உதடுகள் குவித்து**
**உறிஞ்சுகிறது ஒளிக்கதிர்கள் - இக்கவிதையின் அடி,**
**தூங்கும் பனிநீரை வாங்கும் கதிரோனே" என்னும் நாட்டுப்புறப் பாடலின் தொடர்ச்சியாய் அமைவதைப் பற்றி எழுதுக.**

**ஏற்றப்பாடல்**

➔ "மூங்கில் இலை மேலே தூங்கும் பனி நீரே
தூங்கும் பனி நீரை வாங்கும் கதிரோனே" என்பது நாட்டுப்புறப்பாடல்

www.nammakalvi.in


★ மூங்கிலின் மீது இருக்கும் பனித்துளியை கதிரவன் வாங்கிக்கொள்கிறான்.

★ நீர் நிலைகளில் உள்ள தண்ணீரை ஒளிக்கதிர்கள் உறிஞ்சிக்கொள்கின்றன.

★ துளியை உறிஞ்சியபின் நீர் நிலைகளை உறிஞ்ச வந்துவிட்டான் கதிரவன் என்பது அதன் தொடர்ச்சியாக உள்ளது.

**5. வாடைக் காலத்தில் கோவலர்கள் எவ்வாறு பாதுகாப்பைத் தேடினர்?**

**குளிர்கால நள்ளிரவு**

★ மேகம்தான் தங்கியிருந்த மலையை வலப்பக்கமாகச் சூழ்ந்து எழுந்தது

★ உலகமே குளிரும்படி புதிய மழையைப் பூமியெங்கும் பொழிய வைத்தது.

★ தாழ்வான பகுதிகளில் வெள்ளம் பெருகியது. இதனைக் கோவலர் வெறுத்தனர்.

★ எருமைகள், பசுக்கள், ஆடுகள் போன்றவற்றை மேடான நிலத்தில் மேய விட்டனர்.

**கோவலர்களின் துன்பம்**

★ வழக்கமாக தாம் பழகிய இடத்தை விட்டுப் பிரிந்து வேறு இடத்திற்குப் பெயர்ந்தனர்.

★ பிரிவுத் துன்பம் கோவலர்களை வாட்டியது.

★ கோவலர்களின் தலையில் சூடியிருந்த நீண்ட இதழ்களுடைய காந்தள் மலர் கசங்கியது.

★ கோவலர்கள் ஒன்றுசேர்ந்து கொள்ளி நெருப்பால் கைகளுக்குச் சூடேற்றினர்.

★ கைகள் சூடேறினாலும் அவர்களின் பற்கள் நடுங்கின.

**குளிரினால் விலங்குகளுக்கு ஏற்பட்ட துன்பம்**

★ விலங்குகள் மேய்ச்சலை மறந்தன

★ மரங்களிலிருந்து பறவைகள் வீழ்ந்தன

★ குரங்குகள் குளிரால் நடுங்கின

★ பசுக்கள் பால் குடிக்க வந்த கன்றுகளைத் தவிர்த்தன.

**6. குகனோடு ஐவராகி, வீடணனோடு எழுவரான நிகழ்வுகளைச் சுட்டிக் காட்டுக.**

**பிறப்பால் நால்வர்**

★ அயோத்தியின் அரசன் தசரதனின் மகன் இராமன்.

★ இராமனுக்கு உடன்பிறந்த தம்பிகள் மூன்று பேர்.

★ எனவே, பிறப்பால் இராமன் நால்வர் ஆனவன்.

**குகனோடு ஐவர்**

★ இராமன், கங்கை கரையில் வேடர் குலத் தலைவன் குகனைக் காண்கிறான்.

★ இராமன், குகனின் அன்பிற்கு ஆட்பட்டான்.

★ குகனைத் தன் தம்பியாக ஏற்றுக்கொண்டு, குகனோடு ஐவர் ஆனான்.

**சுக்ரீவனுடன் அறுவர்**

★ கிட்கிந்தையில், வானரங்களின் தலைவன் சுக்ரிவீனைக் காண்கிறான்.

★ சுக்ரீவனைத் தன் தம்பியாக ஏற்றுக்கொண்டு, சுக்ரீவனுடன் அறுவர் ஆனான்.

**வீடணனோடு எழுவர்**

★ இலங்கை வேந்தன் இராவணனின் தம்பி வீடணன்.

★ சீதையைக் கவர்ந்து வந்தது தவறு என வீடணன் இராவணனிடம் கூறுகின்றான்.

★ இராவணன் ஏற்க மறுக்கவே, அவனைவிட்டு நீங்கி இராமனுடன் சென்று சேர்கிறான்.

★ இராமன் வீடணனையும் ஏற்றுக்கொண்டு, வீடணனோடு எழுவர் ஆனான்.

**7. "வருபவர் எவராயினும் நன்றி செலுத்து" - இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.**

**இடம்**

★ ஜலாலுத்தீன் ரூமியின் கவிதையின் தமிழாக்கத்திலிருந்து எடுக்கப்பட்டுள்ளது.

★ ஜலாலுத்தீன் ரூமியின் கவிதையை 'தாகங்கொண்ட மீன்கள்' என்ற பெயரில் தமிழாக்கம் செய்தவர் என். சத்தியமூர்த்தி.

**விளக்கம்**

★ ஆனந்தம், மனச்சோர்வு, அற்பத்தனம், விழிப்புணர்வு ஆகியவை நம் வீட்டிற்கு வரும் எதிர்பாராத விருந்தாளிகள் என்கிறார் கவிஞர்.

★ வக்கிரம், அவமானம், வஞ்சனை ஆகியவை வீட்டிற்கு வருகின்றன.

★ வருபவர்கள் எவராக இருந்தாலும் அவர்களை இன்முகத்துடன் வரவேற்க வேண்டும்.

★ ஏனெனில், இவை அனைத்தும் நம் வாழ்வில் ஏதேனும் ஓர் அனுபவத்தை ஏற்படுத்தக் கூடியவை.

**8. சடாயுவைத் தந்தையாக ஏற்று, இராமன் ஆற்றிய கடமையை எழுதுக.**

**சடாயு**

★ இராவணன் சீதையைச் சிறையெடுத்து, இலங்கைக்குக் கொண்டுச் சென்றான்.

★ சடாயு என்னும் கழுகு வேந்தன் இராவணனை இடையில் தடுக்க முயற்சித்தான்.

★ சடாயு, இராவணனுடன் சண்டையிட்டுக் காயப்பட்டான்.

**இராமனைச் சந்தித்தல்**

★ சடாயு, இராமனிடம் நடந்தவற்றைக் கூறி இறந்துவிட்டான். ★ இராமனின் தந்தையின் நண்பன் சடாயு.

★ எனவே, சடாயு தனக்கும் தந்தைதான் என்று எண்ணி அவனுக்கான இறுதிச் சடங்குகளை இராமனே செய்தான்.

**இறுதிச் சடங்கு**

★ இராமன், விறகிற்கு அகில், சந்தனக் கட்டைகளைக் கொண்டு வந்தான்.

★ தருப்பைப் புற்களை ஒழுங்குபட அடுக்கினான். ★ பூக்களைக் கொண்டுவந்து தூவினான்.

★ நன்னீரைக் கொண்டுவந்தான். ★ மணலினால் மேடை அமைத்தான்.

★ மேடைக்கு தன் தந்தையாகிய சடாயுவைக் கொண்டு வந்தான்.

**9. மூன்றான காலம் போல் ஒன்று" - எவை? ஏன்? விளக்குக.**

★ இவ்வரிகள் இடம்பெற்ற இலக்கியம் - இடையீடு (இதுவரை என்னும் கவிதைத் தொகுப்பு நூலாகும்.)

★ ஆசிரியர் - சி. மணி

**மூன்றான காலம் போல் ஒன்றானவை**

★ எண்ணம் - வெளியீடு - கேட்டல் இவை இணைதல் என்பது முக்காலமும் ஒன்றானது போலாகும்.

**விளக்கம் - முடியாமை**

★ சிலவற்றை நாம் சொல்ல விரும்புவோம். ஆனால், ஏனோ அதைச் சொல்ல நமக்குச் சொல் வராமல் தவித்து சொல்ல முடியாமலே விடுகின்றோம்.

**மனப்புழுக்கம்**

★ நாம் எதிர்பார்க்காமலேயே திடீரென மாற்றங்கள் பல நடந்துவிடுகின்றன.

★ நாம் ஒன்றைக் குறிவைக்க அது ஏதோ ஒன்றாக மாறி ஏமாற்றத்தைத் தரும்.

★ இதுபோன்ற மனப் புழுக்கம் ஏற்படுத்தும் நிகழ்ச்சிகள் பல உண்டு.

**ஏமாற்றம்**

★ குதிரை வரைய முயன்றால் குதிரையே வராது; அது கழுதையாகவும் வரலாம். இரண்டும் கலந்து ஒரு விலங்காக வந்து ஏமாற்றமும் தரலாம்.

**துன்பமும் இன்பமும்**

★ எலியைப் பிடிக்க பொறிவைத்தால் சில நேரங்களில் எலிப்பொறியில் நம்விரலே மாட்டிக்கொண்டு நசுங்கிவிடத்தான் செய்கிறது.

★ தண்ணீராவது கிடைக்குமா என ஏக்கத்துடன் ஒரு பாதையில் நடந்து செல்லும்போது இன்சொல் பேசி சிலர் இளநீர் கொடுப்பதும் உண்டு.

**மூன்றான காலம் ஒன்றாகுமா?**

★ எண்ணம் - வெளியீடு - கேட்டல் இவை மூன்றும் ஒரே நேரத்தில் சரியாகப் பொருந்துவதில்லை.

★ அவ்வாறு பொருந்தினால் அது இறந்தகாலம் நிகழ்காலம் எதிர்காலம் மூன்றும் ஒரேகாலமாக மாறியது போலாகும்.

**10. வாயிலோயே எனத் தொடங்கும் ஔவையாரின் புறநானூற்றுப்பாடல் பாடாண் திணைக்கு உரியது என்பதை நிறுவுக.**

**வாயிலோயே எனத் தொடங்கும் ஔவையாரின் புறநானூற்றுப்பாடல் பாடாண் திணைக்கு உரியது என்பதை நிறுவுதல்**

**அதியமான் நெடுமான் அஞ்சியை ஔவை போற்றுதல்**

★ வாயிற்காவலனே வாயிற்காவலனே!

★ பரிசிலர்க்கு வாசலை அடைக்காத வாயில் காவலனே!

**மறைபொருள்**

★ இரவலர்களுக்காக இரவும் திறந்திருக்கும் அதியமான் கதவுகள்

**பாடல்பொருள்**

★ வள்ளல்களைக் கண்டு அவர்தம் செவிகளில் அறிவார்ந்த சொற்களை துணிச்சலுடன் கூறுபவள் நான்.

★ கவிதையின் சிறப்பறிந்து பரிசுப்பொருள் தருவார்கள் வள்ளல்கள் என்னும் ஏங்கும் மனம் கவிஞர்களுக்கு உண்டு.

★ விரைந்து ஓடும் குதிரைகளைக் கொண்டவன் நெடுமான் அஞ்சி எந்த தகுதியை அறியாதவனா!

**பாடாண் திணை விளக்கம்**

★ பாடப்படும் ஆண்மகனின் கல்வி, ஒழுக்கம், வீரம் கொடைத்தன்மை, வள்ளல்தன்மை, போர்த்திறன், படைபலம் போன்றவற்றைப் புகழ்ந்து பாடுதலே பாடாண் திணையாகும்"

★ இப்பாடலில் ஔவை அதியமானின் தமிழ்ப்புலமை, வள்ளல் தன்மை, கொடைத்தன்மை, படைபலம் போன்றவறை மறைபொருளாக விளக்கினாலும் இது பாடாண் திணையே ஆகும் என்பது என் கருத்து.

**11. இராமலிங்க அடிகள் கந்தவேளிடம் எத்தகையோர் உறவு வேண்டுமெனக் கேட்கிறார்?**

**இராமலிங்க அடிகள் வேண்டும் உறவு**

★ இராமலிங்க அடிகள் கந்தக்கோட்டத்திலுள்ள முருகனிடம் தனக்கு வேண்டிய உறவினைப் பற்றி வேண்டுகிறார்.

www.nammakalvi.in



**வேண்டும் உறவு**

★ சிறந்தவர்கள் ஒருநெறிப்பட்ட மனத்துடன் முருகனின் திருவடிகளை நினைத்திருப்பார்கள்.

★ அத்தகைய சிறந்தவர்களின் உறவு வேண்டும் என்கிறார் இராமலிங்க அடிகளார்.

**வேண்டாத உறவு**

★ வஞ்சகர்கள் மனத்தில் ஒன்றை வைத்துக்கொண்டு, வெளியில் மற்றொன்றைப் பேசுவார்கள்.

★ அத்தகைய வஞ்சகர்களின் உறவுகள் தன்னை நெருங்காமல் காக்கும்படி வேண்டுகிறார்.

**12. பங்குனி உத்திரத் திருவிழா நடைபெற்ற முறையைத் திருஞான சம்பந்தர் எவ்வாறு பதிவு செய்கிறார்?**

**பங்குனி உத்திரத் திருவிழா**

★ திருவிழாக்கள் நிறைந்த வீதிகளையுடைய பெரிய ஊர் திருமயிலை.

★ மயிலையில் எழுச்சிமிக்க விழாக்கள் நடைபெறும்.

★ இளம்பெண்கள் ஆரவாரத்தோடு திருவிழாக்களைக் கொண்டாடுவார்கள்.

★ மயிலையில் கோவில் கொண்டிருக்கும் இறைவனுக்குப் பங்குனி உத்திரத்தில் விழா நடைபெறுகிறது.

★ பங்குனி உத்திர விழா ஆரவாரம்மிக்க விழாவாக உள்ளது.

★ பூம்பாவாய்! இவ்விழாவைக் காணாமல் சென்றது முறையாகுமோ? என்கிறார் திருஞானசம்பந்தர்.

**13. "நெல்லின் நேரே வெண்கல் உப்பு" - இத்தொடரின் வழி பண்டமாற்று வாணிகத்தை விளக்குக.**

**பண்டமாற்று வாணிகம்**

★ இன்றைய காலத்தில் நாம் பொருட்களை வாங்குவதற்கு பணத்தைப் பயன்படுத்துகிறோம்.

★ பணம் ஒரு இடைநிலை பொருளாக இருக்கிறது.

★ பணம் பொருட்களை வாங்கவும் விற்கவும் பயன்படுகிறது.

★ பழங்காலத்தில் பொருட்களை வாங்கவும் விற்கவும் பணம் பயன்பாட்டில் இல்லை.

★ பணத்திற்குப் பதிலாக, தங்களிடமுள்ள பொருட்களைக் கொடுத்து, தங்களுக்குத் தேவையான பொருட்களை வாங்கிக் கொண்டனர்.

★ ஒரு பொருளைக் கொடுத்து, மற்றொரு பொருளை வாங்குவது பண்டமாற்று முறை எனப்பட்டது.

**நிலமும் பொருளும்**

★ ஒவ்வொரு நிலத்தில் வாழ்ந்த மக்களும் தங்களிடம் உள்ள பொருளைக் கொடுத்து வேறு பொருளை வாங்கிக் கொண்டனர்.

| நிலம் | கொடுத்த பொருள் |
|---|---|
| ➔ குறிஞ்சி (மலை) | ➔ தேன், தினை, கிழங்கு |
| ➔ முல்லை (காடு) | ➔ வரகு, சாமை, பால்பொருட்கள் |
| ➔ மருதம் (வயல்) | ➔ நெல், |
| ➔ நெய்தல் (கடல்) | ➔ மீன், உப்பு |

www.nammakalvi.in



**14. எடுத்துக்காட்டு உவமையணியை விளக்கிக் கீழ்க்காணும் குறளுக்கு இவ்வணியைப் பொருத்தி எழுதுக**

**துஞ்சினார் செத்தாரின் வேறுஅல்லர் எஞ்ஞான்றும்**
**நஞ்சுஉண்பார் கள்உண் பவர்.**

**எடுத்துக்காட்டு உவமையணி**

**அணி விளக்கம்**

★ உவமையையும் உவமேயத்தையும் இணைக்கும் உவம உருபு மறைந்து வருவது எடுத்துக்காட்டு உவமையணி ஆகும்.

**சான்று**

**துஞ்சினார் செத்தாரின் வேறுஅல்லர் எஞ்ஞான்றும்**
**நஞ்சுஉண்பார் கள்உண் பவர்.**

**பொருள்**

★ உறங்குகின்றவர் இறந்தவரைவிட வேறுபட்டவர் அல்லர்.

★ அதுபோல, கள் உண்பவரும் நஞ்சுண்பவரே ஆவார்.

**பொருத்தம்**

★ உவமை - உறங்குகின்றவர் இறந்தவரைவிட வேறுபட்டவர் அல்லர்

★ உவமேயம் - கள் உண்பவர் நஞ்சுண்பவரே

★ இக்குறட்பாவில் உவமையும் உவமேயத்தையும் இணைக்கும் 'போல' என்னும் உவம உருபு மறைந்து வந்துள்ளது.

★ எனவே, இது எடுத்துக்காட்டு உவமையணி ஆகும்.

**15. நாட்டிய அரங்கின் அமைப்பை இளங்கோவடிகள் காட்சிப்படுத்தும் பாங்கு குறித்து உங்கள் கருத்தை எழுதுக.**

**நாட்டின அரங்கின் அமைப்பு**

★ சிற்ப நூலாசிரியர்கள் கூறிய இயல்புகள் மாறாத நன்னிலத்தைத் தேர்ந்தெடுத்தார்கள்.

★ பொதிகை மலை போன்ற உயரிய மலையிலிருந்து மூங்கிலைக் கொண்டு வந்தார்கள்.

★ மூங்கிலில் ஒரு சாண் அளவு இடைவெளியுள்ள கணுக்கள் இருந்தன.

★ நூல்களில் கூறப்பட்டுள்ள முறைப்படி அரங்கம் அமைத்தனர்.

★ தம் கைப்பெருவிரலில் இருபத்து நான்கு அளவினைக் கொண்டதாக மூங்கிலை வெட்டினர்.

★ அதை அரங்கம் அமைக்கும் கோலாகக் கொண்டு அதில் ஏழுகோல் அகலமும், எட்டுக்கோல் நீளமும் ஒரு கோல் உயரமும் உடையதாக நாட்டிய அரங்கத்தை அமைத்தனர்.

★ அரங்கின் தூணிற்கு மேல் உத்திரப் பலகையை வைத்தனர்.

★ உத்திரப் பலகைக்கும் தளத்தில் இருக்கும் பலகைக்கும் இடையே நான்கு கோல் அளவு இருந்தது.

★ அரங்கின் உள்ளே செல்லவும் வெளியே வரவும் இரு வாயில்கள் அமைக்கப்பட்டன.

★ மேல்நிலை மாடத்தில் ஐம்பூதங்களை வரைந்து வைத்தனர்.

★ தூண்களின் நிழல் அரங்கில் விழாதபடி, விளங்குகளை ஏற்றினர்.

www.nammakalvi.in



★ ஓவிய வேலைப்பாடுமிக்க மேல் விதானத்தை அமைத்தனர்.

★ சிறந்த முத்துகளால் செய்யப்பட்ட மாலைகளை அரங்கம் முழுவதும் தொங்க விட்டனர்.

★ இவ்வாறு, சிறப்பான வேலைப்பாடுகளுடன் அரங்கம் அமைக்கப்பட்டது.

**16. கவிதை என்பது கண்முன் நிகழ்வதையும் மனதில் நிகழ்வதையும் தொடர்புபடுத்திச் சொற்சிமிழில் அடைக்கும் முயற்சியே என்பதை நகுலன் கவிதையைக் கொண்டு நிறுவுக.**

★

★

**17. அதிசய மலரின் பூச்செடி எவ்வாறு முளைத்ததாக, தமிழ்நதி கூறுகிறார்?**

**அதிசய மலரின் பூச்செடி முளைக்கும் விதம்**

★ போர் மூண்டது குண்டுமழை பொழிந்தது நிலங்கள் அழிக்கப்பட்டன.

★ அளவிட முடியாத துயரமும், சில மனிதர்களும் மட்டுமே எஞ்சியுள்ளனர்.

★ குண்டுகளால் தாக்கப்பட்டதால் மரங்கள் அனைத்தும் அழிந்தன.

★ மனிதர்களின் நினைவுகளில் மட்டுமே மரங்கள் இருந்தன.

★ அத்தகைய நிலையில் போரின் குழந்தைப் போல அதிசய மலர் தோன்றியது.

**மலர் தோன்றக் காரணம்**

★ மலரின் விதை யானையின் எச்சத்திலிருந்து வந்திருக்கலாம்

★ யார்மீதோ ஒட்டியிருந்த விதை உயிர் பெற்றிருக்கலாம் என்கிறார் கவிஞர்.

**அதிசயமலர் வருகையால் நிகழ்ந்தவை**

★ அதிசய மலரை நோக்கி வண்ணத்துப்பூச்சிகள் வரத் தொடங்கின.

★ செடியிலிருந்து காடுகள் உருவாகும்.

★ காடுகள் மழையைப் பொழியச் செய்யும்.

**கவிதை உணர்த்தும் செய்தி**

★ போரினாலும் பேரழிவுகளினாலும் மனித இனம் அழிந்துக் கொண்டிருக்கிறது.

★ எத்தகைய அழிவுகள் நேரிட்டாலும் மனிதனுக்குச் சிறிதளவேனும் தன்னம்பிக்கை இருந்தால் போதும்.

★ தன்னம்பிக்கையின்மூலம் விடாமுயற்சி செய்து மீண்டும் மகிழ்ச்சியான நிலையை அடைய இயலும் என்பதை இக்கவிதை உணர்த்துகிறது.

**18. எங்கிருந்தோ வருகிறது**

**வண்ணத்துப்பூச்சியொன்று**

**பறவைகளும் வரக் கூடும் நாளை - இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.**

**இடம்**

★ கவிஞர் தமிழ்நதி எழுதிய 'அதிசய மலர்' கவிதையிலிருந்து எடுக்கப்பட்டுள்ளது.

**பொருள்**

★ போரில் அழிந்த இடத்தில் ஒரு மலர் புதிதாகத் தோன்றுகிறது.

★ அந்த மலரை நோக்கி எங்கிருந்தோ வண்ணத்துப்பூச்சிகள் வருகின்றன.

★ நாளை பறவைகளும் வரக் கூடும் என்கிறார் கவிஞர்.

**விளக்கம்**

★ போரினால் ஏற்பட்ட அழிவுகளில் மக்கள் வருத்தத்தில் இருக்கிறார்கள்.

★ அந்நிலையில், மக்கள் மனத்தில் தோன்றும் நம்பிக்கை மீண்டும் மகிழ்ச்சியான வாழ்வைத் திருப்பி அளிக்கும் என்பது பொருள்.

★ இக்கவிதையில், மனிதனின் நம்பிக்கை மலராக படிமப்படுத்தப்பட்டுள்ளது.

**19. யானை புக்க புலம்போலத் தானும் உண்ணான் உலகமும் கெடுமே □ உவமையையும் பொருளையும் பொருத்தி விளக்குக.**

**உவமை**

★ யானை புக்க புலம்போலத் தானும் உண்ணான் உலகமும் கெடுமே

**பொருள்**

★ ஒரு சிறிய நிலப்பரப்பில் விளைந்த நெல்லாக இருந்தாலும் அதனை அறுத்து யானைக்கு இட்டால் ஒரு மாதம் வரை யானைக்கு உணவு வழங்க இயலும்.

★ ஆனால், யானை விளை நிலத்திற்குள் புகுந்தால் அது உண்பதைவிட காலில் மிதிப்பட்டு வீணாவது அதிகமாகும்.

**விளக்கம்**

★ ஒரு மன்னன் தன் நாட்டு மக்களிடம் சரியான அளவில் வரி வசூல் செய்தால் அதிக அளவு வரி வசூலிக்க இயலும்.

★ மன்னன் தன் பேராசையால் மக்களிடம் அதிகப்படியான வரி வசூல் செய்ய நினைத்தால் யானை புகுந்த நிலம்போல வீணாகும்.

**20. கடையெழு வள்ளல்களையும் அவர்கள் செய்த செயலையும் அட்டவணைப்படுத்துக.**

| ★ கடையெழு வள்ளல்களும் அவர்கள் செய்த செயல்களும் | |
|---|---|
| **வள்ளல்கள்** | **செயல்கள்** |
| **பேகன்** | ★ காட்டில் குளிரில் நடுங்கிய மயிலுக்குத் தன்னுடைய ஆடையைக் கொடுத்தவன் |
| **பாரி** | ★ பற்றுக் கொம்பின்றி இருந்த முல்லைக்குத் தன் தேரைக் கொடுத்தவன் |
| **மலையமான் திருமுடிக்காரி** | ★ குதிரைகளையும் பிற செல்வங்களையும் இரவலர்க்கு இல்லை என்று கூறாமல் கொடுத்தவன் |
| **ஆய் ஆண்டிரன்** | ★ நீல வண்ணக் கல்லையும் நாகம் கொடுத்த ஆடையினையும் இறைவனுக்குக் கொடுத்தவன் |
| **அதிகமான் நெடுமான் அஞ்சி** | ★ இறவாத தன்மையைக் கொடுக்கக் கூடிய நெல்லிக்கனியைத் தான் உண்ணாது ஔவைக்குக் கொடுத்தவன் |
| **நள்ளி** | ★ தன்னிடம் உள்ள செல்வங்களை இல்லையென்னாது அனைவருக்கும் கொடுத்தவன் |
| **வல்வில் ஓரி** | ★ மலை நாட்டைக் கூத்தர்க்குப் பரிசாகக் கொடுத்தவன் |

**21. "ஈசன்மகன் நின்றனர் ஓர் ஏழையென ஓர்மின்" - இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.**

**இடம்**

★ இரட்சணிய யாத்திரிகம், குமார பருவம், இரட்சணிய சரித படலம்

★ ஆசிரியர் - எச்.ஏ. கிருட்டிணனார்

**பொருள்**

★ இறைமகன் மக்கள்மீது மிகவும் அன்புக்கொண்டிருந்தார்.

★ எனவே, அவர்கள் தன்னைக் கயிற்றால் கட்டும்போதும் அமைதியாக இருந்தார்.

★ அந்தக் கட்டிலிருந்து விடுபட இயலாமல் ஓர் ஏழையைப் போல இறைமகன் இருந்தார், இதை நீங்கள் எண்ணிப் பாருங்கள் என்கிறார் கவிஞர்.

**22. கொடை வழங்குதலில் நீங்கள் பின்பற்ற விரும்புவனவற்றை எழுதுக.**

**கொடை வழங்குதலில் நான் பின்பற்ற விரும்புவன**

★ கொடை வழங்குவது என்பது வெறும் பணமாகத்தான் வழங்க வேண்டும் என்பதல்ல.

★ பிறரிடம் கையேந்த மனமில்லாமல், சாலைகளில் பேனா, புத்தகம் போன்றவற்றை விற்பவர்களிடம் பொருட்கள் வாங்குவதும் ஒருவித கொடைதான்.

★ வாழும்போது குருதிக் கொடையும் (இரத்ததானம்)

★ இறந்த பிறகு உடல் கொடையும் (உடல் உறுப்பு தானம்) வழங்கலாம்.

★ பிறந்த நாள் போன்ற நன்னாளில் நாம் மட்டும் மகிழ்ச்சியுடன் கொண்டாடாமல், ஆதரவற்றோருக்கு நம்மால் முடிந்த பொருளைக் கொடுத்து அவர்களையும் மகிழ்ச்சி அடைய செய்யலாம்.

**23. அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை பண்பும் பயனும் அது - இக்குறட்பாவில் வரும் அணியை விளக்குக.**

**அணி** ★ நிரல்நிறை அணி

**அணி விளக்கம்**

★ ஒரு சொல் ஒரு வரிசையில் நிறுத்தி, அவற்றோடு பொருள் தொடர்புடைய வேறுசொல்லை அடுத்த வரிசையில் நிறுத்துவது நிரல்நிறை அணி ஆகும்.

**குறட்பா**

★ அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது

**பொருள்**

★ அன்புடன் வாழ்வதே வாழ்க்கையின் பண்பு. ★ அறத்தோடு வாழ்வதே வாழ்க்கையின் பயன்.

**அணி பொருத்தம்**

★ இக்குறட்பாவில், முதலடியில் அன்பு, அறன் ஆகிய சொற்கள் அமைந்துள்ளன.

★ அதற்கு இணையாக இரண்டாவது அடியில் பண்பு, பயன் ஆகிய சொற்கள் அமைந்து பொருள் தருகின்றன.

★ எனவே, இது நிரல் நிறை அணி ஆகும்.

**24. இல்வாழ்க்கை சிறப்புற அறநெறியோடு வாழ்தலின் முக்கியத்துவத்தை வள்ளுவர் வழி நின்று விளக்குக.**

**அறநெறியோடு வாழ்தலின் முக்கியத்துவம்**

★ அன்புடன் வாழ்வதே இல்வாழ்க்கையின் பண்பு. ★ அறத்தோடு வாழ்வதே இல்வாழ்க்கையின் பயன்.

★ அறத்தின் இயல்போடு இல்வாழ்க்கை வாழ வேண்டும்.

★ அவ்வாறு வாழ்பவர் முயற்சிச் சிறப்புடையோரைவிட மேம்பட்டவர்.

★ ஒருவர் உலகத்தில் வாழ வேண்டிய நெறியோடு வாழ வேண்டும்.

★ அவ்வாறு வாழ்பவர் வானத்தில் உறையு தெய்வத்துக்கு இணையாக மதிக்கப்படுவார்.

**25. எவற்றையெல்லாம் விட நன்றி உயர்ந்தது? - குறள் வழி விளக்குக.**

**மண்ணுலகும் விண்ணுலகும் ஈடாகாது**

★ ஒருவர் தனக்கு எந்தவித உதவியும் செய்யாத நிலையில், தான் அவருக்குச் செய்த உதவிக்கு மண்ணுலகும் விண்ணுலகும் ஈடாகாது.

**உலகைவிட பெரியது**

★ உரிய காலத்தில் ஒருவர் செய்த உதவி சிறிதாக இருக்கும்.

★ ஆனால், அவர் செய்த உதவி உலகத்தைவிட பெரியதாகும்.

**கடலைவிட பெரிது**

★ எந்தவித பயனும் எதிர்பாராமல் ஒருவர் செய்த உதவி கடலைவிட பெரியது.

**26. சினத்தால் வரும் கேட்டினைக் கூறுக.**

**சினத்தால் வரும் கேடுகள்**

★ சினத்தால் தீமையான விளைவுகள் ஏற்படும். ★ முகமலர்ச்சியையும் அகமலர்ச்சியையும் அழித்துவிடும்.

★ சினமே ஒருவருக்குக் கொடிய பகையாகும். ★ சினம் நம்மையே அழித்துவிடும்.

★ தன்னையே அழிக்கும் நெருப்பு போன்றது சினம்.

★ ஒருவரது சுற்றம் என்னும் பாதுகாப்பைச் சினம் அழித்துவிடும்.

**27. கீழ்க்காணும் குறளில் ஏகதேச உருவக அணி எவ்வாறு பயின்று வருகிறது என்பதை விளக்குக.**

**சினம்என்னும் சேர்ந்தாரைக் கொல்லி இனம்என்னும்**
**ஏமப் புணையைச் சுடும்.**

**அணி** ★ ஏகதேச உருவக அணி

**அணி விளக்கம்**

★ கவிஞர் எடுத்துக்கொண்ட இரண்டு ஒப்பீடுகளில் ஒன்றை உருவகப்படுத்தி, மற்றொன்றை உருவகப்படுத்தாமல் விடுவது ஏகதேச உருவக அணி ஆகும். (ஏகம் - ஒன்று, தேசம் - பக்கம்)

**குறட்பா**

★ சினம்என்னும் சேர்ந்தாரைக் கொல்லி இனம்என்னும்
ஏமப் புணையைச் சுடும்.

**பொருள்**

★ தன்னைச் சேர்ந்தவரையும் அழிக்கும் நெருப்பு சினம் ஆகும்.

★ சினம் ஒருவரது சுற்றம் என்னும் பாதுகாப்புத் தெப்பத்தையும் அழிக்கும்.

**அணி பொருத்தம்**

★

★

**28. அகலாது அணுகாது தீக்காய்வார் போல்க**

**இகல்வேந்தர்ச் சேர்ந்து ஒழுகுவார் - இக்குறட்பாவில் பயின்று வரும் அணியை விளக்குக.**

**பயின்று வந்துள்ள அணி**

★ இக்குறட்பாவில் பயின்று வந்துள்ள அணி தொழில் உவமை அணி ஆகும்.

**அணி விளக்கம்**

★ ஒரு பொருளின் தொழிலை, மற்றொரு பொருளின் தொழிலுக்கு உவமை கூறுவது தொழில் உவமை அணி ஆகும்.

**சான்று**

★ அகலாது அணுகாது தீக்காய்வார் போல்க
இகல்வேந்தர்ச் சேர்ந்து ஒழுகுவார்

**பொருள்**

★ தீயில் குளிர் காய்பவர் மிகவும் நெருங்கியும் செல்லாமல், விலகியும் செல்லாமல் குறிப்பிட்ட தொலைவிலேயே இருப்பார்.

★ அதுபோல, அரசனுடன் பழகுபவர் மிகவும் நெருக்காமலும், விலகிச் செல்லாமலும் இருக்க வேண்டும்.

**பொருத்தம்**

★ இக்குறட்பாவில் அரசனோடு பழகுபவரின் செயலுக்கு தீக்காய்பவரின் செயல் உவமை கூறப்பட்டுள்ளதால், இது தொழில் உவமை அணி ஆகும்.

**29. அறிவின் மேன்மை பற்றித் திருக்குறள்வழி நீவிர் கருதுவன யாவை?**

**அறிவின் மேன்மை பற்றித் திருக்குறள்வழி நான் கருதுவன**

★ ஒருவருக்கு அழிவு வராமல் காக்கும் கருவி அறிவு ஆகும்.

★ பகைவரால் அழிக்க முடியாத பாதுகாப்பு அரண் அறிவு ஆகும்.

★ மனம் அது போகும் வழியில் செல்லவிடாமல், நல்ல வழியில் செலுத்துவது அறிவு.

★ எப்பொருளை யார் சொல்லக் கேட்டாலும் அதன் உண்மைப் பொருளைக் காண்பதே அறிவு.

★ உலகம் எத்தகைய நெறியில் செல்கிறதோ, அந்நெறியில் தானும் செல்வதே அறிவு.

★ பின்னர் வரும் துன்பத்தை முன்னரே அறிந்துக் காத்துக் கொள்பவருக்கு நடுங்கும்படியாக வரக்கூடிய துன்பம் ஒன்றும் இல்லை.

**30. எடுத்துக்காட்டு உவமையணியை விளக்கிக் கீழ்க்காணும் குறளுக்கு இவ்வணியைப் பொருத்தி எழுதுக.**

**துஞ்சினார் செத்தாரின் வேறுஅல்லர் எஞ்ஞான்றும்**
**நஞ்சுஉண்பார் கள்உண் பவர்.**

**அணி விளக்கம்**

★ உவமையையும் உவமேயத்தையும் இணைக்கும் உவம உருபு மறைந்து வருவது எடுத்துக்காட்டு உவமையணி ஆகும்.

**சான்று**

★ துஞ்சினார் செத்தாரின் வேறுஅல்லர் எஞ்ஞான்றும்
நஞ்சுஉண்பார் கள்உண் பவர்.

**பொருள்**

★ உறங்குகின்றவர் இறந்தவரைவிட வேறுபட்டவர் அல்லர்.

★ அதுபோல, கள் உண்பவரும் நஞ்சுண்பவரே ஆவார்.

**பொருத்தம்**

★ உவமை - உறங்குகின்றவர் இறந்தவரைவிட வேறுபட்டவர் அல்லர்
★ உவமேயம் - கள் உண்பவர் நஞ்சுண்பவரே
★ இக்குறட்பாவில் உவமையும் உவமேயத்தையும் இணைக்கும் போல என்னும் உவம உருபு மறைந்து வந்துள்ளது.
★ எனவே, இது எடுத்துக்காட்டு உவமையணி ஆகும்.

**31. மனத்திட்பம் அவசியமான பண்பு என்பதைக் குறள்நெறி நின்று விளக்குக.**

**மனத்திட்பத்தின் அவசியம்**

★ ஒரு செயலைச் செய்வதற்கு மன உறுதி இன்றியமையாததாகும்.
★ மன உறுதியைத் தவிர மற்ற எதுவும் பயன்படாது.
★ ஒரு செயலை நான் எளிதாக செய்துவிடுவேன் என்று கூறுவது அனைவருக்கும் எளிதானது.
★ ஆனால், மன உறுதி உள்ளவரால் மட்டுமே அச்செயலைச் செய்து முடிக்க இயலும்.
★ ஒருவர் மனஉறுதி உடையவராக இருந்தால், நினைத்த செயலை நினைத்தப்படியே நடத்தி முடிப்பார்.
★ ஒருவரின் தோற்றத்தைக் கண்டு இகழக்கூடாது. பெரிய தேருக்கும் சிறிய அச்சாணிதான் உள்ளது.

**32. சிற்றினம் சேராமையும், நல்லினத்தின் துணையுமாக வள்ளுவர் உரைப்பன பற்றி நீவிர் அறிவனவற்றை எழுதுக.**

**சிற்றினம் சேராமை**

★ மக்களுக்கு இயற்கையறிவு மனத்தால் ஏற்படும்
★ ஒருவரை உலகத்தார் மதிக்கும் சொல் யாரோடு சேர்க்கிறாரோ அவரின் தன்மையைப் பொருத்தே சொல்லப்படும்.
★ ஒருவருக்குச் சிறந்த துணை நல்ல இனத்தோடு சேருதல்
★ ஒருவருக்குத் துன்பத்தைத் தரும் பகை தீய இனத்தோடு சேருதல்

**33. வாளையும் பாம்பையும் எவ்வகைப் பகைக்குச் சான்றாக வள்ளுவர் கூறுகிறார்?**

**வாள்**

★ வாளைப்போல வெளிப்படையாகத் துன்பம் செய்பவர்களுக்கு அஞ்சத் தேவையில்லை.
★ உறவுடையோர் போல் நடித்து உட்பகை கொண்டவரின் தொடர்புக்கு அஞ்ச வேண்டும்.

**பாம்பு**

★ உள்ளத்தில் உடன்பாடு இல்லாதவருடன் கூடி வாழும் வாழ்க்கை, ஒரு குடிசையில் பாம்புடன் வாழ்வது போன்றதாகும்.

**34. சூதும் கள்ளும் கேடு தரும் - திருக்குறள் வழி விளக்குக.**

**சூது**

★ ஒருவருக்குத் துன்பத்தை உருவாக்கி, புகழைக் கெடுத்து, வறுமையைத் தருவது சூதாட்டம் ஆகும்.
★ சூதாடுமிடத்தில் ஒருவருடைய காலம் கழியுமானால், அது அவருடைய பரம்பரைச் செல்வத்தையும் நற்பண்புகளையும் கெடுக்கும்.

**கள்**

★ உறங்கியவர், இறந்தவரைவிட வேறுபட்டவர் அல்லர், அவ்வாறே கள்ளுண்பவரும் நஞ்சு உண்பவரே ஆவார்.
★ கள்ளுண்டு மயங்கியவனிடம் நல்லன சொல்லித் திருத்த முயல்வது, நீரில் மூழ்கிய ஒருவனைத் தீப்பந்தம் கொண்டு தேடுவது போன்றதாகும்.

## உரைநடை

**1. சங்கப் பாடல்களில் ஒலிக்கோலம் குறிப்பிடத்தக்க ஒரு பண்பாகும் - விளக்குக.**

**ஒலிக்கோலங்கள்**

**மொழியின் தோற்றம்**

★ எந்தத் தொன்மையான மொழியாக இருந்தாலும் அது சமிக்ஞையிலிருந்தும் இசையிலிருந்தும்தான் தோன்றின.

**கவிதையின் தோற்றம்**

★ ஒரு மொழிசார்ந்த கவிதை இசையோடும் இசைக்கருவியோடும்தான் பிறக்கின்றது.

**ஒலிப்பின்னல்**

★ கவிதையின் ஓசையும் பொருளும் இணைந்து ஒரு கலைவடிவம் கொள்கின்றன.

★ இதை அந்தக் கவிதையின் ஒலிப்பின்னல் (sound texture) என்கின்றோம்.

**வல்லின ஒலியில் உணர்ச்சி எடுத்துக்காட்டுப் பாடல்**

➔ கற்க கசடற கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக - திருக்குறள்

★ சொல்லின் வன்மை எழுத்திலும் ஒலிப்பது ஒலிக்கோலத்திற்குச் சிறந்த எடுத்துக்காட்டாகும்.

**2. மழைவெள்ளப் பாதிப்பிலிருந்து காத்துக்கொள்ளும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளைக் குறிப்பிடுக.**

**மழைவெள்ளப் பேரிடர் ஏற்படும்போது செய்ய வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள்**

**பேரிடர் ஏற்பட்ட போது மேற்கொள்ள வேண்டியவை**

★ பேரிடரின் தன்மையை பதற்றமடையாமல் உணரவேண்டும்.

★ புயல், மழை பற்றி வானிலை ஆராய்ச்சி மையம் வெளியிடும் தகவல்களைத் தெளிவாக அறிந்து கொள்ள வேண்டும்.

★ வானிலைத் தகவல்களுக்கு ஏற்ப மக்கள் விழிப்புடன் செயல்பட வேண்டும்.

★ தீயணைப்புத்துறை, காவல்துறை ஆகியவற்றுடன் ஒத்துழைக்க வேண்டும்.

★ தன்னார்வத் தொண்டு நிறுவனங்களை மக்களுடன் ஒன்றிணைக்க வேண்டும்.

★ சமூக ஊடகங்களை நற்செயலுக்காக சரியாகப் பயன்படுத்துதல்.

**வருங்காலங்களில் செய்ய வேண்டியவை**

★ வருங்காலங்களில் பேரிடரைத் தாங்கும் புதிய கட்டுமானங்களை அமைக்க வேண்டும்.

★ நீர்வழிப் பாதைகளுக்கான தெளிவான வரைபடம் உருவாக்கப்பட வேண்டும்.

★ அவ்வாறு அமைத்த நீர்வழிப்பாதைகளை நாம் தொடர்ந்து பராமரிக்க வேண்டும்.

★ 'சமூகக் காடுகள் வளர்ப்புத் திட்டத்தை' ஓர் இயக்கமாக வளர்த்தெடுக்க வேண்டும்.

★ கடற்கரை ஓரங்களில் சதுப்பு நிலக் காடுகளை வளர்க்க வேண்டும்.

**3. பேரிடர் மேலாண்மை ஆணையம் - விளக்கம் தருக.**

**பேரிடர் மேலாண்மை ஆணையம்**

★ இந்திய நடுவண் அரசு பேரிடர் மேலாண்மை ஆணையத்தை வடிவமைத்தது.

★ பேரிடர் மேலாண்மை 2005 ஆம் ஆண்டு டிசம்பர் 23 ஆம் தேதி அமைத்தது.

**பேரிடர்கள் என நடுவண் அரசு அறிவித்தவை**

➔ புயல், வெள்ளம், நிலநடுக்கம், வறட்சி, சுனாமி, நிலச்சரிவு, தீவிபத்து, சூறாவளி, பனிப்புயல், வேதி விபத்துகள்

www.nammakalvi.in



**பேரிடர் மேலாண்மை அமைப்பின் பணிகள்**

- ★ பேரிடர் காலங்களில் பல்வேறு அமைப்புகளை ஒருங்கிணைத்து செயலாற்றும்.
- ★ இந்த அமைப்பிற்காக பல்வேறு குழுக்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.
- ★ மாநிலம், மாவட்டம், ஊராட்சி, சிற்றூர் என அனைத்து நிலைகளிலும் குழுக்கள் அமைத்து செயலாற்றும்.

**4. பண்டைய விரிந்த குடும்பத்தின் தொடர்ச்சியே இன்றைய கூட்டுக் குடும்பம் - விளக்கம் எழுதுக.**

**விரிந்த குடும்பம்**

- ★ சங்க காலத்தில் தனிக்குடும்ப அமைப்பு விரிவுபெற்றது.
- ★ கணவன், மனைவியுடன் யாரேனும் ஒருவரின் தந்தையும் சேர்ந்து வாழ்ந்தனர்.
- ★ இவ்வகையான குடும்பமுறை 'விரிந்த குடும்பமுறை' ஆகும்.
- ★ சங்க காலத்தில் செவிலித்தாயும்(வளர்ப்புத்தாய்), தோழியும் (செவிலித்தாயின் மகள்) குடும்பத்தில் முதன்மையான இடம் பெற்றிருந்தனர்.

**குடும்ப வாழ்வின் பயன்**

- ★ குடும்ப வாழ்வின் இறுதிக் காலத்தில் தலைவனும் தலைவியும் (கணவனும் மனைவியும்) இணைந்து,
- ★ தன் பிள்ளைகளுடனும் அறத்தினை விரும்பிய உறவினரோடும் சேர்ந்து, மனையறம் காத்து வந்தனர்.
- ★ மனையறம் காத்தலே குடும்ப வாழ்வின் பயன் எனக் கருதினர்.

**கூட்டுக்குடும்பம்**

- ★ சங்க காலத்தில் பிள்ளைகளோடும் உறவினரோடும் வாழ்ந்த நிலையே விரிந்த குடும்பம்.
- ★ இன்றைய காலக்கட்டத்தில், கணவன், மனைவி, பிள்ளைகள், தாத்தா, பாட்டி என அனைவரும் இணைந்து வாழ்கின்றனர்.
- ★ இவ்வாறு, இணைந்து வாழும் குடும்பம் கூட்டுக்குடும்பம் ஆகும்.
- ★ சங்க காலத்தில் இருந்த விரிந்த குடும்பத்தின் தொடர்ச்சியாக கூட்டுக்குடும்பம் உள்ளது.

**5. தாயும் தந்தையும் பணிக்குச் செல்லும் இன்றைய சூழலில் குடும்ப உறுப்பினர் என்ற முறையில் நீங்கள் குடும்பத்துக்குச் செய்யும் உதவிகள் யாவை?**

**குடும்ப உறுப்பினர் என்ற முறையில் நான் குடும்பத்துக்குச் செய்யும் உதவிகள்**

- ★ வீட்டில், என்னால் செய்ய முடியும் வேலைகளை நானே செய்வேன்.
- ★ என் உடைகளை நானே துவைப்பேன்.
- ★ வீட்டில் பெற்றோர் இல்லாதபோது, வீட்டைத் தூய்மையாக வைத்துக்கொள்வேன்.
- ★ காலை சிற்றுண்டியை நானே தயாரித்துக் கொள்வேன்.
- ★ வீட்டிற்குத் தேவையான பொருட்களைக் கடைக்குச் சென்று வாங்கி வருவேன்.

**6. நீங்கள் ஆசிரியரானால் மாணாக்கரை அன்பினால் எவ்வகையில் நெறிப்படுத்துவீர்கள்?**

- ★ நான் ஆசிரியரானால் மாணாக்கரை அன்பினால் மட்டுமே கட்டுப்படுத்துவேன்.
- ★ மாணவன் சூழல் அறிவேன்
- ★ மாணவனின் தன்மை, அவன் கடந்து வந்த பாதை, வீட்டின் சூழல், பெற்றொர் அல்லது உற்றோர் நிலை மனவெழுச்சி, மனஉரம் அனைத்தையும் கண்டு கேட்டு உண்டு உயிர்த்து உற்றறிந்து உதவிட முனைவேன்.

**மாணவன் பற்றி என்னுடைய பார்வை**

★ மாணவன் என்பவன் சமுதாயம் என்னும் தோட்டத்தில் பூக்கத் துடிக்கும் பூச்செடி.

★ கல்வி என்னும் தண்ணீரை மென்மையாக அதன் வேருக்குப் பாய்ச்சுவேன்.

★ அன்பு என்னும் ஞானத்தைத் தென்றல் போல் வருடி உணர்த்துவேன்.

★ செடி வளர வளர அதைப் பார்த்து மகிழ்வதுபோல் மாணவன் கல்வியறிவால் சிறந்து விளங்குவதைக் கண்டு மகிழ்வேன்.

★ புயலாலும், கடும் காற்றாலும், பெருமழையாலும் வீழ்ந்துவிடாமல் காக்கும் பற்றுக்கொம்பு போல் சமூகத்தீமைகளில் வீழ்ந்து விடாமல் காப்பேன்.

★ மாணவனை நான், நாளையச் சமூகத்தில் மலரும் மலராக நினைத்துப் போற்றுவேன்.

★ அன்பால் வளரும் மாணவர்களை அன்பால் மட்டுமே திருத்தி அன்பை மட்டுமே அவர்கள் உள்ளத்திலிருந்து பூக்கச் செய்வேன்.

7. **மணலில் எழுதியது முதல் தற்காலம் வரை எழுதும் முறையில் ஏற்பட்டுள்ள மாற்றங்களைத் தொகுத்துரைக்க.**

**எழுதும் முறையில் ஏற்பட்ட மாற்றங்கள்**

**மணல் எழுத்து**

★ முதன்முதலில் பிள்ளைகள் மணலில் தான் எழுதிப் பழகினார்கள்.

★ ஆசிரியர் முதலில் தன்விரலினால் மணலில் எழுத மாணவர்கள் அதன்மேல் எழுதிப் பழகி, பின்பு தாமாகவே எழுதிப் பழகினர்.

★ இம்முறையில் எழுத்துகள் வரிசையாகவும் நன்றாகவும் அமைந்தது.

**ஓலைச் சுவடி எழுத்து**

★ இளம் பிள்ளைகளுக்கு உபாத்தியாயர் ஓலையை ஒழுங்காக நறுக்கித் துளையிட்டுக் கயிறு கோத்து தருவார்.

★ ஆசிரியர்கள் முதலில் தாங்கள் எழுதிய ஓலைச்சுவடி எழுத்தின்மீது மாணவர்களை எழுதச் செய்வர்

★ மெல்லிய எழுத்தாணிகள் கொண்டு ஏட்டில் மாணவர்கள் எழுதிப் பழகினர்.

**கையெழுத்து**

★ எழுத்துகள் ஒன்றோடு ஒன்று படாமல் எழுதவேண்டும். ★ வரிகோணாமல் எழுத வேண்டும்.

★ புள்ளி, கால், கொம்பு, விலங்கு முதலியவை வரி எழுத்தின் உறுப்புகள்

**சுவடிகளின் வகைகள்**

★ பனையோலை ★ சீதாளப் பத்திரம்

**எழுத்தாணிகளின் வகைகள்**

★ மடக்கெழுத்தாணி, வாரெழுத்தாணி, குண்டெழுத்தாணி

**இக்காலத்தில் எழுதும் முறை**

★ இக்காலத்தில் காகிதத்தில் பேனா என்னும் எழுதுகோலையும் பென்சில் என்னும் கரிக்கோலையும் கொண்டே பெரும்பாலும் எழுதுகின்றனர்.

★ காகிதங்களும் எழுதுகோல்களும் பல வண்ணங்களில் உள்ளன.

**கணினியில் எழுதும் முறை**

★ காகிதப் பயன்பாட்டைக் குறைக்க வேண்டிய சூழல் ஏற்பட்டுள்ளதாலும் சிக்கனம் கருதியும் பெரும்பாலானோர் கணினியில் இன்று விசைப்பலகை மூலம் எழுதி வருகின்றனர்.

**இணையதள பேச்செழுத்து முறை எழுத்து (google voice typing)**

★ இணைய தளத்தில் சிலர் பேசுவதே எழுத்தாக மாற்ற இயலும் அவ்வாறே பேச்செல்லாம் எழுத்தாகவும் நூலாகவும் மாறிவரும் சூழல் ஏற்பட்டுள்ளது.

**8. சென்னையின் பண்பாட்டு அடையாளங்களில், இன்றும் நிலைத்து இருப்பனவற்றைக் குறிப்பிடுக.**

**சென்னையின் பண்பாட்டு அடையாளங்கள்**

★ சென்னை நகரம் பண்பாட்டு அடையாளம் மிக்க நகரம் ஆகும்.

★ இந்திய சாரசனிக் கட்டக்கலை முறையில் பல கட்டடங்கள் கட்டப்பட்டன.

★ பழமையான கட்டங்கள் சென்னையின் பண்பாட்டு அடையாளமாக உள்ளது.

**தமிழ்நாடு ஆவணக் காப்பகம்**

★ ஆங்கிலேயர்கள், ஆவணங்களை முறையாகப் பாதுகாத்தனர்.

★ ஆவணங்களைப் பாதுகாக்க 'மெட்ராஸ் ரெக்காட் ஆபிஸ்' கட்டப்பட்டது.

★ மெட்ராஸ் ரெக்காட் ஆபிஸ் சாரசனிக் கட்டட முறையில் கட்டப்பட்டது.

★ இது இன்று 'தமிழ்நாடு ஆவணக் காப்பகம்' என்று வழங்கப்படுகிறது.

**அருங்காட்சியகங்கள்**

★ தென்னிந்திய வரலாற்றையும் பண்பாட்டையும் அறிவதற்கு அருங்காட்சியகங்கள் உதவுகின்றன.

★ சென்னையில் இரண்டு அருங்காட்சியகங்கள் உள்ளன.

★ அருங்காட்சியகங்கள் சென்னையின் அடையாளத்தைக் காட்டுகின்றன.

**நூலகம்**

★ சென்னையில் கன்னிமாரா நூலகம் அமைந்துள்ளது.

★ இந்தியாவின் முதல் பொதுநூலகம் கன்னிமாரா நூலகம் ஆகும்.

**9. திரைப்படத்தின் காட்சியின் ஆற்றலை எடுத்துக்காட்டுடன் புலப்படுத்துக.**

**காட்சியின் ஆற்றல்**

★ கதை நகர்வுக்கு உதவுவது காட்சி ஆகும்.

★ திரைப்படத்தில் வசனத்தைக் காட்டிலும் காட்சிகள் முக்கியத்துவம் பெறுகின்றன.

★ காட்சிகள் அடுத்தடுத்து வைப்பதன்மூலம் கதை சொல்லப்படுகிறது.

**எடுத்துக்காட்டு**

★ முதல் காட்சியில் தோழி ஒருத்தி கதாநாயகியிடம் தொடர்வண்டிப் பயணச்சீட்டைக் கொடுப்பாள்.

★ அடுத்த காட்சியில் கதாநாயகி தொடர்வண்டியில் இருப்பாள்.

★ எண் 7, வீரையா தெரு... என்று ஒருவர் முகவரியைச் சொல்லும்போதே காட்சி அந்த முகவரியில் சென்று நிற்கும்.

**காட்சி மறைவு, காட்சி உதயம்**

★ காட்சிகள் மாறுவதை உணர்த்த ஒரு காட்சியைச் சிறிது சிறிதாக மங்கலாகக் காட்டி இருள் ஆக்கிக் காட்டுவர்.

★ இது காட்சி மறைவு எனப்படும்.

★ அடுத்த காட்சி தொடங்கும்போது இருட்டாக இருந்த பகுதி சிறிது சிறிதாக வெளிச்சமாக மாறி முழுக்காட்சியும் தெரியும்.

★ இது காட்சி உதயம் எனப்படும்.

**கலவை, அழிப்பு**

★ ஒரு காட்சி மறையும்போதே அடுத்த காட்சி தெரியத் தொடங்குவது கலவை ஆகும்.

★ பழைய காட்சியை அழித்துக் கொண்டே அடுத்த காட்சி தோன்றுவது அழிப்பு ஆகும்.

**10. வேளாண் மேலாண்மை குறித்து நீவிர் பரிந்துரைப்பனவற்றை எழுதுக.**

**வேளாண் மேலாண்மை குறித்து நான் பரித்துரைப்பன**

★ வேளாண்மையிலும் மேலாண்மையைக் கடைப்பிடிப்பது கட்டாயமாகும்.

★ மண்ணிற்கு ஏற்ற பயிர்வகையைத் தேர்ந்தெடுத்தல்

★ நிலத்தைச் சரியான முறையில் உழுது பக்குவப்படுத்துதல் ★ விதை விதைத்தல்

★ நீர் பயன்பாட்டை நெறிப்படுத்துதல் ★ களை எடுத்தல் ★ உரமிடுதல்

★ அறுவடை செய்தல்

★ பதப்படுத்தி, பாதுகாத்தல் போன்ற அனைத்துச் செயல்பாடுகளையும் சரியான முறையில் செய்தால் மட்டுமே வேளாண்மையில் வெற்றி பெற இயலும்.

**11. மயிலை சீனி. வேங்கடசாமி நினைவுச் சிறப்பிதழுக்குச் செய்திகள் உருவாக்கித் தருக.**

**நினைவுச் சிறப்பிதழுக்கானச் செய்திகள்**

★ குடியரசு, ஊழியன், செந்தமிழ்ச்செல்வி என இதழ்களில் தமிழ் வளர்த்த இமயமே!

★ பௌத்தம் வளர்த்த தமிழைப் பக்குவமாய் பருகக் கொடுத்தவர்!

★ கிறித்தவத் தமிழைக் கிள்ளிவளவன்போல் அள்ளிக்கொடுத்தவர்!

★ சமணத் தமிழைச் சாமானியனுக்கும் கொண்டு சேர்த்தவர்!

★ இருண்ட காலத்தின் வரலாற்றை வெளிச்சத்துக்குக் கொண்டுவந்தவர்!

★ மகேந்திரவர்மன், நரசிம்மவர்மன், நந்திவர்மன், கொங்குநாட்டு மன்னர், துளுநாட்டு மன்னர்களைப் பற்றி ஆய்ந்தறிந்தவர்!

★ களப்பிரர்களின் ஆட்சியை புதிய கண்ணோட்டத்துடன் நோக்கியவர்!

★ தமிழ், மலையாளம், கன்னடம், பாலி, ஆங்கிலம் என பன்மொழி அறிந்த பாவலர்!

★ மறைந்துபோன தமிழ் நூல்களின் பரந்துகிடந்த தமிழை வரைந்துக் கொடுத்தவர்!

★ செந்தமிழ்ப் பணியில் சொல்லாய்வுச் செய்தவர்!

★ வீறுகொண்டு தமிழாய்ந்த தமிழறிஞர்!

www.nammakalvi.in


# அணிகள்

## உவமை அணி

**அணி விளக்கம்:-**

★ உவமை, உவமேயம் இரண்டையும் இணைக்கும் உவம உருபு வெளிப்படையாக வருவது **உவமை அணி** ஆகும்.

**எடுத்துக்காட்டுப் பாடல்:-**

➔ **உடம்பாடு இலாதவர் வாழ்க்கை குடங்கருள்**
**பாம்போடு உடன்உறைந் தற்று.**

**எடுத்துக்காட்டு விளக்கம்:-**

★ அகத்தில் உடன்பாடு இல்லாதவருடன் கூடி வாழும் வாழ்க்கை

★ ஒரு குடிசையில் பாம்புடன் வாழ்வது போன்றது.

**எடுத்துக்காட்டுப் பொருத்தம்:-**

★ உவமை - **குடிசையில் பாம்புடன் வாழ்வது**

★ உவமேயம் - **அகத்தில் உடன்பாடு இல்லாதவருடன் வாழும் வாழ்க்கை**

★ உவம உருபு - **அற்று**

★ இக்குறட்பாவில் உவமை, உவமேயம் இரண்டையும் இணைக்கும் உவம உருபு வெளிப்படையாக வருவதால், இது உவமை அணி ஆகும்.

## சொற்பொருள் பின்வரும் நிலையணி

**அணி விளக்கம்:-**

★ செய்யுளில் முன்னர் வந்த ஒரே சொல் மீண்டும் மீண்டும் வந்து ஒரே பொருளைத் தருவது சொற்பொருள் பின்வரும் நிலையணி ஆகும்.

**எடுத்துக்காட்டுப் பாடல் :-**

➔ **எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்**
**மெய்ப்பொருள் காண்பது அறிவு.**

**எடுத்துக்காட்டு விளக்கம்:-**

★ எந்த ஒரு பொருளையும் யார் சொல்லக் கேட்டாலும், அப்பொருளின் உண்மைத்தன்மையைக் காண்பதே அறிவாகும்.

**எடுத்துக்காட்டுப் பொருத்தம்:-**

★ இக்குறளில் **'பொருள்'** என்னும் சொல் மீண்டும் மீண்டும் வந்து **'கருத்து'** ஒரே பொருளைத் தருவதால் இது 'சொற்பொருள் பின்வரும் நிலையணி' ஆகும்.

## பொருள் வேற்றுமை அணி

**அணி விளக்கம்**

★ இருவேறு பொருள்களுக்கிடையே ஒற்றுமையை முதலில் கூறிப் பின் வேறுபடுத்திக் காட்டுவது பொருள் வேற்றுமை அணி ஆகும்.

www.nammakalvi.in


**எடுத்துக்காட்டுப் பாடல்**

➔ **ஓங்கலிடை வந்து உயர்ந்தோர் தொழவிளங்கி**
**ஏங்கொலிநீர் ஞாலனத்(து) இருளகற்றும் - ஆங்கவற்றுள்**
**மின்னேர் தனியாழி வெங்கதிரொன்(று) ஏனையது**
**தன்னேர் இல்லாத தமிழ்** - தண்டியலங்காரம்

**எடுத்துக்காட்டு விளக்கம்**

| கதிரவன் | தமிழ் |
|---|---|
| ➔ உயர்ந்த மலைகளுக்கு இடையே தோன்றுபவன் | ➔ உயர்ந்த பொதிகைமலையிருந்து தோன்றியவள் |
| ➔ கடலால் சூழப்பட்ட உலகத்தின் புற இருளை அகற்றுபவன் | ➔ உலகத்தில் வாழும் மக்களின் அறியாமை என்னும் அக இருளை அகற்றுபவள் |
| ➔ மக்களால் போற்றப்படுபவன் | ➔ சான்றோரால் தொழப்படுபவள் |
| ➔ ஒளிர்கின்ற கதிரவனாக இருக்கின்றான் | ➔ தனக்கு நிகரில்லாத தமிழாக இருக்கின்றாள். |

**எடுத்துக்காட்டுப் பொருத்தம்**

★ தமிழுக்கும் கதிரவனுக்கும் இடையே உள்ள பயன் சார்ந்த ஒற்றுமையை முதலில் கூறி அவற்றுள் தமிழ் தன்னேரிலாதது என்ற தன்மையைப் பின்னர் வேறுபடுத்திக் காட்டுவதால் இது பொருள் வேற்றுமை அணி ஆகும்.

## நிரல்நிறை அணி

**அணி விளக்கம்**

★ ஒரு சொல் ஒரு வரிசையில் நிறுத்தி, அவற்றோடு பொருள் தொடர்புடைய வேறுசொல்லை அடுத்த வரிசையில் நிறுத்துவது நிரல்நிறை அணி ஆகும்.

**எடுத்துக்காட்டுப் பாடல்**

➔ **அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை**
**பண்பும் பயனும் அது**

**எடுத்துக்காட்டு விளக்கம்**

★ அன்புடன் வாழ்வதே வாழ்க்கையின் பண்பு. ★ அறத்தோடு வாழ்வதே வாழ்க்கையின் பயன்.

**எடுத்துக்காட்டுப் பொருத்தம்**

★ இக்குறட்பாவில், முதலடியில் அன்பு, அறன் ஆகிய சொற்கள் அமைந்துள்ளன.
★ அதற்கு இணையாக இரண்டாவது அடியில் பண்பு, பயன் ஆகிய சொற்கள் அமைந்து பொருள் தருகின்றன.
★ எனவே, இது நிரல் நிறை அணி ஆகும்.

## ஏகதேச உருவக அணி

**அணி விளக்கம்**

★ கவிஞர் எடுத்துக்கொண்ட இரண்டு ஒப்பீடுகளில் ஒன்றை உருவகப்படுத்தி, மற்றொன்றை உருவகப்படுத்தாமல் விடுவது ஏகதேச உருவக அணி ஆகும்.

**எடுத்துக்காட்டுப் பாடல்**

★ சினம்என்னும் சேர்ந்தாரைக் கொல்லி இனம்என்னும்
ஏமப் புணையைச் சுடும்

www.nammakalvi.in


**எடுத்துக்காட்டு விளக்கம்**

★ தன்னைச் சேர்ந்தவரையும் அழிக்கும் நெருப்பு சினம் ஆகும்.

★ சினம் ஒருவரது சுற்றம் என்னும் பாதுகாப்புத் தெப்பத்தையும் அழிக்கும்.

**அணிப் பொருத்தம்**

★ இப்பாடலில், சுற்றம் பாதுகாப்புத் தெப்பம் என உருவகப்படுத்தப்பட்டுள்ளது.

★ ஆனால், வாழ்க்கையைத் துன்பக்கடலாகவோ, வாழ்க்கைப் பயணத்தைக் கடல் பயணமாகவோ உருவகிக்கவில்லை. ★ எனவே, இ∴து ஏகதேச உருவக அணி ஆகும்.

## தொழில் உவமையணி

**அணி விளக்கம்**

★ ஒரு பொருளின் தொழிலுக்கு மற்றொரு பொருளின் தொழிலைக் காரணம் காட்டி உவமைக் கூறுவது தொழில் உவமை அணி ஆகும்.

**எடுத்துக்காட்டுப் பாடல்**

★ அகலாது அணுகாது தீக்காய்வார் போல்க
இகல்வேந்தர்ச் சேர்ந்துஒழுகு வார்

**எடுத்துக்காட்டு விளக்கம்**

★ மன்னர்களுடன் பழகுபவர், நெருப்பில் குளிர் காய்பவரைப்போல, நெருப்பிற்கு மிக அருகிலும் செல்லாமல், மிக தொலைவிற்கும் செல்லாமல் பக்குவமாக நடந்துக் கொள்ள வேண்டும்.

**அணிப் பொருத்தம்**

★ இப்பாடலில், மன்னருடன் பழகுபவரின் தொழிலுக்கு, நெருப்பில் குளிர் காய்பவரின் தொழில் உவமையாக கூறப்பட்டுள்ளதால், இது தொழில் உவமை அணி ஆகும்.

## திணை

## வாகைத்திணை

**திணை விளக்கம்**

★ வெற்றி பெற்ற அரசனும் வீரர்களும் வாகைப்பூவைச் சூடி வெற்றியைக் கொண்டாடுவது வாகைத்திணை ஆகும்.

**எடுத்துக்காட்டுப் பாடல்**

★ வையகம் பனிப்ப வலனேர்பு வளைஇப்
பொய்யா வானம் புதுப்பெயர் பொழிந்தென
.......................................................................
குன் குளிர்ப்பன கூதிர்ப் பானாள்.

**எடுத்துக்காட்டு விளக்கம்**

★ தான் தங்கியிருந்த மலையை வலப்பக்கமாகச் சூழ்ந்து எழுந்து மேகமாக உலகம் குளிருமாறு புதிய மழைப் பொழிந்தது.

★ தாழ்வான பகுதிகளில் பெருகிய வெள்ளத்தை வெறுத்த ஆயர்கள் எருமை, பசு, ஆடு ஆகிய நிரைகளை வேறு மேடான நிலங்களில் மேய விட்டனர்.

★ தாம் பழகிய நிலத்தை விட்டு பெயரும் நிலையால் வருத்தம் அடைந்தனர்.

★ அவர்கள் தலையில் சூடியிருந்த காந்தள் மாலை கசங்கியது.

★ பலருடன் சேர்ந்து கொள்ளி நெருப்பினால் கைகளுக்குச் சூடேற்றியபோது அவர்களின் பற்கள் நடுங்கின.

★ விலங்குகள் குளிர்மிகுதியால் மேய்ச்சலை மறந்தன. ★ குரங்குகள் நடுங்கின.

★ மரங்களில் தங்கியிருந்த பறவைகள் நிலத்தில் வீழ்ந்தன.

★ பசுக்கள் பாலுண்ண வந்த கன்றுகளைத் தவிர்த்தன.

★ மலையையே குளிரச் செய்வது போன்றிருந்தது அக்குளிர்கால நள்ளிரவு.

**எடுத்துக்காட்டுப் பொருத்தம்**

★ இப்பாடல், போர்மேற் சென்ற தலைவன் வெற்றிப் பெற்று திரும்புவதைக் குறிக்கும் பாடலாகும்.

★ எனவே, இது வாகைத்திணை ஆகும்.

## பாடாண் திணை

**திணை விளக்கம்**

★ ஒருவருடைய புகழ், வலிமை, கொடை, அருள் போன்ற நல்லியல்புகளைச் சிறப்பித்துக் கூறுவது பாடாண் திணையாகும்.

**எடுத்துக்காட்டுப் பாடல்**

★ பரிசிலர்க்கு அடையா வாயி லோயே
கடுமான் தோன்றல் நெடுமான் அஞ்சி
தன் அறியலன் கொல்? என் அறியலன் கொல்?
அறிவும் புகழும் உடையோர் மாய்ந்தென,
.......................................................................

**எடுத்துக்காட்டு விளக்கம்**

★ புலவர்கள், வள்ளல்களை அணுகி அவர்களிடம் அறிவார்ந்த சொற்களைத் துணிச்சலுடன் சொல்லி, தாம் எண்ணியதை முடிக்கும் வலிமையுடையவர்கள்.

★ அதே நேரத்தில், வள்ளல்கள் தம் கவிதையின் சிறப்பை அறிந்து பரிசளிக்க வேண்டுமே என நினைந்து வருந்தும் தன்மையைக் கொண்டவர்கள்.

★ நெடுமான் அஞ்சி, தன்னுடைய தகுதியை அறியானோ?

★ இவ்வுலகில், அறிவும் புகழும் உடையோர் இன்னும் மாய்ந்துவிடவில்லை.

★ எங்களை அறிந்து பரிசு தர பல பேர் உள்ளனர்.

★ அதனால், எம் யாழினை எடுத்துக்கொண்டோம். கருவிப்பையையும் சுருட்டிக் கொண்டோம்.

★ மரம் வெட்டும் தச்சன் காட்டிற்குச் சென்றால் அவனுக்கு மரங்கள் தவறாமல் கிடைக்கும்.

★ கலைத்தொழிலில் சிறந்த எங்களுக்கு எந்த திசையில் சென்றாலும் அத்திசையில் உணவு தவறாமல் கிடைக்கும்.

**எடுத்துக்காட்டுப் பொருத்தம்**

★ இப்பாடலில் ஔவையார் அதியமானின் இரவலர்க்குப் பரிசு தரும் உயர்ந்த கொடைத்திறத்தினைப் பற்றிக் கூறியுள்ளதால், இது பாடாண் திணை ஆகும்.

## நெய்தல் திணை

**முதற்பொருள்:-**

★ நிலம் - கடலும் கடல் சார்ந்த இடமும் ★ சிறுபொழுது - எற்பாடு

★ பெரும்பொழுது - ஆறு பெரும்பொழுது (முன்பனி, பின்பனி, இளவேனில், முதுவேனில், கூதிர், கார்காலம்)

**கருப்பொருள்:-**

★ தெய்வம் - வருணன் ★ மக்கள் - பரதவர், பரத்தியர், நுளையர் ★ பூ - நெய்தல், தாழை

★ பண் - செவ்வழிப்பண் ★ தொழில் - மீன் பிடித்தல், உப்பு விளைவித்தல்

**உரிப்பொருள்:-**

★ இரங்கலும் இரங்கல் நிமித்தமும்

**எடுத்துக்காட்டுப் பாடல்:-**

★ பெருங்கடல் வேட்டத்துச் சிறுகுடிப் பரதவர்
இருங்கழிச் செறுவின் உழாஅது செய்த ..
....................................................................
வெய்ய உயிர்க்கும் நோயா கின்றே.

**எடுத்துக்காட்டு விளக்கம்:-**

★ வண்டியை இழுக்கும் எருதுகளின் துன்பத்தைத் தந்தை போக்கியதுபோல, தலைவியைக் கண்டதனால் எனக்கேற்பட்ட துன்பத்தை நீ போக்குவதற்கு உரியவன் என்று தலைவன் பாங்கனிடம் உள்ளுறுத்துக் கூறினான்.

**எடுத்துக்காட்டுப் பொருத்தம்:-**

★ இப்பாடலில், நெய்தல் நில மக்களான பரதவர், அவர்களின் தொழிலான உப்பு விளைத்தல் போன்றவை இடம்பெற்றுள்ளதால், இது நெய்தல் திணை பாடலாகும்.

## பாடாண்திணை

**திணை விளக்கம்**

★ ஒருவருடைய புகழ், வலிமை, கொடை, அருள் போன்ற நல்லியல்புகளைச் சிறப்பித்துக் கூறுவது பாடாண் திணையாகும்.

**எடுத்துக்காட்டுப் பாடல்**

★ அறிவுடை வேந்தன் நெறிஅறிந்து கொளினே
கோடி யாத்து நாடுபெரிது நந்தும்
மெல்லியன் கிழவன் ஆகி வைகலும்
வரிசை அறியாக் கல்லென் சுற்றமொடு
....................................................................

**எடுத்துக்காட்டுப் விளக்கம்**

★ அறிவுடைய அரசன், வரி திரட்டும் முறை அறிந்து மக்களிடமிருந்து வரி திரட்டினால் நாடு அதிகபடியான செல்வத்தைப் பெற்றுச் செழிப்படையும்.

★ அரசன் அறிவில் குறைந்தவனாகி முறை அறியாமல், நாள்தோறும் வரியைத் திரட்ட விரும்புவது, யானை தான் புகுந்த நிலத்தில் தானும் உண்ணாமல் பிறருக்கும் பயன்படாமல் வீணாக்குவது போன்றது.

**எடுத்துக்காட்டுப் பொருத்தம்**

★ இப்பாடலில், ஓர் அரசன் எவ்வாறு வரி வசூலிக்க வேண்டும் என்ற நெறிமுறைக் கூறப்பட்டுள்ளது.

★ எனவே, இது பாடாண் திணை பாடலாகும்.

## துறை

## கூதிர்ப்பாசறை

**துறை விளக்கம்**

★ போர்மேற் சென்ற அரசன் குளிர்காலத்தில் தங்கும் படைவீட்டின் இயல்புகளைக் கூறுவது கூதிர்ப்பாசறை ஆகும்.

**எடுத்துக்காட்டுப் பாடல்**

★ வையகம் பனிப்ப வலனேர்பு வளைஇப்
பொய்யா வானம் புதுப்பெயர் பொழிந்தென
ஆர்கலி முனைஇய கொடுங்கோல் கோவலர்
..........................................................................
குன் குளிர்ப்பன கூதிர்ப் பானாள்.

**எடுத்துக்காட்டு விளக்கம்**

★ தான் தங்கியிருந்த மலையை வலப்பக்கமாகச் சூழ்ந்து எழுந்து மேகமாக உலகம் குளிருமாறு புதிய மழைப் பொழிந்தது.

★ தாழ்வான பகுதிகளில் பெருகிய வெள்ளத்தை வெறுத்த ஆயர்கள் எருமை, பசு, ஆடு ஆகிய நிரைகளை வேறு மேடான நிலங்களில் மேய விட்டனர்.

★ தாம் பழகிய நிலத்தை விட்டு பெயரும் நிலையால் வருத்தம் அடைந்தனர்.

★ அவர்கள் தலையில் சூடியிருந்த காந்தள் மாலை கசங்கியது.

★ பலருடன் சேர்ந்து கொள்ளி நெருப்பினால் கைகளுக்குச் சூடேற்றியபோது அவர்களின் பற்கள் நடுங்கின.

★ விலங்குகள் குளிர்மிகுதியால் மேய்ச்சலை மறந்தன.

★ குரங்குகள் நடுங்கின.

★ மரங்களில் தங்கியிருந்த பறவைகள் நிலத்தில் வீழ்ந்தன.

★ பசுக்கள் பாலுண்ண வந்த கன்றுகளைத் தவிர்த்தன.

★ மலையையே குளிரச் செய்வது போன்றிருந்தது அக்குளிர்கால நள்ளிரவு.

**எடுத்துக்காட்டுப் பொருத்தம்**

★ இப்பாடலில், தலைவன் தங்கியுள்ள படைவீட்டின் இயல்புகள் சொல்லப்பட்டுள்ளது.

★ எனவே, இப்பாடல் கூதிர்ப்பாசறைத்துறை பாடல் ஆகும்.

## பரிசில் துறை

**துறை விளக்கம்**

★ வள்ளலிடம் பரிசு பெற சென்ற புலவர் பரிசு வேண்டி வாயிலில் நிற்பது பரிசில் துறை ஆகும்.

**எடுத்துக்காட்டுப் பாடல்**

★ வாயி லோயே வாயி லோயே
வள்ளியோர் செவிமுதல் வயங்குமொழி வித்தித் தாம்

www.nammakalvi.in


உள்ளியது முடிக்கும் உரனுடை உள்ளத்து
வரிசைக்கு வருந்தும்இப் பரிசில் வாழ்க்கைப்
பரிசிலர்க்கு அடையா வாயி லோயே
...............................................................

**எடுத்துக்காட்டு விளக்கம்**

★ புலவர்கள், வள்ளல்களை அணுகி அவர்களிடம் அறிவார்ந்த சொற்களைத் துணிச்சலுடன் சொல்லி, தாம் எண்ணியதை முடிக்கும் வலிமையுடையவர்கள்.

★ அதே நேரத்தில், வள்ளல்கள் தம் கவிதையின் சிறப்பை அறிந்து பரிசளிக்க வேண்டுமே என நினைந்து வருந்தும் தன்மையைக் கொண்டவர்கள்.

★ நெடுமான் அஞ்சி, தன்னுடைய தகுதியை அறியானோ?

★ இவ்வுலகில், அறிவும் புகழும் உடையோர் இன்னும் மாய்ந்துவிடவில்லை.

★ எங்களை அறிந்து பரிசு தர பல பேர் உள்ளனர்.

★ அதனால், எம் யாழினை எடுத்துக்கொண்டோம். கருவிப்பையையும் சுருட்டிக் கொண்டோம்.

★ மரம் வெட்டும் தச்சன் காட்டிற்குச் சென்றால் அவனுக்கு மரங்கள் தவறாமல் கிடைக்கும்.

★ கலைத்தொழிலில் சிறந்த எங்களுக்கு எந்த திசையில் சென்றாலும் அத்திசையில் உணவு தவறாமல் கிடைக்கும்.

**எடுத்துக்காட்டுப் பொருத்தம்**

★ இப்பாடலில், ஔவையார், அதியமான் நெடுமான் அஞ்சியிடம் பரிசு எதிர்ப்பார்த்துப் பாடிய பாடல் ஆகும்.

★ எனவே, இப்பாடல் பரிசில் துறை பாடல் ஆகும்.

## தலைமகன் பாங்கற்கு உரைத்தது

**துறை விளக்கம்**

★ தனக்கு ஏற்பட்ட காதல் துன்பத்தைப் போக்குதற்கு உரியவன் நீ என்று தலைவன் பாங்கனிடம் (தோழனிடம்) உரைப்பது.

**எடுத்துக்காட்டுப் பாடல்:-**

★ பெருங்கடல் வேட்டத்துச் சிறுகுடிப் பரதவர்
இருங்கழிச் செறுவின் உழாஅது செய்த
.........................................................................
வெய்ய உயிர்க்கும் நோயா கின்றே.

**எடுத்துக்காட்டு விளக்கம்:-**

★ வண்டியை இழுக்கும் எருதுகளின் துன்பத்தைத் தந்தை போக்கியதுபோல, தலைவியைக் கண்டதனால் எனக்கேற்பட்ட துன்பத்தை நீ போக்குவதற்கு உரியவன் என்று தலைவன் பாங்கனிடம் உள்ளுறுத்துக் கூறினான்.

**எடுத்துக்காட்டுப் பொருத்தம்:-**

★ இப்பாடலில், தலைவன் தன் காதல் துன்பத்தைப் போக்குவதற்கு ஏற்றவன் நீதான் என தன் தோழனிடம் கூறுவதால், இது தலைமகன் பாங்கற்கு உரைத்தது என்னும் துறை ஆகும்.

www.nammakalvi.in


## செவியறிவுறூஉ

**துறை விளக்கம்**

★ அரசன் செய்ய வேண்டிய கடமைகளை முறைதவறாமல் செய்யுமாறு அவன் கேட்க அறிவுறுத்துவது செவியறிவுறூஉ என்னும் துறையாகும்.

**எடுத்துக்காட்டுப் பாடல்**

★ அறிவுடை வேந்தன் நெறிஅறிந்து கொளினே
கோடி யாத்து நாடுபெரிது நந்தும்
மெல்லியன் கிழவன் ஆகி வைகலும்
வரிசை அறியாக் கல்லென் சுற்றமொடு
......................................................................

**எடுத்துக்காட்டுப் விளக்கம்**

★ அறிவுடைய அரசன், வரி திரட்டும் முறை அறிந்து மக்களிடமிருந்து வரி திரட்டினால் நாடு அதிகபடியான செல்வத்தைப் பெற்றுச் செழிப்படையும்.

★ அரசன் அறிவில் குறைந்தவனாகி முறை அறியாமல், நாள்தோறும் வரியைத் திரட்ட விரும்புவது, யானை தான் புகுந்த நிலத்தில் தானும் உண்ணாமல் பிறருக்கும் பயன்படாமல் வீணாக்குவது போன்றது.

★ அரசன் தானும் பயனடைய மாட்டான் நாட்டு மக்களும் துன்புறுவர்.

**எடுத்துக்காட்டுப் பொருத்தம்**

★ இப்பாடலில், ஓர் அரசன் எவ்வாறு வரி வசூலிக்க வேண்டும் என்ற நெறிமுறைக் கூறப்பட்டுள்ளது.

★ எனவே, இது செவியறிவுறூஉ துறை பாடலாகும்.

## இலக்கிய நயம் பாராட்டுக

### பாடல் 1

**"வெட்டியடிக்குது மின்னல் - கடல்**
**வீரத் திரைகொண்டு விண்ணை யிடிக்குது**
**கொட்டி யிடிக்குது மேகம் - கூ**
**கூவென்று விண்ணைக் குடையுது காற்று**
**சட்டச்சட சட்டச்சட டட்டா - என்று**
**தாளங்கள் கொட்டிக் கனைக்குது வானம்**
**எட்டுத்திசையும் இடிய - மழை**
**எங்ஙனம் வந்ததடா தம்பி வீரா"**

- பாரதியார்

**திரண்ட கருத்து:-**

★ மின்னல் மிகுந்த வெளிச்சத்துடன் அடிக்கின்றது.

★ கடலின் வீரம்மிக்க அலைகள் வானை இடிக்கின்றன.

★ மேகக்கூட்டம் கொட்டியிடிக்கிறது.

★ காற்று கூ கூ வென்று வானைக் குடைகிறது.

★ வானம் பல்வேறு வகையான தாளங்களை எழுப்புகின்றது.

★ எட்டுத்திசைகளிலும் இடி இடிக்கின்றது.

★ இத்தகைய நிகழ்வுகளுக்குப் பிறகு மழை எங்ஙனம் வந்தது என்று பாடுகிறார், பாரதியார்.

**மையக் கருத்து:-**

★ பாரதியார், மழைப் பொழியத் துவங்குவதற்கு முந்தைய காட்சியைப் பாடியுள்ளார்.

**மோனை:-**

★ அடிதோறும் சீர்தோறும் முதல் எழுத்து ஒன்றி வரத் தொடுப்பது மோனை

| மோனை | |
|---|---|
| ➔ **வெ**ட்டி - **வீ**ரத் - **வி**ண்ணை | ★ **கொ**ட்டி - **கூ**வென்று - **கு**டையுது - **கா**ற்று |
| ➔ **ச**ட்டச்சட - **ச**ட்டச்சட | ★ **எ**ட்டுத்திசையும் - **எ**ங்ஙனம் |

**எதுகை:-**

★ அடிதோறும் சீர்தோறும் இரண்டாம் எழுத்து ஒன்றிவரத் தொடுப்பது எதுகை

| சீர் எதுகை | அடி எதுகை |
|---|---|
| ➔ ச**ட்**டச்சட - ச**ட்**டச்சட - கொ**ட்**டிக் | ➔ வெ**ட்**டியடிக்குது கொ**ட்**டி ச**ட்**டச்சட எ**ட்**டுத்திசையும் |

**சொல் நயம்:-**

★ **கூ கூ** வென்று, **சட்டச்சட, இடிக்குது, குடையுது** போன்ற ஓசையை உணர்த்தும் சொற்கள் பாடலுக்கு அழகூட்டுகின்றன.

**அணி நயம்:-**

★ மழையின் சிறப்புகளை உயர்த்திக் கூறியுள்ளதால் இஃது **'உயர்வு நவிற்சி அணி'** ஆகும்.

## பாடல் 2

"அந்தியிருளாற் கருகும் உலகு கண்டேன்
அவ்வாறே வான் கண்டேன், திசைகள் கண்டேன்
பிந்தியந்தக் காரிருள்தான் சிரித்த துண்டோ?
பெருஞ்சிரிப்பின் ஒளிமுத்தோ நிலவே நீதான்
சிந்தாமல் சிதறாமல் அழகை யெல்லாம்
சேகரித்துக் குளிரேற்றி ஒளியும் ஊட்டி
இந்தாவென் றேஇயற்கை அன்னை வானில்
எழில்வாழ்வைச் சித்தரித்த வண்ணந் தானோ? " - பாரதிதாசன்

**திரண்ட கருத்து:-**

★ மாலைப் பொழுதில் சூரியன் மறையும்போது கவிஞர், அழகான உலகத்தைக் காண்கிறார்.

★ வானத்தையும் நான்கு திசைகளையும் காண்கிறார்.

★ சூரியன் மறைவிற்குப் பிறகு இருள் சூழ்கிறது.

★ காரிருள் சிரித்ததுண்டா? ஆம். அதுதான் நிலவொளி.

★ நிலவு முத்துபோன்ற ஒளியைப் பரப்புகின்றது.

★ மொத்த அழகையும் சேகரித்து, குளிரேற்றி, ஒளியூட்டி, இயற்கை அன்னை நிலவைப் படைத்துள்ளாள்.

**மையக் கருத்து:-**

★ கவிஞர், மாலைப்பொழுதின் அழகையும் நிலவின் அழகையும் இயற்கையின் அழகையும் பாடியுள்ளார்.

**மோனை:-**

★ அடிதோறும் சீர்தோறும் முதல் எழுத்து ஒன்றி வரத் தொடுப்பது மோனை

| மோனை |
|---|
| ➔ **அ**ந்தியிருளாற் - **அ**வ்வாறே ★ **பி**ந்தியந்தக் - **பெ**ருஞ்சிரிப்பின் ★ **சி**ந்தாமல் - **சி**தறாமல் - **சே**கரித்து |

**எதுகை:-**

★ அடிதோறும் சீர்தோறும் இரண்டாம் எழுத்து ஒன்றிவரத் தொடுப்பது எதுகை

| எதுகை |
|---|
| ➔ அ**ந்**தியிருளாற் பி**ந்**தியந்தக் சி**ந்**தாமல் இ**ந்**தாவென் |

**இயைபு:-**

★ ஒவ்வோர் அடியின் (கடைசிச் சொல்லில்) ஈற்றசையோ ஈற்றுச்சீரோ ஈற்றுச்சொல்லோ ஒன்றிவரத் தொடுப்பது இயைபு

| | |
|---|---|
| ★ **கண்டேன்** - **கண்டேன்** - **கண்டேன்** | ★ காரிருள்**தான்** - நீ**தான்** |

**அணி நயம்:-**

★ இயற்கையின் அழகு உள்ளது உள்ளபடிக் கூறியுள்ளதால் இ∴து **'இயல்பு நவிற்சி அணி'** ஆகும்.

## பாடல் 3

**"பிறப்பினால் எவர்க்கும் - உலகில்**
**பெருமை வாராதப்பா !**
**சிறப்பு வேண்டுமெனில் - நல்ல**
**செய்கை வேண்டுமப்பா !**
**நன்மை செய்பவரே - உலகம்**
**நாடும் மேற்குலத்தார் !**
**தின்மை செய்பவரே - அண்டித்**
**தீண்ட ஒண்ணாதார் !"** - கவிமணி தேசிய விநாயகம்

**திரண்ட கருத்து:-**

★ மனிதராகப் பிறப்பதால் மட்டுமே ஒருவருக்குப் பெருமை வராது.

★ நல்ல செயல்களில் ஈடுபடுபவர்களுக்கே சிறப்புகள் வரும்.

★ மக்களுக்கு நன்மை செய்பவர்களே மேன்மையானவர்கள்.

★ மக்களுக்குத் தீமை செய்பவர்கள் தீண்டதகாதவர்கள் ஆவர்.

**மையக் கருத்து:-**

★ நன்மை செய்பவர்கள் மேன்மையானவர்கள், தீமை செய்பவர்கள் தீண்டதகாதவர்கள்.

**மோனை:-**

★ அடிதோறும் சீர்தோறும் முதல் எழுத்து ஒன்றி வரத் தொடுப்பது மோனை

| மோனை |
|---|
| ➔ **பி**றப்பினால் - **பெ**ருமை ★ **சி**றப்பு - **செ**ய்கை ★ **ந**ன்மை - **நா**டும் ★ **தி**ன்மை - **தீ**ண்ட |

**எதுகை:-**

★ அடிதோறும் சீர்தோறும் இரண்டாம் எழுத்து ஒன்றிவரத் தொடுப்பது எதுகை

| எதுகை |
|---|
| ➔ பி**ற**ப்பினால் சி**ற**ப்பு ★ ந**ன்**மை தி**ன்**மை |

**இயைபு:-**

★ ஒவ்வோர் அடியின் (கடைசிச் சொல்லில்) ஈற்றசையோ ஈற்றுச்சீரோ ஈற்றுச்சொல்லோ ஒன்றிவரத் தொடுப்பது இயைபு.

| இயைபு |
|---|
| ★ வாராதப்பா - வேண்டுமப்பா ★ மேற்குலத்தார் - ஒண்ணாதார் |

## பாடல் 4

**"பெற்றெடுத்த தமிழ்த்தாயைப் பின்னால் தள்ளி**
**பிறமொழிக்கு சிறப்பளித்த பிழையை நீக்க**
**ஊற்றெடுத்தே அன்புரையால் உலுங்க வைத்திவ்**
**உலகத்தில் தமிழ்மொழிக்கு நிகரும் உண்டோ?**
**கற்றுணர்ந்தே அதன்இனிமை காண்பாய் என்று**
**கம்பனொடு வள்ளுவனைச் சுட்டிக் காட்டித்**
**தெற்றெனநம் அகக்கண்ணைத் திறந்து விட்ட**
**தெய்வக்கவி பாரதிஓர் ஆசான் திண்ணம்."** - நாமக்கல் கவிஞர்

www.nammakalvi.in



**திரண்ட கருத்து:-**

★ பெற்ற தாயான தமிழ்த்தாயைப் பின்னுக்குத் தள்ளி, பிறமொழிகளுக்கு முக்கியத்துவம் கொடுத்தவர்களின் பிழையை நீக்கியவன்.

★ அன்பு நிறைந்த உரைகளால் சிந்திக்க வைத்த தமிழ்மொழிக்கு இணையானது உலகில் இல்லை என்றவன்.

★ தமிழ்மொழியைக் கற்றுணர்ந்து அதன் இனிமையைக் காண்பாய் என்றவன்.

★ மூடிக்கிடந்த நம் அகக்கண்ணைத் திறந்து கம்பனையும் வள்ளுவனையும் சுட்டிக் காட்டியவன்.

★ இவற்றை எல்லாம் செய்த தெய்வக்கவியான பாரதியார் நமக்கெல்லாம் ஒரு நல்லாசிரியர் என்பது உறுதி.

**மையக் கருத்து:-**

★ தமிழ்மொழியின் சிறப்புகளை உணரச் செய்த பாரதியார் நல்லாசிரியர் என்பதை உணர வேண்டும் என்கிறார் கவிஞர்.

**மோனை:-**

★ அடிதோறும் சீர்தோறும் முதல் எழுத்து ஒன்றி வரத் தொடுப்பது மோனை

| சீர் மோனை | | அடி மோனை |
|---|---|---|
| ➔ **பெ**ற்றெடுத்த - **பி**ன்னால் | ★ **பி**றமொழிக்கு - **பி**ழையை | ➔ **பெ**ற்றெடுத்த பிறமொழிக்கு |
| ➔ **ஊ**ற்றெடுத்த - **உ**லுங்க | ★ **உ**லகத்தில் - **உ**ண்டோ | ➔ **ஊ**ற்றெடுத்தே உலகத்தில் |
| ➔ **க**ற்றுணர்ந்தே - **கா**ண்பாய் | ★ **க**ம்பனொடு - **கா**ட்டித் | ➔ **க**ற்றுணர்ந்தே கம்பனொடு |
| ➔ **தெ**ற்றெனநம் - **தி**றந்து | ★ **தெ**ய்வக்கவி - **தி**ண்ணம் | ➔ **தெ**ற்றெனநம் தெய்வக்கவி |

**எதுகை:-**

★ அடிதோறும் சீர்தோறும் இரண்டாம் எழுத்து ஒன்றிவரத் தொடுப்பது எதுகை

| சீர் எதுகை | அடி எதுகை |
|---|---|
| ➔ பி**ற**மொழிக்கு - சி**ற**ப்பளித்த<br>➔ சு**ட்**டிக் - கா**ட்**டித் | ➔ பெ**ற்**றெடுத்த ஊ**ற்**றெடுத்தே க**ற்**றுணர்ந்தே தெ**ற்**றெனநம் |

**அணி நயம்:-**

★ இக்கவிதையில், பாரதியையும் தமிழையும் உயர்த்திக் கூறியுள்ளதால் இஃது 'உயர்வு நவிற்சி அணி' ஆகும்.

## பாடல் 5

**முச்சங்கங் கூட்டி**
**முதுபுலவர் தமைக் கூட்டி**
**அச்சங்கத் துள்ளே**
**அளப்பரிய பொருள்கூட்டி**
**சொற்சங்க மாகச்**
**சுவைமிகுந்த கவிகூட்டி**
**அற்புதங்க ளெல்லாம்**
**அமைத்த பெருமாட்டி**

**- கண்ணதாசன்**

**திரண்ட கருத்து:-**

★ தமிழ்த்தாய் மூன்று சங்கங்களை அமைத்தாள். ★ சங்கத்தில், அறிவில் சிறந்த புலவர்களை ஒன்று கூட்டி,

★ அளவிட முடியாத பொருள்களைக் கூட்டி, ★ எண்ணற்ற சொற்களைக் கூட்டி,

★ சுவைமிகுந்த கவிதைகளை உருவாக்கி,

★ ஒரே இடத்தில் இத்தகைய அற்புதங்களை ஏற்படுத்தினாள், தமிழ்த்தாய்.

www.nammakalvi.in


**மையக் கருத்து:-**

★ தமிழ்த்தாய் முச்சங்களை அமைத்து, பல அற்புதங்களை ஏற்படுத்தியுள்ளாள்.

**மோனைத் தொடை:-**

★ அடிதோறும் சீர்தோறும் முதல் எழுத்து ஒன்றி வரத் தொடுப்பது மோனைத் தொடையாகும்.

★ முச்சங்கங் - முதுபுலவர் ★ அச்சங்கத் - அளப்பரிய

★ சொற்சங்க - சுவைமிகுந்த ★ அற்புதங்க - அமைத்த

**எதுகைத்தொடை:-**

★ அடிதோறும் சீர்தோறும் இரண்டாம் எழுத்து ஒன்றிவரத் தொடுப்பது எதுகைத் தொடையாகும்.

★ முச்சங்கங் - அச்சங்கத் ★ சொற்சங்க - அற்புதங்

**இயைபுத் தொடை:-**

★ ஒவ்வோர் அடியின் (கடைசிச் சொல்லில்) ஈற்றசையோ ஈற்றுச்சீரோ ஈற்றுச்சொல்லோ ஒன்றிவரத் தொடுப்பது இயைபுத் தொடை ஆகும்.

★ இக்கவிதையில், 'கூட்டி' என்னும் சொல் அடிதோறும் இறுதி எழுத்தாக வந்துள்ளதால், இ∴து இயைபுத் தொடை ஆகும்.

**அணி நயம்:-**

★ தமிழ்த்தாய் முச்சங்கத்தை வளர்த்ததைக் கவிஞர் இயல்பாகக் கூறியுள்ளதால் இ∴து 'இயல்பு நவிற்சி அணி' ஆகும்.

## பாடல் 6

**பூமிச்சருகாம் பாலையை**
**முத்துபூத்த கடல்களாக்குவேன்**
**புயலைக் கூறுபடுத்தியே - கோடிப்**
**புதிய தென்றலாக்குவேன்**
**இரவில் விண்மீன் காசினை - செலுத்தி**
**இரவலரோடு பேசுவேன்**
**இரவெரிக்கும் பரிதியை - ஏழை**
**விறகெரிக்க வீசுவேன்** **- நா. காமராசன்**

**திரண்ட கருத்து:-**

★ பாலை வனங்களை முத்து பூத்த கடல்களாக மாற்றுவேன்

★ கடும்புயலைக் கூறுபோட்டு, கோடி தென்றல்களாக மாற்றுவேன்

★ விண்மீன்களைக் காசுகளாக (பணமாக) மாற்றி, இல்லாதவர்களுக்குக் கொடுப்பேன்.

★ சுட்டெரிக்கும் சூரியனை, ஏழைகளின் வீட்டில் விறகாக்குவேன்.

**மையக் கருத்து:-**

★ கவிஞர், நாடெங்கும் கொடுமை நீங்கி, வளமை செழிக்க வேண்டும் என்கிறார்.

**மோனைத் தொடை:-**

| சீர் மோனை | அடி மோனை |
|---|---|
| ★ பூமிச்சருகாம் - பாலையை ★ புயலைக் - புதிய | ★ பூமிச்சருகாம் புயலைக் |
| ★ இரவில் - இரவலரோடு ★ விறகெரிக்க - வீசுவேன் | ★ இரவில் இரவெரிக்கும் |

**எதுகைத்தொடை:-**

| சீர் எதுகை | அடி எதுகை |
|---|---|
| ★ இரவில் - இரவலரோடு | ★ இரவில் இரவெரிக்கும் |

**இயைபுத் தொடை:-**

★ ஒவ்வோர் அடியின் (கடைசிச் சொல்லில்) ஈற்றசையோ ஈற்றுச்சீரோ ஈற்றுச்சொல்லோ ஒன்றிவரத் தொடுப்பது இயைபுத் தொடை ஆகும்.

★ கடல்களாக்கு**வேன்** - தென்றலாக்கு**வேன்** - பேசு**வேன்** - வீசு**வேன்**

**அணி நயம்:-**

★ இயற்கையின் அழகு உள்ளது உள்ளபடிக் கூறியுள்ளதால் இஃது **'இயல்பு நவிற்சி அணி'** ஆகும்.

பாடல் 7

**வானரங்கள் கனிகொடுத்து மந்தியொடு கொஞ்சும்**
**மந்திசிந்து கனிகளுக்கு வான்கவிகள் கெஞ்சும்**
**கானவர்கள் விழியெறிந்து வானவரை யழைப்பார்**
**கமனசித்தர் வந்துவந்து காயசித்தி விளைப்பார்**
**தேனருவித் திரையெழும்பி வானின்வழி யொழுகும்**
**செங்கதிரோன் பரிக்காலுந் தேர்க்காலும் வழுகும்**
**கூனலிளம் பிறைமுடித்த வேணியலங் காரர்**
**குற்றாலத் திரிகூட மலையெங்கள் மலையே.**

**- திரிகூட ராசப்பக் கவிராயர்**

**திரண்ட கருத்து:-**

★ ஆண்குரங்குகள் பல்வகைப் பழங்களைப் பறித்து, பெண் குரங்குகளுக்குக் கொடுக்கின்றன.

★ பெண்குரங்குகள் உண்டு சிதறும் பழங்களை உண்பதற்காக, வானுலகத்தவர்கள் இரந்து நிற்பார்கள்.

★ மலையில் தவம் செய்யும் முனிவர்கள், உற்று நோக்கி தேவர்களை அழைப்பார்கள்.

★ சித்தர்கள் வன மூலிகைகளை வளர்ப்பார்கள்.

★ தேன்போன்ற அருவி நீரானது, வானில் இருந்து விழுவதைப் போன்று வீழும்.

★ செந்நிற ஞாயிற்றின் தேர்க்காலும், குதிரையின் காலும் அருவி நீரில் வழுக்கும்.

★ சடையில் அழகிய பிறையைச் சூடியவன் சிவபெருமான்.

★ அந்தச் சிவபெருமான், குற்றாலநாதராக எழுந்தருளியிருக்கக் கூடிய குற்றாலமலை எங்கள் மலையே!

**மையக் கருத்து:-**

★ கவிஞர், குற்றாலமலையின் வளங்களைப் பாடியுள்ளார்.

**மோனைத் தொடை:-**

| சீர் மோனை | |
|---|---|
| ★ **வா**னரங்கள் - **வா**ன்கவிகள் | ★ **கா**னவர்கள் - **க**வனசித்தர் - **கா**யசித்தி |
| ★ **தே**னருவி - **தி**ரையெழும்பி - **தே**ர்க்காலும் | ★ **கூ**னலிளம் - **கு**ற்றாலத் |

**எதுகைத்தொடை:-**

| சீர் எதுகை | அடி எதுகை |
|---|---|
| ★ வா**ன**ரங்கள் - வா**ன்**கவிகள் ★ கா**ன**வர்கள் - வா**ன**வரை | ★ வா**ன**ரங்கள் கா**ன**வர்கள் |
| ★ தே**ன**ருவி - வா**னி**ன் | ★ தே**ன**ருவி கூ**ன**லிளம் |

**இயைபுத் தொடை:-**

★ ஒவ்வோர் அடியின் (கடைசிச் சொல்லில்) ஈற்றசையோ ஈற்றுச்சீரோ ஈற்றுச்சொல்லோ ஒன்றிவரத் தொடுப்பது இயைபுத் தொடை ஆகும்.

★ கொ**ஞ்சும்** - கெ**ஞ்சும்** ★ விளை**ப்பார்** - அழை**ப்பார்** ★ வ**ழுகும்** - ஒ**ழுகும்**

www.nammakalvi.in



## பழமொழிக்கேற்ற வாழ்க்கை நிகழ்வு எழுதுதல்

### யானைக்கும் அடிசறுக்கும்

**பழமொழி விளக்கம்**

★ ஒருவர் ஒரு துறையில் மிகச் சிறந்தவராகச் செயல்பட்டாலும் சில நேரங்களில், பிழை ஏற்பட வாய்ப்பு உண்டு.

**நிகழ்வு**

★ எங்கள் ஊரில் சோமு என்றொரு தாத்தா இருந்தார்.

★ அவர் பள்ளிக்கூடம் சென்று முறையாகப் படித்தவர் அல்ல. ஆனால், 1,330 திருக்குறளையும் சரியாகச் சொல்லக் கூடியவர்.

★ நாங்கள் சரியாக திருக்குறள் சொன்னால் எங்களுக்கு தேன் மிட்டாய் தருவார்.

★ ஒருமுறை நாங்கள் சோமு தாத்தாவிற்கு ஒரு போட்டி வைத்தோம்.

★ நாங்கள் கேட்ட எல்லாத் திருக்குறளையும் சரியாகச் சொன்னார்.

★ ஆனால், இறுதியாக 'யாகாவாராயினும்' எனத் தொடங்கும் திருக்குறளை மட்டும் தவறாகச் சொன்னார்.

★ நாங்கள் தவறைச் சுட்டிக் காட்டியும் அவர் திருத்திக் கொள்ளவில்லை.

★ இறுதியாக தாத்தா தான் தவறாகச் சொன்னதை உணர்ந்துக் கொண்டார்.

**நீதி**

★ ஒருவர் எந்த அளவிற்குச் சிறந்த நிலையில் இருந்தாலும், அவருக்கும் சில நேரங்களில் தடுமாற்றம் ஏற்படும்.

### தினை விதைத்தவன் தினை அறுப்பான், வினை விதைத்தவன் வினை அறுப்பான்

**பழமொழி விளக்கம்**

★ நன்மை செய்பவனுக்கு நல்லது நடக்கும். தீமை செய்பவனுக்குத் தீமையே விளையும்.

**நிகழ்வு**

★ ஒருநாள் நானும் என் நண்பனும், பள்ளி முடிந்து வீட்டிற்கு மிதிவண்டியில் சென்று கொண்டிருந்தோம்.

★ அப்பொழுது, எங்கள் வகுப்பில் படிக்கும் அமுதன் என்பவன் நாங்கள் சென்ற மிதிவண்டியின்மீது கல்லை எரிந்தான்.

★ நிலைதடுமாறி, நானும் என் நண்பனும் கீழே விழுந்தோம். எனக்கும் என் நண்பனுக்கும் பலமாக அடிபட்டது.

★ அமுதனின் குணமே இப்படிதான் என்று எங்களுக்குத் தெரியும். எனவே, நாங்கள் அவனிடம் எதுவும் கேட்கவில்லை.

★ அடிபட்ட காயத்தோடு மெதுவாக வீட்டிற்குச் சென்றோம்.

★ மறுநாள் பள்ளிக்கு வரும்போது, சாலையில் விபத்து அனைவரும் சுற்றி நின்று வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தனர்.

★ நானும் என் நண்பனும் சென்று பார்த்தோம். அங்கு அடிபட்டுக் கிடந்தான், அமுதன்.

★ நானும் என் நண்பனும் விரைவாக அவனை மருத்துவமனைக்கு அழைத்துச் சென்று சேர்த்துவிட்டு, பள்ளிக்குச் சென்று தகவல் சொன்னோம்.

★ பள்ளி தலைமையாசிரியர் என்னையும் என் நண்பனையும் பாராட்டினர்.

**நீதி**

★ அமுதன் எங்களுக்குத் தீமை செய்தான். அவனுக்குத் தீமையே விளைந்தது.

## எறும்பு ஊரக் கல்லும் தேயும்

**பழமொழி விளக்கம்**

★ கடினமான உழைப்பு இருந்தால், நாம் மிக உயர்ந்த நிலையை அடையலாம்.

**நிகழ்வு**

★ ஒரு மலை அடிவாரத்தில் விவசாயி ஒருவர் பயிர்த்தொழில் செய்துவந்தார்.

★ பயிர்த்தொழில் செய்ய போதுமான நீர் இல்லாததால், கிணறு தோண்ட முடிவெடுத்தார்.

★ பலரும் அவர் கிணறு தோண்ட தொடங்கியதைப் பார்த்துக் கேலி செய்தனர்.

★ ஆனால், அந்த விவசாயி எவருடைய கேலியையும் பொருட்படுத்தாமல் தன் வேலையைத் தொடர்ந்தார்.

★ இறுதியாக அவரின் முயற்சிக்குப் பலன் கிடைத்தது. 300 அடி ஆழத்தில் சுவையான நீர் வந்தது.

★ விவசாயி அந்த நீரைக் கொண்டு, விவசாயம் செய்து அமோகமான விளைச்சலைப் பெற்றார்.

**நீதி**

★ கடினமான உழைப்பு இருந்தால். நிச்சயம் வெற்றி கிடைக்கும்.

## ஊழி பெயரினும் தாம் பெயரார்

**பழமொழி விளக்கம்**

★ எத்தகைய கடினமான சூழல் ஏற்பட்டாலும், தான் கொண்ட கொள்கையில் உறுதியாக இருப்பது.

**நிகழ்வு**

★ மதுரையில் சகாயம் என்றொரு நேர்மையான மாவட்ட ஆட்சியர் இருந்தார்.

★ அவர், எந்த நிலையிலும் நேர்மையையே தன் உயிர் மூச்சாகக் கொண்டு செயல்பட்டார்.

★ எக்காரணம் கொண்டும் பணத்திற்கோ, பிற வசதிகளுக்கோ ஆசைப்பட்டு, தவறான செயல்களில் ஈடுபட மாட்டார்.

★ இதனால், அவர் பல்வேறுவகையில், துன்பங்களை அனுபவித்தார்.

★ வேலையைவிட்டு நீக்கம், பணியிட மாறுதல் என்று தொடர்ந்து பல இன்னல்களைச் சந்தித்தார்.

★ அவர் நேர்மையாக இருப்பதால், சலுகைகளை அனுபவிக்க இயலாத கெட்டவர்கள் அவரைக் கொலை செய்யவும் முயற்சி செய்தனர்.

★ ஆனால், சகாயம் அவர்கள், என் உயிரே போனாலும் நேர்மை என்ற கொள்கையைக் கைவிட மாட்டேன் என்று உறுதியாக இருந்தார்.

**நீதி**

★ தான் கொண்ட கொள்கையில் உறுதியாக இருந்த சகாயம் அவர்கள், பல இளைஞர்களுக்கு முன்மாதிரியாகத் திகழ்கின்றார்.

## நெடுவினா

**1. கவிதையின் நடையைக் கட்டமைக்கும் அழகியல் கூறுகளை எடுத்துக்காட்டி விளக்குக.**

**நடையியல்**

★ கவிதையின் இயங்காற்றல்தான் (Powerful Telling Style) 'நடை' எனப்படும்.

★ அதாவது கவிதையைச் சொல்லுகின்ற ஆற்றலும் அழகும்தான் நடையியல் ஆகும்.

★ ஒரு மொழியின் தனிச்சிறப்புக் கூறுகளையும் அதைக் கையாளும் முறையும்தான் அம் மொழிக் கவிதையின் உந்து சக்தியாக இருக்கின்றது.

★ கவிதை நடையியலுக்கு ஒலிக்கோலங்கள், சொற்புலம், தொடரியல் போக்குகள் போன்றவை மிக முக்கியமானவை.

★ "நடைபெற்றியலும் நடைநவின்றொழுகும்" என்ற சொல் தொடர்களைத் தொல்காப்பியம் பதிவு செய்கின்றது.

**அழகியல்**

★ அழகியல் என்பது இரசனை என்றே வழங்கப்படுகின்றது.

★ கவிதை சொல்லுகின்ற முறையும் கவிதையின் உணர்ச்சியை கற்பவரின் உள்ளத்தில் பாய்ச்சும் விதமும் இதயம் கனியும் வகையில் வெளிப்படுத்துவதும் தமிழ்க் கவிஞர்களின் அழகியல் இயல்பாகும்.

★ அழகியலை உருவாக்குவதற்கு அடித்தளம் அமைத்துக் கொடுத்தவர் தொல்காப்பியர்.

★ நடை அழகியலைக் கட்டமைக்கும் கூறுகள் மூன்று ஆகும்

★ ஒலிக்கோலங்கள் ★ சொற்புலம் ★ தொடரியல் போக்குகள்

**ஒலிக்கோலங்கள்**

**மொழியின் தோற்றம்**

★ எந்தத் தொன்மையான மொழியாக இருந்தாலும் அது சமிக்ஞையிலிருந்தும் இசையிலிருந்தும்தான் தோன்றின.

**கவிதையின் தோற்றம்**

★ ஒரு மொழிசார்ந்த கவிதை இசையோடும் இசைக்கருவியோடும்தான் பிறக்கின்றது.

**ஒலிப்பின்னல்**

★ கவிதையின் ஓசையும் பொருளும் இணைந்து ஒரு கலைவடிவம் கொள்கின்றன.

★ இதை அந்தக் கவிதையின் ஒலிப்பின்னல் (Sound Texture) என்கின்றோம்.

**எடுத்துக்காட்டுப் பாடல்கள் - வல்லின ஒலியில் உணர்ச்சிப் பாடல்**

➔ "கற்க கசடற கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக"

**நெடில் எழுத்து ஒலிகள் பாடல்**

➔ "படாஅம் ஈத்த கெடாஅ நல்லிசைக்
கடாஅ யானைக் கலிமான் பேக"

★ இப்பாடலில் நெடில் ஒலிகள், குறிப்பாக உயிர் ஒலிகள் திரும்பத் திரும்ப வந்துள்ளன.

**சொல்லும் ஒலியும் திரும்பவரல் பாடல்**

➔ "நுந்தை தந்தைக்கு இவன்தந்தை தந்தை"

★ இச் செய்யுளில் சொல்லும் அதன் ஒலியும் திரும்ப வந்துள்ளது

★ அவற்றோடு சொல்விளையாட்டும் (உன் அப்பனின் அப்பனுக்கு இவனுடைய அப்பனுக்கு அப்பன்) வந்துள்ளது சிறப்புக்குரியது.

**சொற்புலம்**

★ சொல்லில்தான் உணர்வும் பொருளும் கலையும் பண்பாடும் அரசியலும் பொதிந்துள்ளன.

★ சொல்வளம் என்பது ஒருபொருள் குறித்துவரும் பல சொல்லாய் பல பொருள் குறித்த ஒரு சொல்லாய் வரும்.

★ பல வகையான துறைகளுக்கும் சூழலுக்கும் புனைவுகளுக்கும் உரிய உணர்வும் தெளிவும் கொண்டு செழிப்பான தளத்தில் விளைந்த சொற்கள் சங்க இலக்கியத்தில் அதிகம் உண்டு.

➔ 1. காங்கேயம் காளை 2. நெல்லூர் காளை 3. பொன்வார் காளை 4. தீவனக் காளை இது போன்ற 87 காளை மாடுகளின் வகைகள்

**தமிழ்ச்சொல் வளம்**

★ சொல்வளம் பண்பாட்டின் அடையாளமாக உள்ளது.

★ சொல்வளம் தனிச்சொற்களாக நிறைந்தோ, அல்லது ஒன்றிற்கு மேற்பட்டும் பிரியாதது.

★ கவவுக்கை நெகிழாமல் அதாவது கைக்குள் வைத்த கை பிரியாமல் முயங்கிக் கிடப்பதைப் போல் சொல்லுக்குள் சொல் பிரியாமல் இருப்பதைக் குறிக்கும்.

**தொடரியல் போக்குகள்.**

★ ஒலிக்கோலமும் சொற்புலமும் தமிழ் நிலத்தின் ஏர் எனில் சொற்றொடர் அதன் பாத்தியாகும்.

★ உரைநடையிலும் பேச்சிலும் எழுவாய்+செயப்படுபொருள்+பயனிலை என்றே இயல்பாக மொழிநடை அமையும்.

★ ஆனால், சங்க இலக்கியத்தில் இது மாறி (பிறழ்ந்து) மறுதலைத் தொடராக வருகின்றது.

**முடிவுரை**

★ நடையியல் என்பது சொல்வடிவமைப்புப் பகுதிகளின் முழுமையினைச் சார்ந்தே அமைகின்றது.

★ தமிழ் அழகியல் கட்டமைப்பிற்கு சங்க இலக்கியமே முதன்மை ஆதாரம்.

**2. பாரதியின் கடிதம் வாயிலாக நீங்கள் அறிந்துகொண்ட மொழிப்பற்று, சமூகப்பற்று ஆகியவற்றை விவரிக்க.**

**பாரதியின் கடித இலக்கியம் மொழிப் பற்றையும் சமூக அக்கறையையும் வெளிப்படுத்தும் தன்மையை இக்கட்டுரையில் நாம் காணவிருக்கின்றோம்**

| பாரதி யார்? | பரலி சு. நெல்லையப்பர் யார்? |
|---|---|
| ➔ இந்திய விடுதலையின் விடிவெள்ளி, தமிழ்க் கவிதை உலகின் அக்கினிப் பிழம்பு, புதுக்கவிதையின் தந்தை, பெண்மை போற்றும் பெருந்தகை மகாகவி, | ➔ விடுதலைப் போராட்ட வீரர். கவிஞர், எழுத்தாளர், இதழாளர் பாரதியின் படைப்புகளைப் பதிப்பித்தவர், பாரதியின் இதழ்களில் துணையாசிரியர் பாரதியின் அருமைத் தம்பி |

**பாரதி தன் தம்பியிடம் மொழிப்பற்றையும் சமூகப்பற்றையும் வெளிப்படுத்தும் தன்மை**

| பாரதியாரின் மொழிப்பற்று | பாரதியாரின் சமூகப் பற்று |
|---|---|
| தமிழ் தமிழ் தமிழ் என்று எப்போதும் தமிழ் வளர்ப்பதையே கடமையாகக் கொள்ள வேண்டும் | தமிழ் நாட்டில் நோய்கள் தீர வேண்டும். நோயின்றி மக்கள் நலமுடன் வாழ வேண்டும். |

www.nammakalvi.in



| | |
|---|---|
| இந்தி மராட்டி போன்ற வட நாட்டு மொழிகள் பெற்ற அற்புதமான புதுமை தமிழ்மொழியிலும் ஏற்பட வேண்டும். | 'ஆணும் பெண்ணும் ஒருயிரின் இரண்டு தலைகள்' எனவும், அவை ஒன்றிலொன்று தாழ்ந்ததில்லை, என்றெழுத வேண்டும். |
| தமிழில் புதிய செய்தி புதிய புதிய சிந்தனை, புதிய உண்மை புதிய புதிய இன்பம் தமிழில் உருவாகிக்கொண்டே போக வேண்டும். | 'பெண்ணைத் தாழ்மை செய்தோன் கண்ணைக் குத்திக்கொண்டான்' பெண்ணை அடைத்தவன் தன் கண்ணை அடைத்தான் என்று எழுத வேண்டும் |
| 'தமிழ்நாடு வாழ்க' என்று எழுத வேண்டும். | தொழில்கள் தொழில்கள் எங்கும் தொழில்கள் பெருகி தமிழ்நாடு வளர வேண்டும் |
| தமிழ் நாட்டில் வீதிதோறும் தமிழ்ப் பள்ளிக்கூடங்கள் அதிகம் பெருக வேண்டும் | வியாபாரம் பெருகி யந்திரங்கள் உற்பத்தி பெருகி தமிழ்நாடு வளர்ச்சி பெற வேண்டும் |
| தமிழ்ப் பள்ளிக்கூடங்களிலே நவீன கலைகளெல்லாம் பயிற்சி பெற்று வளர்க என்றெழுத வேண்டும் | இசை, சிற்பம், யந்திரநூல், பூமிநூல், வானநூல், இயற்கை நூல் போன்றவை தமிழ்நாட்டில் வளர வேண்டும் |

**முடிவுரை**

★ கடிதத்தின் மூலமாகத் தன் சமூக உணர்வுகளை ஆழமாகப் பதித்தவர் பாரதி என்பதை உணர்ந்தேன்.

**3. தமிழின் சீரிளமைத் திறம் வியந்து கவிஞர் சிற்பி பாலசுப்பிரமணியம் கூறுவனவற்றைத் தொகுத்து எழுதுக.**

**தமிழின் சிறப்பை உணர்த்தும் இயற்கை அழகியல் வெளிப்பாடு**

➔ "செம்பரிதி (சிவந்த சூரியன்) மலைமேட்டில் தலையைச் சாய்ப்பான்.
சிவந்த சூரியன் மாலை நேரத்தில் மலையுச்சியில் சென்று மெல்ல மெல்ல மறைவான்."

★ "செந்நிறத்துப் பூக்காடாம் வானமெல்லாம்" (உவமை)

★ அவ்வாறு செக்கச் சிவந்த சூரியனின் மாலைநேரக் கதிர்கள்(கைகள்) பட்டதால் காடெல்லாம் சிவந்து சிவப்பு நிறத்துப் பூங்கா போல் மாறிவிட்டது.

★ தம்கைகள் அதனைப்போல் சிவந்து நோகத் தாமுழைக்கும் தொழிளாளர்

★ சூரியனின் சிவந்த கதிர்கள்போல் தொழிலாளர்களின் கைகள் (உவமேயம்)

★ சூரியனின் கைகள் சிவந்ததுபோல் காலைமுதல் மாலைவரை உழைத்த தொழிலாளர்களின் கைகளும் சிவந்து உள்ளது என்று உவமைப்படுத்துகின்றார்

**உவமையணி**

★ சிவந்த பூக்காட்டைப் போல் உள்ளது உழைக்கும் தொழிலாளர்களின் கை என உவமையணி தோன்ற பாடியுள்ளார்.

★ தொழிலாளர்களின் வியர்வை முத்துகள் தமிழை வியந்து பாடும்

★ மாலை நேரத் தொழிளாலர்களின் கைகள் சிவந்தும் வியர்வை முத்துகள் வெள்ளிமணிபோல் உடலெங்கும் முத்துமுத்தாய்ப் பூத்திருக்கும்.

★ பூத்திருக்கும் வெள்ளை முத்துக்கள் தமிழின் புகழை வியந்துபாடும்.

★ "இத்தகைய சிறப்பு வாய்ந்த அருமையான செந்தமிழே உன்னைவிட எனக்கு உற்ற துணை வேறு உண்டா?"

★ என அழகியல் தன்மையோடு தமிழின் பெருமையைக் கூறுகின்றார் கவிஞர் சிற்பி.

**காட்சி நயத்தின் வெளிப்பாடு**

★ செங்கதிர்களால் காடு செந்நிறத்துப் பூக்காடாகவும்

★ செந்நிறத்துப் பூக்காடு தொழிலாளர்களின் கைகளாகவும்

★ தொழிலாளர்களின் வியர்வை வெள்ளி முத்துகளாகவும்

★ வெள்ளி முத்துகள் தமிழ்ப்பாடும் கவிஞர்களாகவும் அழகாகக் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

**மீண்டும் அந்தப் பழமை நலம்**

★ மூண்டுவரும் எங்கள் கவிதைக்கு உணவாய் முத்தமிழே நீ இருக்கின்றாய்!

★ முற்காலத்தில் முச்சங்கம் வைத்து தமிழ் வளர்த்தனர் பாண்டிய மன்னர்

★ உன் ஆட்சியில் தமிழ் ஆல் போல் தழைத்து அருகுபோல் வேரோடி வளர்ந்தது.

★ பாரிமுதல் வள்ளல்களை ஈன்று தந்தாய்

★ கடையேழு வள்ளல்களான பாரி, ஆய், எழினி, நள்ளி, மலயன், பேகன், ஓரி ஆகியோர் தமிழ் வளர்த்தனர்.

★ மெய்ச் சிலிர்க்கத் தமிழ்க்குயிலே! கூவி வா! மீண்டும் அந்தப் பழமையான மரபு இலக்கியங்களுடனும் மரபுக்கவிஞர்களுடனும் வா! வா!

★ சிங்கம்போல் தென் தமிழே சீறி வா! வா! என்று கூக்குரல் இடுகின்றார் கவிஞர் சிற்பி பாலசுப்பிரமணியம்.

**4. 'நெகிழி தவிர்த்து நிலத்தை நிமிர்த்து' என்னும் தலைப்பில் சுற்றுச்சூழல் ஆர்வலர் பசுமைதாசனாருடன் நீங்கள் நடத்திய கற்பனைக் கலந்துரையாடல் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.**

**நெகிழி தவிர்த்து நிலத்தை நிமிர்த்து**

★ அனைவருக்கும் என் பணிவான முதல் வணக்கம்!

➔ கேள்வி - ஐயா நெகிழி பற்றி உங்கள் கருத்து என்ன?

**பசுமைதாசனார்**

★ என் நெஞ்சில் தைத்த முள் நெகிழி ஷஷபகுத்தறிவும் பட்டறிவும் பண்பறிவும் கொண்டு, பழகுதற்கினிய பாரத மக்களே! இன்றைய நாள் நம் நெஞ்சில் தைத்த முள்ளாக இருப்பது நெகிழி! இந்த முள் நம் நெஞ்சிலிருந்து என்று நீங்கும் என உள்ளம் ஓலமிட்டுக் கொண்டே இருக்கின்றது.

➔ கேள்வி - இந்திய நாடு நெகிழி பற்றி விழிப்புணர்வு பெற்றுள்ளதா?

**பசுமைதாசனார்**

★ இந்தியாவே நெகிழி ஒழிப்பிற்காகக் கூக்குரலிட்டுக்கொண்டிருக்கின்றது. பலகோடிகளைச் செலவழித்து நெகிழிகளை மறுசுழற்சிக்குட்படுத்துகின்றது. பல நூறு நிறுவனங்களுக்குத் தடைவிதித்து பல விழிப்புணர்வுகளைக் ஏற்படுத்துகின்றது.

➔ கேள்வி - இந்திய மண்ணில் நெகிழிக்கு எதிராக உங்களைப் போராடத்தூண்டியது எது ?

**பசுமைதாசனார்**

★ நான் கண்ட விளம்பரங்களும் விழிப்புணர்வு பொம்மலாட்டமும்

➔ கேள்வி - விளக்கமாகச் சொல்லுங்கள் ஐயா!

**பசுமைதாசனார்**

★ எல்லாம் நெகிழியில் அடைக்கப்பட்டுவிட்டன. மனித உயிரும் அப்படித்தான் அடைக்கப்படும் என்ற உலகத் தத்துவத்தையும்

★ பசுமாடுகளின் வயிற்றில் பத்துக் கிலோ( நெகிழிப்பைகள்) பிளாஸ்டிக் பொருட்கள் எடுத்ததும்.

★ பச்சிளங்குழந்தைகளின் பால்புட்டியால் புற்று நோய் வந்ததும்.

★ பள்ளிச்செல்லும் குழந்தைகளின் தண்ணீர் புட்டியால் ஆஸ்துமா வந்ததும் அனைத்திற்கும் காரணம் நெகிழி! நெகிழி!

★ அடிப்படைப் பொருள்கள் அனைத்தும் நெகிழியில் செய்யப்பட்டு நெகிழியில் அடைக்கப்பட்டும் அதை நாம் நெகிழ்ந்துண்ணும் அவலத்தையும்.

★ "என்று தணியும் நம் இயற்கையின் தாகம்
என்று ஒழியும் இந்த நெகிழியின் மோகம்!" என்னும் அருமையான பொம்மலாட்டப் பாடலின் மூலம் பெரும் விழிப்பை ஏற்படுத்தியது.

★ இயற்கைக்கும் மனிதனுக்கும் விலங்குகளுக்கும் பெரும் அறைகூவலை விடுத்திருக்கின்றது இந்த நெகிழி!

**பொதுமக்களுக்கும் விழிப்புணர்வூட்டும் அழகான ஓர் பொம்மலாட்டம்.**

★ இராமகிருஷ்ணா மிஷன் அமைப்பினர் நம் பள்ளி வளாகத்தில் சிறப்பாகச் செய்தனர்.

★ அவர்களை உங்கள் சார்பாகவும் என் சார்பாகவும் மனதாரப் பாராட்டுகின்றேன்.

➔ கேள்வி - பொம்மலாட்டத்தில் உங்கள் மனம் கவர்ந்தது எது?

**பசுமைதாசனார்**

★ நெகிழிக்கு எதிரான அறைகூவல் விடுத்த பொம்மலாட்டப் பாடல்

➔ கேள்வி - பாடமுடியுமா?

**பசுமைதாசனார் - (பாடுகின்றார்)**

**மண்ணுக்குள் மக்காது எரித்தாலும் எரியாது !**
**மண்ணையே மலடாக்கும் ஓசோனை ஓட்டையாக்கும்!**
**அனைத்தையும் அழித்துவிட்டு அதுமட்டும் நிலைத்திருக்கும் - நெகிழி**
**அரக்கனை ஒழிக்க அவதாரம் எடுப்போம் !**

➔ கேள்வியாளர் - நெகிழே! எம் உயிருள்ளவரை உன்னைத் தொடமாட்டோம்!

➔ நெகிழே! உன் உயிர் எங்கிருந்தாலும் அதை விடமாட்டோம்! நெகிழை ஒழிப்போம் நெஞ்சம் உயர்த்துவோம்! நன்றி ஐயா!

**5. நெடுநல்வாடையில் நக்கீரர் காட்டும் மழைக்கால வருணனையைச் சொல்லில் வடிக்க.**

**நெடுநல்வாடை காட்டும் மழைக்கால வருணனை**

**முன்னுரை**

★ ஓர் ஆண்டை ஆறுபருவங்களாகப் பிரித்து வாழ்ந்தவர் தமிழர். ஐப்பசியிலும் கார்த்திகையிலும் அடைமழை என்றனர். அந்த அடைமழைக்காலத்தில் முல்லை நில மக்களின் இயல்பு வாழ்க்கையில் ஏற்படும் மாற்றத்தை இக்கட்டுரையில் காண்போம்.

**நெடு நல்வாடைப் பாடல்**

➔ "வையகம் பனிப்ப வலனேர்பு வளைஇப்
பொய்யா வானம் புதுப்பெயல் பொழிந்தென"

**குளிர்கால நள்ளிரவு**

★ மேகம்தான் தங்கியிருந்த மலையை வலப்பக்கமாகச் சூழ்ந்து எழுந்தது.

★ உலகமே குளிரும்படி புதிய மழையைப் பூமியெங்கும் பொழிய வைத்தது.

★ தாழ்வான பகுதிகளில் வெள்ளம் பெருகியது. இதனைக் கோவலர் வெறுத்தனர்.

★ எருமைகள், பசுக்கள், ஆடுகள் போன்றவற்றை மேடான நிலைத்தில் மேய விட்டனர்.

www.nammakalvi.in



**கோவலர்களின் துன்பம்**

★ வழக்கமாக தாம் பழகிய இடத்தை விட்டுப் பிரிந்து வேறு இடத்திற்குப் பெயர்ந்தனர்.

★ பிரிவுத் துன்பம் கோவலர்களை வாட்டியது.

★ கோவலர்களின் தலையில் சூடியிருந்த நீண்ட இதழ்களுடைய காந்தள் மலர் கசங்கியது.

★ கோவலர்கள் ஒன்றுசேர்ந்து கொள்ளி நெருப்பால் கைகளுக்குச் சூடேற்றினர்.

★ கைகள் சூடேறினாலும் அவர்களின் பற்கள் நடுங்கின.

**குளிரினால் விலங்குகளுக்கு ஏற்பட்ட துன்பம்.**

★ விலங்குகள் மேய்ச்சலை மறந்தன

★ மரங்களிலிருந்து பறவைகள் வீழ்ந்தன

★ குரங்குகள் குளிரால் நடுங்கின

★ பசுக்கள் பால் குடிக்க வந்த கன்றுகளைத் தவிர்த்தன.

**முடிவுரை**

★ மழைக்காலக் காட்சியை நெடுநல்வாடை அழகாகப் படம்பிடித்துக் காட்டுகின்றது.

★ சங்க இலக்கியத்தின் சிறப்பும் காட்சிப்படுத்திய பாங்கும் இலக்கியம் படைக்க இயம்புகின்றது.

**6. பொறுப்புணர்ச்சியின்றி இருந்த ஊரைத் தன் பொறுப்புணர்வால் மாற்றிய மருதனின் பண்பு நலத்தை விவரிக்க.**

**முன்னுரை**

★ தஞ்சை சிறுகதைத் தொகுப்பின் மைல்கல் இந்த 'முதல்கல்'

★ பூனைக்கு யார் மணி கட்டுவது? என்றில்லாமல் நானே புலியாய்ப் பாய்ந்து பூவுலகில் புதுமையைப் படைப்பேன் என்னும் இளைஞனின் கதை.

**மருதனின் மன வருத்தம்**

★ வளவனாற்றங்கரையில் நின்று வடக்கே பார்த்த மருதனுக்கு மனம் 'திக்'என்றது.

★ இன்னும் ஒரு நாள் மூழ்கினால்போதும் பயிர் முழுவதும் அழுகிவிடும் அபாயம். மறுபடி புதிதாக நாற்றுவிட்டு புதிய சாகுபடிதான்.

★ இந்தப் பயிருக்கே, அங்கே இங்கே பிடுங்கி ஏகப்பட்ட அல்லாடல்கள் அளவுக்கு மீறிய செலவுகள்.

★ மறுபடியும் சாகுபடியா? மருதனின் மனம் குமுறியது. காரணம் என்னவென ஆயிரம் சிந்தனைகள் ஓடியது.

★ ஊரைச் சுற்றி 3 கிலோ மீட்டர் தூரத்திற்கும், நெய்வேலி காட்டாமணக்குச் செடியால் மண்டிக்கிடக்கும் வடிகால் மதகை - கீழ்க்குமிழி - வடிவாய்க்கால் போன்றவைதான் என்பதை உணர்ந்தான்.

★ இந்த மலைப்பிற்கும் ஒரு சில நிமிட யோசனைக்குப் பிறகு வழி தெரிந்தது, உற்சாகமாக நடக்கத் தொடங்கினான்.

**ஊர்மக்களின் பொறுப்பற்ற தன்மை - மாரியப்பனின் மறுப்பு**

★ வடிவாய்க்காலில் மீன்பிடி வலை போட்டிருந்த மாரியப்பனிடம் மருதன் உதவி கேட்டான்.

★ "ஏதாவது நடக்கறக் காரியமா சொல்லு!" என்று அலட்சியப்படுத்தினான் மாரியப்பன்.

**காளியப்பனின் கழட்டல்**

★ ஊரில் பெரிய மிராசுதாரர் காளியப்பனிடம் மருதன் உதவி கேட்டான் .

★ சற்றே யோசித்த பெரியவர் 'இவன் சொல்லுவதைக் கேட்டால் நமக்குத்தான் ஆயிரம் இரண்டாயிரம் செலவு' என்றெண்ணினார்.

★ வெளியூர் போவதாகச் சொல்லி நாசுக்காகத் தன்னை கழட்டிக்கொண்டார்.

**பிரேம்குமாரின் பிதற்றல் (அ) நாகூர் பிச்சையின் நழுவல்**

★ கிராமத்தின் முதல்பட்டதாரியான பிரேம் குமார் என்னும் நாகூர்பிச்சையிடம் உதவி கேட்டான் மருதன்.

★ "அண்ணே இது ஒரு பெரிய வேலையா? இதை செய்யத்தான் பி டபள்யூ டி டிப்பார்ட்மெண்ட் இருக்கு! நாளைக்கு இஞ்சினரைப் பார்த்து நான் மனுகொடுக்கிறேன்" என்று நழுவி விட்டான்.

**தூங்கச்சென்றான் - துவளவில்லை**

★ ஏமாற்றத்தில் உடலும் மனமும் சோர்வாகவும் நடைபிணமாக நகர்ந்து வந்தான்.

★ அன்றிரவே அனைத்தையும் அறிந்த அல்லி ஆறுதல்மொழி கூறினாள்.

**களமிறங்கிய காளை**

★ தளும்புகின்ற வடிவாய்க்காலில் ஜில்லென்ற இடுப்பளவு தண்ணீரில் தன்னந்தனியாக மண்டிக்கிடந்த காட்டாமணக்குச் செடிகளைச் சரக் சரக் என்று அறுத்து மேலே எறிந்து கொண்டிருந்தான் மருதன்.

**அள்ளிமுடித்தாள் அல்லி**

★ வைகறைப் பொழுதில் கணவனைத் தேடினாள் அல்லி. மருதன் அருகில் இல்லை.

★ அல்லியின் கணக்கு தப்பவில்லை வாய்க்கால் களத்தில் இருந்தான் மருதன். அள்ளி முடித்தால் கூந்தலை கணவனைக் கண்டவுடனே களத்தில் இறங்கினாள்

**மாரியின் மனம் மாறியது**

★ வலைபோட்டுக்கொண்டே நடந்ததையெல்லாம் கவனித்த மாரிக்கு என்ன தோன்றியதோ என்னவோ? வலையை மடக்கி கரையில் போட்டான்.

★ 'நாசமா போன செடிங்க' என்று முணுமுணுத்தபடி வேட்டியை அவிழ்த்து முண்டாசு கட்டியபடி வாய்க்காலுக்குள் இறங்கிவிட்டான் மாரி.

**ஊர்ப்பயணம் தவிர்த்து ஊருக்குழைத்த பெரியவர்**

★ மருதன், அல்லி, மாரி மூவரும் மும்மரமாய் செடிகளை அறுத்தபடி இருந்ததைக் கண்டு அனிச்சையாக வண்டியிலிருந்து குதித்தார் பெரியவர்.

★ "வண்டியை வீட்டுக்குத் திருப்பிப் போடா எனக்கு இங்கக் கொஞ்சம் வேலை இருக்கு" என்று கூறிக்கொண்டே உடைகளைக் கழட்டிவிட்டார்.

★ துண்டைக் கட்டிக்கொண்டு வாய்க்காலில் துள்ளிகுதித்தார் பெரியவர்.

**ஊர்கூடி தேர் இழுத்தது**

★ இந்தச் செய்தி வண்டிக்காரன் மூலம் ஊருக்குள் பரவியது.

★ டீக்கடை, மாரியம்மன் கோவிலடி, என்று வெட்டிக்கதை பேசுபவர்களெல்லாம் உறுத்தல் தாங்காமல் வாய்க்காலில் கூடிவிட்டனர்.

**மகிழ்ச்சியில் மருதன்**

★ இனி மருதன் பணி இலகுவாக முடிந்திருக்கும் மருதன் மகிழ்ந்திருப்பான்.

★ மருதனின் பொறுப்புணர்வு ஊரையே மாற்றியது.

**முடிவுரை**

★ நம் மக்கள் நல்லவர்கள்தாம் ஆனால், நாம் முதலில் செய்ய வேண்டும் என்னும் தன்முனைப்பு இல்லாததால் முன்னேறாமல் வாழ்கின்றனர் என்பதை முதல்கல் மூலம் அறிந்தோம்.

www.nammakalvi.in



**7. குடும்பம் என்னும் சிறிய அமைப்பிலிருந்தே மனித சமூகம் என்னும் பரந்த அமைப்பு கட்டமைக்கப்படுகிறது - எவ்வாறு? விளக்குக.**

**முன்னுரை**

★ குடும்பம் என்பது சிறிய அமைப்பு.

★ குடும்பத்திலிருந்தே மனித சமூகம் என்னும் பரந்த அமைப்பு கட்டமைக்கப்படுகிறது.

★ சமூகத்தின் ஓர் அலகாக விளங்குவது குடும்பம் ஆகும்.

**சமூகத்தின் படிநிலை**

★ மனித சமூகம் குடும்பம் என்னும் அமைப்பில் தொடங்குகிறது.

★ குலம், கூட்டம், பெருங்குழு, சமூகம் என்ற அமைப்பு வரை விரிவு பெறுகிறது.

★ எனவே, குடும்பமே மனித சமூகத்தின் அடிப்படையாகும்.

**திருமணம்**

★ குடும்ப அமைப்பு ஏற்படுவதற்கு அடிப்படை திருமணமே.

★ குடும்பம், திருமணம் இரண்டும் ஒன்றையொன்று சார்ந்து செயல்படுகின்றன.

★ 'குடும்பு' என்னும் சொல்லுக்கு 'கூடி வாழுதல்' என்று பொருள்.

**மணந்தகம்**

★ கணவனும் மனைவியும் சேர்ந்து வாழக் கூடிய இடம் மணந்தகம்.

★ முதல் குழந்தை பிறக்கும் வரை உள்ள காலகட்டத்தை இந்நிலை குறிக்கிறது.

★ தனிக்குடும்ப உருவாக்கத்தின் தொடக்க நிலையாக இது அமைகிறது.

**தாய்வழிக் குடும்பம்**

★ தாய்வழிக் குடும்பத்தில், பெண்களே குலத் தொடர்ச்சிக்கு உரியவர்கள்.

★ எனவே, பெண் குழந்தைகள் பிறப்பதை அனைவரும் விரும்பினர்.

★ தாய்வழி முறையில் குடும்பத்தின் சொத்து பெண்களுக்குச் சென்று சேர்ந்தது.

**தனிக்குடும்பம்**

★ தாய், தந்தை, குழந்தை மூவரும் உள்ள குடும்பம் தனிக்குடும்பம் ஆகும்.

★ தனிக்குடும்பம் தோன்றுவதற்கு முந்தைய நிலை தொடக்கநிலைக் குடும்பங்கள் ஆகும்.

★ தொடக்கநிலைக் குடும்பங்கள் பற்றிச் சங்க இலக்கியங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**விரிந்த குடும்பம்**

★ சங்க காலத்தில் தனிக்குடும்ப அமைப்பு விரிவு பெற்றது.

★ கணவன், மனைவியுடன் ஒருவரின் தந்தையும் உடன் வாழ்ந்தனர்.

★ இத்தகைய குடும்பமுறை 'விரிந்த குடும்பமுறை' எனப்படுகிறது.

**இல்லற வாழ்வில் பயன்**

★ கணவனும் மனைவியும் இணைந்திருந்து அறச் செயல்களில் ஈடுபட்டனர்.

★ அன்புமிக்க சுற்றத்தோடு சேர்ந்து வாழ்ந்தனர்.

★ இல்லற வாழ்வில் கணவனும் மனைவியும் மனையறம் காத்தனர்.

★ மனையறம் காத்தலே இல்வாழ்வின் பயனாக கருதினர்.

**முடிவுரை**

★ சங்ககாலச் சமூகம், குடும்பம் என்ற அமைப்பை அடிப்படை அலகாகக் கொண்டிருந்தது.

★ இன்றைய சமூக அமைப்பும் கூட்டுக் குடும்பம், தனிக்குடும்பம் என்ற அலகுகளைக் கொண்டதாக இருக்கின்றது.

★ இக்குடும்ப அமைப்பு முறை தமிழ்ச் சமூகத்தின் அடையாளமாகும்.

**8. பண்பின் படிமமாகப் படைக்கப்பட்ட இராமன், பிற உயிர்களுடன் கொண்டிருந்த உறவு நிலையைப் பாடப்பகுதி வழி நிறுவுக.**

**முன்னுரை**

★ கம்பர் தன் காவியத்தில் இராமனைப் பண்பின் படிமமாகப் படைத்துள்ளார்.

★ இராமன், அனைத்து உயிர்களிடத்தும் எல்லையற்ற அன்பு கொண்டவனாகத் திகழ்கிறான்.

★ இராமன் பிற உயிர்களுடன் கொண்டிருந்த உறவு நிலையை இங்குக் காண்போம்.

**வேடுவர் தலைவனுடன் கொண்ட உறவு**

★ வேடுவர் தலைவன் குகன்.

★ இராமன், கங்கையைக் கடக்க குகன் உதவுகிறான்.

★ குகன், இராமனிடம் அளவுக் கடந்த அன்பு கொண்டிருந்தான்.

★ இராமன் இளவரசனாக இருந்தாலும், வேடனான குகனைத் தன் உடன்பிறப்பாக ஏற்றுக் கொண்டான்.

★ குகனைத் தன் உயிருக்கு இணையானவன் என்கிறான், இராமன்.

➔ "என்உயிர் அனையாய் நீ
இளவல் உன் இளையான்இந்"

**சடாயுவைத் தந்தையாக ஏற்றல்**

★ இராவணன் சீதையைச் சிறையெடுத்துச் செல்கிறான்.

★ சடாயு என்னும் கழுகு வேந்தன் இராவணனைத் தடுத்துச் சண்டையிட்டான்.

★ சண்டையில் காயப்பட்டு சடாயு இறந்து போகிறான்.

★ சடாயு, இராமனின் தந்தையான தசரதனின் நண்பன்.

★ எனவே, சடாயுவையும் தன் தந்தையாக எண்ணி, மகன் நிலையில் அவனுக்குரிய இறுதிச் சடங்குகளைச் செய்கிறான்.

**சவரியைத் தாயாக ஏற்றல்**

★ இராமனிடம் மிகுந்த அன்பும் பக்தியும் கொண்டிருந்தவள், சவரி.

★ இராமன் சீதையைத் தேடிச் சென்றபோது, சுக்ரீவனுடன் நட்புக் கொள்ள செய்தவள், சவரி.

★ இராமன், சவரியிடம் தாயிடம் காட்டும் அன்பைக் காட்டினாள்.

★ இராமனுக்கும் இலக்குவனுக்கும் விருந்தளித்து வழியனுப்பினாள், சவரி.

➔ "வேண்டிய கொணர்ந்து நல்க
விருந்து செய்து இருந்த வேலை"

**வானரத் தலைவன் சுக்ரீவன்**

★ சீதையைத் தேடிவரும் இராமன், கிட்கிந்தையில் வானரத் தலைவன் சுக்ரீவனைக் காண்கிறான்.

★ சுக்ரீவன், இராமன் சீதையை மீட்டுவருவதற்குப் பெரும் உதவி செய்கிறான்.

★ இராமன், சுக்ரீவனைத் தன் உயிர் நண்பனாக ஏற்றுக் கொள்கிறான்.

➔ "சுற்றம் உன் சுற்றம் நீ என்

www.nammakalvi.in



இன் உயிர்த் துணைவன் என்றான்.”

**வீடணனை உடன்பிறந்தவனாகக் கொளல்**

★ சீதையைக் கவர்ந்துச் சென்ற இராவணனின் தம்பி வீடணன்.

★ சீதையைக் கவர்ந்தது தவறு என்று வீடணன் இராவணனிடம் கூறுகின்றான்.

★ எனினும், இராவணன் அவன் பேச்சைக் கேட்க மறுத்துவிடுகிறான்.

★ வீடணன், இராமனிடம் வந்து அடைக்கலம் அடைந்தான்.

★ இராமன் அவனைத் தன் உடன்பிறந்தவனாக ஏற்றுக் கொண்டான்.

★ “அகன் அமர் காதல் ஐய
நின்னொடும் எழுவர் ஆனோம்”

**முடிவுரை**

★ இராமன் சிறந்த நண்பனாக, மகனாக, சகோதரனாக படைக்கப்பட்டுள்ளான்.

★ மனிதர்களிடம் மற்றுமின்றி, அனைத்து உயிர்களிடத்தும் அன்பு பாராட்டினான், இராமன்.

★ எனவே, இராமன் பண்பின் படிமமாக விளங்குகின்றான்.

**9. செய்ந்நன்றியறிதலே அறம் என்பதை வாயுறை வாழ்த்தின் துணைகொண்டு நிறுவுக.**

**ஈடில்லா உதவி**

★ தான் ஒருவருக்கு எந்த உதவியும் செய்யாத நிலையில், அவர் உதவி செய்வது சிறந்ததாகும்.

★ அவ்வாறு, உதவியவருக்கு விண்ணுலகையும் மண்ணுலகையும் கொடுத்தாலும் ஈடாகாது.

➔ “செய்யாமல் செய்த உதவிக்கு வையகமும்
வானகமும் ஆற்ற லரிது”

**உலகைவிட பெரியது**

★ ஒருவர் உரிய காலத்தில் செய்த உதவி அளவில் சிறியதாக இருந்தாலும், அது உலத்தைவிட பெரியதாகும்.

➔ “காலத்தி னால்செய்த நன்றி சிறிதுஎனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது”

**கடலைவிட பெரியது**

★ ஒருவர் எந்த பயனும் எதிர்பாராமல் செய்த உதவியை ஆராய்ந்தால், அதன் நன்மை கடலைவிட மிகப் பெரியதாகும்.

➔ “பயன்தூக்கார் செய்த உதவி நயன்தூக்கின்
நன்மை கடலிற் பெரிது”

**உதவியின் அளவு**

★ ஒருவர் தினையளவு சிறிய உதவியைச் செய்தாலும்,

★ அதன் பயனைத் தெரிந்தவர் பனையளவாகக் கொள்வார்.

➔ “தினைத்துணை நன்றி செயினும் பனைத்துணையாக்
கொள்வார் பயன்தெரி வார்”

**தீதும் நன்றும்**

★ ஒருவர் நமக்குச் செய்த உதவியை மறப்பது நன்றன்று.

★ ஒருவர் செய்த தீமையை அப்பொழுதே மறப்பது நல்லது.

➔ "நன்றி மறப்பது நன்றன்று நன்றல்லது
அன்றே மறப்பது நன்று"

**உய்வில்லாதவர்**

★ ஒருவர் எந்த அறத்தை அழித்தாலும் அதிலிருந்து தப்பிக்க வழி உண்டு.

★ ஆனால், ஒருவர் செய்த உதவியை மறந்தவர்க்குத் தப்பிக்க வழியே இல்லை.

➔ "எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு"

**10. சினத்தைக் காத்தல் வாழ்வை மேன்மைப்படுத்தும் - இக்கூற்றை முப்பால் வழி விரித்துரைக்க.**

**முன்னுரை**

★ ஒருவரின் மனத்தில் உள்ள அன்பை அழிக்கக் கூடியது சினம் ஆகும்.

★ எனவே, சினத்தைக் காத்திருப்பதே ஒருவரின் வாழ்வை மேன்மைப்படுத்தும்.

★ சினத்தைக் காக்க வேண்டியதற்கான காரணத்தை முப்பால்வழி இங்கு காண்போம்.

**சினம் காப்பவர்**

★ ஒருவர் தன்னினும் வலிமைக்குன்றியவரிடம் சினம் கொள்ளாமல் இருக்க வேண்டும்.

★ அவ்வாறு இருப்பவரே உண்மையில் சினம் காப்பவர் ஆவார்.

★ தன்னினும் வலிமையானவரிடம் சினத்தைக் காத்தால் என்ன? காக்காவிட்டால் என்ன?

➔ "செல்இடத்துக் காப்பான் சினம்காப்பான் அல்இடத்துக்
காக்கின்என் காவாக்கால் என்?"

**சினத்தின் விளைவு**

★ ஒருவருக்குத் தீமையான விளைவுகள் சினத்தாலேயே ஏற்படும்.

★ எனவே, யாரிடமும் சினம் கொள்ளாமல் இருக்க வேண்டும்.

➔ "மறத்தல் வெகுளியை யார்மாட்டும் தீய
பிறத்தல் அதனான் வரும்"

**சினம் தரும் பகை**

★ சினம் ஒருவரின் முகமலர்ச்சியையும் அகமகிழ்ச்சியையும் கொன்றுவிடும்.

★ அத்தகைய சினத்தைவிட நமக்கு வேறு பகை இல்லை.

➔ "நகையும் உவகையும் கொல்லும் சினத்தின்
பகையும் உளவோ பிற?"

**தன்னையே கொல்லும் சினம்**

★ ஒருவர் தன்னைக் காத்துக்கொள்ள விரும்பினால், சினம் வாராமல் தடுக்க வேண்டும்.

★ அவ்வாறு தடுக்காவிட்டால், சினம் நம்மையே அழித்துவிடும்.

➔ "தன்னைத்தான் காக்கின் சினம்காக்க காவாக்கால்
தன்னையே கொல்லும் சினம்."

**உறவினரை அழிக்கும் சினம்**

★ சினம் தன்னைச் சேர்ந்தவரை அழிக்கும் நெருப்பாகும்.

★ சினம் ஒருவரது சுற்றம் என்னும் பாதுகாப்புத் தெப்பத்தையும் சுட்டழிக்கும்.

➔ "சினம்என்னும் சேர்ந்தாரைக் கொல்லி இனம்என்னும்
ஏமப் புணையைச் சுடும்"

**முடிவுரை**

★ சினம் நம்மையே கொல்லும் கொடிய ஆயுதம் ஆகும்.

★ எனவே, நாம் சினம் கொள்ளாமல் இருக்க வேண்டும். ★ சினத்தைக் காப்பதனால், உறவுகள் பெருகும்

★ முகமலர்ச்சியும் அகமகிழ்ச்சியும் உண்டாகும். ★ வாழ்க்கை மேன்மை அடையும்.

★ எனவே, சினம் கொள்வதைத் தவிர்க்க வேண்டும்.

**11. கவிதை எழுத அறிய வேண்டுவனவாகச் சுரதா கூறுவனவற்றை விவரிக்க.**

**முன்னுரை**

★ உரைநடைக்கும் கவிதைக்கும் இடையே வேறுபாடு உள்ளது.

★ சிலர் இரண்டிற்கும் உள்ள வேறுபாடு தெரியாமல் எழுதுகின்றனர்.

★ அவ்வாறு எழுதுகின்றவர்களுக்காக சுரதா கவிதை எழுதும் முறை பற்றிக் கூறுகின்றார்.

**உரைநடை**

★ உரைநடை என்பது எளிய சொற்கள் தொடர்களாக அமைவது.

★ எதுகை, மோனை போன்ற தொடைகள் இன்றி வரும். ★ அடி வரையறையின்றி வரும்.

**கவிதை எழுதும் முறை**

★ சொற்கள் யாப்பிலக்கண நெறிகளுக்குட்பட்டு அமைவது கவிதை

★ எழுத்துகள் இணைந்து அசை தோன்றும். ★ அசைகள் இணைந்து சீராகும்.

★ இரண்டு சீரின் இடைவெளியில் தளைகள் அமையும். ★ தளைகள் சேர்ந்து அடிகள் தோன்றும்.

★ அடிகளில், எதுகை மோனை போன்ற தொடைகள் அமையும்.

★ தொடைகள் நல்ல முறையில் அமைந்திருந்தால் பாக்கள் சிறப்பாக இருக்கும்.

★ இதுவே, கவிதை எழுதும் நெறி ஆகும்.

**கவிதையில் அமைய வேண்டியவை**

★ இலக்கண நெறிகளுக்குட்பட்டு கவிதை இருக்க வேண்டும்.

★ சிறந்த முறையில் பாடல் இயற்றுபவர் புகழ் அடைவார்.

★ கவிதையில் அறக்கருத்துகள் இடம்பெற்றிருக்க வேண்டும்.

★ எளிய மக்களும் புரிந்து கொள்ளும் வகையில் கருத்துகள் இருக்க வேண்டும்.

**முடிவுரை**

★ யாப்பிலக்கண நெறிகளை அறியாமலும் அறக்கருத்துகள் இன்றியும் சிலர் கவிதை எழுதுகின்றனர்.

★ அவ்வாறு கவிதை எழுதுபவர்கள், புகழை அடையமாட்டார்கள் என்கிறார் சுரதா.

**12. பண்டைக்காலக் கல்வி முறையில் ஆசிரியர் மாணவர்களுக்கிடையே நிகழ்ந்த கற்றல், கற்பித்தல் முறைகளைத் தொகுத்தெழுதுக.**

**முன்னுரை**

★ கல்விமுறை காலத்திற்கு ஏற்ப மாற்றம் அடைந்து வருகிறது.

★ பண்டைக்காலக் கல்விமுறையில் ஆசிரியர் மாணவர்களுக்கிடையிலான கற்றல், கற்பித்தல் முறையைப் பற்றி இங்கு காண்போம்.

**கல்வித் தொடக்கம்**

★ பிள்ளைகள் ஐந்து வயதில் கல்வி கற்கத் தொடங்கினர்.

★ கல்வி கற்க, பெற்றோர்கள் பிள்ளைகளை ஆசிரியரிடம் அடைக்கலமாகக் கொடுத்தனர்.

★ பிள்ளைகளைப் பள்ளியில் சேர்க்கும் நாள் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

★ ஏட்டில் மஞ்சள் பூசி பையனிடம் கொடுத்து வாசிக்கச் சொல்லுவார்கள்.

**முறை வைப்பு**

★ ஆசிரியர் நெடுங்கணக்கைச் சொல்லிக் கொடுப்பார்.

★ மாணவர்கள் ஆசிரியர் சொல்லுவதைப் பின்பற்றிச் சொல்லுவார்கள்.

★ இவ்வாறு ஆசிரியர் சொல்லுவதைத் திரும்பச் சொல்லுவது 'முறை வைப்பு' எனப்படும்.

**எழுத்துப் பயிற்சி**

★ மாணவர்கள் முதலில் மணலில் எழுதிப் பழகுவார்கள். ★ முதலில், ஆசிரியர் தரையில் எழுதுவார்.

★ மாணவர்கள் ஆசிரியர் எழுதியதன்மேல் எழுதிப் பழகுவார்கள்.

★ ஓர் எழுத்து மற்றோர் எழுத்தின்மீது படாமல் எழுதினார்கள்.

**மனனப் பயிற்சி**

★ அடிப்படை நூல்களை மாணவர்கள் மனப்பாடம் (மனனம்) செய்தனர்.

★ தமிழில் நிகண்டு, நன்னூல், காரிகை, தண்டியலங்காரம், நீதி நூல்கள் பாடமாக இருந்தன.

★ கணிதத்தில் கீழ்வாயிலக்கம், மேல்வாயிலக்கம், குழிமாற்று போன்ற பலவகை வாய்பாடுகள் பாடமாக இருந்தன.

★ வியாபாரம் செய்வதற்கும் கோவிலில் பணி செய்வதற்கும் ஏற்ற கணிதமுறை கற்பிக்கப்பட்டது.

**வாதம் புரிதல்**

★ கல்வியில், வாதம் செய்தல் முக்கியமான இடத்தைப் பெற்றிருந்தது.

★ கல்வியில் சிறந்தவர்கள் அரசவையில் வாதம் செய்து, தம் கல்வித் திறமையை நிலைநாட்டினர்.

★ வாதம் செய்யும் பழக்கம் பள்ளிக்கூடத்திலிருந்தே தொடங்குகிறது.

**ஆசிரியர் மாணவர் உறவு**

★ தவறு செய்யும் மாணவர்களுக்குக் கொடிய தண்டனைகள் இல்லை.

★ ஆசிரியர்கள் மாணவர்களை அன்பால் வழிப்படுத்தினர்.

★ மாணவர்கள் ஆசிரியர்களிடம் மிகுந்த மரியாதையுடன் நடந்துக் கொண்டனர்.

**முடிவுரை**

★ பண்டைய காலத்தில் ஆசிரியரும் மாணவரும் அன்பால் இணைந்திருந்தனர்.

**13.'சாலை விபத்தில்லாத் தமிழ்நாடு' - இக்கூற்று நனவாக நாம் செய்ய வேண்டியன யாவை?**

**முன்னுரை**

★ நம் நாட்டில் சாலை விபத்துக்கள் நாளுக்குநாள் அதிகரித்து வருகின்றது.

★ இந்நிலையில், சாலை விபத்தில்லாத் தமிழ்நாடே அனைவரின் நோக்கமாக உள்ளது.

★ இக்கூற்றை நனவாக்க நாம் செய்ய வேண்டியவற்றைப் பற்றி இங்கு காண்போம்.

**சாலை வசதிகளும் விபத்துகளும்**

★ நம் நாடு உலகில் அதிக சாலைப் போக்குவரத்து வசதிகளைக் கொண்ட இரண்டாவது நாடு ஆகும்.

★ நம் நாட்டில் 55 இலட்சம் கி.மீ. சாலைகள் உள்ளன.

★ 21 கோடிக்கும் மேற்பட்ட ஊர்திகள் உள்ளன.

★ ஓர் ஆண்டில் சுமார் 5 இலட்சம் விபத்துகள் ஏற்படுகின்றன.

★ இந்தியாவிலேயே தமிழ்நாட்டில்தான் அதிக அளவு சாலை விபத்து ஏற்படுகின்றது.

**சாலை விபத்துகளைத் தடுப்பதற்கான வழிகள்**

★ சாலை விதிகளை மீறுவதே விபத்திற்குக் காரணமாக அமைகிறது.

★ சாலை விதிகளைப் பின்பற்றுவதன்மூலம் சாலை விபத்துகளைத் தடுக்கலாம்.

★ இருசக்கர வாகனம் (Bike), மகிழுந்து (Car) போன்றவற்றை இயக்குபவர்கள் முறையான பயிற்சிப் பெற்றிருக்க வேண்டும்.

★ பயிற்சிப் பெற்று, ஓட்டுநர் உரிமம் உள்ளவர்கள் மட்டுமே இருசக்கர வாகனங்களை ஓட்ட வேண்டும்.

★ இருசக்கர வாகனத்தில் செல்பவர்கள் தலைக்கவசம் அணிந்து செல்ல வேண்டும்.

★ இருசக்கர வாகனத்தில், இரண்டு பேருக்குமேல் பயணிக்கக் கூடாது.

★ கைபேசியில் பேசிக் கொண்டே செல்லக் கூடாது.

★ சாலையில் வண்டியைக் குறுக்கும் நெடுக்குமாக இயக்கக் கூடாது.

★ மக்கள் செல்லும் பாதையில் அதிக வேகத்தில் பயணிக்கக் கூடாது.

**சாலை பாதுகாப்பு விதிகள்**

★ பன்னாட்டுச் சாலை அமைப்பு மாநாட்டில் சாலை பாதுகாப்பு விதிகள் அறிமுகப்படுத்தப்பட்டன. அதன்படி,

★ சாலையின் வகைகள், மைல் கற்களின் விவரங்களைத் தெரிந்து வைத்திருக்க வேண்டும்.

★ போக்குவரத்துக் குறியீடுகளைப்(Signals) பின்பற்ற வேண்டும்.

★ நடைபாதையைப் பயன்படுத்துபவர்களையும் சாலையைக் கடப்பவர்களையும் அச்சுறுத்தக் கூடாது.

★ சாலைச் சந்திப்புகளில் எச்சரிக்கையுடன் செல்ல வேண்டும்.

★ கடந்து செல்ல முற்படும் ஊர்திகளுக்குப் பாதுகாப்புடன் வழிவிட வேண்டும்.

★ மற்ற சாலைப் பயனாளிகளை நண்பராக எண்ண வேண்டும்.

**முடிவுரை**

★ வாகனம் ஓட்டுபவர்கள் கட்டாயம் சாலை விதிகளைப் பின்பற்றி நடக்க வேண்டும்.

★ சாலை விதிகள் குறித்த விழிப்புணர்வை மக்களிடையே ஏற்படுத்த வேண்டும்.

★ இவ்வாறு செய்வதன்மூலம், நம் நாடு சாலை விபத்தில்லாத நாடாகத் திகழும்.

**14.** **ஒவ்வொரு நகரத்துக்கும் வரலாறும் வடிவழகும் உண்டு" - நீங்கள் பார்த்த அல்லது வாழ்ந்த ஒரு நகரம் குறித்து இருபக்க அளவில் கட்டுரை எழுதுக.**

**நான் வாழும் நகரம்**

**என்னுரை**

★ தமிழர்களின் பழம்பெருமையையும் பண்பாட்டுச் சிறப்பையும் உணர்த்தக் கூடிய நகரம் மதுரை.

★ மதுரையின் சிறப்புமிக்க வரலாற்றையும் வடிவழகையும் குறித்து இக்கட்டுரையில் காண்போம்.

**மதுரையின் தொன்மை**

★ தமிழ்நாட்டில் உள்ள தொன்மையான நகரங்களுள் ஒன்று மதுரை ஆகும்.

★ மதுரை வைகை ஆற்றங்கரையில் அமைந்துள்ள நகரம் ஆகும்.

★ பாண்டிய மன்னர்களின் தலைநகரமாக விளங்கிய சிறப்பிற்குரியது மதுரை.

★ மல்லிகை மாநகர், கூடல் நகர், மதுரையம்பதி, கிழக்கின் ஏதென்ஸ் என்று பல பெயர்களில் மதுரை போற்றப்படுகிறது.

**மதுரையும் தமிழும்**

★ சங்கம் வைத்து தமிழ் வளர்த்த பெருமைக்குரிய நகரம் மதுரை ஆகும்.

★ மதுரை என்னும் சொல்லுக்கு இனிமை என்பது பொருள்.

★ தமிழ் என்றால் மதுரை; மதுரை என்றால் தமிழ் என்னும் அளவிற்குத் தமிழோடு நெருங்கிய தொடர்புடைய நகரம் ஆகும்.

★ மதுரையையும் தமிழையும் சேர்த்தே புலவர்கள் போற்றியுள்ளனர்.

**கோவில் நகரம்**

★ மதுரை நகரம் கோவில்கள் மிகுந்த நகரமாக விளங்குகிறது.

★ மீனாட்சியம்மன் கோவில், வண்டியூர் தெப்பக்குளம் மாரியம்மன் கோவில், திருப்பரங்குன்றம் முருகன் கோவில், அழகர் கோவில், பாண்டிமுனி கோவில் ஆகியவை மதுரையில் உள்ள புகழ்பெற்ற கோவில்களாகும்.

**திருவிழா நகரம்**

★ மதுரை திருவிழாக்கள் நிறைந்த நகரமாகும்.

★ மதுரை மீனாட்சி சொக்கநாதர் கோவிலில் நடைபெறும் சித்திரைத் திருவிழா உலகப் புகழ்பெற்றதாகும்.

★ மீனாட்சி திருக்கல்யாணம், பட்டாபிஷேகம், தேரோட்டம் ஆகியவை சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது.

★ சித்திரைத் திருவிழாவில் அழகர் வைகை ஆற்றில் இறங்குவதைக் காண்பதற்காக இலட்சக்கணக்கான மக்கள் மதுரைக்கு வருகின்றனர்.

★ திருவிழாக்கள் அன்றைய மன்னராட்சியின் ஆட்சிச் சிறப்பையும் எடுத்துரைக்கும் வண்ணம் கொண்டாடப்படுகின்றன.

**தூங்காநகரம்**

★ எப்பொழும் திருவிழாக்கள், இரவு சந்தைகள், வணிகம் என்று தொடர்ந்து இயங்கிக் கொண்டே இருக்கும் நகரம் மதுரை ஆகும்.

★ உலகமே உறங்கிக்கொண்டிருக்கும் வேளையிலும் விழித்திருக்கும் ஒரே நகரம் மதுரை.

★ எனவே மதுரை தூங்காநகரம் என்று பெருமையோடு அழைக்கப்படுகிறது.

www.nammakalvi.in


**வடிவழகு**

★ மதுரை நகரத்தின் வடிவமைப்பு தாமரைப் பூவை ஒத்திருக்கின்றது.

★ சங்கத் தொகை நூல்களுள் ஒன்றாகிய பரிபாடல் மதுரை நகரின் அமைப்பை விவரிக்கின்றது.

★ மதுரை நகரமானது திருமாலின் உந்தியின் அலர்ந்த தாமரை மலரை ஒத்திருக்கும்.

★ மதுரை நகரத்திலுள்ள தெருக்கள் அம்மலரின் இதழ்களை ஒத்திருக்கும்.

★ பாண்டிய மன்னனது அரண்மனை, அம்மலரின் நடுவில் உள்ள பொகுட்டை ஒத்திருக்கும்.

★ அந்நகரில் வாழும் தமிழ்க் குடிமக்கள் அத்தாமரை மலரின் தாதுக்களை ஒத்திப்பர்.

★ அந்நகரைத் தேடி வரும் பரிசில் வாழ்நர் தாது உண்ண வரும் வண்டுகளை ஒத்திப்பர்.

★ மதுரை நகர மக்கள் பறை முழக்கத்தின் ஒலி கேட்டு நாள்தோறும் துயிலெழுவார்கள்.

**முடிவுரை**

★ வரலாற்றுச் சிறப்புகளையும் வடிவழகு சிறப்புகளையும் பண்பாட்டுச் சிறப்புகளையும் உடைய மதுரையே நான் வாழும் நகரம் ஆகும்.

**15. 'கிராமங்கள் தங்கள் முகவரியை இழந்து வருகின்றன' - இது குறித்து உங்கள் கருத்தை விவரிக்க.**

**'கிராமங்கள் தங்கள் முகவரியை இழந்து வருகின்றன' - இது குறித்து என் கருத்து**

**என்னுரை**

★ இயற்கை எழில் கொஞ்சும், அமைதியான சூழலை உடையவை கிராமங்கள்.

★ கிராமங்கள் தங்கள் பசுமையையும் இயற்கை எழிலையும் கொஞ்சம் கொஞ்சமாக இழந்து வருகின்றன.

★ கிராமங்கள் தங்களின் அடையாளங்களை இழந்ததற்கான காரணங்களைப் பற்றி என் கருத்தை விவரிக்கின்றேன்.

**வேளாண்மை பொய்த்தது**

★ கிராமங்களின் தனிப்பெரும் அடையாளம் வேளாண்மை ஆகும்.

★ பசுமை புரட்சி என்ற பெயரில் உற்பத்தியைப் பெருக்குவதற்காக செயற்கை உரங்களை இட்டோம்.

★ அதன் விளைவு, மண் தன் தன்மையை இழந்தது. ★ வேளாண்மை பொருட்களின் உற்பத்தி குறைந்தது.

★ போதுமான அளவு பருவ மழையும் பெய்யாததால் வேளாண்மை கடுமையாக பாதித்தது.

**வேலையில்லா திண்டாட்டம்**

★ கிராமங்களின் முதன்மைத் தொழில் வேளாண்மை

★ வேளாண்மை பொய்த்ததால், பலரும் வேலையில்லா நிலைக்குத் தள்ளப்பட்டனர்.

★ வேலை தேடுவதற்காக கிராமங்களைவிட்டு, நகரங்களை நோக்கி செல்ல வேண்டிய சூழல் ஏற்பட்டது.

★ சுதந்திரம் பெற்று பல ஆண்டுகள் கடந்துவிட்டது. இன்றும் பல கிராமங்களில் அடிப்படை வசதிகள்கூட செயல்படுத்தப்படவில்லை.

**நகரமயமாதல்**

★ நாட்டை வளர்ச்சிப் பாதையில் கொண்டு செல்ல வேண்டும் என்பது அனைவரின் நோக்கமாக உள்ளது.

★ எனவே, கிராமங்கள் அனைத்தும் நகரங்களாக மாறி வருகின்றன.

★ விளை நிலங்கள் யாவும் வீட்டு மனைகளாக்கி விற்பனை செய்யப்படுகின்றன.

★ விவசாயிகளும் தங்கள் வருவாய்க்காக வேறு வழியின்றி தங்கள் நிலங்களை விற்பனை செய்கின்றனர்.

www.nammakalvi.in



**முடிவுரை**

★ கிராமங்கள் வெறும் வாழ்விடங்கள் இல்லை.

★ கிராமங்கள் நம் பண்பாட்டின் அடையாளங்கள், இயற்கையின் அங்கங்கள் என்பதை நாம் உணர வேண்டும்.

★ "இந்தியாவின் வளர்ச்சி என்பது இலட்சக்கணக்கான கிராமங்களின் வளர்ச்சி" என்ற காந்தியடிகளின் பொன்மொழியைப் பின்பற்றி வாழ வேண்டும்.

**16. சென்னையில் உள்ள மயிலாப்பூர், கந்த கோட்டப் பகுதிகள் செய்யுளில் எவ்விதம் காட்சிப்படுத்தப்படுகின்றன?**

**முன்னுரை**

★ ஓர் ஊரின் பெருமைக்குரிய அடையாளங்களுள் ஒன்று கோவில்

★ மகிழ்ச்சியைப் பகிர்ந்துகொள்ளும் நாகரிகத்தின் வெளிப்பாடு திருவிழா.

★ சென்னை மாநகரில் மயிலாப்பூரும், கந்த கோட்டமும் பண்பாட்டுச் சிறப்புமிக்க இடங்களாகும்.

★ மயிலாப்பூரில் நடைபெறும் திருவிழாக்களைப் பற்றியும்,

★ கந்த கோட்டத்தின் கோவிலைப் பற்றியும் செய்யுள் அடிகள்வழி காண்போம்.

**மயிலாப்பூர்**

★ திருவிழாக்கள் நிறைந்த வீதிகளை உடைய பெரிய ஊர் திருமயிலை

★ இளம்பெண்கள் ஆரவாரத்தோடு விழாக்களைக் கொண்டாடுவார்கள்.

★ திருமயிலையில் எழுச்சிமிக்க விழாக்கள் நடைபெறும்.

★ மயிலை கபாலீச்சரம் என்னும் கோவிலில் இறைவன் வீற்றிருக்கிறான்.

★ மயிலையில் உள்ள இறைவனுக்குப் பங்குனி உத்திரத்தில் ஆரவாரத்தோடு திருவிழா நடைபெறும்.

**கந்த கோட்டம்**

★ அறம் செய்வோர் நிறைந்திருக்கும் நகரம் சென்னை

★ சென்னை கந்த கோட்டத்தில் எழுந்தருளி இருப்பவன் முருகன்.

★ குளிர்ந்த முகத்தை உடையவன் முருகன்

★ தூய மாணிக்க மணியைப் போன்றவன் முருகன்

★ முருகன் கோவில் கொண்டு அருள் வழங்கும் இடம் கந்த கோட்டம்.

**17. அறிவுடைமை வாழ்வின் உயர்வுக்குத் துணைநிற்கும் என்பதை வள்ளுவம் வழி நின்று நிறுவுக.**

**முன்னுரை**

★ உலகப் பொதுமறையாகப் போற்றப்படும் நூல் திருக்குறள்.

★ அறிவுடைமை அதிகாரத்தில் வள்ளுவர் கூறும் கருத்துகள் வாழ்வின் உயர்வுக்குத் துணைநிற்கும் என்பதை இக்கட்டுரையில் காண்போம்.

**பாதுகாப்பு அரண்**

★ ஒருவனுக்கு அழிவு வராமல் காக்கும் கருவி அறிவே ஆகும்.

★ அறிவு, பகைவரால் அழிக்க முடியாத பாதுகாப்பு அரணாகவும் உள்ளது.

**தீமையிலிருந்து காக்கும்**

★ மனத்தைத் தீயவழியில் செல்லவிடாமல், ★ நல்லவழியில் செலுத்துவது அறிவு ஆகும்.

**மெய்ப்பொருள் காட்டும்**

★ எப்பொருளை யார் சொல்லக் கேட்டாலும், அப்பொருளின் உண்மைத்தன்மையை அறிந்துக்கொள்ள செல்வது அறிவு ஆகும்.

**உலகத்தோடு செல்க**

★ உலகம் எத்தகைய உயர்ந்த நெறியில் செல்கிறதோ,

★ அந்நெறியில் தானும் செல்வதே அறிவாகும்.

**எதிர்கொள்ளும் வலிமை**

★ எதிர்காலத்தில் தனக்கு நேர இருப்பதை முன்கூட்டியே அறிந்துக் காத்துக்கொள்பவரே அறிவுடையவர்.

★ அறிவுடையவருக்கு அதிர்ச்சித் தரக்கூடிய துன்பம் எதுவும் ஏற்படாது.

**முடிவுரை**

★ பாதுகாப்பு அரணாகவும் ★ தீமையிலிருந்து காக்கும் கருவியாகவும்

★ மெய்ப்பொருளைக் காட்டுவதாகவும் ★ உலகத்தோடு செல்ல செய்வதாகவும்

★ துன்பத்தை எதிர்க்கொள்ளும் வலிமையைத் தரக்கூடியதாகவும் இருப்பது அறிவாகும்.

★ அத்தகைய அறிவுடையவர் வாழ்வின் மிக உயர்ந்த நிலையை அடைவார் என்பதை வள்ளுவர் தன் குறள்வழி கூறுகின்றார்.

**18. திருக்குறள் ஒரு வாழ்வியல் இலக்கியம் - நிறுவுக.**

**முன்னுரை**

★ நீதி நூல்களில் சிறந்த நூலான திருக்குறளில் வாழ்வியலுக்கு நன்மை பயப்பன தீமை பயப்பன குறித்து எளிமையாக உணர்த்தப் பட்டுள்ளது.

★ வாழ்வின் நன்மை தீமைகளை வள்ளுவன்வழி உள்ளதைப் படம்பிடித்துக் காட்டுவதற்காகவே இக்கட்டுரை.

**தெய்வப்புலவர் திருவள்ளுவர்**

★ வள்ளுவர் ஒரு தெய்வப் புலவர்.

★ வள்ளுவன்தன் வாழ்வில் கண்டு, கேட்டு, உண்டு, உற்றுணர்ந்த வாழ்வியல் சிறப்புகளைத் தெள்ளத் தெளிவாக நமக்கு முப்பாலக் பிரித்து இரண்டடியில் உரைக்கின்றார்.

★ உலகில் தோன்றி நீதி நூல்களிலேயே தலை சிறந்தது உலகப்பொதுமறை எனலாம்.

**வாழ்வியலுக்கு நன்மையும் தீமையும் பயப்பன**

★ இல்வாழ்க்கை ★ வாழ்க்கைத் துணை நலம் ★ அறிவுடைமை ★ வினைத்திட்பம்

★ செய்நன்றி அறிதல் ★ வெ◌ஃகாமை ★ வெகுளாமை ★ சிற்றினம் சேராமை

★ கள் உண்ணாமை ★ சூது

**இல்வாழ்க்கை**

★ அன்பும் அறமும் கொண்டு இல்வாழ்க்கையைப் பண்புடனும் பயனுடனும் நடத்த வேண்டும்.

★ அறத்தின் இயல்போடு, உலகில் வாழ்வேண்டிய நெறியோடு நின்று வாழ்பவர் வானுலகத்தில் உள்ள தெய்வத்துக்கு இணையாக மதிக்கப்படுவர்.

**வாழ்க்கைத் துணை நலம்**

★ வாழ்க்கைத் துணைவியான மனைவியைவிட உலகத்தில் ஓர் ஆண்மகனுக்குச் சிறந்த செல்வம் ஏதுமில்லை.

www.nammakalvi.in


★ தன் கணவனையே தெய்வமெனவும் வீட்டையே கோயிலாகவும் போற்றும் பெண்கள் பெய்! என்றால் மழை பெய்யும்.

**அறிவுடைமை**

★ உலகத்தில் அழிவிலிருந்து காக்கும் பெருங்கருவி அறிவு. பகைவராலும் அழிக்கமுடியாத ஒன்றாகும்.

★ அறிவை அது போகும் போக்கில் செல்லவிடாமல் தீமையிலிருந்து விலக்கி நல்ல வழியில் செலுத்துவதே அறிவாகும்.

★ எப்பொருளை யார் சொல்லக் கேட்டாலும் அப்பொருளின் மெய்யான பொருளைக் காண்பதே அறிவாகும்.

★ உலகம் எத்தகைய உயர்ந்த வழியில் செல்கின்றதோ அதே வழியில் செல்வதே அறிவுடைமை ஆகும்.

★ பின்னால் வரப்போவதை முன்பே அறிந்து காத்துக்கொள்ளும் திறமையே அறிவுடைமை ஆகும்.

**வினைத்திட்பம்**

★ நல்ல செயலுக்கு மன உறுதியே வேண்டும் மற்றவை எவையும் பயன்படாதவையே ஆகும்.

**செய்நன்றி அறிதல்**

★ தான் எந்த உதவியும் செய்யாத போது பிறர் நமக்குச் செய்யும் உதவிக்கு இந்த பூமியையும் அந்த வானத்தையும் கொடுத்தாலும் ஈடாகா.

★ ஒருவர் ஆபத்துக் காலத்தில் செய்த நன்றியை மறக்கக் கூடாது.

★ எந்தப்பயனையும் எதிர்பார்க்காமல் நமக்கு உதவி கடலைவிடப் பெரியது.

★ தினையளவு சிறிய உதவியை ஒருவர் செய்திருந்தாலும் அதை நாம் பெரிதாக நினைத்துப் போற்ற வேண்டும்.

★ ஒருவர் நமக்குச் செய்த நன்றியை மறப்பது நல்லதன்று அவர் செய்த தீமையை அன்றே மறப்பது நன்று.

★ ஆகவே எந்த நன்றியை நாம் மறந்தாலும் செய் நன்றியை ஒரு நாளும் மறக்கக் கூடாது. அதற்கு உய்வே இல்லை.

**வாய்வியலுக்குத் தீமை பயப்பன**

**வெ..காமை**

★ பிறர் பொருளுக்கு ஆசைபடக் கூடாது அது நம்மிடம் உள்ள செல்வத்தையும் குறைத்து விடும்.

**வெகுளாமை**

★ கோபம் பேராபாத்தாகும். கோபத்தைக் காக்க வேண்டும் இல்லையேல் நம்மை நாமே கொல்வதற்குச் சமம்.

**புலால் மறுத்தல்**

★ பிற உயிர்களைக் கொன்று தின்று தன் உயிரைக் காக்கக் கூடாது.

**சிற்றினம் சேராமை**

★ தீய பழக்கம் உடையவர்களிடம் நட்பு கூடாது

★ நல்ல நண்பர்களைப்போன்ற உற்ற துணையும் நமக்கு என்றும் தேவை.

**கள் உண்ணாமை**

★ மது உண்டு மயக்கத்தில் வாழ்வதென்பது தானாகச் சென்று சாவதாகும்.

**சூது**

★ சூது, ஒருவருக்கு மனத் துன்பத்தை உருவாக்கி, அவருடைய புகழையையும் செல்வத்தையும் கெடுக்கும்.

**முடிவுரை**

★ திருவள்ளுவர் உரைத்த குறட்பாக்களை ஆராயும்போது திருக்குறள் ஒரு வாழ்வியல் இலக்கியமே என்பது புலனாகின்றது.

★ நிலையை அடைவான்.

www.nammakalvi.in


## விரிவானம்

**1. உரிமைத்தாகம்கதையில்சகோதரர்கள்இருவரும்ஒன்றிணையாமல்இருந்தால்கதையைத்தொடர்ந்துஎழுதிமுடிக்க.**

**கதை மாந்தர்கள்**

முத்தையன் - அண்ணன்; வெள்ளைச்சாமி - தம்பி; மூக்கம்மா - முத்தையாவின் மனைவி; பங்காரு சாமி - வட்டிக் கடைக்காரர்;

என் கதையில் வரும் கதைமாந்தர்கள் - நண்பன் முத்து; நாட்டாமை நம்பிராசன்; ஊர்ப் பொதுமக்கள்

**சொல்வதன் நோக்கம்**

★ "ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு நம்மில் ஒற்றுமை நீங்கின் அனைவர்க்கும் தாழ்வு" என்னும் பாரதியின் பாடல் 'நிலத்தொடு ஒன்றிய எளிய மக்களின் உணர்வுகளின் மூலம் பிரதிபலிப்பதை மெய்ப்பிக்கவே சொல்கின்றேன்'.

**முன்கதை சுருக்கம்**

★ முத்தையனுக்குத் தெரியாமல் அவன் தம்பி வெள்ளைச்சாமி, தன் நிலத்தை வட்டிக்கடைக்காரர் பங்காரு சாமியிடம் இரண்டாண்டுகளுக்கு முன்பே அடமானம் வைத்துவிட்டான். வெள்ளைச்சாமி முறையாக வட்டிக் கட்டியும் பங்காரு சாமி நிலத்தை அபகரிக்க முயன்றான். இதையறிந்த தம்பியின் மனைவி சண்டையிட்டதை, முத்தையனின் மனைவி மூக்கம்மா அவனிடம் சொன்னாள்.

**தம்பியை வெறுத்த அண்ணன்.**

★ இதைக் கேட்டு அண்ணன் முத்தையன் "அவனுக்குத் தேவைதான்! அன்று நிலத்தை பாகம் போட்டபோது என்னவெல்லாம் பேசி என்னை அவமானப்படுத்தினான்?" என்று சொன்னான்.

★ உடனே அதைப் பேசும் நேரமில்லை இது எனக் கூறி முத்தையன் மனைவி அவனுக்கு உதவும்படி வேண்டினாள்.

★ "அப்பன் முகத்தை அவன் பார்த்திருப்பானா? ஆனால், நான் ஓர் அப்பனாக இருந்து அவனுக்குச் செய்த உதவியை அவன் மறந்து பேசிய நன்றிகெட்ட சொற்களுக்கு அவனுக்கு இதை தேவைதான்" என்று மனைவியிடம் சொல்லி தன் தம்பியை வெறுத்தான்.

**அண்ணணிடம் சண்டையிட்ட தம்பி**

★ இதையெல்லாம் வீட்டிலிருந்து கேட்டுக்கொண்டிருந்த தம்பி "உன்னுடைய உதவியை நம்பி நானில்லை நான் அடகு வைத்த நிலத்தை, எப்படி மீட்க வேண்டும் என்பது எனக்குத் தெரியும்"

★ "யாரையும் நம்பி நான் பிறக்க வில்லை! நீயும் வேண்டாம் நீ கொடுத்த நிலமும் வேண்டாம்! நீ எனக்கு உதவ வேண்டாம் உன் உறவும் வேண்டாம்" எனக் கூறிச் சண்டையிட்டு, அண்ணணை உதறித் தள்ளினான்.

★ ஊர்ப் பொதுமக்கள் இவர்களைக் கண்டு ஏளனமாகப் பேசினார்கள்.

**தம்பியின் நிலம் பறிபோனது**

★ இந்தச் செய்தியெல்லாம் பங்காரு சாமியின் காதுகளுக்கு தேனாகப் போய்ச் சேர்ந்தது.

★ இதுதான் சமயம் எனக் கருதி கோயில்பட்டிக்குப் போய் வக்கிலிடம் நோட்டைக் கொடுத்து நோட்டீஸ் விட்டு பயமுறுத்தி வெள்ளைச்சாமியின் நிலத்தை எழுதி வாங்க முற்பட்டார்.

★ அண்ணன் மீதிருந்த கோபத்தில் நிலத்தை பங்காரு சாமிக்கே எழுதிக் கொடுத்துவிட்டான் வெள்ளைச்சாமி.

**தம்பியின் குடும்பம் பிரிந்தது**

★ தன் கணவன் வெள்ளைச்சாமி செய்த மதிகெட்ட செயலை அறிந்து "இனி உணவுக்கும் உறவுக்கும் உழைப்புக்கும் எங்கே இடம்?" எனக் கேட்டு அவனிடம் நாள்தோறும் சண்டையிட்டாள்.

★ பதிலுக்கு தம்பியும் சண்டையிட்டான் அவளை கடுமையாகக் கண்டிக்கவே, அவள்தன் தாய்வீடு நோக்கிப் புறப்பட்டுவிட்டாள்.

**நண்பன் முத்தரசு அறிவுரை**

★ நடந்ததைக் கேள்வியுற்ற முத்தையாவின் நண்பன் முத்தரசு மிகவும் மனம் வருந்தினான். நேரடியாக முத்தையாவின் வீட்டிற்கு வந்தான்.

★ "சிறியவன் தவறு செய்திருந்தால் நீதான் திருத்த வேண்டும் நீயே அவனை வெறுத்தால் எப்படி? தாய் தந்தை இல்லாதபோது தலைமகன்தான் வீட்டுக்குத் தந்தையாவான்? ஏன் இப்படி நடந்துகொண்டாய்? என்று அன்பாகக் கடிந்துகொண்டு அவனுக்கு இனிமேலாவது உதவிசெய் என்று அறிவுரை வழங்கினான்.

**நாட்டாமை நம்பிராசன்**

★ இவற்றை கேட்டுக்கொண்டே முத்தையன் வீட்டுக்கு உள்ளே நுழைந்த நாட்டாமை நம்பிராசனைக் கண்டவுடனே, முத்தையா, மூக்கம்மா, முத்தரசு மூவரும் எழுந்து வணங்கினார்கள்.

★ "நடந்ததைவையெல்லாம் கேள்விபட்டேன் தம்பி முத்தைய்யா!

★ "ஆற்றில் ஓடும்தண்ணீரை அடி அடியென அடித்தாலும் தண்ணீர் இரண்டாக உடையாது"

★ அண்ணன் தம்பி உறவுகளும் அப்படித்தான் என்ன ஆயிரம் சண்டை வந்தாலும் இரத்தபந்தம் இரண்டாகாது.

★ 'ஊர் ரெண்டுபட்டால் கூத்தாடிக்குக் கொண்டாட்டம்' என்பதுபோல் வீடு ரெண்டுபட்டதால் பங்காரு சாமிக்குக் கொண்டாட்டம் வந்துவிட்டது. இனி நீ தான் உன் தம்பியைக் காப்பாற்ற வேண்டும். என அறிவுரை வழங்கினார்.

**உண்மையை உணர்ந்தான் முத்தையன்**

★ ஒரே வாரத்தில் இவையெல்லாம் நடந்து, தம்பி வீடே இரண்டானது.

★ முத்தையன் சற்று அமர்ந்து சிந்தித்தான் "ஐயோ அவன் சிறியவன், பெரிய மனம் வைத்து நாம் அவனுக்கு உதவியிருக்கலாமே" என்று மனம் வெதும்பினான்.

★ "நண்பர்களும் நாட்டாமையும் வந்து அறிவுரை வழங்கும் அளவுக்குத் தவறு செய்துவிட்டோமே" என்று மனம் வெதும்பினான் அண்ணன் முத்தையன்.

**முடிவுரை**

★ "ஒருவருக்கொருவர் வெறுப்பை உமிழாமல் அன்பால் இணைந்து வாழ்வதே வாழ்க்கை" என்பதை இக்கதை நமக்கு நன்கு அறிவுறுத்தும் என்று நான் நம்புகின்றேன்.

**2. மகாநடிகரைக் கண்ட பாலசந்திரனின் மனவோட்டத்தை நயத்துடன் எழுதுக.**

**முன்னுரை**

★ ஒரு வேளை சாப்பாட்டிற்காகவும் ஐந்து ரூபாய் பணத்திற்காகவும் சினிமா விளம்பரம் செய்த இளைஞன், பாலசந்திரன்.

★ பாலசந்திரன் கேரள மாநிலம் சுள்ளிக்காடு பகுதியைச் சேர்ந்தவர்.

★ பாலசந்திரன், மகாநடிகரைக்(சிவாஜி கணேசனைக்) கண்டபோது ஏற்பட்ட மனவோட்டத்தை இங்கு காண்போம்.

**முதல் சந்திப்பு**

★ 1986ஆம் ஆண்டு ஷருதுபேதம்' என்ற திரைப்படத்தின் ஐம்பதாம் நாள் விழா நடைபெற்றது.

★ திரைப்பட நிகழ்ச்சிக்கு சிவாஜி கணேசன் தலைமை ஏற்றிருந்தார்.

★ அந்த நிகழ்ச்சியில்தான் பாலசந்திரன் முதன்முறையான சிவாஜிகணேசனை நேரில் சந்தித்தார்.

**சிவாஜி கணேசன் வீட்டில்**

★ வி.பி.கெ. மேனன் எடுக்கும் படத்தில் சிவாஜி கணேசன் நடிக்க இருந்தார்.

★ படத்தின் திரைக்கதை ஜான்பால், இயக்குநர் ராஜீவ்நாத்

★ திரைப்படம் குறித்து நேரில் பேசுவதற்காக ராஜீவ்நாத் சிவாஜி கணேசன் வீட்டிற்குச் சென்றார்.

www.nammakalvi.in



★ ராஜீவ்நாத்துடன் ஜான்பாலும் பாலசந்திரனும் சிவாஜி கணேசன் வீட்டிற்குச் சென்றனர்.

**வீட்டின் தோற்றம்**

★ சிவாஜி கணேசனின் வீடு ஓர் அரண்மனையைப்போல இருந்தது.

★ சிற்ப வேலைப்பாடுகள் செய்த மிகப் பெரிய கதவுகள். ★ உள்ளே விசாலமான ஒரு தளம்.

★ தங்கத்தால் இழைத்த யானைத் தந்தங்கள் இரண்டு அழகிற்காக வைக்கப்பட்டிருந்தது.

★ இடப்புறத்தில் மேலே செல்ல, பெரிய மாடிப்படிகள்

**சிவாஜியின் வேடங்கள்**

★ மூவரும் மாடிப்படியில் ஏறி மேலே சென்றனர்.

★ படியின் ஒரு திருப்பத்தில், வீரபாண்டிய கட்டபொம்மன் வேடத்தில் சிவாஜியின் ஆயில் பெயிண்ட் செய்யப்பட்ட படம் இருந்தது.

★ அதைக் கண்டதும், பாலசந்திரன் நடுங்கி, கையெடுத்துத் தலைகுனிந்து வணங்க போனார்.

★ உடைவாள் உருவின நிலையில் சத்ரபதி சிவாஜி. ★ மீசையை முறுக்கியபடி, ராஜராஜசோழன்.

★ பிரெஞ்சு அரசு வழங்கிய செவாலியர் விருதுடன் கூடிய வெள்ளைக் குதிரை ஆகியவற்றைக் கண்டனர்.

**சிவாஜியின் தோற்றம்**

★ மூவரும் மேலே சென்று அமர்ந்திருந்தனர். ★ சிவாஜி அவர்களைப் பார்க்க வந்துகொண்டிருந்தார்.

★ சிவாஜி மெல்ல மெல்லச் சிங்க நடை நடந்து வந்தார்.

★ சிவாஜியைக் கண்ட பாலசந்திரன் துள்ளி எழுந்தார்.

★ ராஜீவ்நாத்தும் பாலசந்திரனும் சிவாஜி காலில் விழுந்து வணங்கினர்.

**முடிவுரை**

★ ராஜீவ் நாத்தும் சிவாஜியும் கதை குறித்துப் பேசிக் கொண்டிருந்தனர்.

★ பாலசந்திரன் சிவாஜியின் தோற்றத்தைப் பார்த்துக் கொண்டு அமைதியாக இருந்தார்.

★ சிவாஜிகணேசனின் கதாபாத்திரங்கள் பாலசந்திரனின் மன அடுக்குகளில் ஒவ்வொன்றாகத் தோன்றிக் கொண்டிருந்தன.

**3. உங்கள் ஊர்ப் பகுதியில் வாழும் கலைஞர் ஒருவரை நேரில் பார்த்த அனுபவத்தை விவரித்துக் கட்டுரையாக்குக.**

**முன்னுரை**

★ நான் எள் ஊர் திருவிழாவிற்குச் சென்றிருந்தபோது, திருவிழாவில் தெருக்கூத்து நடத்தப்பட்டது.

★ தெருக்கூத்து கலைக்குழுவில் சுமார் 15 பேர் இடம்பெற்றிருந்தனர்.

★ தெருக்கூத்துக் கலைக்குழுவின் தலைவராக இருந்தவர் காளீஸ்வரன் ஐயா.

★ தெருக்கூத்துக் கலைஞர் காளீஸ்வரன் ஐயாவை நேரில் பார்த்த அனுபவத்தை இக்கட்டுரையில் பகிர்ந்துகொள்கிறேன்.

**அன்பும் உபசரிப்பும்**

★ ஒருமுறை கலைஞர் காளீஸ்வரன் ஐயாவைக் காண்பதற்காக அவரது வீட்டிற்குச் சென்றேன்.

★ வீட்டிற்குச் சென்ற என்னை அவர் அன்போடு வரவேற்றார்.

★ பகல் வெயிலில் சென்றதால் எனக்கு குளிர்ந்த மோர் கொடுத்தார்.

★ அவர் கொடுத்த மோர், அமிழ்தம் போன்று இருந்தது.

★ பின்பு அவருடன் சிறிது நேரம் உரையாடிக் கொண்டிருந்தேன்.

★ அவர் தன் வாழ்க்கை பாதையைப் பற்றி என்னுடன் பகிர்ந்துகொண்டார்.

**பாரம்பரியமிக்க கலைக்குழு**

★ காளீஸ்வரன் ஐயாவின் அப்பா, தாத்தா என்று பல தலைமுறைகளாக அந்த கலைக்குழுவை நடத்திவந்துள்ளனர்.

★ காளீஸ்வரன் ஐயா சிறுவயது முதலே தன் அப்பாவும் தாத்தாவும் தெருக்கூத்தில் நடிப்பதைப் பார்ப்பார்.

★ அப்பொழுதிலிருந்தே அவருக்கும் அக்கலையின்மீது ஆர்வம் ஏற்பட்டது.

★ திருவிழாக்களில், காளியம்மன் கதை, சுடலைமாடன் கதை, அரிச்சந்திரன் கதை போன்றவற்றைக் கூத்தாக நடித்துக் காட்டுவார்கள்.

★ கிராமப்புறங்களில் மட்டுமின்றி, பல வெளிநாடுகளிலும் இவர்கள் கூத்தை நிகழ்த்திக் காட்டுகிறார்கள்.

**கனவும் ஆசையும்**

★ சிறு வயதிலிருந்தே கலையின்மீது ஆர்வம் கொண்டிருந்த கலைஞர் காளீஸ்வரன் ஐயா தற்போது அறுபது வயதைக் கடந்துள்ளார்.

★ சுமார் 35 ஆண்டுகளாக அக்கலைக்குழுவைத் தலைமையேற்று நடத்திவருகின்றார்.

★ அவரிடம் உங்களுடைய ஆசை என்னவென்று கேட்டபோது,

★ "என் உடலில் உயிர் உள்ளவரை நான் இந்த கலையை நிகழ்த்தி மக்களை மகிழ்விக்க வேண்டும். என் வருங்கால தலைமுறையினருக்கும் இந்த கலையைக் கொண்டு சென்று சேர்க்க வேண்டும்." என்றார்.

**முடிவுரை**

★ கலைகளைத் தன் உயிருக்கு இணையாக நினைத்து, அக்கலைக்காக தன் உயிர் உள்ளவரை பாடுபடு-பவர்கள் கலைஞர்கள்.

★ அத்தகைய கலைஞர் ஒருவரை நேரில் சந்தித்தது என் வாழ்வில் மிகவும் மகிழ்ச்சியான தருணமாக இருந்தது.

**4. சங்ககால வரலாற்றை அறிந்துகொள்ள, புகளூர்க் கல்வெட்டு எவ்வகையில் துணைபுரிகிறது - விளக்குக.**

**முன்னுரை**

★ சங்ககாலத்தைப் பற்றி அறிவதற்குக் கல்வெட்டுகள் துணைநிற்பதை அறிந்தவர் ஐராவதம் மகாதேவன்.

★ சங்ககால வரலாற்றை அறிந்துகொள்ள, புகளூர்க் கல்வெட்டு எவ்வகையில் துணைபுரிகிறது என்பதை இங்கு காண்போம்.

**புகளூர்க் கல்வெட்டு**

★ கரூர் மாவட்டம் புகளூரில் உள்ளது ஆறுநாட்டான் குன்று.

★ ஆறுநாட்டான் குன்றில் சேரல் இரும்பொறை மன்னரின் கல்வெட்டுகள் கிடைத்துள்ளன.

★ இந்திய அரசின் தொல்பொருள் துறையினர் 1927-28ஆம் ஆண்டு ஓர் அறிக்கை வெளியிட்டது.

★ அவ்வறிக்கையில்தான் புகளூர்க் கல்வெட்டுப் பற்றிய செய்தி முதன்முறையாகக் கிடைக்கிறது.

**அறிக்கையில் இருந்த செய்தி**

★ ஆறுநாட்டான் குன்றிலுள்ள குகைகளுள் சில கல்வெட்டுகள் கிடைத்துள்ளன.

★ ஒரு கல்வெட்டில் நான்கு வரிகளில் எழுதப்பட்டுள்ள ஒரு பிராம்மிக் கல்வெட்டு இருந்தது.

★ அக்கல்வெட்டில் ஆதன் என்னும் சொல் இருந்துள்ளது.

★ எனவே, அது சேர மன்னர்களைப் பற்றியதாக இருக்க வேண்டும்.

**தமிழ்ப் பிராம்மிக் கல்வெட்டுகள்**

★ தமிழ்ப் பிராம்மிக் கல்வெட்டுகள் மிகச் சுருக்கமாக இருக்கும்.

★ ஒரே வரியில் மூன்று அல்லது நான்கு சொற்கள் மட்டுமே இருக்கும்.

★ ஆறுநாட்டான் குன்றில் இருந்த கல்வெட்டு, மிக நீளமான கல்வெட்டு.

**சங்ககால வரலாறு**

★ கல்வெட்டின் முதல் வரியில், "யாற்றூர் என்னும் இடத்தைச் சேர்ந்த சமணத் துறவியான செங்காயபன் வசிக்கும் உறையுள் இது" என்று குறிப்பிடப்பட்டிருந்தது.

★ இரண்டாவது வரியில், "கோ ஆதன் செல்லிரும் பொறை மகன்" என்று குறிக்கப்பட்டிருக்கிறது.

★ மேலும், 'பெருங்கடுங்கோன்', 'இளங்கடுங்கோ', 'இளங்கோ' என்ற பெயர்களும் இடம்பெற்றிருந்தன.

★ இப்பெயர்கள் அனைத்தும் சங்க இலக்கியங்களில் மட்டுமே உள்ளன.

★ அக்கல்வெட்டு, சேரல் இரும்பொறை மன்னன் பொறித்தது.

★ சேரல் இரும்பொறை கரூவூரிலிருந்து ஆட்சி செய்த மன்னன்.

★ அக்கல்வெட்டுகள் ஏறத்தாழ கி.பி. இரண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்தது.

**முடிவுரை**

★ சங்ககால வரலாற்றைப் பற்றி அறிந்துகொள்வதற்கு இலக்கியச் சான்றுகள் மட்டுமே கிடைத்திருந்தன.

★ ஆனால், முதல்முறையாக புகளூர்க் கல்வெட்டில்தான் சங்ககால வரலாற்றைப் பற்றிய செய்தி கிடைத்துள்ளது.

★ அவ்வகையில், புகளூர்க் கல்வெட்டு சங்ககால வரலாற்றை அறிந்துகொள்ள மிகவும் துணைபுரிகின்றது.

**5. கோடைமழை கதை வாயிலாக விளக்கப்படும் மனிதநேயப் பண்புகளை விளக்குக.**

**முன்னுரை**

★ மனிதநேயப் பண்புதான் மனிதச் சமூகத்தை வழிநடத்தக் கூடியதாகும்.

★ மனிதன் தன் வாழ்வில் சோர்ந்து போகும்போது மனிதநேயப் பண்புதான் சோர்விலிருந்து மீட்கிறது.

★ சாந்தா தத் இயற்றிய ஷகோடை மழை’ கதை மனிதநேயப் பண்பைப் பற்றி கூறுகிறது.

**தனிமை வாழ்க்கை**

★ கதையின் முதன்மை பாத்திரம் ஆறுமுகம்.

★ ஆறுமுகத்தின் மருமகள் காய்ச்சலில் இறந்துவிட்டாள்.

★ மகனும் மனைவி இறந்த சோகத்தில் தற்கொலை செய்துக்கொண்டான்.

★ எனவே, ஆறுமுகம் தன் பேரக்குழந்தையுடன் தனிமையில் வாழ்ந்து வந்தார்.

**ஆறுமுகத்தின் கவலை**

★ ஒருநாள் பேரனுக்கு உடல்நிலை சரியில்லாததால், மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றார்.

★ மருத்துவமனையில் பிற குழந்தைகள் தங்கள் பெற்றோருடன் வந்திருப்பதைக் கண்டார்.

★ பெற்றவனையும் பிள்ளையையும் பார்த்துக் கொள்ளாமல், தனிமையில் விட்டுச் சென்ற தன் மகனை எண்ணி வருந்தினார்.

★ குழந்தைக்கு நெஞ்சு சளி இருப்பதால், மருத்துவர் ஊசி போட்டு, மருந்து எழுதிக் கொடுத்தார்.

**ஆறுமுகத்தின் முடிவு**

★ ஆறுமுகம் மருந்து வாங்குவதற்காக மருந்துக்கடைக்குச் சென்றார்.

★ மருந்துக்கடையில் உள்ள பாபு ஆறுமுகத்திற்கு முன்பே பழக்கமானவர்.

★ பாபு முன்பே ஒருமுறை ஆறுமுகத்தின் பேரனைத் தத்துக்கொடுக்கும்படி கேட்டிருந்தார்.

★ குழந்தையைப் பிரிந்திருக்க முடியாது என்று எண்ணி, ஆறுமுகம் மறுத்துவிட்டார்.

★ தன் பேரனுக்குப் பெற்றோரின் அரவணைப்பு கிடைக்க வேண்டும் என்று கருதினார் ஆறுமுகம்.

★ எனவே தன் பேரனைத் தத்துக் கொடுக்க முடிவெடுத்தார்.

**மனிதநேயம்**

★ பாபு தத்தெடுக்கப் போகும் தம்பதியினரை அழைத்துக் கொண்டு வந்தார்.

★ அவர்களின் முகத்தில் அன்பும் பாசமும் நிறைந்திருந்தது.

★ ஆறுமுகம் தன் பேரன் பாதுகாப்பான இடத்திற்குத்தான் செல்கிறான் என்று எண்ணி மகிழ்ந்தார்.

★ எனினும், தன் பேரனைவிட்டுப் பிரிய இருப்பதை நினைத்து வருந்தினார்.

★ தத்தெடுக்க வந்தவர் ஆறுமுகத்தையும் தன்னுடன் வந்துவிடும்படி கூறினார்.

★ ஆறுமுகம் அதைக் கேட்டு அதிர்ந்து போனார்.

★ தன்னுடைய அனைத்துப் பிரச்சனைகளுக்கும் ஒரே நாளில் தீர்வு கிடைத்துள்ளதாக எண்ணி மகிழ்ந்தார்.

★ அவர்களுடன் செல்வதற்கு ஆறுமுகம் சம்மதித்தார்.

**முடிவுரை**

★ பிள்ளைகள் இல்லாத பெற்றோரும் பெற்றோர் இல்லாத பிள்ளைகளும் தவித்துக் கொண்டிருக்கிறார்கள்.

★ அவர்கள் ஒருவருக்கொருவர் அரவணைப்புடன் இருந்தால், மனித நேயப் பண்பு வளரும்.

## மனப்பாடப் பகுதி

### தன்னேர் இலாத தமிழ்

### தண்டியலங்காரம்

ஓங்கலிடை வந்து உயர்ந்தோர் தொழவிளங்கி
ஏங்கொலிநீர் ஞாலத்(து) இருளகற்றும் - ஆங்கவற்றுள்
மின்னேர் தனியாழி வெங்கதிரொன்(று) ஏனையது
தன்னேர் இலாத தமிழ்!

**ஆசிரியர் -** தண்டி

**பா வகை -** நேரிசை வெண்பா

### நெடுநல்வாடை

வையகம் பனிப்ப வலனேர்பு வளைஇப்
பொய்யா வானம் புதுப்பெயல் பொழிந்தென
ஆர்கலி முனைஇய கொடுங்கோல் கோவலர்
ஏறுடை இனநிரை வேறுபுலம் பரப்பிப்
புலம்பெயர் புலம்பொடு கலங்கி கோடல்
நீடுஇதழ்க் கண்ணின் நீர் அலைக் கலாவ

**ஆசிரியர்** - நக்கீரர்

**பா வகை** - நேரிசை ஆசிரியப்பா

### கம்பராமாயணம்

துன்பு உளதுஎனின் அன்றோ
சுகம் உளது? அது அன்றிப்
பின்பு உளதுளூ இடை மன்னும்
பிரிவு உளது என உன்னேல்ளூ
முன்பு உளெம் ஒரு நால்வேம்
முடிவு உளது என உன்னா
அன்பு உள, இனி, நாம் ஓர்
ஐவர்கள் உளர் ஆனோம் *(1995)*

**ஆசிரியர்** கம்பர் .

**பா வகை** - கலிவிருத்தம்

குகனோடும் ஐவர் ஆனேம்
முன்பு பின் குன்று சூழ்வான்
மக னொடும் அறுவர் ஆனேம்ளூ
எம்முழை அன்பின் வந்த
அகன் அமர் காதல் ஐய!
நின்னொடும் எழுவர் ஆனேம்ளூ
புகல் அருங் கானம் தந்து,
புதல்வரால் பொலிந்தான் நுந்தை

**பா வகை** - அறுசீர் கழிநெடிலடி விருத்தம்

### திருக்குறள்

➔ அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது.

➔ வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வான்உறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்

➔ செய்யாமல் செய்த உதவிக்கு வையகமும்
வானகமும் ஆற்ற லரிது

➔ நன்றி மறப்பது நன்றன்று நன்றல்லது
அன்றே மறப்பது நன்று

➔ எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம்ளூ உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு

➔ அ∴காமை செல்வதற்கு யாதெனின் வெ∴காமை
வேண்டும் பிறன்கைப் பொருள்.

➔ மறத்தல் வெகுளியை யார்மாட்டும்ளூ தீய
பிறத்தல் அதனான் வரும்.

➔ தன்னைத்தான் காக்கின் சினம்காக்க காவாக்கால்
தன்னையே கொல்லும் சினம்.

➔ சினம்என்னும் சேர்ந்தாரைக் கொல்லி இனம்என்னும்
ஏமப் புணையைச் சுடும்.

➔ நுண்ணிய நூல்பல கற்பினும் மற்றும்தன்
உண்மை அறிவே மிகும்.

**ஆசிரியர்** திருவள்ளுவர்

**பா வகை** - குறள் வெண்பா

### இதில் வெற்றிபெற

விண்வேறு; விண்வெளியில் இயங்கு கின்ற
வெண்மதியும் செங்கதிரும் முகிலும் வேறு;
மண்வேறு; மண்ணோடு கலந்தி ருக்கும்
மணல்வேறு; பனித்துளியும் மழையும் வேறு;
புண் வேறு; வீரர்களின் விழுப்புண் வேறு;
புகழ்வேறு; செல்வாக்கு வேறு; காணும்
கண்வேறு; கல்விக்கண் வேறு; கற்றார்
கவிநடையும் உரைநடையும் வேறு வேறு.

**ஆசிரியர்** - சுரதா

**பா வகை** - எண்சீர் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்.

www.nammakalvi.in



## புறநானூறு

அறிவும் புகழும் உடையோர் மாய்ந்தென,
வறுந்தலை உலகமும் அன்றேஎளு அதனால்
காவினெம் கலனே; சுருக்கினெம் கலப்பை;
மரங்கொல் தச்சன் கைவல் சிறாஅர்
மழுவுடைக் காட்டகத்து அற்றே
எத்திசைச் செலினும், அத்திசைக் சோறே.(206)

**ஆசிரியர்**: ஔவையார்

**பா வகை**: நேரிசை ஆசிரியப்பா

**திணை**: பாடாண்

## தெய்வமணிமாலை

ஒருமையுடன் நினதுதிரு மலரடி நினைக்கின்ற
உத்தமர்தம் உறவுவேண்டும்
உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுவோர்
உறவுகல வாமை வேண்டும்
பெருமைபெறும் நினது புகழ் பேசவேண்டும் பொய்மை
பேசா திருக்கவேண்டும்
பெருநெறி பிடித்தொழுக வேண்டும் மதமானபேய்
பிடியா திருக்கவேண்டும்

**ஆசிரியர்**: இராமலிங்க அடிகளார்

**பாவகை**: பன்னிருசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

## சிலப்பதிகாரம்

குழல்வழி நின்றது யாழே, யாழ்வழித்
தண்ணுமை நின்றது தகவே, தண்ணுமைப்
பின்வழி நின்றது முழவே, முழவோடு
கூடி நின்று இசைத்தது ஆமந்திரிகை

**ஆசிரியர்**: இளங்கோவடிகள்

**பா வகை**: ஆசிரியப்பா

## திருக்குறள்

➔ அறிவற்றம் காக்கும் கருவி செறுவார்க்கும்
உள்ளழிக்கல் ஆகா அரண்

➔ எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு

➔ எதிரதாக் காக்கும் அறிவினார்க்கு இல்லை
அதிர வருவதோர் நோய்.

➔ நல்லினத்தின் ஊங்கும் துணையில்லை; தீயினத்தின்
அல்லல் படுப்பதூஉம் இல்

➔ வினைத்திட்பம் என்பது ஒருவன் மனத்திட்பம்
மற்றைய எல்லாம் பிற

➔ சொல்லுதல் யார்க்கும் எளிய; அரியவாம்
சொல்லிய வண்ணம் செயல்

➔ உருவுகண்டு எள்ளாமை வேண்டும் உருள்பெருந்தேர்க்கு
அச்சாணி அன்னார் உடைத்து

➔ கடனறிந்து காலம் கருதி இடன்அறிந்து
எண்ணி உரைப்பான் தலை

➔ வாள்போல் பகைவரை அஞ்சற்கஎளு அஞ்சுக
கேள்போல் பகைவரை தொடர்பு

➔ பழகிய செல்வமும் பண்பும் கெடுக்கும்
கழகத்துக் காலை புகின்.

**ஆசிரியர்**: திருவள்ளுவர்

**பா வகை**: குறள்வெண்பா

## புறநானூறு

காய்நெல் அறுத்துக் கவளம் கொளினே;
மாநிறைவு இல்லதும், பல்நாட்கு ஆகும்;
நூறுசெறு ஆயினும், தமித்துப்புக்கு உணினே,
வாய்புகுவதனினும் கால்பெரிது கெடுக்கும்;

**ஆசிரியர்**: பிசிராந்தையார்

**பா வகை**: நேரிசை ஆசிரியப்பா

## இரட்சணிய யாத்திரிகம்

பாதகர் குழுமிச் சொற்ற பழிப்புரை என்னும் கொள்ளி
ஏதமில் கருணைப் பெம்மான் இருதயத்து ஊன்ற ஊன்ற
வேதனை உழந்து சிந்தை வெந்து புண்பட்டார் அல்லால்
நோதகச் சினந்தோர் மாற்ற நுவன்றிலர் கரும நோக்கி

**ஆசிரியர்**: எச். ஏ. கிருட்டிணப்பிள்ளை

**பா வகை**: அறுசீர் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

## சிறுபாணாற்றுப்படை
## நல்லியக்கோடன்

..........................என ஆங்கு
எழுசமங் கடந்த எழு உறழ் திணிதோள்
எழுவர் பூண்ட ஈகைச் செந்நுகம்
விரிகடல் வேலி வியலகம் விளங்க
ஒருதான் தாங்கிய உரனுடை நோன்தாள்

**ஆசிரியர்**: நத்தத்தனார்

**பா வகை**: நேரிசை ஆசிரியப்பா

www.nammakalvi.in



## மாதிரி வினாத்தாள் - 1

### பகுதி - 1

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க.** 14 x 1 = 14

**1. சிற்பி பாலசுப்பிரமணியத்தின் சாகித்திய அகாதெமி விருது பெற்ற நூல்**

அ) ஒளிப்பறவை ஆ) சர்ப்பயாகம் இ) சூரிய நிழல் ஈ) ஒரு கிராமத்து நதி

**2. "காவினெம் கலனே சுருக்கினேம் கலப்பை" - இத்தொடரில் 'கலன்' உணர்த்தும் பொருள்**

அ) போர்க்கருவி ஆ) தச்சுக்கருவி இ) இசைக்கருவி ஈ) வேளாண் கருவி

**3. முச்சந்தி இலக்கியம் என்பது**

**கூற்று 1: கதை வடிவிலான வடிவம் உடையது**

**கூற்று 2: பெரிய எழுத்துப் புத்தகம் என்று அழைக்கப்படுவது**

அ) கூற்று 1 சரி, கூற்று 2 தவறு ஆ) கூற்று 1, 2 சரி

இ) கூற்று 1, 2 தவறு ஈ) கூற்று 1 தவறு, கூற்று 2 சரி

**4. சேரநாட்டு மருமக்கள் தாய முறையைப் பற்றிக் கூறும் நூல்**

அ) புறநானூறு ஆ) பதிற்றுப்பத்து இ) அகநானூறு ஈ) குறுந்தொகை

**5. கன்னிமாரா நூலகம் தொடங்கப்பட்ட ஆண்டு**

அ) 1858 ஆ) 1859 இ) 1860 ஈ) 1960

**6. பேச்சுத்தமிழில் அமைந்த தொடரைத் தேர்க.**

அ) அவருக்கு நல்லது கெட்டது நல்லாத் தெரியும். ஆ) புத்தகக் கண்காட்சி நடைபெறுகிறது.

இ) வறட்சி எல்லா இடங்களையும் பாதித்துள்ளது. ஈ) மயில்கள் விறலியரைப் போல் ஆடுகின்றன.

**7. சரியானவற்றைப் பொருத்தித் தேர்க.**

அ) காதை - 1) கந்தபுராணம் ஆ) சருக்கம் - 2) சீவகசிந்தாமணி

இ) இலம்பகம் - 3) சூளாமணி ஈ) படலம் - 4) சிலப்பதிகாரம்

அ) 4,3,2,1 ஆ) 3,4,1,2 இ) 3,4,2,1 ஈ) 4,3,1,2

**8. முதல்கல் கதையின் ஆசிரியர்**

அ) பூமணி ஆ) உத்தமசோழன் இ) தி.சு. நடராசன் ஈ) தோப்பில் முகமது மீரான்

**9. பின்வருவனவற்றுள் ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சத்தைத் தேர்ந்தெடுக்க.**

அ) சிறாஅர் ஆ) வயங்குமொழி இ) அடையா ஈ) நுந்தை

**10. 'தந்தனன்' - இச்சொல்லில் 'அன்' என்பது**

அ) சந்தி ஆ) இடைநிலை இ) விகாரம் ஈ) சாரியை

**11. பின்வருவனவற்றுள் தமிழ்ச் சொல்லைத் தேர்ந்தெடுக்க.**

அ) சர்க்கார் ஆ) ஆத்மா இ) பிரபஞ்சம் ஈ) தவறு

**12.** Bibliography **- என்னும் சொல்லுக்கு இணையான தமிழ்ச்சொல்**

அ) நூல் நிரல் ஆ) தன்விவரக் குறிப்பு இ) நூல் அட்டவணை ஈ) நூல் முகப்பு

**13. பின்வருவனவற்றுள் பிழையில்லாத தொடரைத் தேர்ந்தெடுக்க.**

அ) நம் மானிலம் தமிழ்நாடு ஆ) ஐப்பசி அடைமழையில் ஊருணி நிறைந்தது

இ) மானம் பார்த்த பூமியில் பயறு விளையும் ஈ) எங்கள் ஊரில் நூலகம் கட்ட அறசு நிதி ஒதுக்கியது.

**14. மா, பலா, தென்னை ஆகியவை விளையும் இடம்**

அ) கொல்லை ஆ) தோட்டம் இ) தோப்பு ஈ) கொல்லை

www.nammakalvi.in



## பகுதி – II

**இரண்டு அல்லது மூன்று வரிகளில் விடையளிக்கவும்.** 12 x 2 = 24

### பிரிவு - 1

**அ) எவையேனும் மூன்றனுக்கு விடை தருக.**

**15. கவிஞர் சிற்பி எவற்றை வியந்து பாட, தமிழின் துணை வேண்டும் என்கிறார்?**

**16. ஒவ்வொருவரையும் வரவேற்க வேண்டியதற்கான காரணமாக ஜலாலுத்தீன் ரூமி கூறுவது யாது?**

**17. தேவாரப் பாடலில் குறிப்பிடப்பட்டுள்ள மயிலாப்பூரின் சிறப்புகள் யாவை?**

**18. ஒரு தேநீரைப் பருகும்போது அதற்குப் பின்னால் உள்ள மனித உழைப்பைச் சிந்தித்து உங்கள் கருத்தை எழுதுக.**

### பிரிவு - 2

**ஆ) எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.**

**19. நம்நாட்டில் கடந்த பதினைந்து ஆண்டுகளில் பருவநிலை மாற்றத்தால் ஏற்பட்ட இயற்கை நிகழ்வுகள் குறித்தெழுதுக.**

**20. முறை வைப்பது என்றால் என்ன?**

**21. பின்னணி இசை படத்தின் காட்சியமைப்புக்கு எவ்வாறு உயிரூட்டும்? சான்று தருக.**

### பிரிவு - 3

**எவையேனும் ஏழனுக்கு விடை தருக.**

**22. ஏதேனும் ஒன்றனுக்குப் பகுபத உறுப்பிலக்கணம் தருக.** *விம்முகின்ற* *வியந்து*

**23. ஏதேனும் ஒன்றனுக்குப் புணர்ச்சிவிதி தருக.** *வானமெல்லாம்* *வெங்கதிர்*

**24. மயங்கொலி சொற்களை ஒரே தொடரில் அமைத்து எழுதுக.** *தலை, தளை, தழை*

**25. வினாக்கேற்ற விடை அமைக்க.**

*நடுவண்அரசு 2005ஆம் ஆண்டு டிசம்பர் 23 அன்று தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையம் அமைத்தது.*

**26. மரபுச் சொற்களைத் தொடரில் அமைத்து எழுதுக.** *ஆற அமர*

**27. பேச்சு வழக்கை எழுத்து வழக்காக மாற்றுக.** *இப்ப எனக்குப் புரிஞ்சு போச்சு. நீயும் புரிஞ்சிக்கோ.*

**28. அடைப்புக்குள் உள்ள பெயர்ச்சொல்லைத் தொடர்களுக்கு ஏற்றவாறு மாற்றி எழுதுக.**

*கபிலன் திறமையாளனவர் என்று -------------------- (குமரன்) தெரியும்.*

**29. தமிழில் பிழையின்றி எழுதுவதற்கு மேற்கொள்ள வேண்டிய முயற்சிகள் யாவை?**

**30. குறியீட்டு உத்தியின் அடிப்படை இலக்கணங்களை எழுதுக.**

## பகுதி III

**ஆறு வரிகளுக்கு மிகாமல் விடையளிக்க** 7 x 4 = 28

### பிரிவு - 1

**அ) எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.**

**31. வாடைக் காலத்தில் கோவலர்கள் எவ்வாறு பாதுகாப்பைத் தேடினர்?**

**32. கவிதை எழுதும்முறை குறித்து சுரதா கூறுவது யாது?**

**33. தலைக்கோல் குறித்து சிலப்பதிகாரம் கூறுவது யாது?**

**34. கொடை வழங்குதலில் நீங்கள் பின்பற்ற விரும்புவனவற்றை எழுதுக.**

### பிரிவு - 2

**ஆ) எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.**

**35. நடை அழகில் பற்றித் தொல்காப்பியம் கூறும் கருத்தைக் குறிப்பிடுக.**

36. "மனையுறை மகளிர்க்கு ஆடவர் உயிரே" என்னும் அடிகள் உணர்த்தும் செய்தியைக் கூறுக.

37. வண்ணாரப்பேட்டை, சிந்தாதிரிப்பேட்டை போன்ற பகுதிகள் தோன்றியதற்கான காரணம் என்ன?

38. கோவூர்கிழார் வியப்பதற்கான காரணம் என்ன?

## பிரிவு - 3

எவையேனும் மூன்றனுக்கு விடை தருக. 3 x 4 = 12

39. சொற்பொருள் பின்வரும் நிலையணியை விளக்கி எழுதுக. (அல்லது) நெய்தல்திணையை விளக்குக.

40. இலக்கிய நயம் பாராட்டுக.

பிறப்பினால் எவர்க்கும் - உலகில்
பெருமை வாராதப்பா
சிறப்பு வேண்டுமெனில் - நல்ல
செய்கை வேண்டுமப்பா
நன்மை செய்பவரே - உலகம்
நாடும் மேற்குலத்தார்
தின்மை செய்பவரே - அண்டித்
தீண்ட ஒண்ணாதார் - கவிமணி தேசிக விநாயகம்

41. பழமொழியை வாழ்க்கை நிகழ்வோடு தொடர்புபடுத்தி எழுதுக.

யானைக்கு அடிசறுக்கும்/தினை விதைத்தவன் தினை அறுப்பான் வினை விதைத்தவன் வினை அறுப்பான்

42. தமிழாக்கம் தருக.

I make sure I have the basic good habits which include respecting my elders, greeting people when I meet them, wishing them well when departing etc. Other than this, observing the law, serving the poor and downtrodden, helping the sick and needy, giving shelter to the homeless, assisting someone with a physically challenged etc. are also other good habits of mine. To lead on a peaceful life, I develop other good habits, writing, listening to music, dancing, singing etc. are other such habits which fulfil the needs of my soul.

## பகுதி - IV

இருபக்கங்களுக்கு மிகாமல் விடையளிக்க. 3 x 6 = 18

43. தமிழின் சீரிளமைத் திறம் வியந்து கவிஞர் சிற்பி பாலசுப்பிரமணியம் கூறுவனவற்றைத் தொகுத்து எழுதுக.

(அல்லது)

அறிவுடைமை வாழ்வின் உயர்வுக்குத் துணைநிற்கும் என்பதை வள்ளுவம் வழி நின்று நிறுவுக.

44. புயல் தாக்கத்தினால் குடியிருப்புகளுக்கு அருகில் அறுந்துகிடக்கும் மின் இணைப்புகளைச் சரிசெய்யக் கோரி உங்கள் ஊர் பொறியாளருக்குக் கடிதம் எழுதுக. (அல்லது)

சென்னையின் தொன்மை குறித்து கட்டுரை வரைக.

45. 'உரிமைத்தாகம்' கதையைச் சுருக்கி எழுதுக. (அல்லது)

சங்ககால வரலாற்றை அறிந்துகொள்ள, புகளூர்க் கல்வெட்டு எவ்வகையில் துணைபுரிகிறது - விளக்குக.

## பகுதி - V

அடிபிறழாமல் செய்யுள் வடிவில் எழுதுக. 4 + 2 = 6

46. "காய்நெல் அறுத்து" - எனத் தொடங்கும் புறநானூற்றுப் பாடலை எழுதுக.

47. "மிகும்" என முடியும் குறட்பாவை எழுதுக.

www.nammakalvi.in



## மாதிரி வினாத்தாள் 2

## பகுதி - 1

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க.** 14 x 1 = 14

**1. போர்மேற் சென்ற அரசன் குளிர் காலத்தில் தங்கும் படைவீடு**

அ) குளிர் பாசறை ஆ) கூதிர்ப்பாசறை இ) வாடைப்பாசறை ஈ) நெடும்பாசறை

**2. இராமலிங்க அடிகளார் பேய் என்று குறிப்பிடுவது**

அ) சாதி ஆ) மதம் இ) நட்பு ஈ) அன்பு

**3. சிறுபாணாற்றுப்படை காட்டும் பாட்டுடைத்தலைவனின் இன்றைய நிலப்பகுதி**

அ) உதகமண்டலம் ஆ) விழுப்புரம் இ) திண்டிவனம் ஈ) தருமபுரி

**4. அழகியலை உருவாக்குவதற்குத் தளம் அமைத்துத் தருகின்ற நூல்**

அ) தொல்காப்பியம் ஆ) அகத்தியம் இ) நன்னூல் ஈ) தண்டியலங்காரம்

**5. பின்வருவனவற்றுள் வெ. இறையன்பு எழுதிய நூல்களுள் அல்லாததைத் தேர்க.**

அ) வாய்க்கால் மீன்கள் ஆ) வெற்றிப் படிக்கட்டுகள் இ) மூளைக்குள் சுற்றுலா ஈ) தமிழ்நதி

**6. வல்லினம் மிகும், மிகாத் தொடர்களின் பொருளறிந்து பொருத்துக.**

அ) பாலை பாடினான் - 1) தேரை என்னும் உயிரினத்தைப் பார்த்தான்.

ஆ) பாலைப் பாடினான் - 2) தேரினைப் பார்த்தான்

இ) தேரை பார்த்தான் - 3) பாலினைப் பாடினான்

ஈ) தேரைப் பார்த்தான் - 4) பாலைத் திணை பாடினான்

அ) 4,1,3,2 ஆ) 2,3,1,4 இ) 4,3,1,2 ஈ) 2,4,1,3

**7. பதின்மூன்றடி முதல் அதற்கும் மேற்பட்ட அடிகள்வரை வரும் வெண்பா**

அ) குறள்வெண்பா ஆ) நேரிசை வெண்பா இ) இன்னிசை வெண்பா ஈ) கலிவெண்பா

**8. வ.உ. சிதம்பரனாரின் வாழ்க்கை வரலாற்றை எழுதியவர்**

அ) சு. நெல்லையப்பர் ஆ) வெ. இறையன்பு இ) தி.சு. நடராசன் ஈ) உத்தமசோழன்

**9. சிவாஜிகணேசனின் நடிப்பிற்குச் செவாலியர் விருது வழங்கிய அரசு**

அ) இந்திய அரசு ஆ) தமிழ்நாடு அரசு இ) பிரெஞ்சு அரசு ஈ) பிரிட்டிஷ் அரசு

**10. 'உள்ளொன்று' என்னும் சொல்லுக்குப் பொருந்தும் புணர்ச்சிவிதி**

அ) இஈஐவழி யவ்வும் ஆ) உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும்

இ) ஈறுபோதல் ஈ) தனிக்குறில் முன்ஒற்று உயிர்வரின் இரட்டும்

**11. 'உழாஅது' என்னும் சொல்**

அ) சொல்லிசை அளபெடை ஆ) செய்யுளிசை அளபெடை இ) இன்னிசை அளபெடை ஈ) இசைநிறையளபெடை

**12. மரபுப்பிழையற்றத் தொடரைத் தேர்ந்தெடுக்க.**

அ) கோவிந்தன் குடியிருக்க சுவர் கட்டி கூரை அமைத்தார்.

ஆ) வனவிலங்குக் காப்பகத்தில் சிங்கக் குட்டியும் யானைக்குட்டியும் கண்டேன்.

இ) ஆட்டுத் தொழுவத்தைச் சுற்றிலும் எலிகள் பொந்துகள் அமைத்திருந்தன.

ஈ) முருகன் சோறு உண்டு, பால் குடித்தான்.

**13.** Subscription **என்ற சொல்லுக்கு இணையான தமிழ்ச்சொல்**

அ) உறுப்பினர் கட்டணம் ஆ) புனைவு இ) வாழ்க்கை வரலாறு ஈ) ஆவணம்

**14. பின்வருவனவற்றுள் வேற்றுமொழிச் சொல்லைத் தேர்ந்தெடுக்க.**

அ) கட்டணம் ஆ) விண்ணப்பம் இ) பயமில்லை ஈ) நீரோடை

## பகுதி – II

**இரண்டு அல்லது மூன்று வரிகளில் விடையளிக்கவும்.** 12 x 2 = 24

### பிரிவு - 1

**அ) எவையேனும் மூன்றனுக்கு விடை தருக.**

**15. வாகைத்திணை என்றால் என்ன?**

**16. ஔவையார் பாடிய சங்கப் பாடல்களின் எண்ணிக்கையைக் கூறுக.**

**17. எண்வகை மெய்ப்பாடுகள் யாவை?**

**18. முகம் முகவரியற்றுப் போனதற்கு சுகந்தி சுப்பிரமணியன் கூறும் காரணத்தை எழுதுக.**

### பிரிவு - 2

**ஆ) எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.**

**19.நடையியல் - விளக்குக.**

**20. இல்வாழ்வின் பயன் யாது?**

**21. மயிலை சீனி. வேங்கடசாமியின் ஆய்வுக்கட்டுரைகள் வெளியான இதழ்கள் யாவை?**

### பிரிவு - 3

**எவையேனும் ஏழனுக்கு விடை தருக.**

**22. ஏதேனும் ஒன்றனுக்குப் பகுபத உறுப்பிலக்கணம் தருக.** பேசுவார் வெகுளி

**23. ஏதேனும் ஒன்றனுக்குப் புணர்ச்சிவிதி தருக.** பூம்பாவாய் உள்ளொன்று

**24. தொடரில் இடம்பெற்றுள்ள மரபுப் பிழையை நீக்கி எழுதுக.**

வாழைக்காட்டில் குயில்கள் அலறிக்கொண்டும் காகங்கள் கூவிக்கொண்டும் இருந்தன.

**25. தேவையான இடங்களில் நிறுத்தற்குறிகளை இட்டு எழுதுக.**

இளங்கோ அடிகள் சாத்தனாரிடம் முன்செய்த வினை நிறைவேறும் காலம் என்றீர்களே அவர்களுடைய முந்தைய வினை யாது அதன் விளைவு என்ன நிகழ்ந்த காலம் யாது அதை நீங்கள் அறிந்திருந்தால் கூறுக எனக் கேட்டார்.

**26. சொல்லைப் பிரித்தும் சேர்த்தும் தொடரமைக்க.** கோவில்

**27. மரபுச் சொற்களைத் தொடரில் அமைத்து எழுதுக.** கண்துடைப்பு

**28. மயங்கொலிச் சொற்களை ஒரே தொடரில் அமைத்து எழுதுக.** விலை, விளை, விழை

**29. உயர்திணைப் பன்மைப் பெயர்கள், பன்மை விகுதி பெற்றுவருமாறு இரண்டு தொடர்களை எழுதுக.**

**30. தொன்மம் - விளக்கம் தருக.**

## பகுதி III

**ஆறு வரிகளுக்கு மிகாமல் விடையளிக்க** 7 x 4 = 28

### பிரிவு - 1

**அ) எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.**

**31."ஏங்கொலிநீர் ஞாலத்து இருளகற்றும்" - இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.**

**32. இராமனும் சுக்ரீவனும் சந்தித்த நிகழ்வைக் கூறுக.**

**33. மனத்திட்பம் அவசியமான பண்பு என்பதைக் குறள்நெறி நின்று விளக்குக.**

**34. யானை புக்க புலம்போலத் தானும் உண்ணான் உலகமும் கெடுமே - உவமையையும் பொருளையும் பொருத்தி எழுதுக.**

www.nammakalvi.in



## பிரிவு - 2

**ஆ) எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.**

**35. மழைக்காலங்களில் இயல்பான வாழ்க்கை வாழ முடிகிறதா? இல்லையெனில், அதற்கான காரணம் யாது?**

**36. சுவடிகள் குறித்து விளக்குக.**

**37. சென்னையின் தொன்மை குறித்து விவரிக்க.**

**38. மயிலை சீனி. வேங்கடசாமியின் கலையியல் ஆய்வுகள் குறித்தெழுதுக.**

## பிரிவு - 3

**எவையேனும் மூன்றனுக்கு விடை தருக.** 3 x 4 = 12

**39. நிரல்நிறை அணியை எடுத்துக்காட்டுடன் விளக்குக. (அல்லது) பரிசில்துறையை விளக்கி எழுதுக.**

**40. இலக்கிய நயம் பாராட்டுக.**

முச்சங்கங் கூட்டி
முதுபுலவர் தமைக் கூட்டி
அச்சங்கத் துள்ளே
அளப்பரிய பொருள்கூட்டி
சொற்சங்க மாகச்
சுவைமிகுந்த கவிகூட்டி
அற்புதங்க ளெல்லாம்
அமைத்த பெருமாட்டி!
- கண்ணதாசன்

**41. பழமொழியை வாழ்க்கை நிகழ்வோடு தொடர்புபடுத்தி எழுதுக.**

குற்றம் பார்க்கின் சுற்றம் இல்லை (அல்லது) வாய்மையே வெல்லும்

**42. தமிழாக்கம் தருக.**

1. Learning is a treasure that will follow its owner everywhere.
2. A new language is a new life.
3. If you want people to understand you. Speak their language.
4. Knowledge of languages is the doorway to wisdom.
5. The limits of my language are the limits of my world.

## பகுதி - IV

**இருபக்கங்களுக்கு மிகாமல் விடையளிக்க.** 3 x 6 = 18

**43. நெடுநல்வாடையில் நக்கீரர் காட்டும் மழைக்கால வருணனையைச் சொல்லில் வடிக்க. (அல்லது)**

**எச்.ஏ. கிருட்டிணனார் "கிறித்தவக் கம்பரே" என்பதை நும் பாடப்பகுதிவழி நிறுவுக.**

**44. பண்டைக்காலக் கல்விமுறையில் ஆசிரியர் மாணவர்களுக்கிடையே நிகழ்ந்த கற்றல், கற்பித்தல் முறைகளைத் தொகுத்தெழுதுக. (அல்லது)**

**நிருவாக மேலாண்மை குறித்து வெ. இறையன்பு கூறும் கருத்துகளைத் தொகுத்தெழுதுக.**

**45. 'முதல்கல்' கதையை நாடகவடிவில் எழுதுக. (அல்லது)**

**உங்கள் ஊர்ப் பகுதியில் வாழும் கலைஞர் ஒருவரை நேரில் பார்த்த அனுபவத்தை விவரித்துக் கட்டுரையாக்குக.**

## பகுதி - V

**அடிபிறழாமல் செய்யுள் வடிவில் எழுதுக.** 4 + 2 = 6

**46. "ஓங்கலிடை வந்து" எனத் தொடங்கும் தண்டியலங்காரப் பாடலை எழுதுக.**

**47. "செயல்" என முடியும் குறட்பாவை எழுதுக.**

www.nammakalvi.in



## மாதிரி வினாத்தாள் 3

## பகுதி - 1

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க.** 14 x 1 = 14

**1. "துன்பு உளதுஎனின் அன்றோ சுகம் உளது?" என்றவன்**

அ) குகன் ஆ) இராமன் இ) சடாயு ஈ) சுக்ரீவன்

**2. மாதவி தன் நாட்டியத்தை அரங்கேற்றம் செய்த வயது**

அ) பதினொன்று ஆ) பன்னிரண்டு இ) பதின்மூன்று ஈ) பதினான்கு

**3. "எனது முகம் முகவரியற்றுப் போனது" என்றவர்**

அ) சுகந்தி ஆ) நத்தத்தனார் இ) தமிழ்நதி ஈ) இராவுத்தர்

**4. வெள்ளச் சமவெளிகள் அழியக் காரணம்**

அ) பருவநிலை மாற்றம் ஆ) மணல் அள்ளுதல்

இ) பாறைகள் இல்லாமை ஈ) நிலத்தடிநீர் உறிஞ்சப்படுதல்

**5. பொருத்துக**

அ) வித்தியாரம்பம் - 1) கல்விப் பயிற்சி ஆ) வித்தியாப்பியாசம் - 2) ஆசிரியர்

இ) உபாத்தியாயர் - 3) எழுத்துப் பயிற்சி ஈ) அக்ஷராப்பியாம் - 4) கல்வித்தொடக்கம்

அ) 4,1,2,3 ஆ) 4,3,2,1 இ) 4,1,3,2 ஈ) 4,2,1,3

**6. கூற்று: உவமைபோலப் படிமமும் வினை, பயன், மெய், உரு ஆகியவற்றின் அடிப்படையில் தோன்றும்.**

**காரணம்: எவ்வகையான படிமமாக இருந்தாலும் அது காட்சி வழியே கருத்தனை விளக்குவதில்லை.**

அ) கூற்று சரி, காரணம் தவறு ஆ) கூற்று தவறு, காரணம் சரி

இ) கூற்றும் சரி, காரணமும் சரி ஈ) கூற்றும் தவறு, காரணமும் தவறு

**7. சொல்லின் முதலில் வராத மெல்லின எழுத்துகள்**

அ) ஞ, ங ஆ) ண, ந இ) ண, ன ஈ) ன, ம

**8. பூமணியின் 'அஞ்ஞாடி' நூல் சாகித்திய அகாதெமி விருது பெற்ற ஆண்டு**

அ) 2010 ஆ) 2012 இ) 2014 ஈ) 2018

**9. புகளூர்க் கல்வெட்டில் குறிப்பிடப்பட்டுள்ள மன்னன்**

அ) சேரன் ஆ) சோழன் இ) பாண்டியன் ஈ) பல்லவன்

**10. 'பழித்தனர்' என்னும் சொல்லில் உள்ள விகுதி**

அ) ஒன்றன்பால் விகுதி ஆ) பலர்பால் விகுதி இ) பலவின்பால் விகுதி ஈ) ஆண்பால் விகுதி

**11. பின்வருவனவற்றுள் 'ஈறுபோதல்' விதி பொருந்தும் சொல்**

அ) உரனுடை ஆ) ஏழையென இ) பூம்பாவாய் ஈ) பெருங்கடல்

**12. ஒலி மரபைப் பறவைகளின் பெயர்களோடு பொருத்துக.**

1. குருவி - i) கீச்சிடும் 2. கூகை - ii) குழறும்

3. கோழி - iii) கொக்கரிக்கும் 4. மயில் - iv) அகவும்

அ) i, ii, iii, iv ஆ) i, iii, ii, iv இ) i, iii, iv, ii ஈ) i, ii, iv, iii

**13. பின்வருவனவற்றுள் பிழையற்ற தொடரைத் தேர்ந்தெடுக்க.**

அ) ஆர்ரின் வலப்புறம் உள்ள வயல்கள் நீர்வளத்தால் செழித்திருந்தன.

ஆ) ஆற்றின் வளப்புறம் உள்ள வயல்கள் நீர்வலத்தால் செழித்திருந்தன.

இ) ஆற்றின் வலப்புறம் உள்ள வயல்கள் நீர்வளத்தால் செழித்திருந்தன.

ஈ) ஆற்றின் வளப்புறம் உள்ள வயல்கள் நீர்வலத்தால் செளித்திருந்தன.

www.nammakalvi.in



**14.** Metro Train **என்ற சொல்லுக்கு இணையான தமிழ்ச்சொல்**

அ) நடைமேடை ஆ) இருப்புப்பாதை இ) பயணச்சீட்டு ஆய்வர் ஈ) மாநகரத் தொடர்வண்டி

## பகுதி – II

**இரண்டு அல்லது மூன்று வரிகளில் விடையளிக்கவும்.** 12 x 2 = 24

### பிரிவு - 1

**அ) எவையேனும் மூன்றனுக்கு விடை தருக.**

**15. பொருள் வேற்றுமை அணி என்றால் என்ன?**

**16. எதிர்பாராத நிகழ்வுகளை ஜலாலுத்தீன் ரூமி எவ்வாறு உருவகப்படுத்துகிறார்?**

**17. கவிஞர் நகுலனின் படைப்புகள் யாவை?**

**18. அதியமான் நெடுமான் அஞ்சி குறித்து நீவிர் அறிந்தனவற்றைக் கூறுக.**

### பிரிவு - 2

**ஆ) எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.**

**19. பருவநிலை மாற்றத்திற்கான காரணத்தைக் கூறுக.**

**20. மாணவர்களின் கல்வி எந்த நிலையிலும் தடைபடாமல் இருந்ததற்கான காரணங்களாக நீவிர் கருதுவனவற்றை எழுதுக.**

**21. கோவூர்கிழார் யாரை எதற்காக வியந்துப் பாடுகிறார்?**

### பிரிவு - 3

**எவையேனும் ஏழனுக்கு விடை தருக.**

**22. ஏதேனும் ஒன்றனுக்குப் பகுபத உறுப்பிலக்கணம் தருக.** அறிந்து பகைத்த

**23. ஏதேனும் ஒன்றனுக்குப் புணர்ச்சிவிதி தருக.** ஏழையென செந்தமிழே

**24. உவமைத் தொடர்களைச் சொற்றொடர்களில் அமைத்து எழுதுக.** தாமரை இலை நீர்போல

**25. வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக.**

என்னுடைய நம்பிக்கை முழுவதுமே புதியத் தலைமுறை மீதுதான் அவர்கள் எல்லா பிரச்சினைகளையும் ஒரு சிங்கத்தை போல எதிர்கொண்டுத் தீர்ப்பார்கள்.

**26. பேச்சு வழக்கை எழுத்து வழக்காக மாற்றுக.** புள்ளைக்கு உடம்பு சரியில்லை மூணு நாளா சிரமப்படுது.

**27. பொருத்தமான வேற்றுமை உருபுகளைச் சேர்த்து முறையான தொடர்களாக ஆக்குக.**

சான்றோர் மதிப்பு கொடுத்து வாழ்வு உயரலாம்.

**28. மூன்றடியில் ஒரு துளிப்பா எழுதுக.**

**29. காற்புள்ளி இடாமல் எழுதுவதனால் ஏற்படும் பொருள்மயக்கத்திற்குச் சான்று தருக.**

**30. பாவிகம் - விளக்குக.**

## பகுதி III

**ஆறு வரிகளுக்கு மிகாமல் விடையளிக்க** 7 x 4 = 28

### பிரிவு - 1

**அ) எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.**

**31. "வையகம் பனிப்ப வலனேர்பு வளைஇப்" - இடஞ்சுட்டிப் பொருள் விளக்கம் தருக.**

**32. 'வாயிலோயே' எனத் தொடங்கும் புறநானூற்றுப்பாடல் பாடாண் திணைக்கு உரியது என்பதை நிறுவுக.**

**33. இராமலிங்க அடிகள் கந்தவேளிடம் எத்தகையோர் உறவு வேண்டுமெனக் கேட்கிறார்?**

**34. அதிசய மலரின் பூச்செடி எவ்வாறு முளைத்ததாக, தமிழ்நதி கூறுகிறார்?**

www.nammakalvi.in


## பிரிவு - 2

**ஆ) எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.**

**35. கலை முழுமை குறித்தெழுதுக.**

**36. பண்டைய விரிந்த குடும்பத்தின் தொடர்ச்சியே இன்றைய கூட்டுக் குடும்பம் - விளக்கம் எழுதுக.**

**37. திரைப்படத்தின் காட்சியின் ஆற்றலை எடுத்துக்காட்டுடன் புலப்படுத்துக.**

**38. மயிலை சீனி. வேங்கடசாமியின் கலையியல் ஆய்வுகள் குறித்தெழுதுக.**

## பிரிவு - 3

**எவையேனும் மூன்றனுக்கு விடை தருக.** 3 ஓ 4 ஸ்ரீ 12

**39. வாகைத்திணையை எடுத்துக்காட்டுடன் விளக்குக. (அல்லது) செவியறிவுறூஉ துறையை எடுத்துக்காட்டுடன் விளக்குக.**

**40. இலக்கிய நயம் பாராட்டுக.**

வெட்டியடிக்குது மின்னல் - கடல்
வீரத் திரைகொண்டு விண்ணை யிடிக்குது
கொட்டி யிடிக்குது மேகம் - கூ
கூவென்று விண்ணைக் குடையுது காற்று
சட்டச்சட சட்டச்சட டட்டா - என்று
தாளங்கள் கொட்டிக் கனைக்குது வானம்
எட்டுத்திசையும் இடிய - மழை
எங்ஙனம் வந்ததடா தம்பி வீரா!
- பாரதியார்

**41. பழமொழியை வாழ்க்கை நிகழ்வோடு தொடர்புபடுத்தி எழுதுக.**

எறும்பு ஊரக் கல்லும் தேயும் (அல்லது) ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு

**42. தமிழாக்கம் தருக.**

1. "If there is no struggle, there is no progress." - Frederick Douglass
2. "Pleasure in the job puts perfection in the work." - Aristotle
3. "Honesty is the best policy." - Benjamin Franklin
4. "If you can dream it> you can do it." - Walt Disney
5. "Change your thoughts and you change your world." - Norman Vincent

## பகுதி - IV

**இருபக்கங்களுக்கு மிகாமல் விடையளிக்க.** 3 x 6 = 18

**43. பண்பின் படிமமாகப் படைக்கப்பட்ட இராமன், பிற உயிர்களுடன் கொண்டிருந்த உறவு நிலையைப் பாடப்பகுதி வழி நிறுவுக. (அல்லது)**
**எளிய மக்களின் வலிகளை நாட்டுப்புற இலக்கிய வடிவங்களே முழுமையாகப் பிரதிபலிக்கின்றன - நிறுவுக.**

**44. கவிதையின் நடையைக் கட்டமைக்கும் அழகியல் கூறுகளை எடுத்துக்காட்டி விளக்குக. (அல்லது)**
**சார்லி சாப்ளினின் வாழ்க்கைக் குறித்து நீவிர் அறிந்தனவற்றை விவரிக்க.**

**45. "கிராமங்கள் தங்கள் முகவரியை இழந்து வருகின்றன" - இது குறித்து உங்கள் கருத்தை விவரிக்க. (அல்லது) கோடைமழை கதை வாயிலாக விளக்கப்படும் மனிதநேயப் பண்புகளை விளக்குக.**

## பகுதி - V

**அடிபிறழாமல் செய்யுள் வடிவில் எழுதுக.** 4 + 2 = 6

**46. "வையகம் பனிப்ப" - எனத் தொடங்கும் நெடுநல்வாடை பாடலை எழுதுக.**

**47. "வரும்" என முடியும் குறட்பாவை எழுதுக.**

## மாதிரி வினாத்தாள் 4

## பகுதி - 1

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க.** 14 x 1 = 14

**1. ”மின்னேர் தனியாழி வெங்கதிரொன்று ஏனையது தன்னேர் இலாத தமிழ்” - இவ்வடிகளில் பயின்று வந்துள்ள தொடைநயம்**

அ) அடிமோனை, அடி எதுகை ஆ) சீர்மோனை, சீர் எதுகை

இ) அடி எதுகை, சீர் மோனை ஈ) சீர் எதுகை, அடி மோனை

**2. படத்துக்குப் பொருத்தமான திருக்குறளைக் கண்டுபிடிக்க**



அ) அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை பண்பும் பயனும் அது.

ஆ) வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும் தெய்வத்துள் வைக்கப் படும்.

இ) சினம்என்னும் சேர்ந்தாரைக் கொல்லி இனம்என்னும் ஏமப் புணையைச் சுடும்.

ஈ) தன்னைத்தான் காக்கின் சினம்காக்க் காவாக்கால் தன்னையே கொல்லும் சினம்.

**3. "பலர் துஞ்சவும் தாம் துஞ்சான்" - விழித்திருந்தவரும் அவரைப் பாடியவரும்**

அ) சோழன் நெடுங்கிள்ளியை, பாணர் ஆ) சோழன் நலங்கிள்ளியை, கோவூர்கிழார்

இ) கணைக்கால் இரும்பொறையை, கபிலர் ஈ) கரிகாலனை, உருத்திரங்கண்ணனார்

**4. பொருந்தாத ஒன்றைக் கண்டறிக.**

அ) தனித்தமிழ்த் தந்தை - 1) மு. வரதராசனார் ஆ) ஆராய்ச்சிப் பேரறிஞர் - 2) மயிலை சீனி. வேங்கடசாமி

இ) தமிழ்த் தென்றல் - 3) திரு.வி.க. ஈ) மொழி ஞாயிறு - 4) தேவநேயப் பாவாணர்

**5. வேறுபட்டதைக் குறிப்பிடுக.**

அ) அண்மைக் காட்சித் துணிப்பு ஆ) சேய்மைக் காட்சித் துணிப்பு

இ) நடுக் காட்சித் துணிப்பு ஈ) காட்சி மறைவு

**6. சாபவிமோசனம், அகலிகை கதைகளில் தொன்மங்களைப் பயன்படுத்தியவர்**

அ) கு. அழகிரிசாமி ஆ) புதுமைப்பித்தன் இ) ஜெயமோகன் ஈ) எஸ். இராமகிருஷ்ணன்

**7. தமிழில் திணைப்பாகுபாடு --------------- அடிப்படையில் பகுக்கப்பட்டுள்ளது.**

அ) பொருட்குறிப்பு ஆ) சொற்குறிப்பு இ) தொடர்க்குறிப்பு ஈ) எழுத்துக்குறிப்பு

**8. சுரதா நடத்திய கவிதை இதழ்**

அ) இலக்கியம் ஆ) காவியம் இ) ஊர்வலம் ஈ) விண்மீன்

**9. கோடைமழை சிறுகதையின் ஆசிரியர்**

அ) காலின் மெக்கன்சி ஆ) சாந்தா தத் இ) சற்குணர் ஈ) திரு.வி.க

**10. பின்வருவனவற்றுள் அடுக்குத்தொடரைக் கண்டறிக.**

அ) செம்பரிதி ஆ) கலகல இ) முத்துமுத்தாய் ஈ) சலசல

**11. இனநிரை = இனம் + நிரை என்னும் புணர்ச்சிக்குப் பொருந்தும் விதி**

அ) ஈறுபோதல் ஆ) மவ்வீறு ஒற்றழிந்து உயிரீறு ஒப்பவும்

இ) ஆதிநீடல் ஈ) இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன் கசதப மிகும்

**12. நெல்லின் பிஞ்சு நிலையைக் குறிக்கும் சொல்**

அ) கச்சல் ஆ) கருக்கல் இ) நுழாய் ஈ) மூசு

www.nammakalvi.in


**13.'ஓய்வறை' என்ற சொல்லுக்கு இணையான ஆங்கிலச்சொல்**

அ) Lobby ஆ) Checkout இ) Tips ஈ) Mini meals

**14.பின்வரும் மலரின் நிலைகளை வரிசைப்படுத்துக.**

அ) அலர் - வீ - செம்மல் - அரும்பு - போது ஆ) வீ - செம்மல் - அரும்பு - போது - அலர்

இ) செம்மல் - அரும்பு - போது - அலர் - வீ ஈ) அரும்பு - போது - அலர் - வீ செம்மல்

## பகுதி - II

**இரண்டு அல்லது மூன்று வரிகளில் விடையளிக்கவும்.** 12 x 2 = 24

## பிரிவு - 1

**அ) எவையேனும் மூன்றனுக்கு விடை தருக.**

**15. குளிர்காலத்தில் காட்டில் நிகழ்ந்தனவாக நெடுநல்வாடை கூறுவது யாது?**

**16. வசனம், கவிதை வேறுபாடு தருக.**

**17. கலிவிழா, ஒளிவிழா - விளக்கம் தருக.**

**18. செவியறிவுறூஉ துறையை விளக்குக.**

## பிரிவு - 2

**ஆ) எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.**

**19.இயல்பு வழக்குகளைக் கலையியல் வழக்குகளாக மாற்றுபவை எவை?**

**20. சங்க இலக்கியத்தில் வாழிடத்திற்கு வழங்கப்படும் வேறு பெயர்கள் யாவை?**

**21.'தமிழர் வளர்த்த அழகுக் கலைகள்' நூல் பற்றிக் குறிப்பு வரைக.**

## பிரிவு - 3

**எவையேனும் ஏழனுக்கு விடை தருக.**

**22. ஏதேனும் ஒன்றனுக்குப் பகுபத உறுப்பிலக்கணம் தருக.** ஈந்த கலங்கி

**23. ஏதேனும் ஒன்றனுக்குப் புணர்ச்சிவிதி தருக.** நன்மொழி எத்திசை

**24. மயங்கொலி சொற்களை ஒரே தொடரில் அமைத்து எழுதுக.** அலை, அளை, அழை

**25. தொடரில் உள்ள பிழைகளை நீக்கி எழுதுக.** எங்கள் ஊரில் நூலகக் கட்டிடம் கட்ட அறசு நிதி ஒதுக்கியது.

**26. அடைப்புக்குள் உள்ள பெயர்ச்சொல்லைத் தொடர்களுக்கு ஏற்றவாறு மாற்றி எழுதுக.**

நேற்று முதல் ------------------------ (அணை) நீர்மட்டம் உயர்ந்து வருகிறது.

**27. உவமைத் தொடர்களைச் சொற்றொடர்களில் அமைத்து எழுதுக.** உள்ளங்கை நெல்லிக்கனிபோல

**28. வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக.**

மாணவர்கள் பெற்றோர்களை தமது நண்பர்களாக பாவித்து நட்புக் கொள்ள வேண்டும். தமது இன்ப துன்பங்களை பெற்றோர்களுடன் பகிர்ந்துக் கொள்ள வேண்டும்.

**29. ஒரு விகற்பம், பல விகற்பம் என்றால் என்ன?**

**30. "மாந்தோப்பு வசந்தத்தின் பட்டாடை உடுத்தியிருக்கிறது" - இதில் எவ்வகைப் படிமம் வெளிப்படுகிறது?**

## பகுதி III

**ஆறு வரிகளுக்கு மிகாமல் விடையளிக்க** 7 x 4 = 28

## பிரிவு - 1

**அ) எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.**

**31.தமிழையும் கதிரவனையும் ஒப்பிட்டுத் தண்டியலங்காரப் பாடல் கூறும் கருத்துகளை எழுதுக.**

**32. சினத்தால் வரும் கேட்டினைக் கூறுக.**

**33. நாட்டிய அரங்கின் அமைப்பை இளங்கோவடிகள் காட்சிப்படுத்தும் பாங்கு குறித்து உங்கள் கருத்தை எழுதுக.**

**34. "ஈசன்மகன் நின்றனர் ஓர் ஏழையென ஓர்மின்" - இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.**

www.nammakalvi.in



## பிரிவு - 2

**ஆ) எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.**

**35. இயற்கைச் சமநிலைக்கு மழை இன்றியமையாதது என்பதை உணர்த்துக.**

**36. சங்க காலத்தில் தாய்வழிச் சமூக முறையே நிலவியது என்பதை நும் பாடப்பகுதி கொண்டு நிறுவுக.**

**37. சென்னையின் பண்பாட்டு அடையாளங்களில் இன்றும் நிலைத்து இருப்பனவற்றைக் குறிப்பிடுக.**

**38. நேர மேலாண்மை குறித்து இறையன்பு கூறுவது யாது?**

## பிரிவு - 3

**எவையேனும் மூன்றனுக்கு விடை தருக.** 3 x 4 = 12

**39. ஏகதேச உருவக அணியை எடுத்துக்காட்டுடன் விளக்குக. (அல்லது)**

**பாடாண்திணையை எடுத்துக்காட்டுடன் விளக்குக.**

**40. இலக்கிய நயம் பாராட்டுக.**

அந்தியிருளாற் கருகும் உலகு கண்டேன்
அவ்வாறே வான் கண்டேன், திசைகள் கண்டேன்
பிந்தியந்தக் காரிருள்தான் சிரித்த துண்டோ?
பெருஞ்சிரிப்பின் ஒளிமுத்தோ நிலவே நீதான்
சிந்தாமல் சிதறாமல் அழகை யெல்லாம்
சேகரித்துக் குளிரேற்றி ஒளியும் ஊட்டி
இந்தாவென் றேஇயற்கை அன்னை வானில்
எழில்வாழ்வைச் சித்தரித்த வண்ணந் தானோ? - பாரதிதாசன்

**41. பழமொழியை வாழ்க்கை நிகழ்வோடு தொடர்புபடுத்தி எழுதுக.**

ஊழி பெயரினும் தாம் பெயரார் (அல்லது) நிறைகுடம் தழும்பாது

**42. தமிழாக்கம் தருக.**

Periyar was not only a great social revolutionary; he was something more than that. He is known as a great champion of the underprivileged; even in this sphere he was much more than that. His sphere of activity was very wide and when he took up any issue he went deep into it, understood all the aspects of it and did not rest until he had found a permanent solution to it. Communal differences in our society were deep-tooted and appeared to be permanent features of our society until Periyar came on the scene.

## பகுதி - IV

**இருபக்கங்களுக்கு மிகாமல் விடையளிக்க.** 3 x 6 = 18

**43. கவிதை எழுத அறிய வேண்டுவனவாகச் சுரதா கூறுவனவற்றை விவரிக்க. (அல்லது)**

**நீங்கள் பார்த்த அல்லது வாழ்ந்த ஒரு நகரம் குறித்து இருபக்க அளவில் கட்டுரை எழுதுக.**

**44. குடும்பம் என்னும் சிறிய அமைப்பிலிருந்தே மனித சமூகம் என்னும் பரந்த அமைப்பு கட்டமைக்கப்படுகிறது - எவ்வாறு? விளக்குக. (அல்லது)**

**மயிலையார் ஓர் ஆராய்ச்சிப் பேரறிஞர் என்னும் கூற்றினைச் சான்றுகளுடன் கட்டுரைக்க.**

**45. பாரதியின் கடிதம் வாயிலாக நீங்கள் அறிந்துகொண்ட மொழிப்பற்று, சமூகப்பற்று ஆகியவற்றை விவரிக்க.**

**(அல்லது) 'சாலை விபத்தில்லாத் தமிழ்நாடு' - இக்கூற்று நனவாக நாம் செய்யவேண்டியன யாவை?**

## பகுதி - V

**அடிபிறழாமல் செய்யுள் வடிவில் எழுதுக.** 4 + 2 = 6

**46. "துன்பு உளதுஎனின் அன்றோ" எனத் தொடங்கும் கம்பராமாயணப் பாடலை எழுதுக.**

**47. "வினைத்திட்பம்" எனத் தொடங்கும் குறட்பாவை எழுதுக.**

www.nammakalvi.in



## பொதுத்தேர்வு வினாத்தாள் - 2019 - 2020

**காலம் -15 + 3.00** **பொதுத்தமிழ்** **மதிப்பெண் - 90**

**அறிவுரைகள்:** (1) அனைத்து வினாக்களும் சரியாகப் பதிவாகி உள்ளதா? என்பதனைச் சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின், அறைக்கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.

(2) நீலம் அல்லது கருப்புமையினை மட்டுமே எழுதுவதற்கும் அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும்.

**குறிப்பு:** விடைகள் தெளிவாகவும், குறிப்பிட்ட அளவினதாகவும், சொந்த நடையிலும் அமைதல் வேண்டும்.

### பகுதி - I

**அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.** **14 x 1 = 14**

**1. சிற்பி பாலசுப்பிரமணியத்தின் 'இளந்தமிழே' பாடல் இடம் பெற்ற நூல்**

அ) மஸ்னவி ஆ) நிலவுப் பூ இ) காவ்யதர்சன் ஈ) துறைமுகம்

**2. காவினெம் கலனே; சுருக்கினெம் கலப்பை" - இந்தத் தொடரில் 'கலன்' என்ற சொல்லின் பொருள்**

அ) வேளாண் கருவி ஆ) போர்க் கருவி இ) தச்சுக் கருவி ஈ) இசைக் கருவி

**3. மாதவி பெற்ற பட்டம்**

அ) நாட்டியப் பேரொளி ஆ) நர்த்தகி இ) தலைக்கோலி ஈ) நாட்டியமயூரி

**4. புயலுக்குப் பெயர் வைக்கும் கூட்டமைப்பு நாடுகள்**

அ) பத்து நாடுகள் ஆ) எட்டு நாடுகள் இ) ஐந்து நாடுகள் ஈ) பதினெட்டு நாடுகள்

**5. த.ந. சற்குணரின் உரையைக் கேட்டுத் தூண்டப்பெற்ற மயிலை சீனி. வேங்கடசாமி எழுதிய நூல்**

அ) கிறித்தவமும் தமிழும் ஆ) பௌத்தமும் தமிழும் இ) இசுலாமும் தமிழும் ஈ) சமணமும் தமிழும்

**6. இராமலிங்க அடிகள் இயற்றிய நூல்**

அ) திருவருட்பா ஆ) திருவாசகம் இ) திருக்குறள் ஈ) திருமந்திரம்

**7. 'காய்நெல்' - இச்சொல்லுக்கான இலக்கணக் குறிப்பு**

அ) உம்மைத்தொகை ஆ) பண்புத்தொகை இ) வினைத்தொகை ஈ) உவமைத்தொகை

**8. முதல் கல் - என்னும் சிறுகதையின் ஆசிரியர்**

அ) குலோத்துங்கச் சோழன் ஆ) உத்தம சோழன் இ) இராசராச சோழன் ஈ) இராசேந்திர சோழன்

**9. பிழையற்ற தொடரைக் கண்டறிக.**

அ) சென்னையிலிருந்து நேற்று வந்தான். ஆ) கோவலன் மதுரைக்குச் சென்றது

இ) பறவைகள் நெல்மணிகளை வேகமாகக் கொத்தித் தின்றது

ஈ) குதிரையும் யானையும் வேகமாக ஓடியது

**10. சுரதா நடத்திய கவிதை இதழ்**

அ) விண்மீன் ஆ) இலக்கியம் இ) காவியம் ஈ) ஊர்வலம்

**11. 'பொய்யா வானம்' - இலக்கணக் குறிப்பு தருக.**

அ) ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம் ஆ) வினைத்தொகை

இ) உரிச்சொல் தொடர் ஈ) பெயரெச்சத் தொடர்

**12. அருங்கானம் - புணர்ச்சி விதி தருக.**

அ) ஈறுபோதல், தன் ஒற்று இரட்டல் ஆ) ஈறுபோதல்

இ) ஈறுபோதல், இனமிகல் ஈ) ஈறுபோதல், முன்னின்ற மெய்திரிதல்

**13. மறைத்துச் சொல்லவும், மிகுத்துச் சொல்லவும், அழுத்திச் சொல்லவும் பயன்படுத்திய இலக்கிய உத்தி எது?**

அ) தொன்மம் ஆ) குறியீடு இ) படிமம் ஈ) அங்கதம்

www.nammakalvi.in


**14. காப்பியம் எத்தனை வகைப்படும்?**

அ) மூன்று  ஆ) இரண்டு  இ) நான்கு  ஈ) ஐந்து

## பகுதி - II

### பிரிவு - 1

**எவையேனும் மூன்றனுக்கு விடை தருக.** 3 x 2 = 6

**15. கவிஞர் சிற்பி எவற்றை வியந்து பாட, தமிழின் துணை வேண்டும் என்கிறார்?**

**16. விலங்குகளும் பறவைகளும் எவ்வாறு நடுங்கியதாக நக்கீரர் கூறுகிறார்?**

**17. வசனம், கவிதை - வேறுபாடு தருக.**

**18. வயலுக்குள் யானையைத் தனித்து விடுவதால் ஏற்படும் விளைவு யாது?**

### பிரிவு - 2

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.** 2 x 2 = 4

**19. புக்கில், தன்மனை - சிறு குறிப்பு வரைக.**

**20. சென்னையை அலங்கரித்த ஆறுகளை எழுதுக.**

**21. பின்னணி இசை, படத்தின் காட்சியமைப்புக்கு எவ்வாறு உயிரூட்டும்? சான்று தருக.**

### பிரிவு - 3

**22. பேச்சு வழக்கை எழுத்து வழக்காக மாற்றுக.**

அ) இப்ப எனக்குப் புரிஞ்சு போச்சு, நீயும் புரிஞ்சிக்கோ.

ஆ) வூட்டாண்ட வெளையாண்ட கோயந்தையை அப்பா எங்க இஸ்துகினு போனாரு?

**23. கீழ்க்காணும் சொல்லுருபுகளைப் பிரித்தும், சேர்த்தும் இருவேறு தொடர்களை அமைக்க.**

அ) முன்  ஆ) தானே

**24. பொருள் வேறுபாடறிந்து தொடர் அமைக்க.** தின்மை - திண்மை

**25. தொடரில் உள்ள மரபுப் பிழைகளை நீக்கி எழுதுக.**

அ) பனைமட்டையில் கூரை வைத்திருந்தனர்.

ஆ) வனவிலங்குக் காப்பகத்தில் சிங்கக் குட்டியும் யானைக் குட்டியும் கண்டேன்.

**26. உவமைத் தொடர்களைச் சொற்றொடரில் அமைத்திடுக.**

அ) அச்சாணி இல்லாத தேர் போல  ஆ) நகமும் சதையும் போல

**27. வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக.**

அ) நம் வாழ்க்கையின் தரம் நமது கவனத்தின் தரத்தை பொறுத்திருக்கிறது.

ஆ) புத்தகம் படிக்கும் பொழுது கூர்ந்தக் கவனம் அறிவை பெறுவதற்கும் வளர்ப்பதற்குமான அடிப்படை தேவையாகும்.

**28. ஏதேனும் ஒன்றனுக்குப் பகுபத உறுப்பிலக்கணம் தருக.** அ) அமர்ந்தனன்  ஆ) செய்த

**29. ஏதேனும் ஒன்றனுக்குப் புணர்ச்சி விதி தருக.** அ) எத்திசை  ஆ) செந்தமிழே

**30. ஈரசைச் சீர்கள் எத்தனை? அவை யாவை?**

## பகுதி - III

### பிரிவு - 1

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.** 2 x 4 = 8

31. "ஏங்கொலிநீர் ஞாலத்து இருளகற்றும்" - இடம் சுட்டிப் பொருள் விளக்கம் தருக.

32. அதிசயமலரில் பூச்செடி எவ்வாறு முளைத்துள்ளதாக தமிழ்நதி கூறுகிறார்?

33. அதியமானின் ஈகைப் பண்பை சிறுபாணாற்றுப்படை வழிநின்று விளக்குக.

34. நாட்டிய அரங்கின் அமைப்பை இளங்கோவடிகள் காட்சிப்படுத்தும் பாங்கு குறித்து எழுதுக.

### பிரிவு - 2

**எவையேனும் இரண்டனுக்கு மட்டும் விடை தருக.** 2 x 4 = 8

35. கலைமுழுமை என்றால் என்ன? விளக்குக.

36. பேரிடர் மேலாண்மை வாரியம் - விளக்குக.

37. சென்னை நகரின் போக்குவரத்து வளர்ச்சி குறித்து எழுதுக.

38. மயிலை சீனி. வேங்கடசாமி நினைவுச் சிறப்பிதழுக்குச் செய்திகள் உருவாக்கித் தருக.

### பிரிவு - 3

**எவையேனும் மூன்றனுக்கு விடை தருக.** 3 x 4 = 12

39. ஏகதேச உருவக அணி (அல்லது) தொழில் உவமை அணியைச் சான்றுடன் விளக்குக.

40. பாடாண் திணையைச் சான்றுடன் விளக்குக.

41. அம்மூவனார், தலைமகன் பாங்கனுக்கு உரைத்ததாகக் கூறுவன யாவை?

42. பின்வரும் பழமொழியை வாழ்க்கை நிகழ்வில் அமைத்து எழுதுக.

அ) ஊழி பெயரினும் தாம் பெயரார் (அல்லது) ஆ) கூடி வாழ்ந்தால் கோடி நன்மை

43. கருத்துப் படத்தைப் புரிந்து கொண்டு பத்தியாக எழுதுக.

## பகுதி - IV

3 x 6 = 18

44. அ) செய்ந்நன்றியறிதலே அறம் என்பதை வாயுறை வாழ்த்தின் துணை கொண்டு நிறுவுக.

(அல்லது) ஆ) எச். ஏ. கிருட்டிணனார் 'கிறித்தவக் கம்பர்' என்பதை நும் பாடப்பகுதி வழி நிறுவுக.

45. அ) 'நெகிழி தவிர்த்து நிலத்தை நிமிர்த்து' என்னும் தலைப்பில் சுற்றுச்சூழல் ஆர்வலர் பசுமைதாசனாருடன் நீங்கள் நடத்திய கற்பனைக் கலந்துரையாடல் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.

(அல்லது)

ஆ) சங்ககால கல்வெட்டை அறிந்துகொள்ள புகழூர் கல்வெட்டு எவ்வகையில் துணைபுரிகிறது? விளக்குக.

46. அ) 'சாலை விபத்தில்லாத் தமிழ்நாடு' - இக்கூற்று நனவாக நாம் செய்ய வேண்டியன யாவை?

(அல்லது)

ஆ) 'நடிகர் திலகம்' என்ற பட்டம் சிவாஜிக்குப் பொருத்தமானதே என்பதை நிறுவுக.

## பகுதி V

47. அடிபிறழாமல் செய்யுள் வடிவில் தருக. 4 + 2 = 6

அ) "துன்பு உளது..." எனத் தொடங்கும் கம்பராமாயணப் பாடலை அடிபிறழாமல் எழுதுக.

ஆ) "செயல்" என முடியும் குறள்.

-------------